பராஶரஸம்ஹிதாயாம், "భగవద్దాస్యవృత్తిశ్చ భగవత్కీర్తనాదికమ్ । సదా ప్రణవసంయుక్తమూలమన్త్రద్వయాదికమ్ ॥ వేదస్వరాదివర్జం స్యాచ్ఛూద్రాణాం మన్త్రజాపనే । దీక్షాయాం ప్రణవాదిస్యాత్సర్వపాకమలాపహ" "பகவத்தாஸ்யவ்ருத்திஶ்ச பகவத்கீர்த்தநாதிகம் - ஸதாப்ரணவஸம்யுக்த மூலமந்த்ரத்வயாதிகம் - வேதஸ்வராதி வர்ஜம்ஸ்யாச்சூத்ராணாம் மந்த்ரஜாபநே - தீக்ஷாயாம்ப்ரணவாதிஸ்யாத் ஸர்வபாகமலாபஹ" (௨௨௭) என்று பகவான்தானே யருளிச்செய்தானிறே. "ப்ரணவத்தையொழிய அஷ்டாக்ஷரம்சொல்லுகிறபக்ஷம் அவைதிகமாகையாலே அநாதரணீயம்" என்று இவர்தாமே யருளிச்செய்கையாலே, ப்ரணவவிஶிஷ்டமான மந்த்ரமே ஆதரணீயம் என்றதாய்த்து. "గతిరష్టాక్షరో నౄణామపునర్భవకాఙ్క్షిణామ్" "கதிரஷ்டாக்ஷரோந்ருணாமபுநர்ப்பவ காங்க்ஷிணாம்" (௨௨௮) என்று விஶேஷநிர்த்தேஶம்பண்ணாதே, ஸாமாந்யேந, "అపునర్భవకాఙ్క్షిణామ్-నౄణామ్-అష్టాక్షర ఏవ-గతిః" "அபுநர்ப்பவகாங்க்ஷிணாம்-ந்ருணாம்-அஷ்டாக்ஷரஏவ-கதிஃ" என்று விதிக்கையாலே, "ஸர்வாதிகாரம்" என்னக் குறையில்லை.

ஆகையாலே, இவ்வசநங்களுக்கு விஷயம்- முமுக்ஷுக்கள். "న స్వరః ప్రణవోఙ్గాని" "நஸ்வரஃப்ரணவோங்காநி" (௨௨௯) இத்யாதி வசநங்களுக்கு முமுக்ஷையில்லாதார் விஷயம்.

மூ.—அதில் ப்ரதமரஹஸ்யம் திருமந்த்ரம்.

வ்யா.—இனி, அந்த ரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதமரஹஸ்யமேதென்னும் ஆகாங்க்ஷையிலே யருளிச்செய்கிறார்,

(அதில் ப்ரதமரஹஸ்யம்திருமந்த்ரம்) என்று. அதாவது- அந்த ரஹஸ்யத்ரயத்திலும் வைத்துக்கொண்டு, இவ்வதிகாரிக்கு ப்ரதமம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யம்,

---

எ.—பாத்மே, "[illegible]" "ஸ்வபாவாத்ப்ரணவஸ்தஸ்மிந்மூலமந்த்ரே ப்ரதிஷ்டிதம்" (உ௩0) என்று தொடங்கி, பதவிபாகத்தையும்செய்து, பதங்கள்தோறும் அர்த்தவிசேஷங்களையும் பரக்க ஓரத்யாயமாக பார்வதிக்கு ருத்ரனுபதேசித்தான்; ஆகையாலேயிறே "[illegible]" "ஶிவம்மஹாபாகவதம்ஸ்மராமி" (உ௩௩) என்று ரிஷிகள் கொண்டாடினார்கள். அலமதிப்ரஸங்கேந.

"[முமுக்ஷுவுக்கு]- பகவத்ப்ராப்திகாமதயா ஸம்ஸாரஸப்தவாச்யங்களான அவித்யா கர்மவாஸநாருசி ப்ரக்ருதிஸம்பந்த விமோசநத்திலே யிச்சைபிறந்தவனுக்கு, [ரஹஸ்யம்மூன்று] - ஸ்வரூபோபாய புருஷார்த்த யாதாத்ம்யப்ரதிபாதகமான ரஹஸ்யத்ரயமானது, [அறியவேண்டும்]-அவஶ்யம் அறியத்தக்கது" என்று மூலார்த்தம்.

உ.—இனி, மேல்வாக்யத்துக்கும் இதுக்கும் ஸங்கதியருளிச்செய்கிறார் (இனி) என்று தொடங்கி. (இனி) என்றது - அதிகாரிநிர்த்தேஶமும் ஜ்ஞாதவ்யநிர்த்தேஶமும் பண்ணின வநந்தரமென்றபடி. (அந்தரஹஸ்யத்ரயத்திலும்) என்றது - அவஶ்யம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யத்ரயத்திலு மென்றபடி. (ப்ரதமரஹஸ்யமேது) என்றது - ப்ரதமம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யமேதென்றபடி. (ஆகாங்க்ஷை) யாவது - பதஸ்யபதாந்தர வ்யதிரேகேணாந்வயாநுபபத்தி: ஶங்கையிலே யென்னவுமாம். (அருளிச்செய்கிறார்) என்றது - ஶங்கைக்கு ஸமாதாநமருளிச்செய்கிறாரென்றபடி.

(அதாவது) என்றது - [அதில் ப்ரதமரஹஸ்யம் திருமந்த்ரம்] என்று சொன்னதாவதென்றபடி. (அந்தரஹஸ்யத்ரயத்திலும்) என்றது - ஸ்வரூபோபாய புருஷார்த்த யாதாத்ம்யப்ரதிபாதகதயா அவஶ்யம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யத்ரயத்திலுமென்றபடி. (வைத்துக்கொண்டு) என்றது-சாரியைச்சொல் - வாக்யாலங்காரம்-அவ்யயம்-அர்த்தமில்லை. (இவ்வதிகாரிக்கு) என்றது - பகவத்ப்ராப்திகாமதயா ஸம்ஸாரநிவ்ருத்தியிலே இச்சையுடையனாய் ப்ரஸ்துதனான அதிகாரிக்கென்றபடி.

தொ-அ.—உ. மேல்வாக்யத்துக்கு அவதாரிகை (இனியித்யாதி.)

(வைத்துக்கொண்டு) என்றது - சாரியைச்சொல். அதுக்கு அர்த்தமில்லை. (இவ்வதிகாரிக்கு) என்றது - பகவத்ப்ராப்திகாமதயா ஸம்ஸாரநிவ்ருத்தியிலே யிச்சையுடைய இவ்வதிகாரிக் கென்றபடி.

வ்யா.—ஸ்வரூப யாதாத்ம்யபரமாய் த்யாஜ்யோபாதேய† விபாக ஜ்ஞாநத்தை பரிபூர்ணமாகப் பிறப்பிக்குமதான திருமந்த்ரமென்கை. அநந்யார்ஹஶேஷத்வம் அநந்யஶரணத்வம் அநந்யபோகத்வமாகிற ஆகாரத்ரயத்தையும் ப்ரதிபாதிக்கையாலே.

எ.—(ஸ்வரூபயாதாத்ம்ய பரமாய்)என்றது – ஸ்வரூபயாதாத்ம்யப்ரதிபாதக பரமாயென்றபடி. (பரம்) - அவ்யயம். (பரமாய்)-ஸமர்த்தமாயென்றபடி. (விபாகஜ்ஞாநத்தை) என்றது-விபாகவிஷயகஜ்ஞாநத்தையென்றபடி. (பரிபூர்ணமாக) என்றது - "అనుక్తమన్యతో గ్రాహ్యమ్" "அநுக்தமந்யதோக்ராஹ்யம்" (உகஉ) என்கிறபடியன்றிக்கே, ஸம்பூர்ணமாக வென்றபடி. (என்கை) என்றது - என்று சொல்லுகையென்றபடி. "இத்யுக்தம்" என்னுமாப்போலே.

"[அதில்]-அவஶ்யம் ஜ்ஞாதவ்யமான அந்தரஹஸ்யத்ரயத்திலும், [ப்ரதமரஹஸ்யம்]-ப்ரஸ்துதஜ்ஞா வதிகாரிக்கு ப்ரதமத்திலே அறியத்தக்க ரஹஸ்யம், ஸ்வரூபயாதாத்ம்யபரமாய் த்யாஜ்யோபாதேய விபாகஜ்ஞாநத்தை பரிபூர்ணமாகப் பிறப்பிக்குமதான திருமந்த்ரமாயிருக்கும்" என்று மூலார்த்தம்.

திருமந்த்ரம் ஸ்வரூபயாதாத்ம்யபரமானவாறே ப்ரதமரஹஸ்யமாமோவென்னில்; அருளிச்செய்கிறார் (அநந்யார்ஹஶேஷத்வம்) என்று தொடங்கி. "విష్ణోరనన్యశేషత్వం తథైవానన్యసాధనమ్। తథైవానన్యభోగ్యత్వం తదాకారత్రయం స్మృతమ్" "விஷ்ணோரநந்யஶேஷத்வம்ததைவாநந்யஸாதநம் - ததைவாநந்யபோக்யத்வம்ததாகாரத்ரயம்ஸ்ம்ருதம்" (உகங) என்று ஹாரீதஸ்ம்ருதியில் சொல்லுகிறபடியே, அநந்யார்ஹஶேஷத்வ அநந்யஶரணத்வ அநந்யபோக்யத்வமாகிற ஆகாரத்ரயத்தையும் பதத்ரயத்தாலும் ப்ரதிபாதிக்கையாலே என்றபடி.

அத்ராயம்விவேகஃ=திருமந்த்ரமானது, ப்ரதமபதமான ப்ரணவத்தாலே - "மகாரவாச்யனை சேதநன் அகாரவாச்யனை ஈஶ்வரனுக்கு ஶேஷம், அந்யருக்கு ஶேஷமன்று" என்று உகாரம்வ்யவச்சேதிக்கையாலே, அநந்யார்ஹஶேஷத்வத்தையும்; இரண்டாம்பதமான நமஸ்ஸாலே - [மஃ-ந]

தொ.—(ஸ்வரூபயாதாத்ம்யபரமாய்) என்றது - அநந்யார்ஹஶேஷத்வாத்யாகாரத்ரய ப்ரதிபாதகபரமா யென்றபடி. (த்யாஜ்யோபாதேய விபாகஜ்ஞாநத்தை) என்றது-அநந்யார்ஹஶேஷத்வாத்யாகாரத்ரயத்துக்கும் அநுரூபங்களான த்யாஜ்யோபாதேயங்களுடைய விபாகஜ்ஞாநத்தை யென்றபடி. அவையாவன - தேவதாந்தர ஶேஷத்வமும், ஸ்வஸ்வாதந்த்ர்யமும், ஸ்வரக்ஷணேஸ்வாந்வயமும், உபேயாந்தரப்ராவண்யமும், கைங்கர்யத்தில் ஸ்வயம் கர்த்ருத்வமும், ஸ்வயம்போக்த்ருத்வமும், பாகவதவிஷயத்தில் அநந்யார்ஹஶேஷத்வாத்யாகார த்ரயமும்.

திருமந்த்ரம் ஸ்வரூபயாதாத்ம்யாதி பரமானவாறே ப்ரதமரஹஸ்யமாமோவென்ன வருளிச்செய்கிறார் (அநந்யார்ஹ) இத்யாதியால். (விபாகத்தை) என்றது - விபாகஜ்ஞாநத்தை யென்றபடி.

பி.—த்வயம்சரமஶ்லோகமிருக்க, திருமந்த்ரத்தை ப்ரதமரஹஸ்யமென்பானென்னென்னவருளிச்செய்கிறார் (அநந்யார்ஹஶேஷத்வம்) இத்யாதி.

---

† "விபாகத்தை" என்று தொட்டாசார்யாரும்பதத்தில்பாடம்.

வ்யா.—சேதநஸ்வரூபயாதாத்ம்ய ப்ரதிபாதகபரமாய், ததநுகுணமான த்யாஜ்யோபாதேய விபாகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியாநின்றுள்ள இம்மந்த்ரத்தாலே ஸுஶிக்ஷிதஜ்ஞனவனுக்கிறே மற்றரஹஸ்யங்களிரண்டிலும் ப்ரதிபாதிக்கப்படுகிற உபாயோபேயங்களில் அபேக்ஷை ஜநிப்பது. ஆகையாலே,

---

எ.—என்று - ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயநிவ்ருத்தி சொல்லுகையாலே, அர்த்தாத் ஸ்வரக்ஷணார்த்தமாக ஸாதநாந்தரநிவ்ருத்தி ஸித்திக்கையாலே, அநந்யஶரணத்வத்தையும்; த்ருதீயபதமான நாராயணபதத்தில் - கைங்கர்யப்ரார்த்தநாப்ரகாஶகமான வ்யக்தசதுர்த்தியாலே - அக்கைங்கர்யத்துக்கு ஆஶ்ரயமான சேதநனை "அஹமந்நமந்நமதந்தமத்மி" "அஹமந்நமந்நமதந்தமத்மி" (உஙச) என்கிற ஶ்ருதி போக்யனாகச்சொல்லுகையாலே ஸித்தித்த அநந்யபோக்யத்வத்தையும் ப்ரதிபாதிக்கையாலே, சேதநஸ்வரூபயாதாத்ம்ய ப்ரதிபாதகபரமாயிருக்கும். இத்தால் - பக்தஸ்வரூபவ்யாவ்ருத்தி ஸித்தித்ததாய்த்து.

(ததநுகுணமான) என்றது-பூர்வோக்தாகாரத்ரயாநுகுணமான வென்றபடி. (த்யாஜ்யோபாதேயேத்யாதி) த்யாஜ்யாம்ஶங்களாவன - தேஹாத்மாபிமாநமும், ஸ்வஸ்வாதந்த்ரயமும், அந்யஶேஷத்வமும், ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமும், அபந்துஸங்கமும், விஷயசாபல்யமும். உபாதேயாம்ஶங்களாவன - லக்ஷ்மீஶேஷத்வமும், ததேகோபாயத்வமும், பாகவதஶேஷத்வமும், பகவத்பாகவதகைங்கர்ய ப்ரார்த்தனையும், இவற்றினுடைய விபாக விஷயஜ்ஞாநத்தை ப்ரணவத்தில் த்ருதீய ப்ரதமத்விதீயபதங்களாலும் நமஸ்ஸாலும் வ்யக்தசதுர்த்தியாலும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியாநின்றுள்ளவென்றபடி. (ஸுஶிக்ஷிதஜ்ஞனவனுக்கிறே) என்றது- நன்றாக ஶிக்ஷிதஜ்ஞனவனுக்கன்றோ வென்றபடி. (மற்றரஹஸ்யங்களிரண்டிலும்) என்றது - ஶேஷித்த த்வய சரமஶ்லோக ரஹஸ்யங்களிரண்டிலு மென்றபடி. (உபாயோபேயங்களில் அபேக்ஷைஜநிப்பது) என்றது - பகவானாகிற உபாயத்திலும் பகவத்கைங்கர்யமாகிற உபேயத்திலும் அபேக்ஷையுண்டாகிறதென்றபடி. (ஆகையாலே) என்றது - உபாயோபேயங்களில் அபேக்ஷைஜநிப்பது ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநபூர்வகமாகையாலே யென்றபடி. ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநமன்றியிலே ஸ்வரூபாநுரூபோபாயோபேயங்களில் அபேக்ஷை ஜநியாமையாலே என்னவுமாம்.

தொ.—(ரஹஸ்யங்களிரண்டிலும்) என்றது - த்வயசரமஶ்லோகங்களிரண்டிலு மென்றபடி. சரமஶ்லோகமும் உபாயமாமோவென்னில், ஆம்; நைர்பர்யப்ரதிபாதக மாகையாலே. நைர்பர்யமாவது - பூர்த்தி; இதுக்குமேற்பட உபாயமில்லையிறே.

(ஆகையாலே) என்றது - ஸ்வரூபாநுரூபங்களான உபாயோபேயங்களிலபேக்ஷைஜநிப்பது ஸ்வரூபஜ்ஞாந பூர்வகமாகையாலே யென்றபடி.

பி.—(ததநுகுணமான) - ஸ்வரூபாநுகுணமான,

வ்யா.—ஸ்வரூபயாதாத்ம்யபரமான திருமந்த்ரம் ப்ரதமரஹஸ்யமென்னக் குறையில்லை.

இன்னமும், ப்ரணவத்துக்கு மந்த்ரஶேஷம்

எ.—(ஸ்வரூபயாதாத்ம்யபரமான திருமந்த்ரம்ப்ரதமரஹஸ்யமென்னக் குறையில்லை) என்றது - ப்ரதமம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யம் திருமந்த்ரமென்றுசொல்லுகையில் ஸம்ஶயமில்லையென்றபடி.

(அநந்யார்ஹஶேஷத்வம்)இத்யாதி வாக்யங்களுக்கு, "திருமந்த்ரம், ப்ரணவத்தாலே - பகவச்சேஷத்வத்துக்கு விரோதியான அஹங்காரத்தைக் கழித்துக்கொடுக்கும் அநந்யார்ஹஶேஷத்வத்தையும், நமஸ்ஸாலே - ஶரண்யனானவனைக்குறித்துண்டான ரக்ஷணத்துக்கு விரோதியான அர்த்ததருஷ்ணையைக்கழித்துக்கொடுக்கும் அநந்யஶரணத்வத்தையும், நாராயணபதத்தாலே - போக்யபூதனானவனைப்பற்றியுண்டான அநுபவத்துக்கு விரோதியான விஷயாந்தரருசியைக் கழித்துக்கொடுக்கும் அநந்யபோக்யத்வமாகிற ஆகாரத்ரயத்தையும் ப்ரதிபாதிக்கும்" என்றும், த்யாஜ்யோபாதேய விஷயங்களுக்கு "అహఙ్కారార్థకామేషు ప్రీతిరద్యైవనశ్యతు । త్వాంప్రపన్నస్యమేదేవవర్ధతాంశ్రీమతి-త్వయి" "அஹங்காரார்த்தகாமேஷுப்ரீதிரத்யைவநஶ்யது - த்வாம்ப்ரபந்நஸ்யமே தேவவர்த்ததாம்ஶ்ரீமதித்வயி" (உ௩௫)என்கிறஜிதந்தாஸ்தோத்ரஶ்லோகத்தை உதாஹரித்து, "பதத்ரயத்தாலும் ப்ரதிபாதிக்கப்பட்ட அநந்யார்ஹஶேஷத்வாதியான ஸ்வபாவத்ரயத்துக்கு விரோதியான அஹங்காரார்த்தகாமவிஷயமான ப்ரீதியானதுஇப்போதேநசித்துப்போகவேணும், ஶேஷியாய் ஶரண்யனாய் ப்ராப்யனானவுன்னை ஸர்வப்ரகாரத்தாலும் ப்ரபந்நனாயிருக்கிற வெனக்கு அஹங்காராதித்ரயவிஷய ப்ரீதியானது அப்ருதக்ஸித்தஸம்பந்த நிபந்தநமான ஶரீராத்மபாவத்தாலேயுண்டான ஐக்யத்தாலே அஹம்ப்ரத்யயாதிவிஷய மாகையாலும், அநவரதகமநீய ஸத்யகாமத்வாலும்,அஹங்காரார்த்தகாமரூபேண நிற்கும் ஸ்வபாவத்தையுடையனாயிருக்கிற ஸ்ரீமானானவுன்பக்கலிலே நிரவதிகபக்திரூபமாய்க்கொண்டு நிற்கவேணும்" என்றும், ஆசார்யவர்யரான ஸைஞராச்சான்பிள்ளை வ்யாக்யாநம் செய்தருளினாரிறே.

ஹேத்வந்தரத்தாலும் இதினுடைய ப்ராதம்யத்தை யருளிச்செய்கிறார் (இன்னமும்) என்றுதுடங்கி. (இன்னமும்) என்றது - கீழ்ச்சொன்ன ஹேதுக்களன்றிக்கே ஹேத்வந்தரத்தாலுமென்றபடி. (மந்த்ரஶேஷம்) என்கிறது - "ఓమిత్యేకాక్షరంమన్త్రః" "ஓமித்யேகாக்ஷரம்மந்த்ரம்" (உ௩௬) என்கிறபடியே, மந்த்ரமென்றுசொல்லப்பட்ட ப்ரணவத்துக்கு ஶேஷமென்றபடி.

தொ.—கீழ், ஸ்வரூபயாதாத்ம்ய பரத்தாலே-திருமந்த்ரத்தினுடைய ப்ராதம்யத்தை யருளிச்செய்து, இனி, விவரண விவரணீபாவத்தாலும் - திருமந்த்ரத்தினுடைய ப்ராதம்யத்தை யருளிச்செய்கிறார் (இன்னமும்) இத்யாதியால். (மந்த்ரஶேஷம்) என்றது - நமஃபதமும், நாராயணபதமுமென்றபடி.

೧.—(மந்த்ரஶேஷம்)-நமஸ்ஸும், நாராயணபதமும்.

வ்யா.—விவரணமானுப்போலே மந்த்ரஶேஷத்துக்கு த்வயம் விவரணமாய், த்வயத்துக்கு † சரமஶ்லோகம்விவரணமாயிறேயிருப்பது. அந்த ந்யாயத்தாலும் இதினுடைய ப்ராதம்யம் ஸித்தமிறே.

† ஆக, இவையெல்லாவற்றையும் திருவுள்ளம்பற்றியாய்த்து (ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்) என்று இவரருளிச்செய்தது.

இத்தை (மந்த்ரம்) என்கிறது,

எ.—(ஶேஷம்) என்கிறது-அதுக்கு வ்யாப்யமாகையாலே. இவ்விடத்தில், (மந்த்ரஶேஷம்) என்கிறது-நமஃபதத்தையும், நாராயணபதத்தையும். (விவரண) மாவது-"விவ்ருணோதீதிவிவரணம்" என்று வ்யுத்பத்தியாய், ப்ரணவத்தில்சொன்ன அர்த்தத்தை விவரிக்கை. அதாவது-அந்யயோகவ்யவச்சேதகமான உகாரம் - உபாயாந்தரஸம்பந்தத்தையும் ஆர்த்தமாக வ்யவச்சேதிக்கையாலே அர்த்தாத் அவனேஉபாயமென்றும், மகாரம் - "ஜ்ஞாநிநாத் குர்வதஶ்ஶேஷத்வம்" என்கிறந்யாயத்தாலே - ஶேஷத்வகார்ய மாகிற ப்ராப்யத்துக்கும் அர்த்தாத் ஆஶ்ரயமாயிருக்கையாலே ப்ராப்யத்தைச் சொல்லுகிறதென்றும் கொள்ளவேணும். இப்படி கொள்ளாதபோது, இங்குச்சொல்லுகிற விவரண விவரணிபாவத்துக்குச் சேராது. மந்த்ரஶேஷமான நமஃபத நாராயணபதங்களுக்கு வாக்யத்வயாத்மகமான த்வயம் விவரணமாயிருக்குமென்றபடி. (த்வயத்துக்கு சரமஶ்லோகம் விவரணமா) கையாவது-வாக்யத்வயாத்மகமான த்வயத்துக்கு பூர்வோத்தரார்த்த த்வயாத்மகமான சரமஶ்லோகம் விவரணமாயிருக்குமென்றபடி. (இறே) என்றது - ப்ரஸித்தமென்றபடி. விவரண விவரணீபாவக்ரமத்தை [இனிமேல் ப்ரணவத்தை விவரிக்கிறது] என்னுமிடத்திலும், த்வயத்துக் கர்த்தமருளிச்செய்கிறவிடத்திலும், சரமஶ்லோகத்துக் கர்த்தமருளிச்செய்கிற விடத்திலும், இவர்தாமே ஸுஸ்பஷ்டமாக வருளிச்செய்கிறாராகையால், அந்தஸ்தலங்களிலே கண்டுகொள்வது.

(ஆக) என்றது – இவ்வளவாகவென்றபடி. (இவையெல்லாவற்றையும்) என்றது-பூர்வோக்தங்களான அர்த்தங்கள் எல்லாவற்றையுமென்றபடி.

இவ்வளவாக, [ப்ரதமரஹஸ்யம்] என்றருளிச்செய்ததுக்கு அர்த்தமருளிச்செய்து, இனி, [திருமந்த்ரம்] என்றதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார் (இத்தை) என்றுதுடங்கி.

தொ.—(† அதுக்கு) என்றது-த்வயத்துக்கென்றபடி.

(அந்தந்யாயத்தாலும்) என்றது - விவரண விவரணி ந்யாயத்தாலுமென்றபடி.

(†ஆகையால்) என்றது-ஜ்ஞாதவ்யத்வே ப்ராதமிகத்தாலும், விவரணத்வே ப்ரதமமாகையாலு மென்றபடி. (இவையெல்லாவற்றையும்) என்றது - ஜ்ஞாதவ்யத்வே ப்ராதமயத்தையும், விவரணத்வே ப்ராதம்யத்தையு மென்றபடி.

இவ்வஷ்டாக்ஷரிக்கு [மந்த்ரம்] என்கிறபேர் வருகைக்கு ஹேதுவையருளிச்செய்கிறார் (இத்தை) இத்யாதியால்.

† "அதுக்கு" என்றும், "ஆகையால்" என்றும் தொட்டாசார்யரும்பதத்தில் பாடம்.

வ்யா.—"మన్తారం త్రాయత ఇతి మన్త్రః" "மந்தாரம்த்ராயத இதிமந்த்ர:" (ச) என்கிறபடியே - ஸப்தஸக்தியாலும் அர்த்தபோதநத்தாலும் தன்னை யநுஸந்திப்பார்க்கு ரக்ஷகமாகையாலே. ஸப்தஸக்தியாலே ரக்ஷகமாம் ஜபஹோமாதிகளாலே கார்யங்கொள்ளும் உபாஸகர்க்கு; அர்த்தபோதநத்தாலே ரக்ஷகமாம் "ஈஸ்வரனே உபாயோபேயம்" என்றிருக்கும் ப்ரபந்நர்க்கு†.

எ.—"[திருமந்த்ரம்] என்று சொன்னது-'శ్రీమదష్టాక్షరం మన్త్రమప్యశేషద్విజసత్తమ' 'ஸ்ரீமதஷ்டாக்ஷரம் மந்த்ரமப்யஸேஷத்விஜஸத்தம' (உகஎ) என்னும் ப்ரமாணத்தைத் திருவுள்ளம்பற்றி, பேரருளாளனுக்கு ப்ரதிஷ்டாமந்த்ர மாகையாலே கௌரவித்தருளிச்செய்கிறார்" என்றும் ஸம்ப்ரதாயம்.

(மந்தாரம்)-அநுஸந்தாதாரமென்றபடி. (ஸப்த)த்துக்கு (ஸக்தி)யாவது-பலப்ரதாநஸாமர்த்யம். ஸப்தஸக்தியாலே ஆருக்கு ரக்ஷகமாம்? அர்த்தபோ தநத்தாலே ஆருக்கு ரக்ஷகமாம்? என்கிற ஸங்கையிலே, அருளிச்செய்கி றார் (ஸப்தஸக்தியாலே) என்றுதுடங்கி. (ஆதி) ஸப்தத்தாலே-தர்ப்பண ப்ராஹ்மணபோஜந தக்ஷிணைகளைச் சொல்லுகிறது. "చతురన్తాం మహీం భోక్తుం ప్రాప్తుం వా మరరాజతామ్। అష్టాక్షరో హ్యుపాయస్స్యాత్ త్రివర్గస్య తు కిం పునః॥ బహవో హి మహాత్మానో మునయస్సనకాదయః। అష్టాక్షరం సమాశ్రిత్య తేజస్సు వైష్ణవం పదమ్" "சதுரந்தாம் மஹீம்போக்தும்ப்ராப்தும்வாமரராஜதாம்-அஷ்டாக்ஷரோஹ்யுபாயஸ்ஸ்யாத் த்ரிவர்க்கஸ்யதுகிம்புந:-பஹவோஹிமஹாத்மாநோமுநயஸ்ஸநகாதய:-அஷ் டாக்ஷரம்ஸமாஸ்ரித்ய தேஜக்முர்வைஷ்ணவம்பதம்" (உகஅ) என்னக்கட வதிறே.

(அர்த்தபோதந)மாவது-தன்னிடத்திலுண்டான அர்த்தங்களை யறிவிப் பிக்கை. (ஈஸ்வரனே உபாயோபேயமென்றிருக்கும் ப்ரபந்நாதிகாரிகளுக்கு†) என்றது-"విష్ణూపాయో న్యఫలస్స్యాదధమః పరికీర్తితః। అన్యోపాయో విష్ణుఫలో మధ్యమః పరికీర్తితః॥ మాధవాఙ్ఘ్రిద్వయోపాయో మాధవాఙ్ఘ్రిప్రయోజనః। యస్స ఏవోత్తమః ప్రోక్తో మాధవేనైవ తేన వై" "விஷ்ணூபாயோந்யபலஸ்ஸ்யாதமஃபரிகீர்த்தித: - அந்யோபா யோவிஷ்ணுபல: மத்யம:பரிகீர்த்தித: - மாதவாங்க்ரித்வயோபாயோ மா தவாங்க்ரிப்ரயோஜந: - யஸ்ஸஏவோத்தம:ப்ரோக்தோ மாதவேநைவதேந வை" (உகக) என்கிறபடியே-"ஈஸ்வரனேஉபாயோபேயம்" என்றிருக்கும் உத்தமாதிகாரிகளான ப்ரபந்நாதிகாரிகளுக்கு அர்த்தபோதநத்தாலே ரக்ஷ கமென்றபடி.

தொ.—இதினுடையமந்த்ரரக்ஷணக்ரமத்தை விஷயபேதேந வகுத்தரு ளிச்செய்கிறார் (ஸப்தஸக்தியாலே) இத்யாதியால். (ஜபஹோமாதிகளாலே) என்கிறவிடத்தில், ஆதிஸப்தத்தாலே - தர்ப்பண ப்ராம்ஹணபோஜநங்க ளைச் சொல்லுகிறது.

பி.—"மந்தாரம் த்ராயதே" என்கிறவிடத்திலே, மந்தாஎன்று-மநநசில றன் அநுஸந்தாதாவைச்சொல்லுகிறது.

---

† "ப்ரபந்நாதிகாரிகளுக்கு" என்னும் பாடம் கோஸாந்தரங்களிற்காண்க.

வ்யா.—அர்த்தபோதநத்தாலே ‡ரக்ஷகமாகையாவது - "దేహాసక్తాత్మబుద్ధిర్యది భవతి పదం సాధు విద్యాత్తృతీయం స్వాతన్త్ర్యాన్ధో యది స్యాత్ప్రథమమితరశేషత్వధీశ్చేద్ద్వితీయమ్। ఆత్మత్రాణోన్ముఖశ్చేన్నమ ఇతి చ పదం బాన్ధవాభాసలోలశ్శబ్దం నారాయణాఖ్యం విషయచపలధీశ్చేచ్చతుర్థీం ప్రపన్నః" "தேஹாஸக்தாத்மபுத்திர்யதி பவதி பதம் ஸாதுவித்யாத்த்ருதீயம் ஸ்வாதந்த்ர்யாந்தோயதிஸ்யாத் ப்ரதமமிதர ஶேஷத்வதீஶ்சேத்த்விதீயம் - ஆத்மத்ராணோந்முகஶ்சேந்நமஇதிசபதம் பாந்தவாபாஸலோலஶ்ஶப்தம் நாராயணாக்யம் விஷயசபலதீஶ்சேச்சதுர்த்தீம்ப்ரபந்ந:" (ரு) என்று பட்டரருளிச்செய்தபடியே, தன்னை அநுஸந்திப்பார்க்கு தேஹாத்மாபிமாநமும், ஸ்வாதந்த்ர்யமும், அந்யஶேஷத்வமும், ஸ்வரக்ஷணேஸ்வாந்வயமும், அபந்துஸங்கமும், விஷயப்ராவண்யமும் மேலிடாதபடிபண்ணி, ஸ்வரூபாநுரூபமாக நடக்கும்படி நோக்குகை.

எ.—அதுதன்னை ப்ரமாணபூர்வகமாகவருளிச்செய்கிறார் (அர்த்தபோதநத்தாலே) என்றுதுடங்கி. ப்ரமாணத்துக்குத் தாத்பர்யார்த்தமருளிச்செய்கிறார் (தேஹாத்மாபிமாநம்) என்றுதுடங்கி. திருமந்த்ரமானது, ப்ரணவத்தில் த்ருதீயபதமான மகாரத்தாலே - தேஹாத்மாபிமாநமும், லுப்தசதுர்த்தீ விபக்திஸஹிதமாய் ப்ரதமபதமான அகாரத்தாலே - ஸ்வாதந்த்ர்யாபிமாநமும், த்விதீயபதமான் உகாரத்தாலே - அந்யஶேஷத்வமும், நம:பதத்தாலே - ஸ்வரக்ஷணேஸ்வாந்வயமும், நாராயணபதத்தாலே - அபந்துஸங்கமும், வ்யக்தசதுர்த்தியாலே - விஷயப்ராவண்யமும், ப்ரபந்நாதிகாரிகளுக்கு மேலிடாதபடிபண்ணி, ஸ்வரூபாநுரூபமாக நடக்கும்படி ரக்ஷிக்கை.

(ஸ்வரூபாநுரூபமாகநடக்கும்படி) பண்ணுகையாவது - ஶேஷத்வ பாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்கநுரூபமாக † யதேஷ்டவிநியோகார்ஹமாய், யதேஷ்டவிநியுஜ்யமாநனாய், அநந்யபோக்யனாக நடக்கும்படிபண்ணி நோக்குகை.

ஶ்லோகவ்யாக்யாநம்—ப்ரபந்நனென்கிறான்-ஸ்வஸ்வரூபபரஸ்வரூபாதிகளை உள்ளபடியறியுமவன். இப்படி ப்ரபந்நனானவன்,கதாசித் தேஹத்தில் ஆத்மபுத்தியுடையவனானாகில்; ப்ரணவத்தில் த்ருதீயபதமாய், "மநஜ்ஞாநே" (உசo) "மதிஹர்ஷே" (உசக) "மநஅவபோதநே" (உசஉ) "மதிபரிமாணே" (உசந)

தொ.—அர்த்தபோதநத்தாலே ரக்ஷிக்கும்படியை யருளிச்செய்கிறார் (அர்த்தபோதநத்தாலே) இத்யாதியால்.

(தேஹாத்மாபிமாநமும்) என்றது - தேஹத்திலே ஆத்மாவென்கிற ப்ரதிபத்திரூபமான ஜ்ஞாநமென்றபடி. (அபந்துஸங்கமும்) என்றது - தேஹஸம்பந்த விஷயத்தில் ப்ரீதியு மென்றபடி. (விஷயப்ராவண்யமும்) என்றது - க்ஷுத்ரவிஷயப்ராவண்யமு மென்றபடி.(நோக்குகை) என்றது-ரக்ஷிக்கை யென்றபடி.

பி.—அர்த்தபோதநத்தாலே ரக்ஷகமாவதுக்கு ப்ரமாணம் (தேஹாஸக்தாத்மபுத்திரித்யாதி.) (அபந்துஸங்கம்) - ஆபாஸபந்துஸங்கம்.

---

‡ "ரக்ஷிக்கையாவது" என்றும் பாடம். † "அநுகுணமாக" என்றும் பாடம்.

எ.—என்கிற தாதுக்களில் நிஷ்பந்நமாய், ஜடத்வாசேதநத்வ ஸ்தூலத்வஹ்ரஸ்வத்வ துக்கரூபத்வ விஶிஷ்டதேஹத்திற்காட்டில் விலக்ஷணமாய், ஜ்ஞாநாநந்தஸ்வரூபத்வ ஜ்ஞாநகுணகத்வ அணுத்வவிஶிஷ்டப்ரதிபாதகமாய்,ப்ரணவத்தில் த்ருதீயபதமான மகாரார்த்தத்தை நன்றாகவறிந்தானாகில்; தேஹத்தில் ஆத்மபுத்தி நிவ்ருத்தமாய்விடும். ஸ்வாதந்த்ர்யபுத்தியால் திரோஹிதமான பகவச்சேஷத்வஜ்ஞாநத்தை யுடையவனானாகில், ப்ரணவத்தில் முதல்பதமாய்,"அவரக்ஷணகதிஹிம்ஸாதிப்ய:"(உசச)என்கிற தாதுவில் உத்பந்நமாய்,ஸர்வகாரணத்வஸர்வரக்ஷகத்வ ஸர்வஸம்ஹாரகத்வ லக்ஷ்மீபதித்வ ஸர்வஶேஷித்வ ஸமஸ்தகல்யாணகுணாத்மகத்வ விஶிஷ்டமான விஷ்ணுவை ப்ரதிபாதியாநிற்கிற லுப்ததாதர்த்ய சதுர்த்தீவிபக்திகமான அகாரார்த்தத்தை நன்றாகவறிந்தானாகில், தானவனுக்கு ஶேஷமாகச்சொல்லப்படுகிறானாகையாலே ஸ்வஸ்வாதந்த்ர்யப்ரமம் நிவ்ருத்தமாய்விடும்.பகவத்வ்யதிரிக்த தேவதாந்தர ஶேஷத்வபுத்தியுடையவனானாகில்; ப்ரணவத்திலிரண்டாம் பதமாய் அவதாரணார்த்தகமாய் அந்யஶேஷத்வநிவர்த்தகமான உகாராந்விதமான அகாரார்த்தத்தை நன்றாகவறிந்தானாகில், இதரஶேஷத்வப்ரமம் நிவ்ருத்தமாய்விடும். தன்னுடைய ரக்ஷணத்தில் தான் உந்முகனானாகில்; அநந்யஶரணத்வப்ரதிபாதகமான நம: பதார்த்தத்தை நன்றாகவறிந்தானாகில், "ஈஶ்வரனன்றுரக்ஷகன், நானெனக்கு ரக்ஷகன்" என்கிறப்ரமம் நிவ்ருத்தமாய்விடும். ஆபத்யரக்ஷகராய் ஸம்பதிஸர்வஸ்வாபஹாரிகளாய் பந்துக்கள் போலே தோன்றாநிற்கிற தேஹபந்துக்களிடத்தில் சபலனானாகில்; நாராயணஶப்தத்தில் தத்புருஷ ஸமாஸத்தில் கர்மணிவ்யுத்பந்நமான அயநபதத்தாலே எம்பெருமானுடைய நிருபாதிக ஸகலவித பந்துத்வ ப்ராப்யத்வப்ரதிபாதகமான அயநபதத்தை நன்றாக வறிந்தானாகில், ஸோபாதிகபந்துக்களிடத்தில் சாபல்யம் நிவ்ருத்தமாய்விடும். விஹிதநிஷித்தபேதத்தாலே நாநாவாயிருக்கிற ஶப்தாதிவிஷயங்களிலே ஸாபிலாஷபுத்தியையுடையனானாகில்; நாராயண ஶப்தோபரிஸ்த்திதையாய் குணாநுபவஜநிதப்ரீதிகாரிதாஶேஷாவஸ்த்தோசிதாஶேஷ ஶேஷதைகரதிரூப நித்யநிரதிஶயபோக்ய பகவத்கைங்கர்யப்ரார்த்தநா ப்ரகாஶகமாயிருக்கிற வ்யக்தசதுர்த்த்யர்த்தத்தை நன்றாகவறிந்தானாகில், சதுர்த்தியில் சொல்லப்படுகிற கைங்கர்யம் எம்பெருமானுக்கே! எனக்கன்று என்று ஸ்வபோக்த்ருத்வ புத்திநிவ்ருத்தமாய், ஸ்வார்த்ததயா அத்யந்தஸ்வரூபவிருத்தமான விஷயாந்தர நிவ்ருத்தியுண்டாம். விஹிதவிஷயப்ராவண்யமும் ப்ரபந்நாதிகாரிக்கு ஸ்வரூபமன்று.

கிந்து, அநுமதமாயிருக்கும். "ఋతౌ ఉపేయాత్" "ருதாவுபேயாத்" (உசரு)என்னுமதிலுங் காட்டில் ததோப்யதிகவிஷயலாபத்தில் கீழ்ச்சொன்னது நிவ்ருத்தமாய்விடும்.

அத ஏவ, மநு: "నమాంసభక్షణే దోషో న మద్యే న చ మైథునే। ప్రవృత్తిరేషా భూతానాం నివృత్తిస్తు మహాఫలా" "நமாம்ஸபக்ஷணே தோஷோ நமத்யேநசமைதுநே-

எ.—ப்ரவ்ருத்திரேஷாபூதாநாம் நிவ்ருத்திஸ்து மஹாபலா” (உசரு) இதி. ஆகையாலே, அநந்யபோக்யத்வஸ்வரூபவிருத்தமான விஷயாந்தரப்ராவண்யம் ப்ரபந்நனுக்கு த்யாஜ்யமென்றதாய்த்து.

“ఋతాదృతేభ్రూణహా” “ருதாத்ருதேப்ருணஹா” (உசஎ) இத்யாதி வசநம் † ஸ்வதார விஷயம்.

ப்ரபந்நாதிகாரிக்கு காதாசித்கமாய் வரும் ஸ்வதாரப்ரவ்ருத்தியும் அபசாரமாய், விஶேஷப்ரவ்ருத்தி யுண்டாகில் ஸ்வரூபநாஶகமாய்விடும். எங்ஙனே யென்னில்; ப்ரபந்நனுக்கு விஹிதவிஷயநிவ்ருத்தி தன்னேற்றம்; ப்ரதிகூல விஷயஸ்பர்ஶம் விஷஸ்பர்ஶம்போலே; அநுகூலவிஷயஸ்பர்ஶம் விஷமிஶ்ரபோஜநம்போலே. ப்ரதிகூல விஷயமாவது - லோக விருத்தமுமாய் நரகஹேதுவுமாயிருந்துள்ள நிஷித்த விஷயம்; தத்ஸ்பர்ஶம் விஷஸ்பர்ஶம் போலே யென்றது - ப்ராணபாதகத்வேந ப்ரஸித்தமாகையாலே ப்ராதிகூல்யம் தோற்றநின்று ப்ராணனை முடிக்கிற விஷஸ்பர்ஶம்போலே ஶாஸ்த்ரநிஷித்ததயா ப்ரஸித்தமாகையாலே ப்ராதிகூல்யமென்று தோற்றியிருந்து ஸ்வரூபநாஶத்தைப்பண்ணுகையாலே. அநுகூலவிஷயமாவது - லோகவிருத்தமுமன்றிக்கே, நரகஹேதுவுமன்றிக்கே, விஶிஷ்டவேஷாநுகூலமாயிருந்துள்ள விஹிதவிஷயம்; தத்ஸ்பர்ஶம் விஷமிஶ்ரபோஜநம்போலே யென்றது - விஷமிஶ்ராந்ந போஜநம் அதறியாதவனுக்கு அநுகூலமென்று தோற்றவிருந்து அவன்ப்ராணனை முடித்துவிடுமாப்போலே, ஶாஸ்த்ரவிஹிததயா ப்ரஸித்தமாகையாலே அநுகூலம்போலே தோற்றவிருந்து ஆத்மாவினுடைய அநந்யபோக்யத்வரூபமான ஸ்வரூபத்தை நஶிப்பிக்கையாலே.

“விஷயங்கள் ஸ்வரூபநாஶகம்” என்றதுக்கு ப்ரமாணம்:—“విషస్య విషయాణాంచ దూరమత్యన్తమన్తరమ్। ఉపభుక్తం విషం హన్తి విషయాస్స్మరణాదపి” “விஷஸ்யவிஷயாணாஞ்சதூரமத்யந்தமந்தரம் - உபபுக்தம் விஷம் ஹந்தி விஷயாஸ் ஸ்மரணாதபி” (உசஅ). இப்படி விநாஶகரமான விஷயங்களிலே ப்ரவணனாய் ஸுகிக்கநினைக்கை விபரீதஜ்ஞாநகார்ய மென்னுமிடத்தில்ப்ரமாணம்:- “ఆస్వాద్యదహనజ్వాలాం ఉదన్యాశమనం యథా। తథా విషయసంసర్గాత్సుఖచిన్తా శరీరిణః॥ విషయాణాన్తు సంసర్గాద్యోభిభర్తి సుఖం నరః। నృత్యత్ఫణిఫణచ్ఛాయాం విశ్రమాయాశ్రయేత్సః” “ஆஸ்வாத்யதஹநஜ்வாலாம் உதந்யாஶமநம்யதா - ததாவிஷயஸம்ஸர்க்காத்ஸுகசிந்தாஶரீரிண:-விஷயாணாந்துஸம்ஸர்க்காத்யோபிபர்த்திஸுகம்நர:-ந்ருத்யதஃ பணிநஶ்சாயாம் விஶ்ரமாயாப்ரயேதஸஃ” (உசகூ) “தண்ணீர்க்கு விடாய்ப்பட்டவன் விபரீதஜ்ஞாநத்தாலே தாபஹேதுவான அக்நிஜ்வாலையை விழுங்கி தான் விடாய்தீர நினைக்குமாப்போலேயும், ஆதித்யகிரணங்களாலே அதிமாத்ரதப்தனானவன் அந்ததாபத்தை ஆற்றுகைக்காக நிழல் என்கிற மாத்ரத்தைக்கொண்டு ஆகாம்யநர்த்தத்தை நிரூபியாதே, அத்யந்தகுபிதமாய்ப் படத்தைவிரித்து நின்றாடுகிற பாம்பின் நிழலிலே ஒதுங்க நினைக்குமாப்போலேயும் இருப்பதொன்றன்றோ” என்று பாதகமான விஷயங்களை

† “ஸ்வதாரவிஷயம் என்று சில ஸ்ரீகோஶங்கள்.

மூ.—௩.—திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப்

வ்யா.—௩.—இனிமேல் இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை விஸ்தரேண ப்ரதிபாதிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் இதினுடைய அநுஸந்தாந க்ரமகதநமுகத்தாலே இதின்வைபவத்தை யருளிச்செய்கிறார்,

(திருமந்த்ரத்தினுடைய) என்று தொடங்கி. திருமந்த்ரத்துக்குச் சீர்மையாவது- "ఋచో యజూంషి సామాని తథైవాథర్వణాని చ। సర్వమష్టాక్షరాన్తస్థం యచ్చాన్యదపి వాఙ్మయమ్" "ருசோயஜூம்ஷிஸாமாநி ததைவாதர்வணாநிச - ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்த்தம்யச்சாந்யதபிவாங்மயம்" (சு) என்கிறபடியே ஸகலவேத ஸங்க்ரஹமாய், "மற்றெல்லாம்பேசிலும்" (எ) என்கிறபடியே,

எ.—ஸுகாவஹமாகப் ரமித்து, அவற்றில் ப்ரவணராய் அவற்றை அநுபவித்து ஸுகிக்கவேண்டிக்கை என்று ஶாஸ்த்ரம் சொல்லிற்றிறே.

இஶ்லோகத்தாலே - (தததநுகுணமான த்யாஜ்யோபாதேயங்கள்) என்கிறவிடத்தில், த்யாஜ்யாம்ஶம் ஸூசிதமாய்த்தாகையாலே, உபாதேயாம்ஶத்துக்கு "ஈஶாநாம்ஜகதாம்" "ஈஶாநாம்ஜகதாம்" (உ௫0) என்கிற ஶ்லோகம் உதாஹரணமாகக்கடவது.

௩.—இப்படி [ப்ரதமரஹஸ்யம் திருமந்த்ரம்] என்கிறவாக்யத்துக்கு அர்த்தமருளிச்செய்து, மேல்வாக்யத்துக்கும் இதுக்கும் ஸங்கதி யருளிச்செய்கிறார் (இனிமேல்) என்றுதுடங்கி.

அர்த்தமருளிச்செய்கிறார் (திருமந்த்ரத்துக்குச் சீர்மையாவது) என்றுதுடங்கி. [சீர்மை] யாவது – (கௌரவம்.) கௌரவவிஷயத்தில் ப்ரமாணோபந்யாஸம் செய்தருளுகிறார் ("ருசோயஜூம்ஷிஸாமாநிததைவாதர்வணாநிச - ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்த்தம் யச்சாந்யதபிவாங்மயம்") என்று. ருக்குக்களும் யஜுஸ்ஸுக்களும் ஸாமங்களும் அப்படியே அதர்வணங்களும் மற்றுமுண்டான ஶப்தவிகாரங்களும் இவ்வஷ்டாக்ஷரத்துக்குள்ளே யிருக்கிறன. (ஸகலவேதஸங்க்ரஹமாய்) என்றது - லௌகிகஸகலஶப்தங்களுக்கும் வேதம்காரணமாய் அந்தவேதந்தனக்கும் ப்ரணவம்காரணமானவழியாலே.

("மற்றெல்லாம்பேசிலும்" என்கிறபடியே) என்றது-(மற்றெல்லாம்)- அநேகார்த்தங்களையெல்லாம், (பேசினும்) - சொல்லிற்றேயாகிலும் என்றர்த்தம். "மற்றெல்லாம் பேசிலும்" என்கிற வாக்யார்த்தத்தின் ப்ரகாரமென்றபடி.

தொ.-௩.—மேலுக்கவதாரிகை (இனிமேலித்யாதி.) இப்போது இம்மந்த்ரவைபவத்தைப் பலபடியாகவருளிச்செய்கிறது, இம்மந்த்ரந்தன்னில் சேதநருக்கு விஶ்வாஸ முண்டாகைக்காக.

(ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்த்தம்) என்றது-வேதசதுஷ்டயமும், ததுப்ப்ரும்ஹணங்களான ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களு மெல்லாம் திருமந்த்ரத்துக்கு வாச்யார்த்தமான அர்த்தபஞ்சகப்ரதிபாதகபரமென்றபடி. (யச்சாந்யதபிவாங்மயம்) என்றது-ஸ்ம்ருத்யாதிகளை.

பி.—(கதந)மாவது - சொல்லுகை.

மூ.—போரும்படி ப்ரேமத்தோடே பேணி யநுஸந்திக்கவேணும்.

வ்யா.—ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகமாய் "మన్త్రాణాం పరమో మన్త్రో గుహ్యానాం గుహ్యముత్తమమ్ । పవిత్రంచ పవిత్రాణాం మూలమన్త్రస్సనాతనః" "மந்த்ராணாம் பரமோமந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யமுத்தமம் - பவித்ரஞ்சபவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதநः" (அ) என்கிறபடியே மந்த்ரங்களில் வைத்துக்கொண்டு பரமமான மந்த்ரமாய், குஹ்யங்களில் வைத்துக்கொண்டு உத்தமமான குஹ்யமாய், பவித்ரங்களுக்கும் பவித்ரமாயிருக்கிற கௌரவம். (சீர்மைக்குப்போரும்படி) என்றது - தகும்படியென்கை. (ப்ரேமத்தோடே பேணியநுஸந்திக்கை) யாவது - இத்தையநுஸந்திக்குமளவில் ஸாஷ்கஹ்ருதயனாயிருந் தநுஸந்திக்கையன்றிக்கே, இதின் வைலக்ஷண்ய ஜ்ஞாநமடியாக இதின்பக்கல் தனக்குண்டான ப்ரேமத்தோடே, ※ குஹ்யாநாம் குஹ்யமானவிது அநதிகாரிகள் செவிப்படாதபடி,

---

எ.—(ஜ்ஞாதவ்யமான ஸகலார்த்த)ங்களாவன - அர்த்தபஞ்சகம்; தத்ப்ரதிபாதகமா யென்றபடி.

(ஸாஷ்கஹ்ருதயனாய்) என்றது – "మనసోయత్తయార్ద్రత్వం తత్ప్రేమేతికథ్యతే" "மநஸோயத்தயார்த்ரத்வம் தத்ப்ரேமேதிகத்யதே" (உ௱௧)என்கிறபடியே, தயார்த்ரஹ்ருதயனாயன்றிக்கே யிருக்கை. (இதின் வைலக்ஷண்யஜ்ஞாநமடியாக) என்றது - இம்மந்த்ரத்தினுடைய ஸகலவேதஸங்க்ரஹத்வ ஜ்ஞாதவ்ய ஸகலார்த்தப்ரதிபாதகத்வ பரமமந்த்ரத்வ உத்தமகுஹ்யத்வ பரமபவித்ரத்வரூப வைலக்ஷண்ய ஜ்ஞாநபூர்வகமாக வென்றபடி. (ப்ரேமத்தோடே) என்றது - விஶ்வாஸத்தோடே யென்றபடி.

(அநதிகாரிகள் செவிப்படாதபடி) என்றது - (அநதிகாரிக)ளாகிறார் - முமுக்ஷுக்களாகாதவர்கள், அவர்களுடைய செவியில் யாத்ருச்சிகமாகவும் கேளாதபடி யென்றபடி. "ఇదం తే నాతపస్కాయ నాభక్తాయ కదాచన । నచాశుశ్రూషవే వాచ్యం నచమాం యోఽభ్యసూయతి" "இதந்தேநாதபஸ்காய நாபக்தாய கதாசந - நசாஶுஶ்ரூஷவேவாச்யம் நசமாம்யோப்யஸூயதி" (உ௱உ)என்று சொல்லப்படுகிற அநதிகாரிகள் செவியில்படாதபடி என்னவுமாம். ஶ்லோகார்த்தः—"இதம் - இந்தரஹஸ்யமானது, அதபஸ்காய - அநநுஷ்ட்டிதமான தபஸ்ஸையுடையவனுக்கும், தே - உன்னாலே, நவாச்யம்; நாபக்தாய - ஆசார்யவிஷயத்திலும் மந்த்ரவிஷயத்திலும் தத்வாச்யனான பகவத்விஷயத்திலும் ப்ரேமஶூந்யனுக்கும், கதாசந நவாச்யம்-ஒருக்காலும் சொல்லக்கூடாது; அஶுஶ்ரூஷவே - ஶுஶ்ரூஷைபண்ணாதவனுக்கும், நசவாச்யம்; யः - யாவனொருவன், மாம்ப்ரதி அப்யஸூயதி - என்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளைச்சொல்லுமளவில் தோஷத்தை ஆரோபிக்கிறான்,

---

தொ.—(ஸாஷ்கஹ்ருதயனாய்) என்றது - ப்ரேமஶூந்யனாயென்றபடி. (இதின் வைலக்ஷண்யம்) என்றது-ஸகலஶாஸ்த்ரஸங்க்ரஹமா யிருக்கையும், ஜ்ஞாதவ்யஸகலார்த்த ப்ரதிபாதகமாயிருக்கையும், பரமகுஹ்யம் முதலானவை. (இதின்பக்கல்) என்றது - திருமந்த்ரத்தினிடத்திலே யென்றபடி.

வ்யா.—"మన్త్రంయత్నేన గోపయేత్" "மந்த்ரம் யத்நேநகோபயேத்" (க) என்கிறபடியே பேணிக்கொண்டநுஸந்திக்கையென்கை. இப்படி யநுஸந்திக்கவேணுமென்கையாலே - ப்ரகாராந்தரேண அநுஸந்திக்கலாகாதென்கிற நியமம் தோற்றுகிறது.

எ.—ஸர்வகுணஸம்பந்நனாகிலும், அவனுக்கும், நசவாச்யம்-சொல்லப் படாது" என்று பகவான் தானே யருளிச்செய்தானிறே.

(பேணிக்கொண்டு) என்றது - ரக்ஷித்துக்கொண்டென்றபடி.

"గురుంప్రకాశయేద్ధీమాన్ మన్త్రంయత్నేన గోపయేత్ । అప్రకాశప్రకాశాభ్యాం క్షీయేతే సమ్పదాయుషీ" "குரும்ப்ரகாஶயேத்தீமாந் மந்த்ரம்யத்நேநகோபயேத்-அப்ரகாஶப்ரகாஶாப்யாம்க்ஷீயேதேஸம்பதாயுஷீ" (உருந). தீமானானவன், "గుశబ్దస్త్వన్ధకారస్స్యాద్రుశబ్దస్తన్నిరోధకః। అన్ధకారనిరోధిత్వాద్గురురిత్యభిధీయతే" "குஶப்தஸ்த்வந்தகாரஸ்யாத் ருஶப்தஸ்தந்நிரோதகஃ - அந்தகார நிரோதித்வாத் குருரித்யபிதீயதே" (உருச) என்கிறபடியே - அஜ்ஞாநாந்தகார நிவர்த்தகனான ஆசார்யனை, ப்ரகாஶயேத் - ஸர்வஶ்ராவ்யனாகப் பண்ணக்கடவன்; "సర్వశ్రావ్యం ప్రకాశం స్యాత్" "ஸர்வஶ்ராவ்யம் ப்ரகாஶம்ஸ்யாத்" (உருரு) என்னக்கடவதிறே; மந்த்ரம் - "మన్తారమ్-అనుసన్ధాతారమ్, త్రాయత ఇతి-మన్త్రమ్" "மந்தாரம் - அநுஸந்தாதாரம், த்ராயத இதி - மந்த்ரம்" என்கிறபடியே - தன்னை யநுஸந்திப்பார்க்கு ரக்ஷகமான மந்த்ரத்தை, யத்நேந - ப்ரயத்நேந, கோபயேத் - அநதிகாரிகள் செவிப்படாதபடி ரக்ஷிக்கக்கடவன்; அப்ரகாஶப்ரகாஶாப்யாம் - ஆசார்யனைப்ரகாஶம் பண்ணாததினாலும், மந்த்ரத்தை ப்ரகாஶமாகப் பண்ணுகையாலும்; ஸம்பதாயுஷீ - ஸம்பத்தும் ஆயுஸ்ஸும், க்ஷீயேதே - க்ஷயியாநிற்கும். ஸம்பத்தாவது - பகவத்பக்தி; "భగవద్భక్తిరేవాత్ర ప్రపన్నానాం మహద్ధనమ్" "பகவத்பக்திரேவாத்ர ப்ரபந்நாநாம் மஹத்தநம்" (உருசு) என்னக்கடவதிறே ஆயுஸ்ஸாவது - ஶேஷத்வஜ்ஞாநம். இரண்டாலும் இரண்டும் நசித்துப்போமென்று கருத்து.

(நியமம்தோற்றுகிறது) என்கையாலே - நியமாதிக்ரமம் பண்ணினானாகில் ஸந்மார்க்காத் ப்ரச்யுதனாவான் என்று அபிப்ராயம். "ఆత్మపూజార్థమర్థార్థం దమ్భార్థమపి కిన్నధీః। అయోగ్యేషు వదన్ శాస్త్రం సన్మార్గాత్ప్రచ్యుతో భవేత్" "ஆத்மபூஜார்த்தமர்த்தார்த்தம் டம்பார்த்தமபிகிந்நதீஃ-அயோக்யேஷுவதந் ஶாஸ்த்ரம் ஸந்மார்க்காத் ப்ரச்யுதோபவேத்" (உருஎ) என்னக்கடவதிறே. (கிந்நதீஃ) என்றது - புத்தியில்லாதவனென்றபடி.

" (திருமந்த்ரத்தினுடைய) - ஶப்தஶக்தியாலும் அர்த்தபோதகத்தாலும் தன்னையநுஸந்திப்பார்க்கு ரக்ஷகமான திருமந்த்ரத்தினுடைய, [சீர்மைக்கு] - ஸகலவேதஸங்க்ரஹத்வ ஜ்ஞாதவ்யஸகலார்த்தப்ரதிபாதகத்வாதி கௌரவத்துக்கு, [பேரும்படி] - தகும்படி, [ப்ரேமத்தோடே]-

---

தொ.—(பேணிக்கொண்டு) என்றது-ரக்ஷித்துக்கொண்டென்றபடி. அசலறியாதபடி யென்றபடி.

(வேணும்) என்கிறவிதின் தாத்பர்யத்தையருளிச்செய்கிறார் (இப்படி) இத்யாதியால்.

பி.—(பேணிக்கொண்டு) - ஆதரித்துக்கொண்டு.

மூ.—ச.—மந்த்ரத்திலும் மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும்,

வ்யா.—ச.—இப்படி, இதின்பக்கல் ப்ரேமமுண்டாகவே இம்மந்த்ரம் இவனுக்குக் கார்யகரமாமோவென்ன வருளிச்செய்கிறார்,

(மந்த்ரத்திலும்) என்றுதுடங்கி. அதாவது - ஜ்ஞாதவ்யார்த்த ஜ்ஞாபகமான இம்மந்த்ரந்தன்னிலும், ஶேஷித்வஶரண்யத்வப்ராப்யத்வங்களாகிற ஆகாரத்ரயயுக்ததயா இம்மந்த்ரத்துக்கு வாச்யவஸ்துவாயிருக்கிற ஸர்வேஶ்வரன் விஷயத்திலும்,

---

ஏ.—ப்ரீதியோடே, [பேணி] - அநதிகாரிகள் செவிப்படாதபடி ரக்ஷித்துக்கொண்டு, அநுஸந்தாநம்பண்ணவேணும்" என்று மூலார்த்தம்.

ச.—மேல்வாக்யத்துக்கு அவதாரிகை (இப்படி) என்றுதுடங்கி. இப்படி - பூர்வோக்தப்ரகாரம். இவனுக்கு - வைலக்ஷண்ய ஜ்ஞாநபூர்வகமாக ப்ரேமமுடைய அநுஸந்தாதாவுக்கு. †கார்யகரமாமோ? என்று கேட்க;[மந்த்ரத்திலும்] என்றுதுடங்கி-(அருளிச்செய்கிறார்) என்று அந்வயம்.

(அதாவது) என்றது - [கார்யகரமாவது] என்று சொன்னதாவதென்றபடி. (ஜ்ஞாதவ்யார்த்தஜ்ஞாபகமான) என்றது—ஜ்ஞாதவ்யார்த்தமாவது—அர்த்தபஞ்சகம்; (ஜ்ஞாபகமான)-ப்ரதிபாதகமான வென்றபடி. (இம்மந்த்ரந்தன்னிலும்) - இந்ததிருமந்த்ரத்திலும்.

(ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்கள்) என்கிறவிடத்தில், ஶேஷித்வமாவது - ஶேஷபூதராலுண்டான அதிஶயத்துக்கு ஆஶ்ரயமாயிருக்கை; ஶரண்யத்வமாவது - அஶரண்யரானவர்களுக்கு ஸர்வப்ரகாரத்தாலும் ரக்ஷகனாயிருக்கை; ப்ராப்யத்வமாவது - பரமபுருஷார்த்ததயா அபிமதமாயிருக்கை. (ஆகாரத்ரயயுக்ததயா) - ஆகாரத்ரயத்தோடே கூடியிருக்கையாலே. (இம்மந்த்ரத்துக்கு) - பதத்ரயாத்மகமான இந்ததிருமந்த்ரத்துக்கு. ப்ரணவத்தில் ஶேஷித்வேநவும், நமஃபதத்தில் ஶரண்யத்வேநவும் நாராயணபதத்தில் கர்மணிவ்யுத்பத்தியாலே ப்ராப்யத்வேநவும் வாச்யவஸ்துவாயிருக்கிற ஈஶ்வரவிஷயத்திலு மென்றபடி. இதிற் - அநந்யார்ஹஶேஷத்வ அநந்யஶரணத்வ அநந்யபோக்யத்வமாகிற ஆகாரத்ரயத்தையும் ப்ரதிபாதிக்கையாலே சேதநஸ்வரூபயாதாத்ம்யபரமாயிருக்குமோபாதி, அநந்யார்ஹஶேஷித்வ அநந்யார்ஹஶரண்யத்வ அநந்யார்ஹப்ராப்யத்வமாகிற ஆகாரத்ரயத்தையும் ப்ரதிபாதிக்கையாலே, இம்மந்த்ரம் ஈஶ்வரஸ்வரூபயாதாத்ம்ய பரமாய்த்து. "శ్రీమాన్ స్వతన్త్రస్స్వామీచ సర్వత్రాన్యానపేక్షయా । నిరపేక్షస్వతన్త్రత్వంస్వామ్యంచాన్యస్యనక్వచిత్ ॥ ఆత్మస్వపరరక్షయాంపరాధీనేషుజన్తుషు। నిరపేక్షశరణ్యత్వంనియతంకమలాపతౌ, ఇహాసక్తిహతశ్రీమాన్ గోప్తాశేషీసమాధికదరిద్రః । శరణంసర్వశరీరిప్రాప్యస్సేవ్యశ్చసా

தொ.-ச.—மேலுக்கவதாரிகை (இப்படி) இத்யாதி. (இப்படி) என்றது. கீழ்ச்சொன்னபடி யென்றபடி. (இம்மந்த்ரம் இவனுக்கு) என்றது - இந்தத் திருமந்த்ரம் இந்தமுமுக்ஷுவுக் கென்றபடி. (கார்யகரமாமோ) என்றது - மோக்ஷப்ரதமாமோ வென்றபடி.

(ஜ்ஞாதவ்யார்த்தஜ்ஞாபகமான) என்றது-அர்த்தபஞ்சக ஜ்ஞாபகமான வென்றபடி.

பி.-ச.— (ஆகாரத்ரயம்) - ஈஶ்வரனுடைய ஶேஷித்வாத்யாகாரத்ரயம்.

---

† "ரக்ஷகமாமோ" என்றும் காண்கிறது.

வ்யா.— "తన్మన్త్రం బ్రాహ్మణాధీనమ్" "தந்மந்த்ரம் ப்ராம்ஹணாதீநம்" (கo) என்கிறபடியே - இம்மந்த்ரம் ஆசார்யாதீநமா யிருப்பதொன்றாகையாலே, இத்தை யதாப்ரதிபத்தி யுக்தனுக்கொண்டு

ஏ.—ధుభిర్భావ్యః" "ஸ்ரீமாந்ஸ்வதந்த்ரஸ்வாமீச ஸர்வத்ராந்யாநபேக்ஷயா-நிரபேக்ஷஸ்வதந்த்ரத்வம் ஸ்வாம்யம்சாந்யஸ்யநக்வசித்-ஆத்மஸ்வபரரக்ஷாயாம் பாரதீநேஷ்ஜந்துஷு - நிரபேக்ஷஶரண்யத்வம் நியதம்கமலாபதெள, இஹஸங்க்ரஹத ஸ்ரீமாந்கோப்தாஶேஷீஸமாதிகதரித்ர - ஶரணம்ஸர்வஶரீரீப்ராப்யஸ்ஸேவ்யஸ்சஸாதுபிர்பாவ்யஃ" (உருஅ) என்கிறபடியே- ஶேஷித்வாதிகள் அவனுக்கே அர்ஹமாயிருக்கும், மற்றொருவர்க்கு அர்ஹமன்றென்றபடி.

(ப்ராம்ஹணாதீநம்) என்றதுக்கு - (ஆசார்யாதீநம்) என்றருளிச்செய்தது, "ப்ரம்ஹஜ்ஞாநேந ப்ராம்ஹணஃ" "ப்ரம்ஹஜ்ஞம்ப்ராம்ஹணம்விதுஃ" (உருக) என்று - "ப்ரம்ஹத்தையறிந்தவனை ப்ராம்ஹணனென்றறிவர்கள்" என்று, ப்ராம்ஹணஶப்தம் ப்ரம்ஹஜ்ஞனை ஆசார்யனைச் சொல்லுகையாலே. "దైవాధీనంజగత్సర్వం మన్త్రాధీనంతు దైవతమ్। తన్మన్త్రం బ్రాహ్మణాధీనం తస్మాద్బ్రాహ్మణదైవతమ్" "தைவாதீநம்ஜகத்ஸர்வம் மந்த்ராதீநந்துதைவதம் - தந்மந்த்ரம்ப்ராம்ஹணாதீநம் தஸ்மாத்ப்ராம்ஹணதைவதம்" (உசுo) "జన్మనా జాయతే శూద్రః కర్మణా జాయతే ద్విజః। వేదపాఠేన విప్రస్స్య బ్రహ్మజ్ఞానేన బ్రాహ్మణః" "ஜந்மநாஜாயதேஶூத்ரஃ கர்மணாஜாயதேத்விஜஃ - வேதபாடேநவிப்ரஸ்ச ப்ரம்ஹஜ்ஞாநேநப்ராம்ஹணஃ."

(இத்தை) என்றது - ஆசார்யாதீநமான இம்மந்த்ரத்தை யென்றபடி. (யதாப்ரதிபத்தியுக்தனுக்கொண்டு) என்றது - உபதேஷ்டாவான தன்னை ஆசார்யனென்று நினைக்கையும், உபதேஶபாத்ரனைத் தனக்குஶிஷ்யனென்று நினைக்கையும், உபதேஶத்துக்கு அர்த்தஶுஶ்ருஷாதி த்ருஷ்ட ப்ரயோஜநத்தை பலமாகநினைக்கையுமாகிற விப்ரதிபத்தியன்றிக்கே, உபதேஷ்டாவான தன்னை உபதேஶஸமயத்தில் தன்னுடைய ஆசார்யனையே இவனுக்கு உபதேஷ்டாவாகவும், தான் அங்குத்தைக்குக் கரணபூதனாகவும், உபதேஶபாத்ரனை ஶிஷ்யனையும் தன்னோபாதி தன்னாசார்யனுக்கு ஶிஷ்யனாக ப்ரதிபத்தி பண்ணுகையும், பரோபதேஶம்பண்ணுமளவில் இவ்வாத்மா திருந்தி "ஆளுமாளார்" (உசுக) என்கிற விஷயத்துக்கு மங்களாஶாஸநத்துக்கு ஆளாகவேணும் என்னுமதுவேபலமாக உபதேஶிக்கையும்ஆகிற யதாப்ரதிபத்தியுக்தனாய்க்கொண்டென்றபடி. "బహవో గురవస్సన్తి శిష్యవిత్తాపహారకాః। దుర్లభోఽస్మిన్ గురుర్లోకే శిష్యహృత్తాపహారకః" "பஹவோகுரவஸ்ஸந்திஶிஷ்யவித்தாபஹாரகாஃ - துர்லபோஸ்மிந்குருர்லோகே ஶிஷ்யஹ்ருத்தாபஹாரகஃ" (உசுஉ).

தொ.—ப்ராம்ஹணஶப்தம் ஆசார்யனைக்காட்டுமோ வென்னில்; "ப்ரம்ஹணயதீதி - ப்ராம்ஹணஃ" என்கிற வ்யுத்பத்தியாலே, "గరీయాన్ బ్రహ్మదః పితా" "கரீயாந் ப்ரம்ஹதஃபிதா" என்கிறபடியே - ப்ரம்ஹஜ்ஞாநஜநகனான ஆசார்யனைக்காட்டும்.

(யதாப்ரதிபத்தி) என்றது - ஶாஸ்த்ரோக்தமான ப்ரதிபத்தியென்றபடி.

மூ.—மந்த்ரப்ரதனை ஆசார்யன்பக்கலிலும் ப்ரேமம் கனக்கவுண்டா ஞல் கார்யகரமாவது.

வ்யா.—தனக்கு உபகரித்த ஆசார்யவிஷயத்திலும், தத்தத்வைலக்ஷண் யாநுரூபமாக ப்ரேமமதிஶயேநவுண்டானல் இவனுக்குக் கார்யகரமாவதெ ன்கை. "మన్త్రే తద్దేవతాయాంచతథామన్త్రప్రదే గురౌ। త్రిషుభక్తిస్సదాకార్యాసాహిప్రథ మసాధనమ్" "மந்த்ரே தத்

எ.—(தனக்குபகரித்த)என்றது-"ఆత్మనోహ్యతినీచస్య యోగిధ్యేయపదార్హతామ్। కృపయైవోపకర్తారమాచార్యం సంస్మరేదిహ" "ஆத்மநோஹ்யதிநீசஸ்யயோகித்யே பதார்ஹதாம்-க்ருபயைவோபகர்த்தாரமாசார்யம் ஸம்ஸ்மரேதிஹ" (உகூ௫) என்கிறபடியே, நிர்ஹேதுககக்ருபையாலே, அதிநீசனை தனக்கு உபகரித்த வென்றபடி.

(ஆசார்யவிஷயத்திலும்) என்றது- "అన్ధోనన్తగ్రహణవశగో యాతి రజ్జ్వేయదస్య త్వజ్ఞో కార్ష్ణ్యకుహరనిహితో నీయతే నావికేన। భుఙ్క్తే భోగానవిదితనృపస్సేవకస్యార్థకాదిస్త్వం ప్రాప్తౌ ప్రభవతి తథా దేశికో మే దయాళుః" "அந்தோநந்தக்ரஹணவஶகோயாதி ரங்கேஶயத்வத்பங்குர்நௌகா குஹரநிஹிதோ நீயதே நாவிகேந - புங்க்தே போகாநவிதிதந்ருப: ஸேவகஸ்யார்ப்பகாதி: த்வத்ஸம்ப்ராப்தௌ ப்ரபவதி ததாதேஶிகோமேதயாளு:" (உகூ௪) என்கிறபடியே, பகவத்ப்ராப்தியைப் பண்ணிக்கொடுக்க வல்லனை ஆசார்யவிஷயத்திலுமென்றபடி.

(தத்தத்வைலக்ஷண்யாநுரூபமாக) என்கிறவிடத்தில், மந்த்ரத்துக்கு வைலக்ஷண்யமாவது - ஸகலவேதஸங்க்ரஹத்வாதிகள்; ஈஶ்வரனுக்கு வை லக்ஷண்யமாவது - ஸர்வஶேஷித்வாதிகள்; ஆசார்யனுக்கு வைலக்ஷண்ய மாவது - (உபதேஷ்டாவானதன்னை) [பக்கம்-அஎ-வரி-உ௫] என்றுதுட ங்கி (யதாப்ரதிபத்தியுக்தனுய்) என்னுமளவாகச் சொன்னதெல்லாம். அத வா, மந்த்ரத்துக்கு வைலக்ஷண்யமாவது - உபயவிபூதிநிர்வாஹகனை ஈஶ் வரனைத் தனக்கு விதேயமாம்படி பண்ணிக்கொண்டிருக்கை; ஈஶ்வரனுக்கு வைலக்ஷண்யமாவது - உபயவிபூதியும் தனக்கு விதேயமாம்படி பண்ணிக் கொண்டிருக்கை; ஆசார்யனுக்கு வைலக்ஷண்யமாவது - உபயவிபூதியும் வி தேயமாம்படி பண்ணிக்கொண்டிருக்கு மீஶ்வரனையுங்கூட தனக்குவிதேய மாம்படிபண்ணிக்கொண்டிருக்கிற மந்த்ரத்தையும் தனக்குவிதேயமாம்படி பண்ணிக்கொண்டிருக்கையென்னவுமாம்.

உக்தார்த்தத்தில் ப்ரமாணம்காட்டுகிறார் (மந்த்ரேதத்தேவதாயாஞ்சே தி) மந்த்ரத்தின் பக்கலிலும், அதினுடைய தேவதையின்பக்கலிலும், மந்த்ர ப்ரதனை குருவின்பக்கலிலும், மூவர்பக்கலிலும், தத்தத்வைலக்ஷண்யாநு குணமாக பக்தி யெப்போதும் பண்ணப்படும்; இதிறே முதலானஸாதநம்.

தா.—(தத்தத் வைலக்ஷண்யம்) என்றது - ஸகலவேதஸங்க்ரஹத்வா தி வைலக்ஷண்யமும், ஶேஷித்வாதி வைலக்ஷண்யமும், ஶாஸ்த்ரோக்தப்ரதி பத்தியுடையராயிருக்கையாகிற வைலக்ஷண்யமுமென்றபடி. உக்தார்த்த த்துக்கு ப்ரமாணங்காட்டுகிறார் (மந்த்ரே) இத்யாதியாலே. "மந்த்ரே தத் தேவதாயாம் - ததாமந்த்ரப்ரதேகுரௌ - ச - த்ரிஷுபக்தி:" என்கையும்.

வ்யா.—தேவதாயாஞ்சததாமந்த்ரப்ரதேகுரௌ-த்ரிஷு-பக்திஸ்ஸதா கார்யா ஸாஹிப்ரதமஸாதநம்" (கக) என்னக்கடவதிறே.

எ.—கீழ்அவதாரிகையில் (அதிலர்த்தமறிந்தே யெல்லாருமுஜ்ஜீவிக்க வேண்டுகையாலும் உபதேசபரம்பராப்ராப்தமான அர்த்தவிசேஷங்களை இப்ப்ரபந்தமுகேநவருளிச்செய்கிறார்) என்றாப்போலே, "மந்த்ரார்த்தப்ரதனான ஆசார்யன்பக்கலிலும்" என்றருளிச்செய்யாதே, [மந்த்ரப்ரதனான ஆசார்யன்பக்கலிலும்] என்றிருவருமருளிச்செய்தது, மந்த்ரப்ரதனானவாசார்யன் உபகாரகனாகையாலே அர்த்தப்ரதனான உத்தாரகாசார்யவிஷயத்திற்போலே மந்த்ரப்ரதனான உபகாரகாசார்யவிஷயத்திலும் ப்ரேமம் அதிசயேந உண்டாகவேணுமென்கைக்காக.

"జ్ఞానానుష్ఠానవైషమ్యాత్ప్రబలోయస్తుదుర్బలః। ఉత్తారకస్తుపూర్వస్స్యాదపరస్తూపకారకః" "ஜ்ஞாநாநுஷ்டாநவைஷம்யாத் ப்ரபலோயஸ்துதுர்ப்பலஃ - உத்தாரகஸ்து பூர்வஸ்யாத்அபரஸ்தூபகாரகஃ" (உகூரு) என்று, மந்த்ரப்ரத அர்த்தப்ரதாசார்யர்களிருவரிலும் வைத்துக்கொண்டு, அர்த்தப்ரதாசார்யன் ஜ்ஞாநாநுஷ்டாநத்தால் ப்ரபலனாகையாலே உத்தாரகனானான்; மந்த்ரப்ரதன் துர்ப்பலனாகையாலே உபகாரகனானான். ஜ்ஞாநமாவது- "அவனேஉபாயம்" என்றிருக்கை. அநுஷ்டாநமாவது - ப்ராப்யத்தில் த்வரை விஞ்சியிருக்கை. "మన్త్రః ప్రకృతిద్యుక్తోర్హ్యర్థః ప్రాణ ఇతిస్మృతః। తస్మాన్మన్త్రప్రదాచార్యాద్గరీయానర్థదో గురుః" "மந்த்ரஃப்ரக்ருதி த்யுக்தோர்ஹ்யர்த்தஃ ப்ராண இதிஸ்ம்ருதஃ-தஸ்மாந்மந்த்ரப்ரதாசார்யாத் கரீயாநர்த்ததோகுருஃ" (உகூகூ) என்று - உத்தாரகனை கரீயானாகச்சொல்லுகைக்கடி உபகாரகனாய்த்து; அந்த உபகாரந்தான், "ప్రకీర్ణవిషయారణ్యే ప్రధావన్తం ప్రమాథినమ్। జ్ఞానాఙ్కుశేన కృష్ణీయాద్వశ్యమిన్ద్రియదన్తినమ్" "ப்ரகீர்ணவிஷயாரண்யே ப்ரதாவந்தம் ப்ரமாதிநம் - ஜ்ஞாநாங்குசேநக்ருஷ்ணீயாத் வஶ்யமிந்த்ரியதந்திநம்" (உகூஎ) என்கிறபடியே - பகவத்விமுகனாய் இதரவிஷயாபிமுகனாய்த் திரியாநிற்கிற வென்னை தன் நிர்ஹேதுகக்ருபையாகிற வாளுருவி விஷயாடவியை அறுத்து பகவதாபிமுக்யத்தைப் பண்ணுவித்தானிவனன்றோ? என்று நினைத்திருக்கை. உபகாரகன் உத்தாரகனாகாமைக்கடி - "பாழ்த்தவிதியானவாறே" (உகூஅ) என்று - பாழ்பட்டுச் செடிவளர்ந்தநிலத்தைச்செய்காலாம்படி திருத்திக்ருஷிபண்ணினானித்தனையொழிய, பலபர்யந்தமாகத் திருத்தவில்லை. அவ்வளவு உபகாரத்தைப்பண்ணுகையாலே, ஜ்ஞாநாநுஷ்டாநாதிசய முண்டாய் அர்த்தப்ரதாசார்யலாப முண்டாய்த்திறே. "ஆசார்யனும் மந்த்ரப்ரதனென்றும் மந்த்ரார்த்தப்ரதனென்றும் இவர்களளவில்செய்யும் ப்ரதிபத்தியும் ஸமமாயிருக்கும்; பகவானுடைய திருவடிகளிரண்டிலும் வைஷம்யமுண்டாகில்றே ஆசார்யவிஷயத்திலும் வைஷம்யமுண்டாவது" என்று ப்ரமாணதாத்பர்யத்தில் ஆச்சான்பிள்ளைஅருளிச்செய்தாரிறே.

தொ.—(ததாமந்த்ரப்ரதே) என்றது - தேநப்ரகாரேண மந்த்ரப்ரதே யென்றபடி. ததா-தாத்ருசேதேவ ஸத்ருசேகுரௌஎன்றபடியாகவுமாம்.

மூ.—ரு. ஸம்ஸாரிகள்

வ்யா.—ரு. இனி இம்மந்த்ரத்தினுடைய அவதரணப்ரகார கதநமுகத்தாலே இதினுடைய அப்ரதிமவைபவத்தை யருளிச்செய்கிறார்,

(ஸம்ஸாரிகள்) என்றுதுடங்கி.—(ஸம்ஸாரி)களாகிறார் - அநாத்யசித்ஸம்பந்தத்தாலே

எ.—ஆக, இத்தால்-அநுஸந்தாநக்ரமத்திலே இதின் வைபவத்தை யருளிச்செய்தாராய்த்து.

[மந்த்ரத்திலும்] - ஜ்ஞாதவ்யார்த்த ஜ்ஞாபகமான இம்மந்த்ரத்திலும், [மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும்] - மந்த்ரத்துக்கு சேஷித்வ ப்ராண்யத்வ ப்ராப்யத்வேந வாச்யனான ஈஶ்வரவிஷயத்திலும், [மந்த்ரப்ரதனான ஆசார்யன்பக்கலிலும்] - இம்மந்த்ரத்தை யதாப்ரதிபத்தியுக்தனாய்த் தனக்குபகரித்த ஆசார்யவிஷயத்திலும், [ப்ரேமம் கனக்கவுண்டானால்] - ப்ரேமம் அதிஶயேந உண்டானால், கார்யகரமாவது என்று மூலார்த்தம்.

ரு. (இனி) என்றது - இனிமேலென்றபடி. (அப்ரதிமவைபவத்தை) என்றது - அஸத்ருஶமான வைபவத்தை என்றபடி. இவ்விடத்தில், ப்ரதிமஶப்தம் – உபமாநபரமாய், உபமாநரஹிதமென்றபடி. (ஸம்ஸாரிகளித்யாதி) தேஷாம்ஸ்வரூபம் பூர்வமேவோக்தத்வாத், தத்ரத்ரஷ்டவ்யம்.

தொ.—ரு. மேலுக்கவதாரிகை (இனி) இத்யாதி. (கதநமுகத்தாலே) என்றது-கதநாதிகளாலேயென்றபடி. ஆதிஶப்தத்தாலே-அர்த்தபஞ்சககதநத்தையும், எம்பெருமானுடைய ஶிஷ்யத்வாசார்யத்வகதநத்தையும், எம்பெருமானுடைய க்ருபை நிர்ஹேதுகமென்னுமத்தையும், இம்மந்த்ரத்தினுடைய ஸம்ஸாரநிவர்த்தகத்வகதநத்தையும் சொல்லுகிறது. வைபவத்துக்கு அப்ரதிமத்வமாவது – ஸம்ஸாரநிவர்த்தகத்வ ஶக்தி மற்றொருமந்த்ரத்துக்கில்லாமலிருக்கை. "𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌨𑌾𑌮𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑌶𑍇𑌷𑌾𑌘𑌹𑌰𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃" "வைகுண்டநாமக்ரஹணமஶேஷாகஹரம்விது:" என்றது - அஹங்காரமொழிந்த பாபநிவர்த்தகத்வத்தைப்பற்ற; இம்மந்த்ரம், லுப்தசதுர்த்தியாலும் நமஸ்ஸாலும் அஹங்காரநிவர்த்தகமாகையாலே, மந்த்ராந்தரங்களைப்பற்ற இதுக்கு வாசியுண்டு.

(அநாத்யசித்ஸம்பந்தத்தாலே) என்றது—அநாதிஶப்தம் - ஸம்பந்த விஶேஷணமாய், அநாதியான அசித்ஸம்பந்தத்தாலே யென்றபடி. இத்தால்-ஸம்பந்தம் காதாசித்கமன்றென்கிறது.

பி.—ரு. (அப்ரதிம வைபவம்) - ஒப்பின்றியிருக்கிற வைபவம்.

(அநாத்யசித்ஸம்பந்தத்தாலே) என்றது - சேதநனுக்கு அசித்ஸம்பந்தம் நித்யமென்னும்போது மோக்ஷதசையிலே கழியக்காண்கையாலே. அசித்ஸம்பந்தம் நித்யமென்னக்கூடுமோ வென்னில்; அசித்ஸம்பந்தம் வந்த நாளறியாமையாலே "நித்யம்" என்று ப்ரமாணங்கள் சொல்லுகிற தத்தனை போக்கி, ஆத்மாவுக்கு அசித்ஸம்பந்தம்வந்தேறியாகையாலே அநித்யமென்று கொள்ளவேணும்.

வ்யா.—ப்ரவாஹரூபேண வருகிற அவித்யாகர்மவாஸநாருசிவிவஶ ராய் ஜந்மமரணாதி க்லேஶபாகிகளாய்த் திரிகிற பத்தசேதநர்.

(தங்களையுமீஶ்வரனையும்மறந்து) என்றது - "దాసభూతాస్స్వతస్సర్వేహ్యాత్మానఃపరమాత్మనః । నాన్యథాలక్షణంతేషాంబన్ధేమోక్షేతథైవచ" "தாஸபூதாஸ்ஸ்வ தஸ்ஸர்வேஹ்யாத்மாநః பரமாத்மநః - நாந்யதாலக்ஷணம்தேஷாம் பந்தே மோக்ஷேததைவச" (கஉ) என்கிறபடியே - ஸ்வதஸ்ஸித்தமான பகவச்

எ.—(திரிகிற) என்றது - "పునశ్చగర్భేభవతిజాయమానో స్తమేతిచ" "புநஶ் சகர்ப்பேபவதிஜாயமாநோஸ்தமேதிச" (உசுக) என்கிறபடியே-பிறபது சாவதாய்த்திரிகிறவென்றபடி.

பகவச்சாஸ்த்ரே, "దాసభూతా" "தாஸபூதா" இதி. எல்லா ஆத்மாக் களும் பரமாத்மாவுக்கு ஸ்வதः தாஸபூதராயிருப்பர்கள்; பத்தாவஸ்த்தை யிலும் முக்தாவஸ்த்தையிலும் அவர்களுக்கு இதொழிய வேறடையாள மில்லை.

தொ.—(ப்ரவாஹரூபேணவருகிற) என்றது - வ்யக்திபேதமுண்டா யிருக்கச்செய்தேயும், பூர்வமுள்ள நாமரூபங்களேயாய் வருகிறவென்ற படி. (அவித்யா) என்றது - தேஹாத்மாபிமாநமும், தன்னிடத்தில் "ஸ்வ தந்த்ரன்" என்கிற அபிமாநமுமென்றபடி. (கர்மம்) என்றது - அந்த அபி மாநங்களிரண்டுமடியாக இச்சேதநர்பண்ணும் புண்யமும் பாபமுமென் றபடி. (வாஸநை) என்றது - விஷயஸ்த்ராதிகளைக்காட்டும்போது, பயா பஸர்ப்பணாதிகளுக்கு ஹேதுவான அவித்யாவாஸநையும், புத்திபூர்வக மாக த்ருணச்சேதநாதிகளிலே ப்ரவர்த்திக்கைக்கு ஹேதுவான கர்மவா ஸநையுமென்றபடி. (ருசி) என்றது - புத்திபூர்வகமாக புண்யபாபங்களிலே ப்ரவர்த்திப்பிக்கைக்கு ஹேதுவான ருசியென்றபடி. (மரணாதி) என்கிறவி டத்தில், ஆதிஶப்தத்தாலே-பால்ய யௌவந கௌமார வார்த்தகங்களைச் சொல்லுகிறது. (க்லேஶபாகிகளாய்) என்றது - அவ்வோதசையிலுண்டான க்லேஶத்தை யடைந்தவர்களாயென்றபடி.

(ஸ்வதः) என்றது - ஸ்வரூபேணஎன்றபடி. (ஹி) என்றது -ப்ரஸித்த மன்றோவென்றபடி. (அந்யதா) என்றது, அந்யத் என்றால் - ஸ்வாதந்த்ர்ய மென்றபடி. (லக்ஷணம்) என்றது-அஸாதாரணதர்மமென்றபடி.

பி.—ஆனால், "வந்தேறி" என்று அறியும்படி யென்னென்னில்; மோக்ஷதசையிலே கழிக்கக்காண்கையாலே, "வந்தேறி" என்னுமிடம் ஸித்தம். அவற்றையெல்லாம் ஆதிமத்தாகக்காணுகின்றோமேயிறே (ப்ரவா ஹரூபேண)என்று. அசித்ஸம்பந்தமடியாக அவித்யையுண்டு, அதடியாகமு ன்புமுண்டு, அன்றதடியாக ப்ரக்ருதிஸம்பந்தமுண்டு, வாஸநாருசிகள் கர்ம ஹேதுக்கள்; இப்படிமாறிவருகை யென்றபடி. "ஸர்வே-ஆத்மாநः-ஸ்வதः, தாஸபூதாः - ஸ்வதः" என்கிறது - ஸ்வாபாவிகமாகவென்றபடி. அதாவது- ஒரு உபாதியடியாகவன்றென்றபடி.

மூ.—தங்களையும் ஈஶ்வரனையும் மறந்து,

வ்யா.—சேஷத்வத்தை லக்ஷணமாகவுடையராயிருக்கிற தங்களையும், "𑌪𑌤𑌿𑌂𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯" "பதிம்விஶ்வஸ்ய" (௧௩) "𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍" "ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்த்திதம்" (௧௪) இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே தங்களுக்கு நிருபாதிகஶேஷியாயிருக்கிற ஈஶ்வரனையும் அறியாதேயென்கை. ஆனால், அறியாமலென்னாதே, (மறந்து)என்பானேன்? முன்பொருக்கால் நினைத்து, பின்பு அந்நினைவுக்கு ப்ரச்யுதிவந்தவிடத்திலேறே (மறந்து) என்னலாவதென்னில்; "மறந்தேனுன்னை முன்னம்" (௧௫) என்கிறபடியே-ஸ்வதஸ்ஸித்தமான ஸம்பந்தத்தையுணர்ந்தால், முன்பு நினைத்திருந்த வர்த்தத்தை மறந்தாப்போலேயிருக்கும்

எ.—(லக்ஷணமாக உடையராயிருக்கிற) என்றது-ஸ்வரூபமாகவுடையராயிருக்கிற வென்றபடி.

"𑌪𑌤𑌿𑌂𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍" "பதிம்விஶ்வஸ்யாத்மேஶ்வரம்"- விஶ்வத்துக்கு பதி என்றும், தனக்குத்தானே ஈஶ்வரனென்றும், "𑌸𑍍𑌵𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿𑌸𑌞𑍍𑌜𑌾𑌤𑌂𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 । 𑌉𑌭𑌯𑍋𑌰𑍇𑌷𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑍋𑌨𑌪𑌰𑍋𑌽𑌭𑌿𑌮𑌤𑍋𑌮𑌮" "ஸ்வத்வமாத்மனிஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரம்ஹணிஸ்த்திதம் - உபயோரேஷஸம்பந்தோ நபரோபிமதோமம" என்று=ஸ்வத்வமாவது - ஆத்மாவின் பக்கலிலே உண்டாவது; ஸ்வாமித்வமாவது - ப்ரம்ஹத்தின்பக்கலிலே நிற்குமது; † இருவர்க்கும் இந்தஶேஷஶேஷிபாவமே ஸம்பந்தம், வேறொன்றுமில்லை என்று எனக்கு அபிமதம். (நிருபாதிகஶேஷியாயிருக்கிற) என்றது - கர்மோபாதிகமான ஶேஷிகளைப்போலன்றிக்கே, ஸ்வதஶ் ஶேஷியாயிருக்கிற வென்றபடி.

("மறந்தேனுன்னை முன்னம்" என்கிறபடியே) என்றது - "மறந்தேனுன்னை முன்னம்" என்கிற திருமங்கையாழ்வார் ஸ்ரீஸூக்திப்படியே என்றபடி.

தொ.—ஶேஷத்வம் சேதநாசேதநஸாதாரணமாயிருந்ததேயாகிலும் ஶேஷத்வவஸ்துக்களுக்கு அஸாதாரணமாகையாலே, (ஶேஷத்வத்தை லக்ஷணமாகவுடையராயிருக்கிற)என்றருளிச்செய்கிறார். இத்தால்-"இவ்வாத்மாவுக்கு ஶேஷத்வமே ஸ்வரூபநிரூபகம்,ஜ்ஞாத்ருத்வம் நிரூபிதஸ்வரூபதர்மம்" என்னுமிடமும், "ஜ்ஞாத்ருத்வமில்லாவிடிலும் ஸ்வரூபஹாநியில்லை" என்னுமிடமும் தோற்றுகிறது. (உடையராயிருக்கிற தங்களையும்) என்றது-ஶேஷமாகத்தங்களையுமென்றபடி. (ஶேஷியாயிருககிற ஈஶ்வரனையும்) என்றது-ஶேஷியான ஈஶ்வரனையு மென்றபடி.

[மறந்து] என்கிற ஶப்தத்தாலே - அறியாமையைச்சொல்லுவானேன்னென்ன; அருளிச்செய்கிறார் (ஆனால்) இத்யாதியால்.

---

† "இருவர்க்குமுண்டான இந்த ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தமே எனக்கு அபிமதம் வேறு அபிமதமன்று." என்றானல் ஸ்வரஸம்; கோஶாந்தரங்களிற் கண்டுகொள்வது.

எ-அ.—திருமொழி க - பத்து, உ - திருமொழி, பாட்டு - உ.

மறந்தேனுன்னை முன்னம் மறந்தமதியின்மனத்தால்
இறந்தேனெத்தனையு மதனாலிடும்பைக்குழியில்
பிறந்தேயெய்த்தொழிந்தேன் பெருமான்திருமார்வா
சிறந்தேன்நின்னடிக்கே திருவிண்ணகர்மேயவனே.

இரண்டாம்பாட்டு.—இத்தனையோ செய்த குற்றமென்ன (மறந்தேனுன்னை முன்னம்) அந்தப் பொருளின்பங்களோபாதி உன்னையும் ஒருமூலையிலே ஆதரித்துக்கொடுபோரப் பெற்றிலேன். அது செய்துபோந்தாராகில் அப்போதைக்கிப்போது அவற்றுக்குப் பரிஹாரம் பண்ணிறாவரோ (மறந்தேன்) யாதொரு விஷயம் விடாதே நினைக்கவடுக்கும், அதொன்றையும் மறந்துபோந்தேன். மதுரையிலே நிர்வஹீயாதிறக்கச்செய்தே, ஒப்பிலாதபெருமாள் "'த்யேயோநாராயணஸ்ஸதா' 'த்யேயோநாராயணஸ்ஸதா' (உஎ0) என்கிற விஷயத்தையாகாதே மறந்துபோந்தது" என்றார். அல்லாதவை செய்தபடிசெய்ய, உன்னை முந்துறமுன்னம் மறந்துகொடுநின்றேனென்னுதல்; அன்றிக்கே, அநாதிகாலம் மறந்துபோந்தேனென்னுதல். அம்மறப்புப் போருகிறது நெடுநாளுண்டாகில், உன்னை முன்னம் மறந்திலேன் என்றன்றோ சொல்லவடுப்பது என்னில்; அது வேண்டாவாய்த்து. "உன்னை" என்கிறவிடத்திலே ஸம்பந்தத்தை ஸ்மரித்தவராகையாலே; ஸம்பந்தம் ஸ்வாபாவிகமே யாகையாலே, முன்பு நெடுநாள்மறந்து போரச்செய்தேயும் சிலநாள் ஸ்மரித்து மறந்தாப்போலே யிருக்கத் தோற்றிற்று.

(உஎக) *கலங்காப்பெருநகரந்தன்னிலே யிருந்து மறக்கிறதன்றிறே. ஸம்ஸாரத்திலே யிருந்துமறக்கை குற்றமோவென்ன; அவ்வளவேயன்று, நான் சேதநனாகப் பெற்றிலேனென்கிறார். சேதநனாகில் "மறந்தோம்" என்னும் அநுதாபம் பிறக்கவேணுமிறே மறந்தால்; "மறந்தோம்" என்கைக்கு யோக்யதையில்லையிறே அசித்துக்கு; சித்துக்கு ஜ்ஞாத்ருத்வமாகிறது - ஜ்ஞாநகுணங்களுக்கு ஆஶ்ரயமாகையிறே; அக்குணங்கள் தன்பக்கல்காணாமையாலே அவற்றுக்கு ஆஶ்ரயமுண்டாகப்பெற்றதில்லை. மறந்தோமென்கிற மதியில்லாத நெஞ்சையுடையேனென்கையாலே - அநுதாபரூபஜ்ஞாநமும் பிறக்கைக்கு த்வாரம் மநஸ்ஸிறே; அதில்லாமையாலே (இறந்தேனெத்தனையும்) அசித்துக்கும் அவ்வருகேயானேன். முதலிலே நினைக்கைக்கும் யோக்யதை யில்லையிறே அசித்துக்கு; சித்துக்கு யோக்யதை யுண்டாயிருக்கச்செய்தேயும், நினையாமையாலே அசித்துக்கும் அவ்வருகே கைகழியப்போனேன். "அஸந்நேவ" "அஸந்நேவ" (உஎஉ) என்று ப்ரமாணங்களும் சொல்லலாம்படியானேன். உண்டாயிருக்கச்செய்தேயும், "இல்லை" என்று வ்யவஹரிக்கலாம்படி நசித்தேன்.

(அதனால்) "அவித்யாதருஸம்பூதிபீஜமேதத்த்விதாஸ்த்திதம்" "அவித்யாதருஸம்பூதிபீஜமேதத்த்விதாஸ்த்திதம்" (உஎங) என்கிறபடியே—அநாத்மந்யாத்ம

வ்யா.—ஸம்பந்தத்திலுறைப்பை நினைத்தருளிச் செய்தாராமித்தனே.

ஏ.—புத்தியும் அஸ்வேஸ்வபுத்தியும் ஸம்ஸாரத்துக்கு பீஜமென்றிருப்பார்கள்; இவர், அநுதாபமில்லாமை ஸம்ஸாரபீஜமென்றிருக்கிறார்.

(இடும்பை) - துக்கம். துக்கத்தை விளைக்கக்கடவதான கர்ப்பத்திலே போய்ப்புக்கு, சாவது பிறப்பதாய்க்கொண்டு க்லேஶப்பட்டேபோந்தேன். (பிறந்தே) இப்படி சாவது பிறப்பதாய்ப் போராநின்றால், நடுவிலே காதாசித்கமாக பகவத்ஸமாஶ்ரயணம் பண்ணிவிடுறே அதொரு ஜந்மத்துக்கு ப்ரதிபந்தகமாகவற்றுவது; அப்படி புருஷகாரங்காட்டி மீண்டதில்லை. (எய்த்தொழிந்தேன்) இன்னம் பிறக்கைக்கடியான கர்மவாஸனை யுண்டேயாகிலும் பிறக்கைக்கு த்ரவ்யமில்லாதபடியானேன். கர்மவாஸனை கிடந்து பிறக்கவேண்டினாலும், பிறக்கைக்கு க்ஷமனல்லேன். (ஒழிந்தேன்) நானேயெய்த்தேன். இனி, உடையவர்களுக்கு எடுத்துக்கொள்ள நல்லகாலமென்கிறார்.

உடையவர்கள் எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்கிறது நீர்தாம் எது நினைத்தென்ன (பெருமான்) உம்மைநினைத்து. கைகழிந்தீராகில் செய்யலாவதுண்டோவென்ன (பெருமான்) எனக்குநானேயோ உளேன்? நீயில்லையோ? ஶேஷித்வ ப்ராப்தியைப்பற்றச் சொல்லுகிறீராகில், ஶேஷிகளாவார்க்கு ஸ்வாதந்த்ர்ய முண்டாயிருக்குமே; ஸ்வதந்த்ரரான நம்மைச் சொல்லுகிற தென்னீர்? என்ன (திருமார்வா) உன்னுடைய ஸ்வாதந்த்ர்யத்தை யழித்து ஸ்வீகரிப்பிக்கும் பிராட்டியன்றோ அருகேயிருக்கிறாள். "ந கஶ்சிந் நாபராத்யதி" "நகஶ்சிந்நாபராத்யதி"(உஎச) என்பாரன்றோ அருகே?

(சிறந்தேன்) அவள் ஏதேனும் தப்புச்சொல்லிலும் விடேனென்னும் நீயும், உன் ஸ்வாதந்த்ர்யத்தை யழித்து உன்னையிட்டு ஸ்வீகரிப்பிக்குமவளும், இருவரும் இங்கே ஸந்நிதிபண்ணுகையாலே, தேவர்திருவடிகளுக்குத் தகுதியானேன்.

(திருவிண்ணகர்) (உஎக) * கலங்காப்பெருநகரம் இருப்பாயிருக்க, அவ்விடத்தைவிட்டு, பிராட்டியோடேகூட, எய்த்தாரை யெடுக்கைக்காகத் திருவிண்ணகரிலே ஸந்நிஹிதனாய். நான் எய்த்துக்கொடுகின்றேன்; எய்த்தார்க்கும், எய்த்தாரை யெடுக்கவந்து நிற்கிறவர்களுக்கும் ஒருசேர்த்தியில்லையோ...*

(ஸம்பந்தத்திலுறைப்பைநினைத்து) என்றது - ஔபாதிகமான ஸம்பந்தமாகில் உபாதிநஶித்தவாறே நஶித்துப்போம்; அங்ஙனன்றிக்கே, நிருபாதிக ஸம்பந்தமாகையாலே யாவதாத்மபாவி த்ருடமாயிருக்கையை நினைத்தென்றபடி.

தொ.—(உறைப்பை) என்றது - தார்ட்யத்தையென்றபடி.

பி.—(உறைப்பை)-மிடுக்கை.

மூ.—ஈஶ்வரகைங்கர்யத்தையும் இழந்து,

வ்யா.—(ஈஶ்வர கைங்கர்யத்தையும் இழந்து) என்றது-கீழ்ச்சொன்ன அஜ்ஞாநத்தாலே வகுத்த ஶேஷியான ஈஶ்வரவிஷயத்தில் கைங்கர்யமாகிற பரமபுருஷார்த்தத்தையும் ப்ராபிக்கப்பெறுதே யென்கை. புருஷார்த்தத்தினுடைய கௌரவத்தையும், அதுக்கிட்டுப்பிறந்துவைத்துக் கிட்டப்பெறுமல் † கிடந்தபடியையும் நினைத்து, (இழந்து) என்கிறுர்.

எ.—(கீழ்ச்சொன்ன அஜ்ஞாநத்தாலே) என்றது - [மறந்து] என்கிற பதத்தாலே சொல்லப்பட்ட அஜ்ஞாநத்தாலே யென்றபடி. (பரமபுருஷார்த்தத்தையும்) "பரோமாயஸ்மாத்ஸः - பரமः, புருஷைः அர்த்யத இதி – புருஷார்த்தः, பரமஶ்சாஸௌ - புருஷார்த்தஶ்ச" இதி கர்மதாரயமாய், இதுக்கு மேற்பட்ட புருஷார்த்த மில்லாமையாலே (பரமபுருஷார்த்தம்) என்றபடி.

(அதுக்கு இட்டுப்பிறந்துவைத்து) என்றது - "ఐచిత్రాదేహసమ్పత్తిరీశ్వరాయనివేదితుమ్" "விசித்ராதேஹ ஸம்பத்திரீஶ்வராய நிவேதிதும்" (உ௭௫) என்கிறபடியே - அந்த கைங்கர்யரூப பரமபுருஷார்த்தத்துக்காகவே பிறந்தென்றபடி. (வைத்து) என்றது -சாரியைச்சொல். (கிட்டப்பெறுமல் கிடந்தபடியையும்) என்றது - அது செய்யப்பெறுமல் விஷயாந்தரப்ரவணராயிருக்கும் ப்ரகாரத்தையுமென்றபடி.

தொ.—(கீழ்ச்சொன்ன) என்றது- [தங்களையு மீஶ்வரனையும் மறந்து] என்கிறவிடத்திற் சொன்னவென்றபடி. (வகுத்த ஶேஷியான) என்றது - ப்ராப்த ஶேஷியான என்றபடி. (ப்ராபிக்கப்பெறுதே) என்றது - அடையப்பெறுதேயென்றபடி.

(இழந்து) என்கிற ஶப்தப்ரயோகத்தின் தாத்பர்யத்தை யருளிச்செய்கிறுர் (புருஷார்த்தத்தினுடைய) இத்யாதியால். (புருஷார்த்தத்துக்கு கௌரவ) மாவது - தனக்குமேற்பட்ட புருஷார்த்தமாதல் தன்னோடொத்த புருஷார்த்தமாத லில்லாதொழிகையும், யத்நஸாத்யமன்றிக்கே யிருக்கையும், சேதநனுடையபோக்த்ருத்வகந்தம் பொறுதொழிகையும். (அதுக்கிட்டுப்பிறந்துவைத்து)என்றது-புருஷார்த்தத்தைச்செய்கையின்பொருட்டு, "ఐచిత్రా" "விசித்ரா" என்கிறபடியே தேஹத்தை உபகரணமாக வைத்துக்கொண்டு பிறந்துவைத்தென்றபடி. (வைத்து) என்கிறது - சாரியைச்சொல்; - அர்த்தமில்லை. (அதுகிட்டப்பெறுமையால்) என்றது - அத்தைச்செய்து போருகையன்றிக்கே கைங்கர்யம் செய்யுமவர்கள் ஸந்நிதியும் லபிக்கப்பெறுமையாலென்றபடி. (கிடந்தபடியையும்) என்றது - விஷயாந்தரப்ரவணராய்க்கிடந்த படியையுமென்றபடி. "கரணங்கள் நிர்விஷயங்களாயிராமையாலே விஷயாந்தரப்ரவணராய்" என்று கூட்டிக்கொள்ளவேணும். இத்தால் - "ஸ்வரூபப்ராப்தமான புருஷார்த்தத்தோடே அந்வயிக்கப்பெறுமையன்றிக்கே,ஸ்வரூபவிருத்தமான விஷயாந்தரப்ராவண்யமும் மேலிடுவதே!" என்று இழவு இரட்டித்திருந்தமை தோற்றுகிறது.

பி.—(கீழ்ச்சொன்னஅஜ்ஞாநம்) - சேதநஸம்பந்த ஜ்ஞாநாபாவः.

---

† அது கிட்டப்பெறுமையால்" என்று தொட்டாசார்யரும்பதத்தில் பாடம்.

மூ.—இழந்தோமென்கிற விழவுமின்றிக்கே, ஸம்ஸாரமாகிற பெருங் கடலிலே விழுந்து நோவுபட;

வ்யா.—(இழந்தோமென்கிறவிழவுமின்றிக்கே) என்றது - ஸ்வஸ்வரூப பரஸ்வரூபஜ்ஞாநமும் புருஷார்த்தஜ்ஞாநமும் இல்லாமையாலே ஶேஷத்வாநுரூபமான ஶேஷிவிஷய கைங்கர்யரூப புருஷார்த்தத்தை யிழந்தோமென்கிற அலாபக்லேஶந்தானுமின்றிக்கே யென்கை.

(ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலேவிழுந்து நோவுபட) என்றது - "సంసారసాగరం ఘోరమనన్తక్లేశభాజనమ్" "ஸம்ஸாரஸாகரம்கோரமநந்தக்லேஶபாஜநம்"(௧௬) என்கிறபடியே அநந்தக்லேஶபாஜநமாய், ஒருவராலும் ஸ்வயத்நத்தால் கரைகாணவரிதாம்படி யிருக்கிற ஸம்ஸாரமாகிற மஹாஸமுத்ரத்துக்குள்ளே விழுந்து தாபத்ரயாபிபூதராய்க்கொண்டு க்லேஶப்படவென்கை.

எ.—(ஸ்வஸ்வரூபேத்யாதி) ஸ்வஸ்வரூப பரஸ்வரூப புருஷார்த்தஸ்வரூபவிஷயகஜ்ஞாந முண்டாகில், "ஶேஷத்வாநுரூபமான ஶேஷிவிஷய கைங்கர்யரூப புருஷார்த்தத்தை யிழந்தோமே!" என்று அலாபத்தில் க்லேஶமுண்டாம்; ஸ்வஸ்வரூபாதிஜ்ஞாந மில்லாமையாலே "இழந்தோம்" என்கிற அலாபக்லேஶந்தானு மில்லாமலென்கை.

"సంసారసాగరం ఘోరమనన్తక్లేశభాజనమ్ త్వామేవశరణం ప్రాప్య నిస్తరన్తి మనీషిణః" "ஸம்ஸாரஸாகரம்கோரமநந்தக்லேஶபாஜநம்-த்வாமேவஶரணம்ப்ராப்யநிஸ்தரந்திமநீஷிண:." [ஸம்ஸாரமிதி] [ஸம்ஸார] மாகிறது - அவித்யாகர்மவாஸநா ருசிப்ரக்ருதிஸம்பந்தங்களும், ஷட்பாவவிகாரங்களும், புத்ரமித்ரகளத்ராதிகளும், தத்கார்யமாகையாலே - ஸம்ஸாரஶப்தவாச்யங்களாகிறன. பரிச்சேதிக்க வொண்ணாமையாலும், தன்பக்கலிழிந்தார்க்கு அக்கரையேறவொண்ணாமையாலும், இத்தை [ஸாகர] மாக நிரூபிக்கிறது. [கோரம்] - கொடிதாயிருக்கை. [அநந்தக்லேஶபாஜநம்] - தாபத்ரயாதி துக்கத்தாலே தொகையற்ற க்லேஶத்துக்கெல்லாம் உத்பத்திஸ்தாநமாயிருக்கை. [த்வாமேவஶரணம்ப்ராப்ய] - உபாயபாவத்தில் ஸஹகாரிஸாபேக்ஷனல்லனென்கிறது. [நிஸ்தரந்தி] - உன்னாலேயித்தைக் கடக்கப்பார்க்கிறார்கள். மநீஷிண:] "மநோஜேதார:- மநீஷிண:" - விஷயாந்தரப்ரவணமான மநஸ்ஸையும் ஸாதநாந்தரப்ரவணமான மநஸ்ஸையும் ஜயித்திருக்குமவர்கள்.

(வரந்தரும்)"ஒழிவில்காலம்" என்று இவனுக்கு ப்ரார்த்தநீயமான கைங்கர்யத்தைக்கொடுக்கும். (வலந்தரும்)என்றாலும், அது தன்னையே காட்டும். அங்ஙனன்றிக்கே, (வலந்தரும்) என்று - "𑌯 𑌆𑌤𑍍𑌮𑌦𑌾 𑌬𑌲𑌦𑌾" "ய ஆத்மதா பலதா" (௪௨௩) என்று தன்னையும்கொடுத்து தன்னையநுபவிக்கைக்கீடான ஶக்தியையும்கொடுக்கும். நித்யஸம்ஸாரியாயின்றுசென்றவனுக்கும், நித்யாநுபவம்பண்ணுகிறநித்யஸூரிகளோடொக்கஅநுபவிக்கைக்கீடானஶக்தியையும்கொடுக்கும். அங்ஙனன்றிக்கே, (அருளொடுபெருநிலமளிக்கும்வலந்தரும்) தன்னை ஆஶ்ரயித்தவர்தங்களளவன்றிக்கே, தங்களோடு ஸம்பந்தித்தார்க்கும், தங்களருளோடேகூட, பெரிய நிலமுண்டு - பரமபதம், அத்தைக் கொடுக்கவல்லராம்படியான ப்ரஸாதத்தைப்பண்ணும்.—(மற்றும்தந்திடும்) இவனுக்கு ஹிதமாய் இவனறியாதவற்றையும் தானேகொடுக்கும். "இவன்கார்யம் தானறிந்தானோ? நாமன்றோ கடவோம்" என்று தானேகொடுக்கும். கோவிந்தஸ்வாமி, தன்னைக்கண்டவநந்தரம், "நான் கூடப்போருவேன்" என்ன; அவனுடைய முன்புத்தை நினைவையறிந்து, "நீயிங்கேயிருந்து சிறிதுநாள் அநுபவித்துவா" என்று போனானிறே.—(பெற்றதாயினுமாயினசெய்யும்) மாதாவானவள், ஶரீரத்துக்கு உத்பாதகையாமளவிறே; ஆத்மாவுக்கு ஸ்வரூபமான ஜ்ஞாநவிநாஶத்தைப் பிறப்பிப்பானவனேயிறே. "𑌶𑌰𑍀𑌰𑌮𑍇𑌵 𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑌰𑍌 𑌜𑌨𑌯𑌤𑌃" "ஶரீரமேவமாதாபிதரௌஜநயதః" (௪௨௪) என்று - விரோதியானஶரீரத்தை உத்பாதித்து விடுமளவிறே அவர்கள் செய்வது; "𑌸 𑌹𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌸𑍍𑌤𑌂 𑌜𑌨𑌯𑌤𑌿 𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌜𑌨𑍍𑌮" "ஸஹிவித்யாதஸ்தம்ஜநயதிதச்ச்ரேஷ்டம்ஜந்ம" (௪௨௫) என்று-ஜ்ஞாநப்ரதனானவனேயிறே.—

தொ.—(வலந்தரும்)என்றது-மேன்மேலும்அநுபவஜநிதப்ரீதிகாரிதமானகைங்கர்யத்தில் ஸ்வகர்த்ருத்வ ஸ்வபோக்த்ருத்வ ப்ரதிபத்தியன்றியே அந்வயிக்கைக்கீடான பலத்தைக்கொடுக்குமென்றபடி. (மற்றும்தந்திடும்) என்றது - மற்றும் ஸ்வரூபாநுரூபமானவை யெல்லாவற்றையும் கொடுக்குமென்றபடி. (பெற்றதாயினுமாயினசெய்யும்) என்றது - பாகவதஶேஷத்வபர்யந்தமான பகவச்சேஷத்வஜ்ஞாநமுடைய வதிகாரிக்கு, விதிமூலமாயன்றிக்கே ராகமூலமாய்வருமவற்றையெல்லாம் செய்யுமென்றபடி.

மூ.—கக. ஐஶ்வர்ய கைவல்ய பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு

வ்யா.—கக.—அத்தை விஶதீகரிக்கிறார்,

(ஐஶ்வர்ய) இத்யாதியாலே. அதாவது - "ఐహలౌకికమైశ్వర్యం స్వర్గాద్యం పారలౌకికమ్ । కైవల్యం భగవన్తం చ మన్త్రోయం సాధయిష్యతి" "ஐஹலௌகிகமைஶ்வர்யம் ஸ்வர்க்காத்யம்பாரலௌகிகம்| கைவல்யம்பகவந்தஞ்ச மந்த்ரோயம ஸாதயிஷ்யதி" (ரு0) என்கிறபடியே - ஐஹிகமாயும், பார

எ.—(நலந்தரும்சொல்லை) ஆர்த்தாநுஸந்தாநமொழியிலே பாடத்தைச்சொன்ன மாத்ரத்திலே பக்தியைப் பிறப்பிக்குமென்னுதல்; நலமென்று - வர்த்தமாய், கைங்கர்யத்தைத் தருமென்னுதல்; ஆகையாலே, கைங்கர்யக்துககடியான ருசியைப்பிறப்பிக்குமென்னுதல்; கைங்கர்யம் தருமென்னுதல். (நான் கண்டுகொண்டேன்) இப்படி யிருப்பதொன்றுண்டு என்றறியாத நான் காணப்பெற்றேன். (நாராயணாவென்னும்நாமம்) "నమో నారాయణాయేతి మన్త్రః సర్వార్థసాధకః" "நமோ நாராயணாயேதிமந்த்ரஸ் ஸர்வார்த்தஸாதகஃ" (சஉசு)என்னுமத்தை. *

கக.—(அத்தைவிஶதீகரிக்கிறார்) என்றது-"குலந்தரும" என்கிறபாட்டில் அதிகாரிநிர்தேஶம் பண்ணுகையாலே, ஸர்வாபேக்ஷித ப்ரதத்வ வைபவமாத்ரத்துக்கு த்ருஷ்டாந்தமாகத் திருவுளம்பற்றி அதிகாராநுகுணமாக ஸர்வாபேக்ஷித ப்ரதத்வத்தை வ்யக்தமாகவருளிசெய்கிறாரென்றபடி.

(ஐஹலௌகிகமிதி) - புத்ரபஶ்வந்நாதிரூபமான இஹலோகைஶ்வர்யத்தையும், ஸ்வர்க்காநுபவம்முதலாக ப்ரம்ஹபதபர்யந்தமான பரலோகைஶ்வர்யத்தையும், ஆத்மாநுபவமாத்ரமான கைவல்யத்தையும், நிரதிஶயாநந்தரூபமான பகவதநுபவத்தையும், இந்த மந்த்ரம் ஸாதித்துக்கொடுக்கும்.

தொ.—இவைபெத்தனையுஞ்செய்யுமதேதென்ன; நலந்தருஞ்சொல்லான நாராயணாவென்னும் நாமம் என்கிறார். "நீராசொல்லக்கேட்டீர்?" என்ன (நான்கண்டுகொண்டேன்) நான் ப்ரத்யக்ஷமாகக்கண்டுவிட்டேனென்கிறார். இப்படி ஐஶ்வர்ய கைவல்யாத்திகள்விஷயத்திலும தத்ததிகாராநுகுணமான துலாதிகளை ஊன்றிகொள்வது.

கக.— மேலுக்கவதாரிகை (அத்தையித்யாதி.)

மூலவாக்யார்த்தத்தை யருளிச்செய்கிறார் (அதாவது) இத்யாதியால். (ஐஹலௌகிகமைஶ்வர்யம்) என்றது—பசுபுத்ராதி ஸார்வபௌமத்வபர்யந்தமான ஐஶ்வர்யமென்றபடி. (கைவல்யம்) என்றது ஆத்மாநுபவமென்றபடி. (ச) என்றது - ஸமுச்சயமாகவுமாம்; சரமபர்வத்தை யென்னவுமாம்.

மூ.—அவற்றைக்கொடுக்கும்.

௨0. கர்ம ஜ்ஞாந பக்திகளிலே இழிந்தவர்களுக்கு

வ்யா.—லௌகிகமாயுமிருக்கும் ஐச்வர்யத்தையும், ஆத்மப்ராப்திரூபமான கைவல்யத்தையும், பரமபுருஷார்த்தமான பகவல்லாபத்தையும் ஆசைப்பட்ட அதிகாரிகளுக்கு, ஜபஹோமாதிகளாலே ஸ்வயம் ஸாதநமாய் நின்று, அவ்வோ புருஷார்த்தங்களைக் கொடுக்குமென்கை.

௨0. இனி, கர்மாத்யுபாய ஸஹகாரித்வரூபமான இதின் வைபவத்தை அருளிச்செய்கிறார்,

(கர்மஜ்ஞாந) இத்யாதியாலே. அதாவது - கர்மயோகத்தில் இழிந்தவர்களுக்கு,

எ.— கைவல்யார்த்திக்கு "ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத" "ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்மவ்யாஹரந்" (சஉஎ) என்று ப்ரணவமாத்ரத்தை ஸாதநமாக விதித்திருக்க, இங்கு இம்மந்த்ரம் ஸாதித்துக்கொடுக்கும் என்றருளிச்செய்தது-மந்த்ரத்தில ப்ரதாநமான ப்ரணவத்தாலேஸாதித்துக்கொடுக்கையாலே அருளிச்செய்தாரென்றுகருத்து.

[ஐச்வர்ய கைவல்ய பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு]-(இஹலௌகிகமாயும் பாரலௌகிகமாயுமிருக்கும் ஐச்வர்யத்தையும், ஆத்மப்ராப்திரூபமான கைவல்யத்தையும், பரமபுருஷார்த்தமான பகவல்லாபத்தையும் ஆசைப்பட்ட அதிகாரிகளுக்கு, ஜபஹோமாதிகளாலே ஸ்வயம ஸாதநமாய் நின்று அவ்வோ புருஷார்த்தங்களைக்கொடுக்கும்) என்று மூலார்த்தம்.

௨0.— மேல்வாக்யத்துக்கவதாரிகை (இனி) இத்யாதி.

(கர்மயோகத்திலிழிந்தவர்களுக்கு) இத்யாதி-(கர்மயோக)மாவது-யஜ்ஞ தாந தபோத்யாந ஸந்த்யாவந்தந பஞ்சமஹாயஜ்ஞாக்நிஹோத்ர தீர்த்தயாத்ரா புண்யக்ஷேத்ரவாஸ க்ருச்ச்ர சாந்த்ராயண புண்யநதீஸ்நாந வ்ரத சாதுர்மாஸ்ய பலமூலாசந ஶாஸ்த்ராப்யாஸ ஸமாராதந ஜபதர்ப்பணாதி கர்மாநுஷ்டாநக்கால்வந்த காயஶோஷணத்தாலே பாபநாசம்பிறந்து அத்தாலே, இந்த்ரியத்வாரா ப்ரஸரிக்கிற தர்மபூதஜ்ஞாநத்துக்கு சப்தாதிகள் விஷயமல்லாமையாலே, விஷயஸாபேக்ஷைபிறந்து யமநியமாஸந ப்ராணாயாம ப்ரத்யாஹார தாரணா த்யாந ஸமாதிரூபமான அஷ்டாங்கயோக க்ரமத்தாலே யோகாப்யாஸகாலத்திலும் ஜ்ஞாநத்துக்கு ஆத்மாவை விஷயமாக்குகை. இதுதான், ஜ்ஞாநயோகத்துக்கு ஸஹகாரியுமாய், ஐச்வர்யத்துக்கு ப்ரதாநஸாதநமாயுமிருக்கும் அதிலே. இழிந்தவர்களுக்கு.

தொ.—௨0.— மேலுக்கவதாரிகை (இனி) இத்யாதி.

மூலார்த்தம் (அதாவது) இத்யாதி.

மூ.—விரோதியைப்போக்கி

வ்யா.—ஜபஹோமாதிகளாலே தன்னை ஸஹாயமாகக் கொள்ளுமளவில், கர்மயோகாரம்பவிரோதியான பாபத்தைப்போக்கி, அந்த கர்மத்தினுடைய அவிச்சேதாபாதகமாய்க்கொண்டு அத்தைத் (தலைக்கட்டிக் கொடுக்கும்). ப்ரதமத்திலே, ஜ்ஞாநயோகத்திலே இழிந்தவர்களுக்கு, தன்னை ஸஹாயமாகக்கொள்ளுமளவில், கர்மஸாத்யமான ஜ்ஞாநாரம்பவிரோதி பாப நிவ்ர்த்தியைப்பண்ணி,

---

எ.— (தன்னை ஸஹாயமாகக்கொள்ளுமளவில் என்றது-ஸஹாயமாகக் கொள்ளும்போதென்றபடி. (அவிச்சேதாபாதகமாய்க்கொண்டு) என்றது-அந்தராயாபாவத்தைப்பண்ணிக்கொடா நின்றுகொண்டு என்றபடி. "అనేకజన్మసాహస్యాం యోగాగ్నిదగ్ధకిల్బిషామ్| నిర్ధూతకల్మషేషేస్య త్వద్దే సంపరిచయః||, సురసవ్యవహారస్య జన్మాన్తరకృతైః పాపైః| అస్తోకరజసోనైవ తీయతే నాత్రసంశయః||" "அநேகவஹிகர்மாத்யயோகாஸ்ஸந்த்யந்தியோகிநாம் | ஸர்வேஷாந்தத்வபேக்ஷாஸ்யதஸ்மாதேகம்பரமவிஜு:||, ஞரப்யாகிலபாப்மாஜந்மாந்தரகர்மோபிவா | அஷ்டாக்ஷரஜபேநைவக்ஷீயதே நாத்ரஸம்ஶய:||" (சஉஅ) என்னக்கடவதிறே.

(ப்ரதமத்திலே ஜ்ஞாநயோகத்திலே இழிந்தவர்களுக்கு) என்றது-கர்மயோகத்திலே ப்ரவேசித்து அதிலே நிர்மலாந்த:கரணராய் ஜ்ஞாநயோகத்திலே இழிகையன்றிக்கே, முதலிலேதானே ஜ்ஞாநயோகத்திலே ப்ரவேசித்தவர்களுக்கென்றபடி. ஜ்ஞாநயோகமாவது-யோகஜந்யஜ்ஞாநத்துக்கு ஹ்ருதயகமலம், ஆதித்யமண்டலம் தொடக்கமான ஸ்தலவிசேஷங்களிலே, எழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனை விஷயமாக்கி, அவ்விஷயந்தன்னை சங்கசக்ரகதாதரமாய், பீதாம்பரயுக்தமாய் கிரீடாதிநூபுராந்தமான திவ்யபூஷணாலங்க்ருதமாய், லக்ஷ்மீஸஹிதமாகவும் அநுபவித்து, யோகாப்யாஸக்ரமத்தாலே, அநுபவகாலத்தைப் பெருக்கி, அநவரதபாவநாரூபமாக்குகை. (ஜ்ஞாநாரம்பம்) என்றது-ஜ்ஞாநயோகாரம்பமென்றபடி.

தொ — (ப்ரதமத்திலே) என்றது - கர்மயோகத்தைப்பண்ணி அநந்தரம் ஜ்ஞாநயோகத்திலே இழிகையன்றிக்கே, முதலிலேதானே யென்றபடி.

பி.—உ0.— (கர்மஸாத்யமான ஜ்ஞாநாரம்பவிரோதி பாபநிவ்ர்த்தியைப்பண்ணி) என்றது-அந்தகர்மஸ்தாநேதானிருந்து அந்தகர்மம் போக்குகிற ஜ்ஞாநாரம்பவிரோதியான பாபத்தைப்போக்கு மென்றபடி.

மூ.—அவற்றைத் தலைக்கட்டிக்கொடுக்கும்.

உக. ப்ரபத்தியிலே

வ்யா.—அந்த ஜ்ஞானத்துக்கு நாடோறும் அதிஶயத்தைப்பண்ணுகின்று கொண்டு, அத்தைத் (தலைக்கட்டிக்கொடுக்கும்). பக்தியோகத்திலே இழிந்தவர்களுக்கு, தன்னை ஸஹாயமாகக்கொள்ளுமளவில், பக்தியோகாரம்பவிரோதியான பாபத்தைப்போக்கி பக்திவிவ்ருத்தி ஹேதுவாய்க்கொண்டு அத்தைத் (தலைக்கட்டிக்கொடுக்கும்) என்கை.

உக.— இங்ஙனன்றிக்கே ப்ரபந்நர்க்கு இது செய்யு முபகாரவைபவத்தை அருளிச்செய்கிறார்,

(ப்ரபத்தியிலே) என்று தொடங்கி. அதாவது – கீழ்ச்சொன்னவை போலே துஶ்ஶகமுமாய் ஸ்வரூபவிருத்தமுமாய் இருக்கையன்றிக்கே, ஸுஶகமுமாய் ஸ்வரூபாநுரூபமுமான

எ.— (நாடோறும்) என்றது – நாள்தோறுமென்றபடி. பக்தியோகமாவது – தைலதாராவத் அவிச்சிந்நஸ்ம்ருதி ஸந்தாநரூபமான அநுபவத்தை ப்ரீதிரூபாபந்நமாககுகையும், அதுதன்னையறியப்பார்த்தால், ப்ராரப்தகர்மம் கழியும்படி, ஸாதநஸாத்யங்களை அநுஸந்தித்து அதினுடைய ஸங்கோசவிகாஸமாம்படி பரிணமிப்பிக்கை. [கர்மஜ்ஞாநபக்திகளிலே இழிந்தவர்களுக்கு] – கர்மயோக ஜ்ஞாநயோகபக்தியோகங்களிலே ப்ரவேஶித்தவர்களுக்கு, [விரோதியைப்போக்கி] – (யோகாரம்பவிரோதியான பாபத்தைபபோக்கி), [அவற்றை]-அந்தகர்மஜ்ஞாந பக்தியோகங்களை, [தலைக்கட்டிக்கொடுக்கும்] – முடித்துக்கொடுக்குமென்று மூலார்த்தம்.

உக.—மேல்வாக்யத்துக் கவதாரிகை (இங்ஙனன்றிக்கே என்று தொடங்கி.

(இங்ஙனன்றிக்கே) என்றது-உபாஸகர்க்கு, இது செய்யுமுபகாரவைபவமன்றிக்கேஎன்றபடி. (ஸ்வரூபவிருத்தமுமாய இருக்கையன்றிக்கே) என்றது-பாரதந்த்ர்ய (ஸ்வரூபவிருத்தமுமாய் இருக்கையன்றிக்கே) என்றபடி. (ஸ்வரூபாநுரூபமுமான) என்றது-பாரதந்த்ர்ய(ஸ்வரூபாநுரூபமுமான) என்றபடி.

தொ.—(நாடோறும) என்றது – நாள்தோறுமென்றபடி. (பக்தியோகத்திலே இழிந்தவர்களுக்கு) என்றது -ப்ரதமம (பக்தியோகத்திலே இழிந்தவர்களுக்கு) என்றபடி. [தலைக்கட்டிக்கொடுக்கும்] என்றது – தர்ஶநஸமாநமாக்குமென்றபடி.

உக.— மேலுக்கவதாரிகை (இங்ஙனன்றிக்கே) இத்யாதி. (இங்ஙனன்றிக்கே) என்றது – ஸ்வயத்நஸாத்யங்களான கர்மாத்யுபாயங்களிலே யிழிகையன்றிக்கே யென்றபடி. (ப்ரபந்நர்க்கு) என்றது– “ஈஶ்வரனே உபாயோபேயம்” என்றிருக்கும் (ப்ரபந்நர்க்கு) என்றபடி.

மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (கீழ்ச்சொன்னவை) என்றது – கர்மாத்யுபாயங்களையென்றபடி.

தி.— (நாடோறும்) என்றது – ப்ரதிதினமுமென்றபடி.

மூ.—இழிந்தவர்களுக்கு ஸ்வரூபஜ்ஞாநத்தைப்பிறப்பித்து காலக்ஷேபத்தாக்கும்

வ்யா.—ப்ரபத்த்யுபாயத்திலே இழிந்தவர்களுக்கு, தத நுரூபமான பகவத்பாரதந்த்ர்யரூப ஸ்வரூப ஜ்ஞாநத்தை விசதமாகப் பிறப்பித்து அர்த்தாநுஸந்தாநாதிகளாலே போதுபோக்குகைக்கும்ஹேதுவாய், "எனக்கென்றுந் தேனும்பாலுமமுதுமாய திருமால்திருநாமம்"

ஏ.— (ப்ரபத்த்யுபாயத்திலே) என்றது - "𑌅𑌨𑌨𑍍𑌯𑌸𑌾𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌵𑌾𑌭𑍀𑌷𑍍𑌟𑍇 𑌮𑌹𑌾𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 । 𑌤𑌦𑍇𑌕𑍋𑌪𑌾𑌯𑌤𑌾𑌯𑌾𑌚𑍍𑌞𑌾 𑌪𑍍𑌰𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌿𑌃 ॥" "அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாஸபூர்வகம் | ததேகோபாயதாயாச்ஞா ப்ரபத்திச்சரணாகதி:" (சஉக) என்று பகவச்சாஸ்த்ரத்திலே சொல்லுகிறபடியே ததேகோபாயத்வப்ரார்த்தனையாகிற ப்ரபத்த்யுபாயத்திலே என்றபடி. (தத நுரூபமான) என்றது - அந்த ப்ரபத்த்யுபாயாநுரூபமான என்றபடி. (அர்த்தாநுஸந்தாநாதிகளாலே) என்றது - ஸ்வார்த்தாநுஸந்தாநாதிகளாலே என்றபடி. (ஆதி) ஶப்தத்தாலே, மந்த்ராநுஸந்தாநத்தைச் சொல்லுகிறது. (போதுபோக்குகைக்குமஹேதுவாய்) என்றது-காலயாபநத்திற்கும்ஹேதுவாயென்றபடி.

பெரியதிருமொழி - ௬ - பத்து - ௧0 - திருமொழி - ௬ - பாட்டு.

"கானவெண்குங்குரங்கும் முசுவும்படையாவடலரக்க
மானமழித்துநின்றவென்றியம்மானெனக்கென்றும்
தேனும்பாலுமமுதுமாயதிருமால திருநாமம்
நானுஞ்சொன்னேன்நமருமுரைமின் நமோநாராயணமே."

"வ்யா—(கானவெண்கும்) இத்யாதி-இந்த்ராதிதேவதைகள் முதுகிட்டுப்போமதொழிய, எதிர் நிற்கமாட்டாதபடி பண்ணும்மிக்கையுடையனான ராவணனுடைய அபிமாநத்தைப்போக்குமிடத்தில், இடக்கைவலக்கைவாசியறியாதே என்றும் காட்டிலேவர்த்திக்குமதொழிய பூசல்கண்டறியாத, (எண்கும்)-கரடியையும், குரங்கையும், முசுவையும் சேனையாகக்கொண்டு, திக்பாலாதிகளை அழியச்செய்த மிடுக்கையுடைய ராவணனுடைய அபிமாநத்தைப்போக்கின ஸர்வாதிகன். (எனக்கென்றும்) இத்யாதி-எனக்கு ஸர்வவிதபோக்யமுமான ஶ்ரிய:பதியினுடைய திருநாமத்தை. மிதுகமானவேதமேகானும் இவர்க்கு ரஸிப்பது;

தொ.- (ப்ரபத்த்யுபாயத்திலே) என்றது-ப்ரபத்திவிஷயமான உபாயத்திலே யென்றபடி. (தத நுரூபமான) என்றது - அந்த ஸர்வோபாய ஸ்வீகாராநுரூபமானவென்றபடி.

மூ.—போகத்துக்கும் ஹேதுவாயிருக்கும்.

வ்யா.—என்கிறபடியே, ப்ரதிபாத்யவஸ்துவைப்போலே ஸ்வயம்போக்யமாயிருக்கையாலே போகத்துக்கும் ஹேதுவாயிருக்குமென்கை.

எ.—"రమా బాణావ నీర్యః" "ரமமாருதமயேந்த்ரய:" (ச௯-௦) என்னுமாப்போலே. (நானும் சொன்னேன்) இதரவிஷயங்களினுடையபேரையே சொல்லிப்போந்த நானுமன்றே சொன்னேன். இனி இது கண்டால் எல்லார்க்கும் சொல்லத்தட்டில்லையிறே; என்னோடு ஸம்பந்தமுடையாரெல்லாரும் இத்தையே சொல்லிப்போருங்கோள். (நமோ நாராயணமே) நமக்குவகுத்தத்தைச் சொல்லிப்போருங்கோள். ஆழ்வார்கள் கோஷ்டியில் இதொழிய வேறொரு திருநாமமுண்டாக நினைத்திருப்பாரில்லை; உண்டாகில், ஆயிரமென்று நிரனைச்சொல்லுமித்தனை; "பேராயிரங்கொண்டதோர் பீடுடையன்," "దేవో నామ సహస్రవాన్" "தேவோ நாமஸஹஸ்ரவாந்" (ச௯-௧) "பலபலவுடையன்" என்னுமாப்போலே. ஸ்ருதி, வேறொரு திருநாமமுண்டாகச்சொல்லுமன்றாய்த்து, இவர்கள் வேறொருதிருநாமமுண்டாகச்சொல்லுவது. அந்தர்யாமிப்ராஹ்மணத்தோடு காரணவாக்யங்களோடு வாசியற இத்தையேயிறே சொல்லுவது? இதொழிந்தவை, ஜ்ஞாநஶக்த்யாதிகளைப்போலே; இது, ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகள்போலே ஸ்வரூபநிரூபகமாயிருக்கும்." *

(ப்ரதிபாத்யவஸ்துவைப்போலே ஸ்வயம் போக்யமாயிருக்கையாலே) என்றது - "రసో వై సః" "ரஸோவைஸ:" (ச௯-௨) என்றும், "எனக்குத் தேனே பாலே கன்னலேயமுதே" என்றும் இத்யாதியில்படியே, ஏதன்மந்த்ரப்ரதிபாத்யமானவஸ்து, ஸ்வயம்போக்யமாயிருக்குமாபபோலே தத்ப்ரதிபாதகமான இம்மந்த்ரமும், "தேனும்பாலுமமுதுமாயதிருமால் திருநாமம்" என்கிறபடியே, (ஸ்வயம்போக்யமாயிருக்கையாலே) என்றபடி. (போகத்துக்கும்ஹேதுவாயிருக்கும்) என்றது - ஸதாநுபவத்துக்கும் யோக்யமாயிருக்குமென்றபடி. "జపేద్భోగతయా మన్త్రం సతతం వైష్ణవోత్తమః । నసాధకతయా జప్యం కర్తవ్యం విష్ణుతత్పరైః ॥" "ஜபேத்போகதயா மந்த்ரம் ஸததம் வைஷ்ணவோத்தம:। நஸாதகதயா ஜப்யம் கர்த்தவ்யம் விஷ்ணுதத்பரை:" (ச௯-௩).

தொ.— (ப்ரதிபாத்யவஸ்துவைப்போலே) என்றது - "ஸர்வரஸ:" என்றுசொல்லப்படுகிற ப்ரதிபாத்யவஸ்துவான ஈச்வரனைப்போலேயென்றபடி.

மூ.—௨௨. "மற்றெல்லாம்பேசிலும்"

வ்யா—௨௨.— இனி, ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகத்வமாகிற இதின் வைபவத்தை அருளிச்செய்கிறார்,

("மற்றெல்லாம்பேசிலும்") என்று தொடங்கி.

எ.— [ப்ரபத்தியிலே இழிந்தவர்களுக்கு]-ஸாஸகமுமாய், பாரதந்த்ரிய ஸ்வரூபாநுரூபமுமாயிருக்கிற ப்ரபத்யுபாயத்திலே ப்ரவேசித்தவர்களுக்கு, [ஸ்வரூபஜ்ஞாநத்தைப்பிறப்பித்து]- (ததநுரூபமானபகவத்பாரதந்த்ர்யரூப ஸ்வரூபஜ்ஞாநத்தைவிசதமாகப்பிறப்பித்து), [காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும்ஹேதுவாயிருக்கும்]- (போதுபோக்குகைக்கும், ப்ரதிபாத்ய வஸ்துவைப்போலே ஸ்வயம்போக்யமாயிருக்கையாலே, போகத்துக்கும்ஹேதுவாயிருக்கும்) என்று மூலார்த்தம்.

௨௨.— மேலுக்கவதாரிகை (இனி) என்று தொடங்கி.

(ஜ்ஞாதவ்யம்) என்றது-(ப்ரபத்யுபாயத்திலே இழிந்தவர்களுக்கு ஜ்ஞாதவ்யம்) என்றபடி. ["மற்றெல்லாம் பேசிலுமென்கிறபடியே"]- ("நின்திருவெட்டெழுத்துங்கற்றுமற்றெல்லாம் பேசிலும் என்கிறபடியே"), [அறியவேண்டும் அர்த்தமெல்லாம் இதுக்குள்ளே உண்டு] - (ஆத்மோஜ்ஜீவநத்துக்குடலாக அறியவேண்டும் அர்த்தவிசேஷங்களெல்லாம் இம்மந்த்ரத்துக்குள்ளே உண்டு) என்று மூலார்த்தம்.

பெரியதிருமொழி - அ - பத்து - க0 - திருமொழி - ௩ - பாட்டு.

"மற்றுமோர்தெய்வமுளதென்றிருப்பாரோ
டுற்றிலேன் உற்றதுமுன்னடியார்க்கடிமை
மற்றெல்லாம்பேசிலு நின்திருவெட்டெழுத்தும்
கற்று நான் கண்ணபுரத்துறையம்மானே."

"வ்யா.— வேறுசிலரை ஆச்ரயணீயர் அல்லர் என்று நினைத்திருக்கும் அளவேயோ? தாமஸபுருஷர்களோடு ஸம்பர்க்கமுமில்லை; ஸாத்விகரை ஒழிய காலம்செலுத்தவும்மாட்டேன் என்கிறார். *என்னு தமானிடத்தை எண்ணுமவனுமல்லேன், * பேராளன் பேரோதும் பெரியோரையொருகாலும் பிரியுமவனுமல்லேன என்கிறார்.

(மற்றுமோர்தெய்வமுளதென்றிருப்பாரோடுற்றிலேன்) தேவதாந்தரஸ்பர்சம் உடையாரோடு எனக்கொரு ஸம்பந்தமுமில்லை. (உற்றதும்) இத்யாதி-அவர்களை விட்டு உன்னளவில் நின்றவனும் அல்லேன்; இவ்வநுஷ்டாநந்தான், "நீர்எங்கே யார்சொல்ல பரிக்ரஹித்தீர்?" என்ன; நீர் சொன்ன முதல்வார்த்தைக்கு அர்த்தமாக நான் நினைத்திருப்பது இது என்கிறார்.

தொ.—௨௨.— மேலுக்கவதாரிகை (இனி) இத்யாதி. ஜ்ஞாதவ்யஸகலார்த்தம்) என்றது-அர்த்தபஞ்சகமென்றபடி.

மூ.—என்கிறபடியே, அறியவேண்டுமர்த்தமெல்லாம் இதுக்குள்ளேயுண்டு.

வ்யா.—அதாவது – "நின்திருவெட்டெழுத்துங்கற்று மற்றெல்லாம பேசிலும்" என்கிறபடியே, ஆத்மோஜ்ஜீவநத்துக்குடலாக அறியவேண்டும அர்த்தவிஶேஷங்களெல்லாம் இம்மந்த்ரத்துக்குள்ளே உண்டென்கை.

எ.— இதுபின்னை அநேகார்த்தங்களைச்சொல்லுமே! ஜீவஸ்வரூபத்தைச்சொல்லும், நம்முடையஸ்வரூபத்தைச்சொல்லும், ஜீவவஸ்துக்களுக்கும் நமக்கும் உண்டான ஸம்பந்தத்தைச்சொல்லும், ப்ராப்திபலமான கைங்கர்யத்தளவும் வந்திருக்குமே என்ன; அது அநேகார்த்தங்களைச் சொல்லிற்றேயாகிலும், அதிலெங்குமாக நான் அறிந்திட்டிருக்குமர்த்தம் - அநந்யார்ஹஶேஷத்வம்; அதுதான் ததீயஶேஷத்வபர்யந்தமாயல்லதிராது. (கண்ணபுரத்துறையம்மானே) இதுவன்றோ நீ இங்குவந்திருந்து ஓதுவித்த அர்த்தம்; கீழும் "கண்ணபுரத்துறையம்மானே" என்று போருகையாலே, இதுவுமப்படி நடத்தப்பார்க்குமென்று அக்ஷரம் ஏறிவரும்; அதுக்காக, "கற்றுநான் வல்லது கண்ணபுரத்தானே" என்னுதல்; அன்றிக்கே, ரீதிபேதம் பிறவாமைக்காக "கண்ணபுரத்துறையம்மானே நின் திரு எட்டெழுத்தும் கற்று நான் உற்றதும் உன்னடியார்க்கு அடிமை" என்றுவது. "உன்னளவில் நின்றவனல்லேன்" என்றபோது "அவன் திருவுள்ளம் என்படுகிறதோ" என்று நஞ்சீயர் அருளிச்செய்ய, பிள்ளை "அல்லிக் கமலக்கண்ணன் ஆகிறான்" என்றருளிச்செய்தார். "நீக்கமில்லாவடியார் தம்மடியாரடியாரெங்கோக்கள்" என்று இவர், பாகவதஶேஷத்வத்தளவிலே நின்றவாறே அவன் "அல்லிக்கமலக்கண்ண"னானான். ப்ரபந்நனுடைய லக்ஷணமாகிறது-ஸ்ரிய:பதியே உபாயோபேயங்களென்றிருக்கையும்; தேவதாந்தரஸ்பர்ஶமும், தாமஸபுருஷர்களோடு ஸம்பர்க்கமுமின்றிக்கேயிருக்கையும், பாகவதரை ஒழியச்செல்லாமை உண்டாயிருக்கையும். தர்மியை அநுபந்தித்திருக்கும் தர்மங்களை நேரே வ்யவஹரித்ததில்லையேயாகிலும், தர்மியைச்சொன்னபோதே தர்மங்களுமெல்லாம் சொல்லிற்றாயிற்றே." ... ... *

தொ.— மூலார்த்தம்(அதாவது) இப்பாதி. ("நின்திருவெட்டெழுத்து") என்றது – உனக்கு ப்ரதிபாதகமான திருவெட்டெழுத்தென்றபடி. ("எல்லாம்") என்றது-அர்த்தபஞ்சகத்தையென்றபடி.

மூ.—உ௩. அதாவது – அர்த்தபஞ்சகம்.

வ்யா.—உ௩.— (அறியவேண்டிய அர்த்தமெல்லா) மாகிறதென்னு மாகாரங்களையருளிச்செய்கிறார்,

(அதாவது அர்த்தபஞ்சகம்) என்று. ஸ்வஸ்வரூப, பரஸ்வரூப, புருஷார்த்தஸ்வரூப, உபாயஸ்வரூப விரோதிஸ்வரூபங்களாகிற அர்த்தபஞ்சகமும் என்றபடி. "ప్రాప్యస్య బ్రహ్మణో రూపం ప్రాప్తుశ్చ ప్రత్యగాత్మనః। ప్రాప్త్యుపాయం ఫలం ప్రాప్తేస్తథా ప్రాప్తివిరోధి చ॥ వదన్తి సకలా వేదాస్సేతిహాసపురాణకాః। మునయశ్చ మహాత్మానో వేదవేదార్థవేదినః॥" "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஸ்ச ப்ரத்யகாத்மந: । ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ்ததா ப்ராப்திவிரோதி ச ॥ வதந்தி ஸகலா வேதாஸ்ஸேதிஹாஸபுராணகா: । முநயஸ்ச மஹாத்மாநோ வேதவேதார்த்தவேதிந: ॥" (நிக) என்கிறபடியே, ஸகலவேதசாஸ்த்ரங்களும் ப்ரதிபாதிப்பது இவ்வர்த்தபஞ்சகத்தையுமாகை யாலே, தத்ஸங்க்ரஹமான இம்மந்த்ரத்துக்கும் ப்ரதிபாத்யமிதுவேயி றே. இம்மந்த்ரந்தான், ப்ரணவத்தாலே ப்ரத்யகாத்மஸ்வரூபத்தையும்,

எ.—உ௩.—மேலுக்கவதாரிகை [அறியவேண்டும்] என்று தொடங்கி.

[அதாவது] – [அறியவேண்டும் அர்த்தமெல்லா] மாவது, [அர்த்தபஞ்சகம்] (ஸ்வஸ்வரூப, பரஸ்வரூப, புருஷார்த்தஸ்வரூப, உபாயஸ்வரூப, விரோதிஸ்வரூபங்களாகிற அர்த்தபஞ்சக) மென்று மூலார்த்தம்.

உக்தார்த்தத்தில் ப்ரமாணம் காட்டுகிறார் ("ப்ராப்யஸ்யேதி") ப்ராப்யமான ப்ரஹ்மஸ்வரூபத்தையும், ப்ராப்தாவான ப்ரத்யகாத்மஸ்வரூபத்தையும், ப்ராப்த்யுபாயத்தையும், ப்ராப்திபலத்தையும். ப்ராப்திவிரோதியையும், இதிஹாஸபுராணங்களோடேகூடின ஸகலவேதங்களும் வேதவேதார்த்தஜ்ஞரான மஹாத்மாக்களான ருஷிகளும் சொல்லாநின்றார்கள். [அறியவேண்டுமர்த்தமெல்லாம்] இம்மந்த்ரத்துக்குள்ளே [உண்டெ]ன்றருளிச்செய்த அம்சத்தை ஸஹேதுகமாக விவரி கரித்தருளுகிறார் (தத்ஸங்க்ரஹமான) என்று தொடங்கி. (ப்ரணவத்தாலே ப்ரத்யகாத்மஸ்வரூபத்தையும) என்றது – ப்ரணவம், அக்ஷரத்ரயாத்மகமாகையாலே, ஆயைவம் என்றநுவயமாய், பகவதநந்யார்ஹஶேஷத் வாச்ரயோ ஜீவ: என்று ப்ரத்யகாத்மஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கக்கடவ தாயிறே, இருப்பதென்றபடி.

தொ.—உ௩.— மேலுக்கவதாரிகை (அறியவேண்டும்) இத்யாதி.

மூலார்த்தம் (ஸ்வஸ்வரூப) இத்யாதி. உக்தார்த்தத்தில ப்ரமாணம் காட்டுகிறார் ("ப்ராப்யஸ்ய") இத்யாதி. ("மஹாத்மாந:") என்றது— அதிஶயிதஜ்ஞாநவான்களானவென்றபடி. இம்மந்த்ரம் அர்த்தபஞ்சக ப்ரகாஶகமானபடியை அருளிச்செய்கிறார் (இம்மந்த்ரந்தான்) இத்யாதியால்.

பி.— உ௩.— அர்த்தபஞ்சகத்தை இம்மந்த்ரம் ப்ரதிபாதிக்கும்படி யென்னென்ன அருளிச்செய்கிறார் (இம்மந்த்ரந்தான்ப்ரணவத்தாலே) என்று தொடங்கி.

மூ.— உச. பூர்வாசாரியர்கள்

வ்யா—. நமஸ்ஸாலே விரோத்யுபாய ஸ்வரூபங்களையும், நாராயண பதத்தாலே பரஸ்வரூபத்தையும, அதில் சதுர்த்தியாலே பலஸ்வரூபத்தையும் ப்ரதிபாதிக்கக்கடவதாயிறே இருப்பது.

உச.— இம்மந்த்ரார்த்தவைபத்தை அருளிச்செய்கிறார்மேல், (பூர்வாசார்யர்கள்) என்று தொடங்கி. அதாவது-நாதயாமுநயதிவராதிகளான நம்பூர்வாசார்யர்கள்,

---

ஏ.— (நமஸ்ஸாலே, விரோத்யுபாயஸ்வரூபங்களையும்) என்றது - பதத்வயாத்மகமான நமஸ்ஸு, மः என்கிற ஷஷ்ட்யந்தத்தாலேஜ்ஞாத்ருத்வபலாயாதகர்த்ருத்வத்தாலே "ஸ்வதந்த்ர: கர்த்தா" "ஸ்வதந்த்ரःகர்த்தா" (சாஉச)என்கிற மீமாம்ஸாவாக்யந்யாயத்தாலே வந்த பகவச்சேஷத்வவிரோதியான ஸ்வஸ்வாதந்த்ர்யத்தைச் சொல்லுகையாலே, விரோதிஸ்வரூபத்தையும், மः ந என்று ஸ்வரக்ஷணஸ்வார்த்வயநிவ்ருத்தியைச் சொல்லுகையாலே, அத்யந்தபாரதந்த்ரனானவனுக்கு அர்த்தாத் சேஷியானவனே உபாயமாகவேண்டுகையாலே உபாயஸ்வரூபத்தையும், ப்ரதிபாதிக்கக்கடவதென்றபடி. (நாராயணபதத்தாலே, பரஸ்வரூபத்தையும்) என்றது-ஷஷ்டீதத்புருஷனாலே, தன்னையொழிந்த ஸமஸ்தவஸ்துக்களுக்கும் தான் தாரகமாயிருக்கையாகிற பரத்வத்தைச் சொல்லுகையாலேயாதல்; பஹுவ்ரீஹிஸமாஸத்தாலே, சேதநாசேதநங்களுக்கு அந்தராத்மாவாய் நியந்தாவாய் இருக்குமிருப்பைச் சொல்லுகையாலேயாதல்; பரஸ்வரூபத்தையும், ப்ரதிபாதிக்கக்கடவதென்றபடி. (அதில், சதுர்த்தியாலே பலஸ்வரூபத்தையும்) என்றது - "ப்ரார்த்தநாயாம்சதுர்த்தி" என்று இந்தசதுர்த்தி கைங்கர்யப்ரார்த்தநாப்ரகாசகமாகையாலே, ப்ராப்திபலவேஷத்தையும் ப்ரதிபாதிக்கக்கடவதாயிறே இருப்பதென்றபடி.

உச.— மேல்வாக்யத்துக்கவதாரிகை (இம்மந்த்ரார்த்தவைபவ)மென்று தொடங்கி.

(மேல்) என்றது - இனிமேலென்றும் மந்த்ரவைபவ ப்ரதிபாதநாநந்தர மென்றபடி. (மந்த்ரார்த்தவைபவத்தை அருளிச்செய்கிறார்) என்றந்வயம். [பூர்வாசார்யர்கள்]- நாதயாமுநயதிவராதிகளான நம்பூர்வாசார்யர்கள், (ஆதி) ஶப்தத்தாலே எம்பார்தொடங்கி திருவாய்மொழிப்பிள்ளையளவும் உள்ளஆசார்யர்களைச் சொல்லுகிறது. [பூர்வாசார்யர்கள்]-(நாதயாமுநயதிவர) ப்ரப்ருதிதிருவாய்மொழிப்பிள்ளை பர்யந்தமான நம்மாசார்யர்கள்,

---

தொ.—உச.— மேலுக்கவதாரிகை (இம்மந்த்ரார்த்த) இத்யாதி.

மூலார்த்தம் (அதாவது) இத்யாதி.

பி.—உச.—ஶப்தவைபவத்தை அருளிச்செய்தார் கீழ்; இதின் வைபவத்தை அருளிச்செய்கிறார் [பூர்வாசார்யர்கள்] என்று தொடங்கி.

மூ.— இதிலர்த்தமறிவதற்குமுன்பு தங்களைப்பிறந்தார்களாக நினைத்திரார்கள் ; இதிலர்த்தஜ்ஞாநம பிறந்தபின்பு. "பிறந்தபின் மறந்திலேன்" என்கிறபடியே இத்தையொழிய வேறொன்றால காலக்ஷேபம் பண்ணியறியார்கள்.

வ்யா.— "அன்று நான் பிறந்திலேன்" என்கிறபடியே, இம்மந்த்ரத்தில் அர்த்தமறிவதற்குமுன்பு தங்களைப்பிறந்தார்களாக நினைத்திரார்கள் ; இதில், அர்த்தஜ்ஞாநம் தங்களுக்குண்டானபின்பு ("பிறந்தபின்மறந்திலேன்") என்று ஆழ்வார் திவ்யஸூக்தியில்சொல்லுகிறபடியே, இம்மந்த்ரார்த்தத்தையொழிய மற்றொன்றால் (காலக்ஷேபம் பண்ணியறியார்கள்) என்கை. வேதசாஸ்த்ரங்கள், ஆழ்வார் அருளிச்செயல்கள் இவற்றால போதுபோக்கும்போதும்

எ.— [இதில் அர்த்தமறிவதற்கு முன்பு] – (இம்மந்த்ரத்தில்) சொல்லப்படுகிற (அர்த்தமறிவதற்கு முன்பு), [தங்களைப்பிறந்தார்களாகநினைத்திரார்கள்]; [இதில் அர்த்தஜ்ஞாநம் பிறந்தபின்பு] - (இதில்அர்த்தஜ்ஞாநம் தங்களுக்குண்டானபின்பு, ["பிறந்தபின்மறந்திலேன் என்கிறபடியே]-("பிறந்தபின்மறந்திலே") னென்கிற ஆழ்வார் திவ்யஸூக்தியில்சொல்லுகிறபடியே), [இத்தையொழிய வேறொன்றால்]-இம்மந்த்ரார்த்தத்தை ஒழிய மற்றொன்றால), [காலக்ஷேபம்பண்ணியறியார்கள்]. என்றுமூலார்த்தம்.

"ఆచినోతిహిశాస్త్రార్థానాచారే స్థాపయత్యపి । స్వయమాచరతే" ஆசிநோதி ஹிஸாஸ்த்ரார்த்தா நாசாரேஸ்த்தாபயத்யபி। ஸ்வயமாசரதே" (சா.ரு.) என்று ஆசார்யபக்ஷம் நிர்வஹிக்கும்போது (வேதசாஸ்த்ரங்கள்) என்ன, (ஆழ்வார்களருளிச்செயல்கள்) என்ன இவற்றைக்கொண்டு [காலக்ஷேபம்]பண்ணவேண்டியிருக்க, [இத்தைஒழியவேறொன்றால் காலக்ஷேபம் பண்ணி அறியார்கள்] என்று சொல்லக்கூடுமோவென்னும் ஸங்கையை உட்கொண்டு பரிஹாரம அருளிச்செய்கிறார் (வேதசாஸ்த்ரங்கள்) என்று தொடங்கி.

தொ.— ("அன்று") என்றது-இச்சேதநர உஜ்ஜீவநார்த்தமாக ஈஸ்வரன் க்ருஷிபண்ணுங்காலத்திலேயென்றபடி. ("பிறந்திலேன்") என்றது - ஜ்ஞாநரூபஜந்மத்தை யுடையோனல்லேனென்றபடி. (இதில்) என்றது-இம்மந்த்ரத்திலென்றபடி. ["பிறந்தபின்மறந்திலேன்"] என்றது- ஜ்ஞாநஜந்மத்தை ப்ராபிக்கப்பெற்றபின்பு அந்த ஜ்ஞாநஜந்மத்துக்கு ப்ரச்யுதியையுடையேனல்லேனென்றபடி.

வேதார்த்தவிசாரத்தாலே காலக்ஷேபம் பண்ணவில்லையோ? என்ன, அருளிச்செய்கிறார் (வேதசாஸ்த்ரங்கள்) இத்யாதியால்.

பி.—எப்போதும் [இத்தை]யேகொண்டு [காலக்ஷேபம்] பண்ணுகிறார்களோ? (வேதசாஸ்த்ரங்கள் அருளிச்செயல்கள்) கொண்டு போதுபோக்கவில்லையோ? என்ன அருளிச்செய்கிறார் (வேதசாஸ்த்ரங்கள் ஆழ்வார் அருளிச்செயலகள்) என்று தொடங்கி.

வ்யா.— இம்மந்த்ரார்த்தத்தைஉட்கொண்டே அநுஸந்திக்கையாலே, (இத்தையொழியவேறென்றால் காலக்ஷேபமபண்ணியறியார்கள்) என்னத்தட்டில்லை.

எ.— (இம்மந்த்ரார்த்தத்தை உட்கொண்டே அநுஸந்திக்கையாலே) என்கிறஇடத்தில், மந்த்ரார்த்தமாவது – அர்த்தபஞ்சகம்; அத்தை உட்கொண்டே அநுஸந்திக்கையாவது – "ప్రాప్యస్య బ్రహ్మణో రూపం" "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோரூபம்" என்று துடங்கி "వదంతి సకలా వేదాః" "வதந்தி ஸகலர்வேதா:" என்கிறபடியே ஸகலஶாஸ்த்ரங்களும் ப்ரதிபாதிப்பது அர்த்தபஞ்சகத்தையாகையாலே, அத்தை (உட்கொண்டே அநுஸந்திக்கையாலே) என்றபடி.

திருச்சந்தவிருத்தம்—அறுபத்துநாலாம்பாட்டு.

"நின்றதெந்தையூரகத் திருந்ததெந்தைபாடகத்து
அன்றுவெஃகணைக்கிடந்த தென்னிலாதமுன்னெலாம்
அன்றுநான்பிறந்திலேன் பிறந்தபின்மறந்திலேன்
நின்றதுமிருந்ததுங்கிடந்ததுமென்னெஞ்சுளே."

"வ்யா—(நின்றதெந்தையூரகத்து)த்ரைவிக்ரமம்பண்ணின தூளிதாநந்தோற்றத் திருவூரகத்திலே நின்றருளிற்று, எனக்கு ஸ்வாமியென்று நானிசைகைக்காக; நிலையழகைக்காட்டி ருசியைப்பிறப்பித்து த்ரைவிக்ரமாபதாநத்தை ப்ரகாஶிப்பித்து முறையை உணர்த்துகைக்காக; என்கை, அதவா, எனக்கு இசைவின்றிகேயே இருக்கச்செய்தேயும்வந்து நின்றருளுகிறது உடையவன் உடைமையை இழக்கமாட்டாமையாலே நின்றருளுகிறான் என்றுமாம. (இருந்ததெந்தைபாடகத்து) அந்நிலையழகிலும் எனக்கு ஆபிமுக்யம் பிறக்ககாணாமையாலே இருப்பழகைக்காட்டி "గుణైర్దాస్యముపాగతః" "குணைர்தாஸ்யமுபாகத:" (சங-கூ) என்கிறபடியே "நீ எனக்குஸ்வாமி, நான்அடியேன்" என்னும் முறையுணருகைக்காகத் திருப்பாடகத்திலே இருந்தருளினான். (அன்றுவெஃகணைக்கிடந்தது) கீழ்ச்சொன்ன இரண்டு திருப்பதிகளிலும் எனக்கு ருசிபிறவாதவன்றாகத் திருவெஃகாவிலே கண்வளர்ந்தருளிற்றும. அத்திருப்பதிகளை ஆஶ்ரயித்த காலத்துக்கவதி என்னென்னில்; (என்னிலாதமுன்னெலாம்)நானில்லாதமுற்காலமெல்லாம்; நான் அபிமுகீகரிப்பதற்கு முன்பெல்லாம்; "என்னுநி நானுநி" என்னககடவதிறே.உபயவிபூதிநாதனான தான் ஸம்ஸாரியான எனக்கு ருசிபிறவாதகாலமெல்லாம் ருசி பிறக்கைக்காக நிற்பது இருப்பது கிடப்பது ஆவதே ! என்னுடையஸத்தை தன்னுடைய கடாக்ஷாதீநமாயிருக்க, இத்தலையில் கடாக்ஷம் தனக்குத்தேட்டமாவதே !!.

மூ.— உரு. வாசகத்திறகாட்டில்

வ்யா.—உரு.—வாசகஶக்திதானே, ஸர்வத்தையும் ஸாதித்துக்கொடுக்கவற்றாயிருக்க, இதினுடைய வாச்யத்திலே இவர்களூன்றுகைக்கு ஹேதுவேதென்ன, அருளிச்செய்கிறார்,

(வாசகத்திறகாட்டில்) என்றுதுடங்கி.

எ.— அக்காலத்தில நீசெய்த தென்னெனனில; (அன்று நான்பிறந்திலேன்) தன் திருவடிகளிலே தலைசாய்க்கைக்காக ஸ்ருஷ்டிகாலத்திலே நாமரூபங்களைத்தந்தருள, விஷயாந்தர ப்ராவண்யத்தாலே அநுபவிக்கப்பெற்றிலேன். (நான்பிறந்திலேன்) ஆத்மாவுக்கு ஜந்மமாகிறது ஜ்ஞாநலாபமாகையாலே அஜ்ஞானாய்ப்போனேன்; "அஸந்நேவ ஸ ப⁴வதி அஸத்³ப்³ரஹ்மேதி வேத³ சேத்" "அஸத்ப்ராஹ்மேதி வேதசேத், அஸந்நேவஸபவதி" (சாஉ-எ) என்னக்கடவதிறே. "ஆசார்ய: ப்³ரஹ்மஜந்ம பிதா" "கரீயாந்ப்ராஹ்மத: பிதா" (சாஉ-அ). (பிறந்தபின் மறந்திலேன்) அவன் க்ருஷியாக எனக்கு அறிவு பிறந்தபின்பு மறந்தறியேன். "மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச" "மத்தஸ்ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச" (சாஉ-க) அவனடியாகப்பிறந்தஜ்ஞானம், "மதிநலம்" என்கிறபடியே பக்திரூபாபந்நஜ்ஞாநமாகையாலே விஸ்ம்ருதிப்ரஸங்கமில்லையிறே, ஆக, தன்னுடையஸத்பாவா ஸத்பாவங்களாகிறன— பகவத்விஷயத்திலே ருசிபிறக்கையும், அதின்றிக்கே ஒழிகையும். (நின்றது மிருந்ததுங்கிடந்தது மென்னெஞ்சகளே) எனக்கு மறக்க வொண்ணாதபடி ருசிபிறந்தபின்பு அவன், திருப்பதிகளில் பண்ணின செயல்களெல்லாவற்றையும், திருப்பதிகளைக் காற்கடைக்கொண்டு என்னுடைய ஹ்ருதயத்திலே பண்ணியருளாநின்றான். முதலிலே தான் எனபககலிலே அபிநிவிஷ்டனாய், அஸத்ஸமனாயிருந்துள்ள என்னையும் உளனாம்படிபண்ணி, தன்னை மறக்கவொண்ணாதபடியான ப்ரேமத்தை விளைத்து, அதுக்கு விஷயபூதனாய்த் தன்னுடைய விடாயுந்தீர்ந்தானென்றதாய்த்து. "சிந்தை யுட்சென்றிருந்து தீவினைகள்தீர்த்த" என்றார்கிழ்; "நின்றது மிருந்ததும் கிடந்ததுமென்னெஞ்சுளே" என்று அநுபவத்தைச் சொன்னார் இங்கு. இவை இரண்டாலும், ஸாதநாந்தர நிஷ்டரிற்காட்டில் தம்முடைய அதிகாரத்துக்குண்டான ஏற்றத்தை அருளிச்செய்து விட்டாராய்த்து." ... ... *

உரு.—மேல்வாக்யத்துக்கவதாரிகை (வாசகஶக்தி) என்றுதுடங்கி.

(ஸர்வத்தையும்) என்றது- ("ஐஹலௌகிகம்") இத்யாதிப்படியே ஐஶ்வர்யாதி (ஸர்வத்தையு) மென்றபடி. (ஊன்றுகைக்கு) என்றது - நிஷ்டராகைக்கென்றபடி.

தா.—உரு.—மேலுக்கவதாரிகை(வாசகஶக்திதானே) இத்யாதி. (ஸர்வத்தையும்) என்றது - ஐஶ்வர்யாதிகளை யென்றபடி. வாச்யத்திலே) என்றது - அர்த்தபஞ்சகத்திலே என்றபடி. [ஊன்றுகைக்கு] என்றது - ஊற்றமுடையராயிருக்கைக்கென்றபடி.

மூ.—வாச்யத்திலே ஊன்றுகைக்கடி, ஈஶ்வரனே உபாயோபேயமென்று நினைத்திருக்கை.

வ்யா.— அதாவது-ஸாவபலத்துக்கும் ஸ்வயம் ஸாதநமாயும், ஸாதநாந்தரங்களுக்கும் ஸஹகாரியாய் நின்று தலைக்கட்டிக்கொடுத்தும், போருகிற இதினுடைய வாசகஶக்திதானே அமைந்திருக்கச்செய்தே, அதினுங்காட்டில் கீழ்ச்சொன்னபடியே, இம்மந்த்ரத்தினுடைய (வாச்யத்திலே, பூர்வாசார்யர்களூன்றுகைக்கடி,) உபேயாந்தரபரராய் இதனைஸாதநமாகக்கொண்டு ஸாதித்தல, உபாயாந்தரபரராய் இத்தை ஸஹகாரியாகக்கொள்ளுதல் செய்யுமவர்களைப்போலன்றிக்கே, உபாயோபேயங்களிரண்டும் ஈஶ்வரனே என்று ப்ரதிபத்திபண்ணி யிருக்கையென்றபடி.

எ.— (ஸாவபலத்துக்கும) என்றது – ஐஶ்வர்யாதி ஸர்வபலத்துக்கு மென்றபடி.

(ஸ்வயம்ஸாதநமாயும்) என்றது – "చతురన్తాం మహీం భోక్తుం ప్రాప్తుం వామరరాజతాం | అష్టాక్షరోహ్యుపాయస్స్యాత్ త్రివర్గస్యతు కింపునః||" "சதுராந்தாம் மஹீம் போக்தும் ப்ராப்தும்வாமரராஜதாம | அஷ்டாக்ஷரோஹ்யுபாயஸ்யாத் த்ரிவர்க்கஸ்யது கிம்புந:||" (சசு0) என்கிறபடியே ஸ்வயம்ஸாதநமாயுமென்றபடி. (ஸாதநாந்தரங்களுக்கும்) என்றது– கர்மஜ்ஞாநாதி (ஸாதநாந்தரங்களுக்கும்) என்றபடி. (வாசகஶக்திதானே அமைந்திருக்க) என்றது–ஶப்தஶக்திதானே அதிகாராநுகுணமாகப் பலத்தைக்கொடுக்கைக்கு ஸமர்த்தமாயிருக்கச்செய்தே என்றபடி. (கீழ்ச்சொன்னபடியே) என்றது–[பூர்வாசார்யர்கள்] என்கிற கீழ்வாக்யத்தில் சொன்னபடியே என்றபடி. (வாச்யத்திலே) என்றது-அர்த்தத்திலே என்றாய் அர்த்தபஞ்சகத்திலே என்றபடி. (உபேயாந்தரபரர்) என்றது-ஐஶ்வர்ய கைவல்யார்த்திகளென்றபடி. (உபாயாந்தரபரர்) என்றது-உபாஸகரென்றபடி. [வாசகத்தில் காட்டில்]- ஸர்வார்த்தஸாதகமான திருமந்த்ரத்தில் காட்டில், [வாச்யத்திலே]- திருமந்த்ரத்தினுடைய அர்த்தத்திலே, [ஊன்றுகைக்கடி]–பூர்வாசார்யர்களூன்றுகைக்கடி, [ஈஶ்வரனே உபாயோபேயமென்று நினைத்திருக்கை]– உபாயோபேயங்களிரண்டு மீஶ்வரனே என்று ப்ரதிபத்திபண்ணி யிருக்கையென்று மூலார்த்தம்.

தொ.—மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (அமைந்திருக்கச்செய்தே) என்றது – பலஸித்திக்குப் பொருந்தியிருக்கச்செய்தேயென்றபடி. (அதிலுங்காட்டில்) என்றது – அம்மந்த்ரத்திலுங் காட்டிலென்றபடி. (கீழ்ச்சொன்னபடியே) என்றது – [பூர்வாசார்யர்கள்] இத்யாதிவாக்யத்தாலே சொன்னபடியேயென்றபடி. [வாச்யத்திலே] என்றது–அர்த்தபஞ்சகத்திலே யென்றபடி. (ஊன்றுகைக்கு) என்றது – ஊற்றமுடையராயிருக்கைக்கென்றபடி. [அடி] என்றது – காரணமென்றபடி.

பி.—உகு.—(கீழ்ச்சொன்னபடியே) என்றது – [இத்தைஒழியவேறொன்றால் காலக்ஷேபம்பண்ணியறியார்கள்] என்றதனை. (ஸஹகாரியாகக்கொள்ளுதல்) என்றது – கர்மஜ்ஞாநங்களுக்கு (ஸஹகாரியாகக் கொள்ளுதல்) என்றபடி.

வ்யா.— (ஆக) திருமந்த்ரத்திநுடைய [சீர்மைக்குப்போரும்படி) என்று தொடங்கி இவ்வளவும், வாய்வந்தபடி அநுஸந்திக்க ஒண்ணாதபடியான இதினுடைய கௌரவத்தையும், ஈஶ்வரன், தானே ஶிஷ்யனுமாய் ஆசார்யனுமாய் நின்று வெளியிட்டருளுகையால் வந்த ஏற்றத்தையும், ஸகலஶாஸ்த்ரங்களிலும், ஸகலமந்த்ரங்களிலும், வாச்யந்தன்னிலுங் காட்டில், இதுக்குண்டான பெருமையையும், அக்ரமமாகச்சொல்லிலும் தன்கார்யம் செய்யுமாதிக்யத்தையும், அபேக்ஷித ஸகலபலப்ரதத்வரூப மஹாத்ம்யத்தையும், கர்மாத்யுபாய ஸஹகாரித்வரூபமான உத்கர்ஷத்தையும், ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகதயாவந்த மஹாத்ம்யத்தையும், ஏதத்ப்ரதிபாத்யார்த்த கௌரவவிஶேஷத்தையும் அருளிச்செய்கையாலே இம்மந்த்ரத்திநுடைய வைபவத்தை எல்லாரும் அறியும்படி தர்ஶிப்பித்தருளினாராய்த்து.

எ.—கீழ்ச்சொன்ன அர்த்தங்களை யெல்லாம் சேரப்பிடித்தருளிச்செய்கிறார் (ஆக) என்று தொடங்கி. (ஆக) என்றது - [திருமந்த்ரத்திநுடைய சீர்மைக்கு] என்று தொடங்கி [ஈஶ்வரனே உபாயோபேயமென்று நினைத்திருக்கை] என்னுமளவாக என்றபடி. (எல்லாருமறியும்படி தர்ஶிப்பித்தருளினார்) என்றது - இம்மந்த்ரத்திநுடைய ப்ரபாவமும், இதினர்த்த ப்ரபாவமுமறிந்தார்களாகில், தங்களுக்குமிது அவஶ்யம்வேணுமென்று ஆசார்யோபதேஶ பூர்வகமாக இத்தையறிந்து உஜ்ஜீவிப்பர்களென்னும் அபிப்ராயத்தாலே.

தொ.—[திருமந்த்ரத்திநுடைய] [வா - ௩] என்று தொடங்கி [ஈஶ்வரனே உபாயோபேயமென்று நினைத்திருக்கை] என்னுமளவாகச் சொன்ன அர்த்தத்தை நிகமித்தருளுகிறார் (ஆக) இத்யாதியால். (வாய்வந்தபடி) என்றது - வாய்க்கு வந்தபடியென்றாய், ப்ரேமஶூந்யமாயென்றபடி. ஒண்ணாத என்றது-கூடாதவென்றபடி. (இதினுடைய) என்றது - திருமந்த்ரத்திநுடைய வென்றபடி. (அக்ரமமாகச்சொல்லிலும்) என்றது-ப்ரேமஶூந்யனாய் அநதிகாரிகள் செவிப்படும்படி அநுஸந்திக்கிலுமென்றபடி. (தன்கார்யம்) என்றது - அநுஸந்திக்குமவர்களுக்கு ரக்ஷகனாகையென்றபடி. (கௌரவ விஶேஷத்தையும்) என்றது - கௌரவாதிக்யத்தையுமென்றபடி; அதாவது - அறியுமவர்களுக்கு ஸத்தையுண்டாம்படி யிருக்கையென்றபடி.

மூ.— உகூ. இதுதன்னில் சொல்லுகிற அர்த்தம் - ஸ்வரூபமும், ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமும் ; ஸ்வரூபமும, உபாயமும், பலமு மென்னவுமாம்.

வ்யா.—உகூ.— இனிமேல, இம்மந்த்ரத்துக்கு, வாக்யார்த்தமிரண்டு படியாக அருளிச்செய்கிறார்,

(இதுதன்னில்) என்றுதுடங்கி. அதாவது - இம்மந்த்ரந்தன்னில் சொல்லுகிற அர்த்தம்-இவ்வாத்மாவினுடைய சேஷத்வபாரதந்த்ர்ய ங்களாகிற ஸ்வரூபமும், அந்தஸ்வரூபததுக்கு அநுரூபமாயிருக்குள் ளகைங்கர்யமாகிற ப்ராப்யமும்; அன்றிக்கே, சேஷத்வமாகிற ஸ்வரூ பமும், அந்தஸ்வரூபாநுரூபமான உபாயமும், உபாயலப்யமானபல மும் என்று சொல்லவுமாமென்கை. இதில், ப்ரதமயோஜனையில்

எ.—உகூ—மேலுக்கவதாரிகை (இனிமேல்) என்றுதுடங்கி.

மந்த்ரப்ரபாவத்தையும், அர்த்தப்ரபாவத்தையும் அருளிச்செய்த அநந்தரம், மேல்க்ரந்தத்தாலே என்று யோஜிக்கவுமாம்; (இனிமேல) என்று ஏகபதமாகவும யோஜிக்கவுமாம்.

(இம்மந்த்ரந்தன்னில்சொல்லுகிறஅர்த்தம்-இவ்வாத்மாவினுடைய) என்றது-ப்ரணவத்தில் த்ரிதீயபதவாச்யனுடைய (இவ்வாத்மாவினுடைய) என்றபடி.(சேஷத்வேதயாகிசொல்லவுமாமென்கை என்றது-இரண்டு படியாகச் சொல்லவுமாமென்றபடி. யோஜநாத்வயத்தையும் உபபாதிக்க ருளுகிறார் (இதில்) என்றுதுடங்கி. (இதில்) என்றது-யோஜநாத்வயத் திலென்றபடி.

தொ.—உகூ.— மேலுக்கவதாரிகை (இனி) இத்யாதி.

(இனிமேல்) என்றது-மந்த்ரவைபவத்தையும்,அர்த்தவைபவத்தை யும்அருளிச்செய்த அநந்தரமென்றபடி. (படியாக)என்றது-ப்ரகாரமா கவென்றபடி. இதுதன்னில்இத்யாதியால.மூலார்த்தம் (அதாவது)இத் யாதி.(அந்தஸ்வரூபத்துக்கு அநுரூபமாயிருக்குள்ள) என்றது-சேஷ த்வபாரதந்த்ர்யங்களாகிற ஸ்வரூபததுக்குத் தகுதியாயிருக்கிறவென்ற படி; அதாவது - ஸ்வப்ரயோஜநத்வ ஸ்வகர்த்ருத்வ கந்தரஹிதமா யிருக்கை; அதாவது - அவன் முகமலர்த்திக்குறுப்பாக அவன் நியமி த்தபடிபண்ணுகை. “ஸ்வப்ரயோஜந நிவ்ருத்தி - சேஷத்வபலம், பரா தீநப்ரவ்ருத்திநிவ்ருத்திகத்வம-பாரதந்த்ர்யம” என்றிறே அருளிச்செய் வது.சொல்லுகிறபடி தாமெனங்கனே யென்ன அருளிச்செய்கிறார் (இதி ல்)இத்யாதியால். (இதில்) என்றது-இரண்டுபடியாலென்றபடி. (ப்ரதம யோஜனையில்) என்றது - ஸ்வரூபமும், ஸ்ரூபாநுரூபமான ப்ராப்ய மும் என்கிற யோஜனையிலென்றபடி.

பி.—உகூ.—வாக்யார்த்தமருளிச்செய்கிறவிடத்தில்,(ஸ்வரூபமும்)என் றது - சதுர்த்தியில்சொல்லுகிற சேஷத்வஸ்வரூபமும், நமஸ்ஸில் சொல்லுகிற பாரதந்த்ர்யஸ்வரூபமும் என்றபடி. இரண்டாமர்த்தத் தில், சதுர்த்தியில்சொல்லுகிற சேஷத்வபாரதந்த்ர்ய ஸ்வரூபமும், நமஸ்ஸில் ஆர்த்தமாகவிக்கிற உபாயமும், வ்யக்தசதுர்த்தியில் புரு ஷார்த்தமும், ஆக மூன்றர்த்தப்ரகாசகமென்கை.

வ்யா.— ப்ரணவநமஸ்ஸுக்களாலே ஸ்வரூபமும், நாராயணபதத்தாலே ப்ராப்யமும்சொல்லுகிறது.

ஏ.— (ப்ரணவநமஸ்ஸுக்களாலே ஸ்வரூபமும்) என்றது - ப்ரணவத்தாலே, பகவதநந்யார்ஹ ஶேஷத்வமாகிற ஸ்வரூபமும், நமஸ்ஸாலே பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபமுமென்றபடி. பரஞ்வ-தந்த்ர:- ப்ரதாந:- யஸ்யஸ: பரதந்த்ர: ; பரதந்த்ரஸ்ய பாவ: பாரதந்த்ர்ய மென்றபடி. "తన్త్రం ప్రధానే సిద్ధాన్తే సూత్రవాయే పరిచ్ఛదే" "தந்த்ரம் ப்ரதாநே ஸித்தாந்தே ஸூத்ரவாயே பரிச்சதே" (சசக) இத்யமர:. நமஸ்ஸு பாரதந்த்ர்யத்தைக் காட்டும்படி எங்ஙனேயென்ன; ப்ரணவத்தில் பகவதநந்யார்ஹ ஶேஷத்வாஶ்ரயமாய் ஜ்ஞாதாவான ஆத்மாவுக்கு "ఉత్తరం ఫలవత్తరం" "உத்தரம் பலவத்தரம்" (சசஉ) என்கிற ந்யாயத்தாலே ஜ்ஞாத்ருத்வபலத்தாலுண்டான ஸ்வஸ்வாதந்த்ர்யத்தை நஞ்நிஷேதிக்கையாலே அத்தால் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம் நிவ்ருத்தமாய் ஶேஷியான ஈஶ்வரன் கைபார்த்திருக்கையாலே பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபம் அர்த்தாத் ஸித்தம். (நாராயணபதத்தாலே ப்ராப்யம் சொல்லுகிறது) என்றது - நாராயணபதோபரிஸ்த்திதையான வ்யக்தசதுர்த்தி, "ప్రార్థనాయాం చతుర్థీ" "ப்ரார்த்தநாயாம் சதுர்த்தீ" (சசங)என்று ப்ரார்த்தநையைச் சொல்லுகிறதாகையாலே அந்த ப்ரார்த்தநைதான் கைங்கர்யவிஷயகப்ரார்த்தநையாகையாலே கைங்கர்யமாகிற ப்ராப்யமும் அர்த்தாத்ஸித்தமென்றபடி.

தொ.— (ப்ரணவ நமஸ்ஸுக்களாலே ஸ்வரூபமும்) என்றது- (ப்ரணவத்தாலே) ஶேஷத்வமாகிற ஸ்வரூபமும், நமஸ்ஸாலே (பாரதந்த்ர்யமாகிறஸ்வரூபமுமென்றபடி). "நமஸ்ஸு" ம:ந என்று மகாரத்தில் சொல்லப்பட்ட ஜ்ஞாத்ருத்வபலத்தாலே ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியையன்றோ ஸாப்தமாகக்காட்டுகிறது ? பாரதந்த்ர்யத்தைக் காட்டும்படியெங்ஙனேயென்னில் ; நமஸ்ஸாலே ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய ஹேதுவான ஸ்வஸ்வாதந்த்ர்யம் கழியுண்கையாலே அதடியாகவரும் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமும் கழியுண்கையாலே, இனி யிவனை ரக்ஷிப்பான் இவனோடு ஸம்பந்தமுடையானே யாகவேண்டுகையாலே, தன்னுடைய இஷ்டப்ராப்தியிலும் அநிஷ்ட நிவாரணத்திலும் தனக்கு நிருபாதிக ஶேஷியான ஈஶ்வரன் கைபார்த்திருக்கையாகிற ஈஶ்வரபாரதந்த்ர்யத்தை ஸ்வஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்திரூபார்த்தபலத்தாலே காட்டுகிறது.

வ்யா.— அநந்தரயோஜனையில் ப்ரணவத்தாலே ஶேஷத்வமும், நமஸ்ஸாலே உபாயமும், நாராயணபதத்தாலே பலமும் சொல்லுகிறது.

எ.— த்விதீயயோஜனையில், நமஸ்ஸாலே உபாயங்காட்டும்படிதான், ஸ்வஸ்வாதந்த்ர்யநிவ்ருத்தியைச்சொல்லுகிற நமஸ்ஸாலே ஸ்வாதந்த்ர்யகார்யமான ஸ்வரக்ஷணஸ்வாந்வயமும், காரணத்தோபாதி நஶித்துப்போகையாலே, இனி ஶேஷமாய் பரதந்த்ரனான இவனுடைய அநிஷ்டநிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் பண்ணுவான் ஶேஷியாகையாலே [ஈஶ்வரனே உபாயம்] என்னுமிடம் அர்த்தாத்ஸித்தம்; ஆகையாலே ஆர்த்திகமான பாரதந்த்ர்ய ஸ்வரூபத்தையும், ஆர்த்திகமான உபாயத்தையும் சொல்லுகிறதென்றபடி. த்ருதீயயோஜனையில் (ஶேஷத்வபாரதந்த்ர்யங்களாகிற ஸ்வரூபமும்) என்றருளிச்செய்தது, ஶேஷத்வாபேக்ஷயா பாரதந்த்ர்யம் அதிஶயாவஹமாகையாலே ஶேஷத்வவிஶிஷ்ட பாரதந்த்ர்யமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமென்றபடி. ஶேஷத்வ போக்த்ருத்வங்கள் போலன்றே பாரதந்த்ர்யபோக்யதைகள். ஶேஷத்வமாவது - இஷ்ட விநியோகார்ஹதாமாத்ரம். பாரதந்த்ர்யமாவது - ஶேஷிக்கு இஷ்டமானபடியே விநியோகப்படுகை. போக்த்ருத்வமாவது—ஜ்ஞாத்ருத்வபலத்தாலே போகதஶையில் வளர்கிற ரஸங்களுக்கு தான் போக்தாவாகை. போக்யதையாவது- பதார்த்தகதமான ரஸவர்ணாதிகள் போக்தாவுக்கே போக்யமாயிருக்குமாப்போலே, ஆத்மகதமான ஜ்ஞாநாதிகளும் ஈஶ்வரனுக்கு போக்யமாயிருக்கை. போக்த்ருத்வமாவது - போக்தாவானவன், போகஸித்திக்கு யத்நம்பண்ணவேண்டாவோ என்னும் நினைவாலே போக்யதாபூதபகவத்விஷயலாபார்த்தமாக உபாயப்ரவ்ருத்தியிலே மூட்டுவிக்கும். போக்யதையாவது - போக்தாவான ஈஶ்வரனன்றோ போக்யமான இவ்வஸ்துவைப்பெறுகைக்குயத்நம்பண்ணுவான்; தத்போக்யபூதமான

தா.— (அநந்தரயோஜனையிலே) என்றது - த்விதீயயோஜனையிலே என்றபடி. (நமஸ்ஸாலே உபாயமும்) என்கிறவிடத்திலும், நமஶ்ஶப்தம் ஸ்வஸ்வாதந்த்ர்யநிவ்ருத்தியாகிற அர்த்தபலத்தாலே உபாயத்தைக் காட்டுகிறது. காட்டும்படி யெங்ஙனேயென்னில்; இந்நமஸ்ஸுதான் ஜ்ஞாத்ருத்வபலத்தால்வந்த ஸ்வஸ்வாதந்த்ர்யத்தைக் கழிக்கையாலே, அதினடியாகவரும் ஸ்வரக்ஷணஸ்வாந்வயமும் கழியுண்டு போகையாலே, இனியிவனுக்கு ரக்ஷகனாவான் இவனைக் கொண்டுகார்யங்கொள்வான் ஈஶ்வரனேயாகவேண்டுகையாலே, அதில் உத்பாதகத்வேந ரக்ஷகத்வமும், இஷ்டாநிஷ்டப்ராப்தி பரிஹாரங்களில ஸ்வயம் கர்த்ருத்வேந ரக்ஷகமும், ஶேஷித்வேந ரக்ஷகத்வமும், அகாரத்திலே சொல்லிற்றாகையாலே அங்கு அநுக்தமான காரணத்வேந ரக்ஷகத்வத்தைச் சொல்லுகிறது. (பலமும்) என்றது - கைங்கர்யமுமென்றபடி.

ஸூ.—உஎ. பலமிருக்கும்படி ப்ரமேயஶேகரத்திலும், அர்ச்சிராதி கதியிலும் சொன்னோம்.

வ்யா.—உஎ.— பலவேஷந்தானிருக்கும்படி யெங்ஙனேயென்ன அருளிச்செய்கிறார்,

(பலமிருக்கும்படி)என்று துடங்கி. அதாவது - இவ்வாத்மாவுக்கு ப்ராப்யமான பலந்தான், அர்ச்சிராதிமார்க்கத்தாலே பரமபதத்திலே போய், பரிபூர்ணபகவதநுபவத்தைப்பண்ணி, அவ்வநுபவஜநிதப்ரீதி ப்ரேரிதனாய்க்கொண்டுபண்ணும் அஶேஷஶேஷவ்ருத்தி; ஆகையாலே, அதிருக்கும்படியை, ஸங்க்ரஹேண ப்ரமேயஶேகரமாகிற ப்ரபந்தத்திலும், விஸ்தரேண அர்ச்சிராதிகதியாகிற ப்ரபந்தத்திலும் விஶதமாகச்சொன்னோம் ; அவற்றிலே கண்டுகொள்வதென்கை.

எ.— இவ்வஸ்துவுக்கு தல்லாபத்துக்கு யத்நிக்கப்ராப்தியில்லையென்னும்நினைவாலே உபாயப்ரவ்ருத்தியில் நின்றும் மூளுவிக்குமென்கை. பாரதந்த்ர்ய போக்யதைகளிரண்டிலும், போக்யதையை கீழ் (அநந்ய போக்யத்வமாகிற ஆகாரத்ரயமும்)என்கிறவிடத்தில் அருளிச்செய்தாரென்றும், இங்கே பாரதந்த்ர்யத்தை அருளிச்செய்தாரென்றும் கண்டுகொள்வது. [இதுதன்னில்சொல்லுகிறஅர்த்தம்]-(இம்மந்த்ரந்தன்னில் சொல்லுகிறவர்த்தம்), இவ்வாத்மாவுக்கு ப்ரணவ நமஸ்ஸுக்களாலே (ஶேஷத்வபாரதந்த்ர்யங்களாகிறஸ்வரூபமும்),(நாராயணபதத்தாலே) ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமும், (ப்ரணவத்தாலே) ஶேஷத்வமாகிற ஸ்வரூபமும்; (நமஸ்ஸாலே உபாயமும்), (நாராயணபதத்தாலே) பலமானகைங்கர்யமுமென்று சொல்லுவுமாம் என்று மூலார்த்தம். உஎ.— மேலுக்கவதாரிகை (பலவேஷம்) என்று துடங்கி.

(பலவேஷம்) என்றது-பலஸ்வரூபமென்றபடி.[பலமிருக்கும்படி]-பலஸ்வரூபமிருக்கும்படியை, (ஸங்க்ரஹேணப்ரமேயஶேகரமென்கிற ப்ரபந்தத்திலும், விஸ்தரேண அர்ச்சிராதிகதியாகிற ப்ரபந்தத்திலும் விஶதமாகச்சொன்னோம்; அவற்றிலே கண்டுகொள்வது) என்று மூலார்த்தம்.

ப்ரமேயஶேகரே, "நிர்ஹேதுக பகவத்கடாக்ஷத்தாலே அத்வேஷமுண்டாமென்று துடங்கி, அதுண்டானவாறே பகவத்பாகவதவிஷயங்களிலாபிமுக்யமும், த்யாஜ்யோபாதேய விபாகஜ்ஞாநகௌதுகமும், ஸாத்விகஸம்பாஷணமும், ஸதாசார்ய ஸமாஶ்ரயணமும், த்யாஜ்யோபா

தா.—உஎ.—மேலுக்கவதாரிகை (பலவேஷந்தான்) இத்யாதி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (இவ்வாத்மாவுக்கு) என்றது - பகவதநந்யார்ஹ ஶேஷமாய்த் ததேகபாரதந்த்ரமாயிருக்கிற ஆத்மாவுக்கென்றபடி. (அவ்வநுபவம்) என்றது - பரிபூர்ணபகவதநுபவமென்றபடி. (அதிருக்கும்படியை) என்றது-அந்தகைங்கர்யமிருக்கும்படியை யென்றபடி.

மூ.—உஅ. இதுதான் எட்டுத்திருவக்ஷரமாய், மூன்றுபதமாயிருக்கும்.

வ்யா.—உஅ.—இனி, இம்மந்த்ரத்துக்கு ப்ரதிபதம் அர்த்தம் அருளிச் செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, ப்ரதமம் இதினுடைய அக்ஷரஸங்க்யையையும், பதஸங்க்யையையும் அருளிச்செய்கிறார்,

(இதுதான்) என்றுதுடங்கி. அதாவது-இம்மந்த்ரந்தான் "ఓమి త్యేకాక్షరమ్, నమఇతిద్వే అక్షరే, నారాయణాయేతిపఞ్చాక్షరాణి, ఇత్యష్టాక్షరచ్ఛన్దసాగా

எ.— தேய நிஸ்சயமும், ப்ராப்யாந்தரத்தில் வைராக்யமும், பரமப்ராப்யத்திலபிநிவேஶமும், ப்ராப்யாந்தர நிவ்ர்த்திக்கும்; பரமப்ராப்ய ஸித்திக்குமடியான ஸித்தோபாயஸ்வீகாரமும், பகவத்ப்ராப்தியிலே த்வரையும், "అహంస్మరామి" "அஹம்ஸ்மராமி" (௪௪௪) என்கிறபடியே ஈஶ்வரஸ்ம்ருதிக்கு விஷயபூதனைகையும், பூதஸூக்ஷ்மஶரீர பரிஷ்வங்கமும், பரமாத்ம ஸம்ஸர்க்கமும், ஹார்தாநுக்ரஹத்தாலேமார்க்கவிஶேஷப்ரகாஶமும், ஹ்ர்தய குஹாநிர்க்கமநமும், மூர்த்தந்யநாடீநிஷ்க்ரமணமும், அர்ச்சிராதிமார்க்ககமநமும், ஆதிவாஹிக ஸத்காரமும், ஆவரணாதிக்ரமணமும், ப்ரக்ர்த்யதிலங்கநமும், விரஜாஸ்நாநமும், ஸூக்ஷ்மஶரீரவிஶ்லேஷணமும், அபஹதபாப்மத்வாதிகுணகண ப்ராதுர்ப்பாவமும், அமாநவகரஸ்பர்ஶமும், பகவத்ஸங்கல்ப கல்பிதமானதிவ்யதேஹப்ராப்தியும், அகாலகால்யதிவ்யதேஶப்ராப்தியும், ஆரம்ஹ்ரததடஸ்நாநமும், திவ்யாலங்காரமும், திவ்யவிமாநாரோஹணமும், திவ்யகாந்தாரப்ரவேஶமும், திவ்யாப்ஸரஸ்ஸத்காரமும், திவ்யகந்தப்ரவேஶமும், ப்ரஹ்மகந்தப்ரவேஶமும், அப்ராக்ர்த கோபுரப்ராப்தியும், திவ்யநகரப்ராப்தியும், ஸூரிபரிஷத்ப்ரத்யுத்கமநமும், ராஜமார்க்ககமநமும், ப்ரஹ்மதேஜঃப்ரவேஶமும், திவ்யகோபுரப்ராப்தியும், ப்ரஹ்மவேஶ்மப்ரவேஶமும், திவ்யமண்டபப்ராப்தியும், திவ்யபாரிஷத்ப்ராப்தியும், ஸபத்நீகஸர்வேஶ்வரதர்ஶநமும், ஸ்துதிப்ரணாமாஞ்ஜலிப்ரமுகஸம் ப்ரமாநுவர்த்தநமும், பரமாத்மஸமீபப்ராப்தியும், பாதபீடபர்யங்காரோஹணமும், பகவதுத்ஸங்கஸங்கமும், ஆலோகநாலாபாத்யநுபவமும், ஆலிங்கநாத்யநுபவமும், ஸ்வரூபரூபகுண விக்ரஹாத்யநுபவமும், அநுபவஜநிதப்ரீதிப்ரகர்ஷமும், நாநாவிதவிக்ரஹபரிக்ரஹமும், ஸர்வதேஶ ஸர்வகாலஸர்வாவஸ்த்தோசிதமானஸர்வப்ரகார கைங்கர்யமும் உண்டாம்" என்றருளிச்செய்தாரிறே.

உஅ.— மேல்வாக்யத்துக்கு ஸங்கதி (இம்மந்த்ரத்துக்கு) என்று துடங்கி.

அர்த்தமருளிச்செய்கிறார் ப்ரமாணோதாஹரணபூர்வகமாக (அதாவது) என்று.

தா.—உஅ.—மேலுக்கவதாரிகை (இனி) இத்யாதி. (இனி) என்றது-இம்மந்த்ரத்துக்கு வாக்யார்த்தமருளிச்செய்த வநந்தரமென்றபடி. (ப்ரதிபதம்) என்றது - பதங்கள்தோறுமென்றபடி.

[இதுதான்] இத்யாதி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி.

வ்யா—ஸ ச்ருதிசீ", "ஓமித்யேகாக்ஷரம், நம இதி த்வே அக்ஷரே, நாராயணா யேதி பஞ்சாக்ஷராணி, இத்யஷ்டாக்ஷரஞ் சந்தஸா காயத்ரீ சேதி", (ருஉ) "ఓమిత్యగ్రే వ్యాహరేత్, నమ ఇతి పశ్చాత్, నారాయణాయేత్యుపరిష్టాత్" "ஓமித்யக்ரே வ்யாஹரேத், நம இதி பச்சாத், நாராயணாயேத்யுபரிஷ்டாத்" (ருக) என்கிறபடியே எட்டுத்திருவக்ஷரமாய், மூன்றுபதமாயிருக்குமென்கை. இதினுடைய அஷ்டாக்ஷரத்வஞ் சொல்லுகிறவிடத்தில், "ఓమిత్యేకాక్షరమ్"

எம்.— அக்ஷரஸங்க்யையில ப்ரமாணம் ("ఓమిత్యేకాక్షరమ్" "ஓமித்யேகாக்ஷரம்") (சசரு) என்று தொடங்கி. பதஸங்கையில் ப்ரமாணம் ("ఓమిత్యగ్రే వ్యాహరేత్" "ஓமித்யக்ரேவ்யாஹரேத்") (உசகு) என்று தொடங்கி. ("வ்யாஹரேத்") என்கிறக்ரியாபதத்தை மூன்றிடத்திலும் யோஜிக்கவேணும். [எட்டுத்திருவக்ஷரமாய்] என்று அக்ஷரங்களை கௌரவித்தருளிச்செய்தது "నాయకత్వం చ సర్వేషాం నామత్వం హరేః పదే। నాశకత్వం విరుద్ధానాం నకారార్థః ప్రకీర్తితః॥, మంగళత్వం మహత్త్వం చ మహానందం చ కరోతి యత్। ఆశ్రితానాం తతో జ్ఞేయో మకారార్థస్తథా బుధైః॥. నాస్తిక్యహాని నైర్గుణ్యత్వం నేతృత్వం చ హరేః పదే। నాకారసేవినాం జ్ఞానం మన్త్రవిద్భిః ప్రకీర్తితః॥, రజ సంభవత్వాత్సురోగనాశ స్తతో వ్యతః, రాష్ట్రత్రాణాదికం చాపి ప్రాప్యతే రేఫసేవయా॥, యోగోద్యోగఫలం చాపి యత్కార్యం తాత్త్వికైర్బుధైః। వర్ణనం తత్తథావి జ్ఞోవాణీసిద్ధిర్ణకారతః॥, యక్షరాక్షసభేతాళ భూతాదీనాం భయాపహః। ఏవమక్షర నిర్వాణో మన్త్రవిద్భిః ప్రకీర్తితః॥" "நாயகத்வஞ்ச ஸர்வேஷாம் நாமத்வம் ஹரே:பதே | நாசகத்வம்விருத்தாநாம் நகாரார்த்த:ப்ரகீர்த்தித:||, மங்களத்வம்மஹத்வஞ்ச மஹாநந்தஞ்சகரோதியத்| ஆச்ரிதாநாந்ததோஜ்ஞேயோ மகாரார்த்தஸ்ததாபுதை:||, நாஸ்திக்யஹாநிர்நித்யத்வம் நேத்ருத்வஞ்சஹரே:பதே| நாகாரஸேவிநாம்ஜ்ஞாநம் மந்த்ரவித்பி:ப்ரகீர்த்தித:||, ரஞ்ஜநம் பகவத்பாதாம்போஜஸஹாயஸக்தோகாங்யத:| ராஷ்ட்ரத்ராணாதிகஞ்சாபி ப்ராப்யதே ரேபஸேவயா||, யோகோத்யோக பலஞ்சாஹார்யகாராத் ப்ராப்யதேபுதை:| வர்ணநஞ்சததாவிஜ்ஞேர்வாணீஸித்திர் ணகாரத:||, யக்ஷராக்ஷஸபேதாள பூதாதிநாம்பயாபஹ:| ஏவமக்ஷரநிர்வாணோ மந்த்ரவித்பி:ப்ரகீர்த்தித:||" (சசஎ) என்றுமந்த்ரசாஸ்த்ரத்தில் ந ர நாராயணஸம்வாதத்தில அக்ஷரங்களை ஆத்ததூ: அதிசயமாக அருளிச்செய்கையாலே, [இதுதான்] – இந்தத்திருமந்த்ரந்தான், [எட்டுத்திருவக்ஷரமாய் மூன்றுபதமாய் இருக்கும] என்று மூலார்த்தம்.

அக்ஷரநியமத்தை உதாஹரிக்க ச்ருதியாலே, ப்ரணவத்தை ஒழிய அஷ்டாக்ஷரத்வம் சொல்லும் பக்ஷம் நிரஸ்தமென்கிறார், (இதினுடைய) என்று தொடங்கி.

தொ.--இம்மந்த்ரத்தினுடைய அஷ்டாக்ஷரத்வே ப்ரமாணங்காட்டுகிறார் ("ஓமித்யக்ரேவ்யாஹரேத்") இத்யாதியால் ப்ரணவமொழிய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுமபக்ஷத்தை தூஷித்து பரிஹரிக்கிறார் (இதினுடைய) இத்யாதியால்.

வ்யா.—"ஓமித்யேகாக்ஷரம்" என்று ப்ரணவத்தை ஏகாக்ஷரமாகவும், "నమ ఇతి ద్వే అక్షరే" "நம இதி த்வே அக்ஷரே" என்று நமஸ்ஸை இரண்டக்ஷரமாகவும், "నారాయణాయేతి పంచాక్షరాణి" "நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி" என்று நாராயணபதத்தை அஞ்சக்ஷரமாகவும் ஶ்ருதி சொல்லுகையாலே, ஸமஸ்தபதமான நாராயணபதத்தில நாரபதத்தைப்பிரித்து ஷடக்ஷரமாக்கி, ப்ரணவத்தையொழிய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுமவர்களுடைய பக்ஷம், அவைதிகமாகையாலே அநாதரணீயமாகக் கடவது.

எ.—(ஸமஸ்தபதமான நாராயணபதத்தில்) என்றது—பிந்நபதமன்றிக்கே ஏகபதத்வேந ஶ்ருதிப்ரஸித்தமான (நாராயணபதத்தில்) என்றபடி. ("నారాయణాయేత్యుపరిష్టాత్") "நாராயணாயேத்யுபரிஷ்டாத்" (௬௪அ) என்றிறே ஶ்ருதியும் சொல்லிற்று. (நாரபதத்தைப்பிரித்து ஷடக்ஷரமாக்கி) என்றது—நார—அயநாய என்று பிந்நமாகப்பிரித்து (ஷடக்ஷரமாக்கி) என்றபடி. (ப்ரணவத்தையொழிய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுமவர்களுடைய பக்ஷம்) என்றது—"తత్రోత్తరాయణస్యాది బిందుమాన్ విస్తర స్తతః। బీజమష్టాక్షరస్యాస్య తేనాష్టాక్షరతా భవేత్॥" "தத்ரோத்தராயணஸ்யாதி பிந்துமாந்விஸ்தரஸ்தத꞉। பீஜமஷ்டாக்ஷரஸ்யாஸ்ய தேநாஷ்டாக்ஷரதாபவேத்॥" (௪௪கூ) என்கிற ஸ்ம்ருதிப்ரக்ரியையாலே, (ப்ரணவத்தையொழிய அஷ்டாக்ஷரத்வம் சொல்லுகிறவர்கள் பக்ஷம்) என்றபடி. (அவைதிகமாகையாலே) என்றது—வைதிகமல்லாமையாலே என்றபடி; அதாவது—'అప్రసక్తిర్విరోధశ్చ' "அப்ரஸக்திர்விரோதஶ்ச" (௪௫0) என்று விரோதார்த்தே நஞ் ஆகையாலே வேதவிருத்தமென்றபடி. (அநாதரணீயமாகக்கடவது) என்றது—ஆதரிக்கத்தக்கதன்று என்றபடி. ஶ்ருதயவிருத்த ஸ்ம்ருதிப்ரக்ரியை ஆதரணீயமாயிருக்குமென்னுமம்ஶத்தை ("ప్రణవాద్యం") ("ப்ரணவாத்யம்") (௪௬௧) என்கிற உதாஹரணத்தில் ஸுஸ்பஷ்டமாக ப்ரகாஶிப்பிக்கையாலே ஶ்ருதிவிருத்த ஸ்ம்ருதிப்ரக்ரியை அநாதரணீயமென்னுமிடம் அர்த்தாத் ஸித்தம். அத்ரேயமபியுக்தோக்தி꞉—"వేదేకర్త్రాద్యభావాద్బలవతి హి నయైస్త్వన్మతే నీయమానే తన్మూలత్వేన మానం తదితరదఖిలం జాయతే రంగధామన్। తస్మాత్సాంఖ్యం సయోగం సపశుపతిమతం కుత్రచిత్పాంచరాత్రం సర్వం త్వేవ ప్రమాణం తదిదమధిగతం పంచమాదేవ వేదాత్॥" కర్త్రాద్యభావాత్-కర్తృదోషాభావాత్, ఆదిశబ్దేన-తన్మూలరాగద్వేషకళంకాభావాచ్చ, బలవతి-అనుమానాదిభ్యః ప్రబలతరే. వేదే-వేదే, నయైః-న్యాయైః, త్వన్మతే-త్వత్పరే, నీయమానే - వ్యాఖ్యాయమానే సతి, తన్మూలత్వేన - తాదృశవేదమూలత్వేన, తదితరత్ —, అఖిలం - సకలం, మానం - ప్రమాణం, (యతః జాయతే —; తస్మాత్ —, సాంఖ్యం - సాంఖ్యతంత్రం, యోగం - యోగతంత్రం, పశుపతిమతం—, కుత్రచిత్ - వేదావిరుద్ధస్థలే,

---

தொ.—(அவைதிகமாகையாலே) என்றது—வேதவிருத்த ஸௌகதாகம ஸித்தமாகையாலே யென்றபடி.

மூ.—உசூ. மூன்றுபதமும் மூன்று அர்த்தத்தைச்சொல்லுகிறது.
மூ.—௩0. அதாவது - ஶேஷத்வமும், பாரதந்த்ர்யமும், கைங்கர்யமும்.

வ்யா.—உசூ.—இந்த பதத்ரயமும எவ்வர்த்தத்தைச் சொல்லுகிறதெனனுமாகாங்க்ஷையிலே,
(மூன்றுபதமும் மூன்றர்த்தத்தைச்சொல்லுகிறது) என்கிறார்.
௩0.— அவ்வர்த்தங்கள் தம்மை விசதமாக அருளிச்செய்கிறார், (அதாவது - ஶேஷத்வமும், பாரதந்த்ரயமும கைங்கர்யமும) என்று. (ஸ்வரூபமும், ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யமும்,) என்று முதற்சொன்ன வாக்யார்த்தம், இதனை நினைத்திரே.

எ.—మన్వాదిస్మృత్యవిరుద్ధస్థలేచ, ప్రమాణం ; (విరోధేతు అప్రమాణం;) పంచరాత్రం - శ్రీపాంచరాత్రంతు, సర్వత్ర—, ప్రమాణం ; తత్ ఇదం - పంచరాత్రప్రామాణ్యం, పంచమాత్ వేదాత్ ఏవ - భారతాదేవ, అధిగతం—. "வேதேகர்த்ராத்யபாவாத்பலவதிஹிநயைஸ்தவந்மூகேநீயமாநேதந் மூலத்வேநமாநம்ததிதரதகிலம்ஜாயதேரங்கதாமந் | தஸ்மாத்ஸாங்க்யம்ஸயோகம்ஸபஶுபதிமதம்ஸுக்ரஸித்பஞ்சராத்ரம்ஸர்வத்ரைவப்ரமாணம் ததிதமதிகதம்பஞ்சமாதேவவேதாத்॥" கர்த்ராத்யபாவாத் - கர்த்ருரபாவாத், ஆதிஶப்தேந - தந்மூலாகத்வேஷகளங்காபாவாச்ச, பலவதி - அநுமாநாதிப்ய:ப்ரபலதரே, வேதே-வேதே, நயை: - ந்யாயை:, த்வந்முகே - த்வத்பரே, நீயமாநே - யோஜ்யமாநேஸதி, தந்மூலத்வேந - தாத்ருஶவேதமூலத்வேந, ததிதரத்—, அகிலம் - ஸர்வம், மாநம் - ப்ரமாணம், (யத:) ஜாயதே—; தஸ்மாத்—, ஸாங்க்யம் - ஸாங்க்யதந்த்ரம், யோகம்-யோகதந்த்ரம், பாஶுபதிமதம்—, ஸுக்ரஸித்-வேதாவிருத்தஸ்தலே, மந்வாதிஸ்ம்ருத்யவிருத்தஸ்தலேச, ப்ரமாணம் ; (விரோதேது அப்ரமாணம்); பஞ்சராத்ரம் - ஸ்ரீபாஞ்சராத்ரந்து, ஸர்வத்ர—, ப்ரமாணம்— ; தத்இதம்-பஞ்சராத்ர ப்ராமாண்யம், பஞ்சமாத்வேதாத் ஏவ-பாரதா தேவ, அதிகதம்—. (சரு௨)

உசூ.—மேலவாக்யத்துக்கவதாரிகை (இதில்) என்று தொடங்கி.
௩0.— மூலத்துக்கு அர்த்தமருளிச்செய்கிறார் (அதாவது) என்று தொடங்கி. (அதாவது) என்றது - [மூன்றுபதமும் மூன்றர்த்தத்தை]ச் சொல்லுகையாவதென்றபடி ; [அதாவது] என்றது-மூன்றர்த்தமாவதென்னவுமாம்.

தொ—உசூ.—மேலுக்கவதாரிகை (இதில்) இத்யாதி. (இதில்) என்றது-திருமந்த்ரத்திலென்றபடி.

௩0.— மேலுக்கவதாரிகை (அவ்வர்த்தங்கள்தம்மை) இத்யாதி. இப்போது ஶேஷத்வாதிகள் பதத்ரயத்துக்கு அர்த்தமாகவருளிச்செய்தது, இம்மந்த்ரத்துக்கு வாக்யார்த்தமருளிச்செய்கிறவிடத்தில் மூந்தினயோஜனைக்குச்சேரவேணும்; அத்தையருளிச்செய்கிறார் (ஸ்வரூபமும்) இத்யாதியால.

மூ.—௩௧. இதில் முதற்பதம் ப்ரணவம்.

மூ.—௩௨. இது (அ) என்றும், (உ) என்றும், (ம) என்றும் மூன்று திருவக்ஷரம.

வ்யா.—௩௧.—இப்பதத்ரயத்திலும் ப்ரதமபதந்தானேதென்ன, (இதில் முதற்பதம் ப்ரணவம்) என்கிறார்.

"ఓమిత్యగ్రే వ్యాహరేత్" என்றிறே ஶ்ருதிசொல்லிற்று. ஸ்ம்ருதியும் "ప్రణవాద్యం నమోమధ్యం నారాయణపదాన్తిమం | మన్త్రమష్టాక్షరం విద్యాత్సర్వసిద్ధికరం నృణామ్||" "ப்ரணவாத்யம் நமோமத்யம் நாராயணபதாந்திமம்|மந்த்ரமஷ்டாக்ஷரம் வித்யாத்ஸர்வ ஸித்திகரம் ந்ருணாம்||" (௫௪) என்றதிறே.

௩௨.— இனி ப்ரணவத்துக்கு அர்த்தமருளிச்செய்வதாக, இதினுடைய அக்ஷரத்ரயாத்மகதையை அருளிச்செய்கிறார்,

(இது அ - என்றும, உ - என்றும், ம - என்றும் மூன்று திருவக்ஷரம்) என்று.

எ.— [ஶேஷத்வம்] ஆவது - யதேஷ்ட விநியோகார்ஹத்வம். பாரதந்த்ர்யமாவது-யதேஷ்ட விநியுஜ்யமாநத்வம். கைங்கர்யமாவது - பகவந்முகவிகாஸஹேதுவான வ்ருத்திவிஶேஷம். பரமஸம்ஹிதாயாம், "యదృష్టం వినియోగార్హం శేషశబ్దేన కథ్యతే | ఈశ్వరస్య జగత్సర్వం యదృష్టం వినియుజ్యతే||, పరమాత్మార్హశేషస్య స్వతోర్హాంశస్య కింకరః| కైంకర్యమఖిలావృత్తి రిత్యేతత్ జ్ఞానసంగ్రహః||" "யதேஷ்டவிநியோகார்ஹம் ஶேஷஶப்தேநகத்யதே | ஈஶ்வரஸ்ய ஜகத்ஸர்வம் யதேஷ்டம் விநியுஜ்யதே||, பரமாத்மார்ஹஶேஷஸ்ய ஸ்வதோர்ஹாம்ஶஸ்ய கிங்கர:| கைங்கர்யமகிலாவ்ருத்தி ரித்யேதத் ஜ்ஞாநஸங்க்ரஹம்||" (௫௩)

௩௧.— உத்தரவாக்யஸ்யஸங்கதி: (இப்பதத்ரயம்) இத்யாதி.

ப்ரதமபதத்தில் ப்ரமாணம்காட்டுகிறார் ("ஓமித்யக்ரேவ்யாஹரேத்") என்று. இஶ்ருத்யர்த்தத்துக்கு உபப்ருஹ்மணம் காட்டுகிறார் ("ప్రణవాద్యం" "ப்ரணவாத்யம்") என்று. (௫௪)

௩௨.— மேல்வாக்யத்துக்கவதாரிகை (இனி) என்று துடங்கி.

[மூன்றுதிருவக்ஷரம்] என்று கௌரவித்தது வேதஸாரமாகையாலே. இவ்வர்த்தம் மேலேஸுஸ்பஷ்டம்.

தொ.— ௩௧.— அவதாரிகாபூர்வகமாக ப்ரதமபதமின்னதென்கிறார் (இப்பதத்ரயத்திலும்) இத்யாதியால். ப்ரணவம் ப்ரதமபதமென்கையிலே ப்ரமாணம்காட்டுகிறார் ("ஓமித்யக்ரேவ்யாஹரேத்") இத்யாதியால.

௩௨.— மேலுக்கவதாரிகை (இனி) இத்யாதி.

பி.—௩௧.— [முதல்பதம் ப்ரணவ] மானபடி என்னென்ன அருளிச்செய்கிறார், ("ஓமித்யக்ரேவ்யாஹரேத்") என்றிறேஶ்ருதிசொல்லிற்று என்று துடங்கி.

௩௨.— ப்ரணவம்,

வ்யா.— இப்ரணவந்தான், அஸம்ஹிதாகாரத்தாலே மூன்றக்ஷரமாய், மூன்றுபதமாய், மூன்றர்த்தப்ரகாஶகமாய் ; ஸம்ஹிதாகாரத்தாலே ஏகாக்ஷரமாய், ஏகபதமாய், ஏகார்த்தப்ரகாஶகமாயிறே இருப்பது.

ஏ —(அஸம்ஹிதாகாரம்)- பிரிந்திருக்கை. (மூன்றர்த்தப்ரகாஶகமாய்) என்றது - லுப்தசதுர்த்தீவிபக்தி ஸஹிதமான அகாரம், பகவச்சேஷத்வரூபார்த்தப்ரகாஶகமாயும், உகாரம், அநந்யார்ஹத்வ ஸம்பந்தார்த்தப்ரகாஶகமாயும், மகாரம். அந்தஶேஷத்வாஶ்ரயமாய் ஜ்ஞாதாவாயிருக்கிற ஜீவாத்மரூபார்த்த ப்ரகாஶகமாயும் இருக்குமென்றபடி. "అకారో విష్ణురిత్యుక్తో మకారో జీవవాచకః। తయోస్తు నిత్యసంబంధ ఉకారేణ ప్రకీర్తితః॥" அகாரோ விஷ்ணுரித்யுக்தோ மகாரோ ஜீவவாசகஃ।தயோஸ்துநித்யஸம்பந்த உகாரேண ப்ரகீர்திதஃ॥" (௪௫௫) (ஸம்ஹிதாகாரம்) ஆவது - மூன்றக்ஷரம்கூடி ஒன்றாயிருக்கை. (ஏகார்த்தப்ரகாஶகமாய்) என்றது- "பகவதநந்யார்ஹ ஶேஷத்வாஶ்ரயோ ஜீவஃ" என்று ஜீவஸ்வரூபரூபைகார்த்தப்ரகாஶகமாய் இருக்குமென்றபடி. "ప్రణవో జీవవాచీస్యాత్ సామాన్యాదర్థసంభవాత్। శబ్దతో జీవవాచీస్యాత్ రాజపూరుషశబ్దవత్॥" "ப்ரணவோ ஜீவவாசீஸ்யாத்ஸாமாந்யாதர்த்தஸம்பவாத் । ஶப்ததோ ஜீவவாசீஸ்யாத்ராஜபூருஷஶப்தவத்॥" (௪௫௬)

கொ.- ("ஓமித்யேகாக்ஷரம்") என்று ப்ரணவத்தை ஒரு திருவக்ஷரமாக ஶ்ருதி சொல்லாநிற்க. இவர் ப்ரணவத்தை மூன்று அக்ஷரமாக அருளிச்செய்கிறது ஶ்ருதிவிருத்தமன்றோ ? என்ன அருளிச்செய்கிறார், (இப்ரணவந்தான்) இத்யாதியால். ப்ரணவத்துக்கு ஸம்ஹிதாகாரமும், அஸம்ஹிதாகாரமும் இரண்டுமுண்டாகையாலே, இதில், அஸம்ஹிதாகாரத்தை முந்துற ஸப்ரமாணமாக அருளிச்செய்து அநந்தரம் ஸம்ஹிதாகாரத்தையருளிச்செய்கிறார் ; ஆகையாலே விரோதமில்லையென்று கருத்து.

பி.— ஏகாக்ஷரமாயன்றோ இருப்பது ? மூன்றக்ஷரமானபடி என்னென்ன அருளிச்செய்கிறார் (இப்ரணவந்தான் அஸம்ஹிதாகாரத்தாலே) என்றுதுடங்கி. [இது (அ) என்றும் (உ) என்றும் (ம) என்றும்] அஸம்ஹிதாகாரம்-ஶப்தப்ராப்தியாலே பிறந்தவாகாரம். (ஸம்ஹிதாகாரத்தாலே) ஓரர்த்தப்ரகாஶகமாவது - மகாரவாச்யனான சேதநன், அகாரவாச்யனான ஈஶ்வரனுக்கு ஶேஷபூதனென்று ஶேஷத்வ ஸ்வரூபப்ரகாஶகமென்னுதல் ; ஆத்மஸமர்ப்பணமென்னுதல் ; "ఓమిత్యాత్మానం యుంజీత" "ஓமித்யாத்மாநம்யுஞ்ஜீத" என்றதிறே.

௭.—ப்ராப்யாந்தர ஸ்ரத்தைகுலைகையும், புருஷார்த்தத்தில் அவிச்சிந்நமான பாரிப்பும், ப்ராப்யம் ஸபலமாம்படியான அபேக்ஷையும் இவை ஆறும் பரிக்ரஹித்த உபாயபலமாய் விளையுமவையிறே! காலமே கண்ணுறங்காதே வந்து துவளும்படியான த்வரையும், போற்றுதற்குப் பொருள் தேடும்படியான கலக்கமும், தங்கள வடிவைக்காட்டி வளைக்கும்படியான ஆர்த்தியும், நோன்பை வ்யாஜமாக்கி வேண்டினவற்றில் அபேக்ஷை அற்றபடியும், பரிபூர்ணமாக கைங்கர்யத்தை அபேக்ஷிக்கிறபடியையும், அதில் களையறுத்துத்தரவேணுமென்று சொல்லும்படி ப்ரார்த்திக்கிறபடியையும் காட்டி "நாமுடையோம்" என்ற புண்யத்தினுடைய பலங்களை வெளியிடுகிறார்கள். கீழ்ச்சொன்ன உபாயத்துக்கு வேறொன்றை பலமாக்குகையாவது - மாணிக்கத்தையிட்டு தவிடு கொள்வாரைப்போலேயிறே! அந்த உபாயத்துக்கு உபாயாந்தர நிவ்ருத்தி போலே ஸகலபலஸாதாரணமென்று விரோதியான பலத்தை அபேக்ஷிக்கலாகாதிறே! ஸ்வரூபாநுரூபமான பலத்தில் தங்களுடைய அபிநிவேசத்தை அறிவிக்கவேணுமென்று ச்ருதிசதசிரஸ்ஸித்தமாய், கருத்தறியும் மூதுவர் கைப்பட்டுக்கிடக்குமதாய், கருந்தரையில் வாஸனையாலே அவர்கள் பிறந்தவிடத்தில் அபேக்ஷிக்குமதாய், அவர்களோடொத்த ப்ராப்தியை உணர்ந்தவர்கள் பாரிக்குமதாய், பகவதநந்யார்ஹசேஷமான வேஷத்துக்கு அத்யந்தமநுரூபமாய், ஈச்வரனுடைய முகவிகாஸத்துக்கு ஹேதுவாயிருந்துள்ள பரம ப்ராப்யத்தை, ப்ரபந்த நிகமநம்பண்ணுகையாலே, எல்லார்க்கும் தெரியும்படி வெளியிட வேண்டுகையாலே, நாட்டார் இசைகைக்கு நோன்பு என்று ஒன்றை வ்யாஜீகரித்துப் புகுந்தோமித்தனை, எங்களுக்கு உத்தேச்யம் உன் திருவடிகளிலே நித்யகைங்கர்யமென்று ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுகிறார்கள். எம்மாவீட்டிலர்த்தத்தோடே தலைக்கட்டுகிறது· எம்மாவீட்டிலே ப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்து, ஒழிவில் காலத்திலே ப்ரார்த்தித்து, அதுதன்னுடைய எல்லைநிலமான பாகவதாநுபவத்தை "நாளும் வாய்க்க" என்று நெடுமாற்கடிமையிலே ப்ரார்த்தித்தார் ஆழ்வார்; அவரிற்காட்டில் இவர்களுக்குள்ளவாசி, "நீராடப்போதுவீர்" "எல்லாரும்போந்தாரோ" என்று புருஷார்த்தத்தில் சரமாவதியிலே முதலடியிலே நின்று, அது நிலைநிற்கைக்காக ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணி அர்த்திக்கிறார்கள்· "ஆவாவென்றாராய்ந்தருள்" "எம்மேல்விழியாவோ" என்று பெண்கள், அக்ரூரன் மநோரதித்தாப்போலே மநோரதித்துக் கொண்டு வந்தபடியே, நாமும் பெரிய ஆதரத்தோடே புறப்பட்டிருந்து, வந்தகாரியங்களைச் சொல்லுங்கோளென்றுகேட்டு, வேண்டுவனவும் கொடுக்க இசைந்து, பறைகொண்டகாலத்துக்குப்பெறும் ஸம்மாநம்பண்ணுவதாக இசைந்துவந்தகாரியம் தலைக்கட்டிவிட்டோம்,

திரிய "பறைதாராய்" என்று நின்றார்கள்; "பாடிப்பறைகொண்டு" என்றதுக்குமேலேயும் ஒரு பறையுண்டாயிருந்தது, நாமதறிந்தி லோம், நமக்கு இதுவேதெரிந்ததில்லை, மேல்விளையும்படி காண்கி றோமென்று பேசாதேயிருந்தான்; எங்கள் த்வரையையும் தலைதடு மாறான பரிமாற்றத்தையுங்கண்டுவைத்து இதுக்கு ஹ்ருதயம் கேட் டிலையே! எங்கள் நினைவைக்கேளாய் என்று துடைதட்டுகிறார்கள். கீழ் ப்பண்ணின ப்ராபக ஸ்வீகாரம் அஸத்ஸமமாம்படியான ப்ராப்யருசி யையும், 'உன்னாலே பேறு' என்று அறுதியிட்டால் நீ வரக்கண்டி ருக்கவொண்ணாதபடியிருக்கிறத்வரையையும், எங்கள் ஆற்றாமையின் ஸ்வபாவத்தையுங் கேளாயெனகிறார்கள்.

வ்யா.— (சிற்றஞ்சிறுகாலேவந்து) சிறுபெண்களாகையாலே குளிர்காலத்தில் புறப்படமாட்டாத நாங்கள், அறப்போதோடே புற ப்பட்டுவரும்படியன்றோ எங்கள்த்வரை இருந்தபடி. இவர்களுக்கு ஆபிமுக்யம் பிறந்தகாலம், ஆத்மஹித சிந்தநத்துக்கு ஸத்வோத்தரகா லமாக விருக்கும் ப்ராஹ்ம முஹூர்த்தமாய் வந்து விழுந்தது. மாஸம் மார்கழிமாஸமாய், பக்ஷம் பூர்வபக்ஷமாய், அதிலே பௌர்ணமியாய், அப்படியே ஒரு நன்னாள்வந்து பலித்தாப்போலே அத்திவஸத்தில் முஹூர்த்தமும் ப்ராஹ்மமாய் வந்து விழுந்தது. (காலை) (சிறுகாலை) (சிற்றஞ்சிறுகாலை) "செங்கல் பொடிக்கூறை" என்று தாமஸரும் உணரும்படியான அளவு-காலையாவது; "ஆய்ச்சியர் மத்தினாலோ சைபடுத்த" என்று - இடைச்சிகள் உணர்ந்து ஸ்வகர்த்யத்திலே அதி கரிக்கும்படியான அளவு - சிறுகாலையாவது. "ஆய்ச்சியர்மத்தினாலோ சைபடுத்த" என்றதுதான் விடிவுக்கு அடையாளமாகச்சொல்லும்படி, அதுக்கு முனனே உணர்ந்தார்களிறே தாங்கள்; இவர்களுக்கு, ராத் ரிகழிந்து பகல் வருவதற்குமுன்புத்தை நடுவில் போதையிறே நினைக்கி றது; அஜ்ஞாநதசை குலைந்து ப்ராப்திதசை புகுருவதற்கு முன்பு த்தை ஜ்ஞாநதசையைச்சொன்னபடி. முனிவர்களும் யோகிகளும் உணருங்காலம்-சிற்றஞ்சிறுகாலையாவது. ஸம்ஸாரியான நிலைகுலைந்து முக்தனாவதுக்கு முன்பு முமுக்ஷுத்வம் அங்குரித்த தசையிறே! இருள் அகன்றவளவாய், வெளிச்செறிப்புள்ள வளவெல்லாம் ப்ரகா ஶியாத வளவாய்த்து; இதரவிஷய ப்ராவண்யத்தால்வரும் அறிவு கேடின்றிக்கே பகவத்விஷயத்தில் ஜ்ஞாநங்கொண்டு நேரான பரிமா ற்றமு மின்றிக்கே யிருக்கிறவளவைப் பிடித்தபடி. "காலை நன்ஞாந த்துறை படிந்தாடி" என்று ஜ்ஞாநதீர்த்தாவகாஹநத்துக்கு யோக் யமான காலம் பெற்றபடி. "தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்று ஸ்ரிய:பதியை விஷயீகரிக்கு மதிறே! நன்

ஞாநமோவது ; துறைபடிகையாவது - ஸதாசார்யோபதேசமூலமாக, பிராட்டி புருஷகாரமாக, பாகவதர்கள் உசாத்துணையாக, எம்பெருமானைப் பற்றுமது. "உன்மணாளனை எம்மை நீராட்டு" என்று துறைத ப்பாமலேழிந்தவர்களிறே இவர்கள். ஓயும்பொழுதின்றிவிடிவுகாணாதபடி நீண்ட ஸம்ஸார காளராத்ரிகழிந்து, "பகற்கண்டேன்" என்று ஒருபகல்முகஞ்செய்கிற ஸமயமிறே! "[Grantha]" "ஆந்தரமிவாஜ்ஞாநம்" (௬௯௨) இத்யாதி. காலைமாலை என்று ஒருநியதியில்லையிறே! அவன் தோற்றுங்காலம் விடிவாமத்தனையிறே ! திருவாய்ப்பாடிக்கு நாட்டார் விடிவு அஸ்தமயமாய் ஸர்வபூதங்களினுடைய அஸ்தமயம் விடிவாயிறே நடப்பது. "[Grantha]" "ஆவிர்ப்பூதம் மஹாத்மநா" (௬௯௩) என்று அபரராத்ரம் விடிவாய்வந்து விழுந்ததிறே! விரியுங்கதிரோபோல்வானிறே! (சிற்றஞ்சிறுகாலே) சிறுகாலே வரில் உன்னைக்காணவொண்ணாதென்று சிற்றஞ்சிறுகாலே வந்தோம். "சிறுகாலே யூட்டி யொருப்படுத்தேன்" என்று மாத்ர்பரதந்த்ரனாய் இளங்கன்று மேய்க்கவேணும், விடிந்தவாறே காலிப்பின்னேபோம், எல்லியும் போதாகவரும், நீராட்டமைத்துவைக்கையாலே ஆடி அமுதுசெய்யும், "அல்லுற்றான் வந்தபின்னை" என்கிறபடியே இருளிலே ஆள் பார்த்து ஊரிலே திரியும், அபிமதைகளை வேண்டின விடங்களிலே புணர்ந்து, இராநாழிகை மூவேழுசென்றவாறே இங்கேகிடைகாட்டவரும், அக்காலமறிந்துவந்து கைக்கொண்டார்கள். நாள்தோறும ஒரு விடிவுண்டாய் நடக்கிறதிறே ! ஸுப்ரபாதமாய்த்து இந்ததிவஸமொன்று மாய்த்து.

அதுக்கடி என்னென்றால் (வந்து) வந்த வருத்தத்தை "வந்து தலைப்பெய்தோம்" என்று கீழே சொன்னார்களிறே! (வந்து) ஸம்ஸாரபதவியில் ஓடினவர்கள் மீண்டுவருவதிலும் வருத்தமுண்டு எங்கள் வரத்துக்கு. தேஹாத்மாபிமாநம்பண்ணி இருப்பாரை எதிரசூழல் புக்குத் திரிகிறவனுடைய யத்நத்தாலே வருவிக்கலாம், நிவ்ருத்திஸாத்யமென்று ஸ்வரூபத்தை யுணர்ந்து வாராதாரை வருவிக்க அரிதிறே! உபாயஸ்வீகாரத்தில் உபாயப்ரதிபத்தி பண்ணாதபடியான நிலையிலே நிற்கிறவர்களை க்ரியாரூபமானத்தை ஏறிட்டுக்கொண்டு வரும்படிபண்ணுகை அரிதிறே! "[Grantha]" "உவாசச" (௬௯௪) என்றுபெருமாள் திருவுள்ளத்தைப் புண்படுத்தினாப்போலே சொல்லுகிறார்கள். வரவுக்குநோவுபடுகிறவனை வார்த்தையாலும் புண்படுத்தினான். தான் பரண்யராகப் பற்றிவந்தாரை உண்டாக்கிக் காரியங்கொள்ளமாட்டிற்றிலனென்றதிறே விபீஷணனை; அப்படியே நாலடியிட்ட நாங்களேவந்தோம் என்கிறார்கள். "[Grantha]" "பத்ப்யாமபிகமாத்" (௬௯௫)

என்று தாம்வந்ததூரம் பாராதே வாசலளவும் புறப்பட்டதுபோறு த்திலரே! (வந்து) "இவ்விதிபோதுமாகில" என்றுவந்தால் காரியங் கொள்ள விருக்கும் நாங்கள் வரும்படியன்றோ த்வரை யிருந்தபடி. (வந்து) பிறந்தவிடத்தில் நின்றும் ஆயர்குலத்திலே வந்து, 'மழைகொலோ வருகின்றது' என்னும்படி வீதியூடேவந்து, நம்தெருவின் நடுவேவந்து, கதவின்புறமேவந்து, முற்றம் புகுந்து, நம்மில்லம புகுந்து நிமலரணைமேல்வைகி, மாலைபுதர ப்ராப்தமா யிருக்க படுக்கையை விட்டுப் படிகடந்து, காவலுங்கடந்து, உன்தோரண வாசலிலேவந்து, உட்கட்டிலே புகுந்து, பள்ளிக்கட்டிற் கீழே சிற்றஞ்சிறுகாலே வந்த வருத்தமறியவேண்டாவோ? "கறவைகள் பின்சென்று" என்று அந்தப்போக்கு நிகர்ஷமாகச்சொன்னப்போலே இவ் வார்த்தையும் தப்புஎன்றிருக்கிறார்கள். ஸ்வரூபத்தை யுணராதபோது அது ப்ராப்தமாயிருக்கும்; ஸ்வரூபத்தை யுணர்ந்தால் இது ப்ராப்தமா யிருக்கும். உபாயாந்தரத்துக்கு நிவ்ருத்தி தோஷம்; இவ்வதிகாரிக்கு ப்ரவ்ருத்தி குற்றம். ப்ராப்யப்ராவண்யம் ஸ்வரூபத்தைமறப்பித்தது. "பூமருவுகோலநமபெண்மை சிந்தித்திராதுபோய்" என்னப்பண்ணு மிறே!

நீங்கள்வந்து செய்த தப்பு என்னென்ன; (உன்னைச்சேவித்து) இதிறே நாங்கள் செய்த தப்பு என்கிறார்கள். எங்கள் ஸ்வரூபத்தை யறியாவிட்டால் உன் ஸ்வரூபத்தைத்தான் உணர்ந்தோமோ? இத்தலையில் நித்ராபாவனையாயிருக்கை-இவனைவிடில்தான் உளனாகாதபடி யிருக்குமவனிறே! வரவுதானே மிகையாம்படி யிருக்கிறஉன்னை, அதுக்குமேலே துராராதர்பக்கல் செய்வதெல்லாஞ் செய்தோம். பஞ்சாகநிவித்யையிற் சொல்லுகிற பரிவ்ருத்தியைக் கரையேறி, துஸ்ஸாதமாய்க் கைபுகுந்தாலும் நிஸ்ஸாரமான விஷயங்களிலே துவண்டு, அதுதனக்கு உறுப்பாக இதரஸேவையிலேஇழிந்து, அவர்கள் முகத்தில் விழித்து, அவர்கள் முகத்தில் வெம்மைபொறுத்து, நீசபாஷணங்களைப்பண்ணித் திரிகையாகிற ப்ரவ்ருத்தியை அநாதிகாலம் பண்ணிற்று; அத்தைத்தவிர்ந்து, விஷயம் வகுத்ததாய், ஸுசீலனாய், ஸ்வாராதனாய், புலங்கொள் வடிவுபடைத்தவனாய், தானேதன்னைத் தருவானாய், தந்தால் பின்னையொருகாலமும் கைவிடாதவனாயிருந்தவனை உசிதகாஸ்யம்பண்ணுகை ப்ராப்தமாகச்சொல்லாநிற்க, எதிரே இட்ட நாலடிக்கும் பொறுதே உபசாரஞ்சொல்லுமவன் கருத்தறிகையாலே, பின்னே தொடர்ந்து ஸேவித்ததைக் குற்றமாகச் சொல்லுகிறார்கள். (உன்னைச் சேவித்து) "[illegible]" "ஸோப்யகச்சத்" (௩௩௩) என்று அபிகந்தாவான உன்னை அபிகமநம்பண்ணி குலப்ரஸ்நத்திலே தர்ப்தனும்

உன்னை நாங்கள் ஸேவிக்கை மிகையன்றே. "சென்று நாம்சேவித்தால்" என்கிற இரண்டுமிகையும் செய்தோமிறே. "பின்னைசென்று" "சூழவேநின்று" என்று எங்களைத்தொடர்ந்து ஸேவிக்கிறஉன்னை "ஞ்ஜுஷ்டுக்ஷஷ்ரண்ய" "பேஜானர் முகுந்தபதவீம" (௬௯) என்கிறபடியே சுவடு பார்த்துத் தொடர்ந்து திரிந்து. "நாரணன்போமிட மெல்லாம் சோதித்துழிதருகின்றாள்" என்னக்கடவதிறே!

ஸேவித்தவளவேயோ? அதுக்கு மேலேயும் சில செய்திலோமோ? (உன்பொற்றாமரையடியேபோற்றும்) சூட்டக்கண்ட பூவை விலைமதித்து விற்பாரைப்போலே, கண்டு அநுபவிக்கையே ப்ரயோஜநமாயிருக்கிற திருவடிகளைப் பெற்றுவைத்து வேறேயொரு ப்ரயோஜநம் தோற்றும்படியான செயல் செய்த செல்லாமை பாராய். (சேவித்து-போற்றும்) "தொடர்ந்தேத்தவும்" என்கிறபடியே. (உன்-அடி-போற்றும்) ஸ்வரூபகுணாதிகள் போற்றுகிறோமல்லோம். (அடியே-போற்றும்) அங்குத்தைக்கு மங்களாஶாஸநம்பண்ணி, தனக்கும் ரக்ஷை தேடிக்கொள்ளுகையன்றிக்கே, தன்னை அழியமாறியும் அத்தலைக்கு நன்மைகளை ஆஶாஸிக்கை. புத்ரஶிஷ்யதாஸாதிகள் தாங்களும் உண்டு உடுத்து பித்ராதிகளுக்கும் ஶேஷமாயிருக்குமாப்போலன்றிக்கே, அத்தலைக்கே ஶேஷமாயிருக்குமிருப்பு தனக்கு உஜ்ஜீவநமாயிருக்கை. (உன்னடியே போற்றும்) அடியானுக்கு அடியிலேயிறே! ப்ராப்தி. "அடிச்சியோம்" என்கிறஇவர்கள் கூறாளும் தூளப்புக்கூட்டில் போகார்களிறே! (உன் - பொன் - அடி) உலகமளந்த பொன்னடி போற்றுகிறவர்களோ, காடுறைந்த பொன்னடி போற்றுகிறவர்களோ நாங்கள், அவை, உலகமெல்லாந் தலை விளக்கொள்ளுதல், வானவர்தம் சென்னிமலராவுதலாயிறே! அந்தப்பொன்னடிகள் இருப்பது; இது, "மாகமாநிலம் முழுதும் வந்திறைஞ்சும்" என்றிறே இப்பொன்னடி இருப்பது. (உன்-பொன்-அடி) எல்லார்க்கும் பொதுவாயிருக்கையும், ஸ்ப்ருஹணீயமாயிருக்கையும்; கண்டால் விடவொண்ணாதிருக்கையும், விட்டால் பிழைக்கவொண்ணாதிருக்கையும். வெறும்பொன்னடியாயிருக்கிறதோ? பொற்றாமரை யடியன்றோ? ஸாதநத்வமும் ஸாத்யத்வமும்பூர்ணமாயிருக்கை. தாமரையன்ன பொன்னாரடியிறே? "ஞ்ஜுஷ்டுஷ்ரண்யம்த்வத்பாதபங்கஜம்" "தநம்மதீயம் தவபாதபங்கஜம்" (௬௯அ) (உன்பொற்றாமரையடியே) எங்களுக்கு பொன்னும் பூவும் புறம்பேதேடவேணுமோ? (உன்பொற்றாமரையடி) பெண்களுக்குப் புறம்பு அந்யபரதைகளுண்டானால் க்ருஷ்ணன் அவற்றைக் குலைப்பதும்திருவடிகளாலே. "அழித்தாயுன் திருவடியால்" "கற்றினம்மேய்த்த வெந்தை கழலிணை" என்று ஆஶ்ரயணீயமும் இது; "அவன் தாளிணைக்கிழ்ப்புகுவ

காதல்'' என்று ஆசைப்படுவதும் இது. ஆஶாநுகுணமாக "தாள்கண்டுகொண்டென் தலைமேற்புனைந்தேனே" என்று இவர்கள் சென்னிக்குக்கோலமாகச் சூடுவதும் இத்தை. (போற்றும்) "பரமனடிபாடி" "அடிபோற்றி - கழல்போற்றி" என்று மூடியச்சொல்லிக் கொண்டு போந்தார்களிறே! கண்ணன்தாள் வாழ்த்துமது ஸ்வரூபப்ராப்தமாயிருக்குமிறே! இதுக்குமேலே ஒன்றுநினைக்கும்படியிறே ருசிகார்யமாய்வந்த ஆற்றாமை இருந்தபடி.

(போற்றும் பொருள்) போற்றுகிற ப்ரயோஜநம். இவர்கள் "போற்றும்பொருள்'' என்று பாரித்துக்கொண்டு சொல்லத் துடங்கினவாறே சிற்றஞ்சிறுகாலே புணர்ந்துவந்த அனந்தலாலே சிவந்த போதரிக்கண்களிலும், இவர்கள் கோவைக்கனிவாயில் பழுப்பிலும், பேச்சின் இனிமையிலும், வடிவழகிலும் பாடகமும் சிலம்பும் த்வநிக்கிற இவர்கள் பொற்றாமரையடியிலும் கண்ணை வைத்து நாம் செல்லுகிற இது இவன் ப்ரதிபத்தி பண்ணுகிறிலன் என்று தோற்றும்படி அந்யபரனாயிருந்தான், "கேளாய்'' என்கிறார்கள். இவர்கள் தாம், தங்களையறிந்தால் பின்னை நின்று வார்த்தை சொல்லவேண்டாவோ? வார்த்தைசொல்லா நிற்கச்செய்தே "கேளாய்'' என்னும் போது நடுவே அந்யபரனாக வேணுமிறே! (கேளாய்) எங்கள்ப்ராப்யத்தை அழித்தோ நீ உன் ப்ராப்யம் பெறப்பார்ப்பது என்று அடியைவிட்டுத் துடையைத் தட்டுகிறார்கள். (கேளாய்) "அத்யாபயந்தீ'' "அத்த்யாபயந்தீ'' (௬௯௯) என்று ஓதுவிக்க இழிந்தவளாகையாலே "ஶ்ரூயதாம்'' "ஶ்ரூயதாம்'' (௭௦௦) என்று கேட்பிக்க வேணுமிறே! இவன்றனக்கு ஶிஷ்யன்வாய்த்தாப்போலே ஆகவொண்ணாதே இவர்களுக்கு. "கேளீரோ'' என்று பெண்களுக்கு முதலிலே கர்த்தவ்யாம்ஶம் சொன்னார்கள்; இவனுக்கு கர்த்தவ்யாம்ஶம் சொல்லுகிறார்கள். அழகிது, எனக்குத்தான் ஏதாகில் நல்லது, உங்கள் பேச்சே யமையாதோ? இதொரு பொருள் கேள்வியாயிருந்தது, விடிவோறே வந்து கைக்கொண்டிகோள், நமக்கு உசித தர்மங்களையும் விட்டு, புறம்புள்ள அந்யபரதைகளையுங்கழித்து. இற்றைக்கு, இதுவே கேள்வியாக இருக்கிறோம், சொல்லலாகாதோ? என்றான். (நீ-கேளாய்) சீரிய சிங்காஸநத்திலேயன்றோ நீயிருக்கிறது, தர்மாஸநத்திலேயிருப்பார்க்குக் கேட்க வேண்டாவோ?

(நீபோற்றும்பொருள்கேளாய்) உனக்கு க்ரமத்திலே இவர்கள் காரியஞ் செய்கிறோமென்று ஆறியிருக்க வொண்ணாது, த்வரிக்கவேணுங்காணென்கிறார்கள். பேறு உங்களதாய் நீங்கள் த்வரியாநின்றீ

கோளோ என்றான். (பிறந்தநீ) இவ்வளவாக த்வரித்தோம் நாங்களாகி லன்றோ மேலும் நாங்கள் த்வரிப்பது, எதிர்சூழல்புக்கு இவ்வளவாக க்ருஷிபண்ணின நீ பலவேளையிலே ஆறியிருக்கலாகாதுகாண். எங்கள் ருசிகார்யமான த்வரைக்கு முற்பாடனான நீயே பேற்றுக்கும் முற்பா டனாகவேணுங்காண். எத்தனை கார்யத்தை விட்டுப் பிறப்போமென்று தெரியாது, இதென்னன்புதென்ன. (பெற்றம்மேய்த்துண்ணுங் குலத் தில்பிறந்த நீ) இங்கு வந்து பிறந்தது எதுக்காக? ஆர்க்காக? என்று விசாரிக்கலாகாதோ? (பெற்றம்மேய்த்துண்ணும்) நீ பிறப்பிலியாய் பிற வாதார் நடுவேயிருந்து பிறவியற்றார்க்கு முகங்கொடுக்கிற நிலத்திலே வந்தோமோ? பிறவிக்குப் போர பயப்பட்டு உன்னையே கால்கட்டுவா ருள்ளவிடத்திலே வந்தோமோ? பிறவாநிற்கச்செய்தே ஆசாரப்ரதாநர் புகுந்து நியமிக்கும் ராஜகுலத்திற் பிறவியிலே வந்தோமோ? வாலால் உழக்குக்குப் பசுமேய்க்கவந்து வயிறு வளர்க்கும் எங்கள் குலத்திலே நீ என்செய்யப் பிறந்தாய் என்று விசாரிக்கலாகாதோ?

(பெற்றம்மேய்த்து) தாழ்ந்தவர்களை ரக்ஷணம்பண்ணும் இக்குல த்திலே பிறக்கச்சொன்னாரார்? பரரக்ஷணமும்பண்ணாமல் ஸ்வரக்ஷண மும் பண்ணாதார்குலத்திலே உன்னைப் பிறக்கச்சொன்னாரார்?. (பிற ந்தநீ) நீ ஆசைப்பட்டுப் பிறந்தபிறவியன்றோவிது. (பெற்றம்மேய்த் துண்ணுங்குலத்தில் பிறந்த) "எங்கள் பெற்றத்தாயன் வடமதுரை ப்பிறந்தான்" என்றல்ல இவர்கள் நினைத்திருப்பது. (குலத்தில்பிற ந்த) குலத்துக்குத் தலைவரானவர் வயிற்றிலே பிறந்தபடியாலே எல் லார்க்கும் ஸாதாரணமிறே இப்பிறவி. நாம் உங்களிலே வந்து பிறந் தோமாகில் நம்மைச்செய்யசசொல்லுகிறதென்னென்ன; அந்தரங்க வ்ருத்திகொள்ளச் சொல்லுகிறோமென்கிறார்கள்; ஆனைத்தானென்றா ன்; (எங்களை) குலத்திலபிறந்த நீ குலங்கெழு கோவியரான எங் களைகொள்ளவேண்டாவே. "நீளாஜநஸத்ருசீ" "நீளாகுலேநஸத்ர்ஶீ" (எ0க)எங்களிலேஒருத்தியை ஆசைப்பட்டன்றோ நீ இங்குப்பிறந்தது. (எங்களை)"திருமாமகள்மண்மகள்" என்கிற ப்ரதாநமஹிஷிகள் உன்னை த்தேடிநிற்க, நீ ஆசைப்பட்டு மேல்விழும்படி உகக்கைப்பாடியான எங்களை,"ஒசிசெய்நுண்ணிடையிளவாய்ச்சியர் நீயுகக்கு நல்லவர்" என் று நாங்கள ஆதார விஷயமென்று ப்ரஸித்தமன்றோ. (பிறந்தநீ-எங் களை) பிறவாதாரைப் பிறவாதார் ஏவிக்கொள்ளவும், பிறந்தாரைப் பிற ந்தார் ஏவிக்கொள்ளுகையும் ப்ராப்தமன்றோ, இவ்வாய்க்குலத் தாய்ச்சியோமாய்ப்பிறந்த எங்களை விரும்பியன்றோ நீ ஆயனாய்ப்பிற ந்தது. "ஆயனாகியாயர்மங்கை வேயதோள் விரும்பினாய்." (எங்களை) பசுக்களுக்கு வேறாரக்ஷகருண்டாகிலும் உன்னையொழியவேறாரக்ஷகரில்

பாலில்லாத வெங்களை. பசுக்கள், தானும்பறித்துத்தின்னும்; பிறரும் ஐயோ! என்னும்படியிருக்கும்: இரண்டாகாரமுமில்லாத எங்களை. (குற்றேவல்) அந்தரங்கமாய் ஏவிக்கொள்ளுமது. முகப்பேசுவிப் பணிகொள்ளவேணுமிறே! விடுத்த திசைக்கருமமுமல்ல, கருதுமிடத்தில் வ்யாபாரமுமல்ல, அனுகினவ்ருத்தியும் ஏவின வ்ருத்தியுமாகவேணும், திருத்திரைகளுள்ளில் வ்ருத்தி;-உடைவாளும் அடுக்குருவுமெடுத்தல், கலசப்பானைபிடித்தல், படிக்கம் வைத்தல், உமிழும்பொன்வட்டிலெடுத்தல், திருவடிகள் விளக்குதல், ஒலியன் பணிமாறுதல், சாமரமிரட்டுதல், அடைக்காய்திருத்துதல், அடிவருடுதல், முலைகளிடர்தீர வணைத்தல், இவை தொடக்கமானவை - கோவிந்தற்குப்பண்ணும் குற்றேவலாகிறது. இவையெல்லாம் க்ரமத்திலே கொள்ளுகிறோமென்றான். (எங்களை) தாஸ்யத்தில் சுவடறிந்து அதில் ருசியும் த்வரையும் விளைந்து க்ரமப்ராப்திபொறுக்கமாட்டாதபடி வந்து மேல்விழுகிற எங்களை. அநந்தரக்ஷணத்துக்கு நாங்களிருப்புதோமென்று தோற்றியிருந்ததோவென்று தங்களாற்றாமையை யணித்துக்காட்டுகிறார்கள். சிறிதுவிட்டுப்பிடிக்க அறியாத வெங்களை; ஒரு படுக்கையிலே ஒக்கவிருக்கப் பிரிவதற்கிரங்குமெங்களை.

(குற்றேவல்-கொள்ளாமல்-போகாது) உனக்கு விஹிதம். (பிறந்த-நீ-கொள்ளாமல்-போகாது) முன் தீம்பு செய்தார்க்கு வீண்போமோ? புறம்புள்ள ஜீவநத்தை மாற்றினால் நீயும் இடாதொழியவோ? அந்யபாநாதிகள் தாரகமான நிலையைத்தவிர்ந்து உன் வடிவழகைக் காட்டி, "எல்லாம் கண்ணன்" என்று தாரகாதிகள் நீயேயாம்படி பண்ணினால் ஸ்வரூபாநுரூபமான அடிமைகொள்ளாதே போகப்போமோ? ஒருவனுக்கிடுகிற சோற்றை விலக்கிப் பின்னைத் தானும் பொகட்டுப் போகவோ? நாங்களிசையாதவன்று தப்பினத்தைச்செய்யலாவதில்லை, ஸ்வரூபஜ்ஞாநமுண்டாய் இசைவுமுண்டான இன்று நழுவவிடுவதோமோ? [உண்டிட்டாய் இனியுண்டொழியாய்] ஆசையைவிளைத்த உனக்கு அதின் காரியஞ்செய்யவேண்டாவோ? (கொள்ளாமற்போகாது) நாங்கள் விடநினைத்தால் நீதான் விடவல்லையோ? "திருவாணை நின்னாணைகண்டாய்" என்று ஆணையிடமாட்டார்களிறே! அபிப்ராயந்தோற்றச்சொல்லுமித்தனையிறே! [வளைத்துவைத்தேன் இனிப்போகவொட்டேன்] தடுக்கையும் வளைக்கையும் ஆணையிடுகையும் பரிசிறே! "கொள்ளாமற்போகாது" என்று அடுகுவளம் தடையானபின்பு கேட்க என்று விடுகையிறே!

"கொள்ளாமற்போகாது" என்று-மீளவொண்ணாதபடி நிர்ப்பந்தித்தவாறே; நாம், அந்தரங்கமாக வேண்டுமவை ஏவிக்கொள்ளுகிறோம், உங்களுக்கு நம்பக்கலிலும் சில கொள்ளாமற்போகாதே, நீங்கள்

ஏ.—நோன்புக்கு அங்கமாகச் சொன்னவற்றை இப்போது கொண்டு போமித்தனையிறே! நீங்களனைவரும் அறியவேண்டி வந்தத்தைக் கொண்டுபோகவேணும். இப்போது "பறைதருவான்" என்றும், "பாடிப்பறை கொண்டு" என்றும், "போற்றப்பறைதரும்" என்றும், "அறைபறை" என்றும், "இற்றைப்பறைகொள்வான்" என்றும், "பறைதருதியாகில்" என்றும், "சாலப்பெரும்பறை" என்றும், "உன்றன்னைப் பாடிப்பறை கொண்டு" என்றும், "நீதாராய்பறை" என்றும், ஒருக்காற் சொன்னாப்போலே ஒன்பதின்காற்சொன்ன பறையை, இற்றைக்கும் கொள்ளுங்கோளென்று பெண்களுக்குக் கொடுக்கும்படி பறையை எடுத்துக்கொண்டுவாருங்கோளென்றான்; (இற்றைப்பறைகொள்வானன்று காண்கோவிந்தா) ஆன்று ஒருப்ரயோஜநம் கொண்டுபோமவர்களோ நாங்கள், உன்னை அங்ஙனே விடுவதோமோ? கெடுவாய்! யதாஸ்ருதக்ராஹியாயிருந்தாய். தாத்பர்யஜ்ஞாநமில்லையாயிருந்ததி! அபிதாநவ்ருத்தியொழிய தாத்பர்யம் போகாதாயிருந்ததி!, லோகஸம்வாதத்துக்காக ஒன்று சொன்னோமத்தனை என்றிருக்கவேண்டாவோ? அபிமதவிஷய மிருந்தவிடத்தே சென்று 'தண்ணீர்' என்றால், தண்ணீரைவார்ப்பார்களோ? சொல்லுகிற வார்த்தையையும் எங்களையும் அறிந்தன்றோ பரிமாறுவது; நாங்கள் "பறை" என்றால் வேறேயொன்று த்வநிக்கிறதென்று அறியவேண்டாவோ? (கொள்வானன்று காண்) எங்களை நீகொள்ளுமத்தனையொழிய, நாங்கள் உன்பக்கலிலே உன்னையொழியவுங்கொள்வதொன்றுண்டு என்றிருந்தாயோ?

(கோவிந்தா) பசுக்களின்பின்னே திரிவார்க்கு, பெண்கள் வார்த்தையின் கருத்துத்தெரியாதிறே! பசுக்களின் பின்னே திரிவார்க்கு அவற்றுக்குள்ள ஜ்ஞாநமிறேயுள்ளது; நாலுநாள் எங்களைவிட்டுக் கெட்டகேடுஎன்றான். நீ பசுக்களையே விரும்பி எம்மைத் துறந்தால் இதுவோ பலம். (கோவிந்தா) "குறைவொன்றுமில்லாத கோவிந்தா" என்று-ஜ்ஞாந பூர்வகமான உபாயஸ்வீகாரம் பண்ணுகிற இடமாகையாலே குணபூர்த்திசொல்லக்குறையில்லை; அவ்விடத்தில் ப்ராப்யருசியாலே கண்ணுஞ்சுழலையிடுகையாலும் பலாந்தரத்தைக் காட்டி நழுவத் தேடுகையாலுமுண்டான தோஷத்தாலும் இவ்வளவும் சொல்லவேணுமிறே யிங்கு. (கோவிந்தா) எங்களையும் எங்கள் ப்ராப்யத்தையும் மறந்தாப்போலே, உன்னையும் உன்பிறவியையும்மறந்தாயீ! (பெற்றம்மேய்த்துண்ணுங் குலத்தில் பிறந்த-கோவிந்தா) பூமியை எடுத்து நோக்கின மஹாவராஹமாக நினைக்கிறாயோ? பூமியை நீரேற்றவாமநனாக நினைக்கிறாயோ? ஸப்தராஶியைப்பிரித்தெடுத்த ஹம்ஸரூபியாக நினைக்கிறாயோ? அத்தை ப்ரகாஶிப்பித்த ஹயக்ரீவவேஷமாக நினைக்கிறாயோ? ஆதித்யாந்தர்வர்த்தியாக நினைக்கிறாயோ?

எ.—அறிவில்லாத பசுக்களுக்கு நிர்வாஹகனாய் வந்து பிறந்து ஆயர் சிறுமியர்க்கு உதவிற்றில்லை என்றால் பரவ்யூஹாதிகளையும் யாதவவம்ஶத்தையும் விட்டு, இடைச்சேரியிலே ஸுலபனான உன்னுடையகார்ஷியும் விபலமாகாதோ?

நீங்கள் சொன்ன வார்த்தைக்குப் பலருமறியக் கருத்தாயிருக்குமத்தை நாமும் அறிந்து சொன்னோமாகில் நமக்குத்தாத்பர்யஜ்ஞானமில்லை என்கிறதென்? நீங்கள் "குற்றேவல்" என்கிறத்திலே இரண்டு வகையறிந்து சொல்லுங்கோள்? இற்றைப்பொழுதை உங்களோடே போக்குகிறோம் அங்ஙனே யாகிலென்றான் ; (எற்றைக்கும் ஏழேழு பிறவிக்கும்) இற்றையளவில் போகாதுகாண்! இப்பிறவியளவில்போகாதுகாண்! (எற்றைக்கும் ஏழேழுபிறவிக்கும்) அகாலகால்யமான நலமந்தமில்லதோர் நாட்டிலே யிருக்கவுமாம் ; ஆஶ்ரிதஸஜாதீயனாய்க்கொண்டு நிலைவரம்பிலபலபிறப்பாய் ஸம்ஸாரமண்டலத்திலே அநேகாவதாரம்பண்ணவுமாம்; அதில் ஒரு நிர்ப்பந்தமில்லை. (உன்றன்னோடு) நீ பிறவாதிருக்குமிடத்திலும், பிறந்து திரியுமிடத்திலும் கூடத்திரியுமித்தனை. (எற்றைக்கும்) "దేవత్వే దేవదేహోయం మనుష్యత్వే చ మానుషీ" "தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வேசமாநுஷீ" (எ0உ) என்கிறபடியே நாங்களும் ஒக்கப்பிறந்து விடாதேதிரியவேணும் ; இளையபெருமாள் படைவீட்டிலும் காட்டிலும் ஒக்கத்திரிந்தாப்போலே.

(உன்றன்னோடு) நீ ஶங்கசக்ரகதாதரனாய் ஸ்ரீவைகுண்டத்திலிருக்குமிடத்திலும் எங்களோடேகண்கலந்த உன்னோடும் ஒக்கத்திரியவேணும். (உன்றன்னோடு) அங்கே உருவார்சக்கரம் சங்கு சுமந்து உன்னோடேதிரிகையும், தெறிவில்லும் செண்டுகோலுங்கொண்டு இங்கேதிரியவும் பெறுவோமாகவேணும். இத்தைநினைத்திறே கச்சொடுபொற்சுரிகை அடியிலே இவர்கள்தான் அவனுக்குவரவிட்டது. (கோவிந்தா – எற்றைக்கும்) கோயில் கொள்தெய்வமெல்லாந் தொழ வைகுந்தங்கோயில்கொண்டு நீயிருக்குமிடத்திலும், "பின்னும் எம்மாண்புமானான்" என்னும்படி நீபிறந்து திரியுமிடத்திலும் உன்னோடேதிரியவேணும். "தேவும் தன்னையும்" என்கிற இரண்டவஸ்தையும் கோவிந்தனுக்கிறே! (உற்றோமேயாவோம்) ஸர்வவித பாந்தவமும் உன்னோடேயாகவேணும். ஒரு உறவைக்குறித்து 'அதுண்டாகவேணும்' என்றுதொழிந்தது, ஒன்றைவிஶேஷிக்கில் அல்லாதவையில்லையாமென்று. எல்லாவுறவும் நீயே யாகவேணும். (உற்றோமேயாவோம்) நீகாட்டுக்குப்போக மூச்சடங்கும்உறவுஉண்டாகவேணும்; அசலூரில் வளரப்போகப் பூண்டும் புலம்புமுறவுண்டாகவேணும்; நீஅபிமதவஸ்துக்களை விஞ்சிவிநியோகங்கொண்டால், பொருதொழியில் செய்வதென்? என்று வயிறு பிடித்துக்கொள்ளு முறவு உண்டாக

எ.-வேணும்; நீ நில்லுங்கோளென்றால் நீர்பிரிந்தஜந்துக்களைப்போலே துடிக்கு முறவுண்டாகவேணும்; நீ பாம்பின்வாயிலே விழுந்தாயென்றால் பிணம்படும்படியான பாந்தவம்வேணும்; கழிந்த பிழைகளுக்குக்காப்பிடு முறவு வேணும் ; எங்கள் வீட்டிலே இட்ட ஆஸநத்தைஊன்றிப்பார்க்குமுறவுவேணும்; விட்டு அணைக்கத்தேடில் வெளுக்குமுறவுண்டாகவேணும். (கோவிந்தாஉன்றன்னோடு) " మాతా పితా భ్రాతా నివాసశ్శరణం సుహృద్గతిర్నారాయణః" "மாதாபிதாப்ராதாநிவாஸஶ்ஶரணம் ஸு-ஹ்ருத்கதிர் நாராயண:" (௭௦௩)என்கிறபடியே "அவரோயினியாவார்" என்றிருக்கவொண்ணாது, " భ్రాతా భర్తా చ బన్ధుశ్చ పితా చ మమ రాఘవః" "ப்ராதாபர்த்தாசபந்துஶ்ச பிதாசமமராகவ:" (௭௦௪)என்கிறபடியே "அவருயிர்செகுத்தவெம்மண்ணல்" என்றிருக்கவொண்ணாது, அவையுமெல்லாம் உன்னோடேயாகவேணும் ; "பெற்றதாய்நீயே பிறப்பித்ததந்தை நீமற்றையாராவாரும்நீ" என்றிருக்கவேணும். (உற்றோமே) ஸம்பந்தமுண்டாயிருக்கச்செய்தே பத்துமாஸம் பிரிந்திருத்தல், பதினாலாண்டு பிரிந்திருத்தல், பதின்மூண்டு பிரிந்திருத்தல் செய்யவொண்ணாது.

அத்தனையோ வேண்டுவதென்றான்; (ஆட்செய்வோம்)பந்தபலம் பெறவேண்டாவோ? உறவு என்று ஸாதர்ம்யம்பெற்றிருக்கவொண்ணாது, ப்ராப்திபலமான கைங்கர்யத்தைப் பெறவேணும். (ஆட்செய்வோம்) அரசுக்குப் பட்டங்கட்டி அருகிருக்கவொண்ணாது. ஆகிறது மற்றென்னென்றான்; (உனக்கு-ஆட்செய்வோம்) ஆட்செய்யுமிடத்தில் எங்களுக்கு உறவையறிவித்து அடிமைகொண்டு ஸாபேக்ஷனாய் நிற்கிறவுனக்குச்செய்யவேணும். (உனக்கு-ஆட்செய்வோம்) ஆட்கொள்ளத்தோன்றிய உனக்குச்செய்யவேண்டாவோ? அத்தனையோ என்றான்; (உனக்கே) உனக்கும் எங்களுக்குமாயிருக்கிற விருப்பைத்தவிர்ந்து "தனக்கேயாக" என்னுமாப்போலே கொள்ளவேணும். எங்கள் அபிநிவேஶத்தாலே உன் அபிமதம் செய்யவொண்ணாது, நீ உகந்ததாகவேணும். தேஶகாலாவஸ்தா ப்ரகார நியமஶூந்யமாக அபிநிவேஶத்தாலே பாரியாநிற்கச்செய்தேயும் ருசிரமான தேஶத்திலே நியோகித்துக் கொள்ளவேணுமென்று அவன் உகந்து ஏவினத்தைச்செய்யக்கடவதாயிறே யிருப்பது. "உன்றன் திருவுள்ளமிடர்கெடுந்தோறும்" என்னக்கடவதிறே! (நாம்) உனக்கு அபிமதமானத்தை எங்கள் நிர்ப்பந்தமொழிய நீ ஏவ செய்தபோதன்றோ எங்களுக்கு ஸ்வரூபஸித்தியுண்டாயிற்றாவது. (ஆட்செய்வோம்) "உயர்ந்துயர்ந்து அப்பாலவன்" என்கிறபடியே உத்துங்கவிஷயமாகையாலும் ஆயர்சிறுமியரான தாங்கள் தாழ்ந்த மனிச்சராகையாலும், "செய்வோம்" என்று ப்ரார்த்திக்கிறார்கள். (கோவிந்தா-உனக்கே நாம் ஆட்செய்வோம்) "நீர்குடக்

எ.— கூத்தனுக்காட்செய்வதே'' என்கிறபடியே-உனக்கு ஆட்செய்யு மதன்றோ ப்ராப்தமா யிருக்கிறது.

அப்படியாகிறது, இனிஎன்னென்றான்; (காமம்மாற்று) வேறொருகாமமுண்டாய்ச் சொல்லுகிறதல்லவிறே! "தேறேலென்னை" என்றிருக்குமவர்களாகையாலே. அடிமைசெய்வாரையும் செறுமவை, ப்ரக்ருதி வாஸனையாலும் மநஸ்ஸு அஸ்திரமாயிருப்பதொன்றாகையாலும், ஸம்பாவிதமாக ஶங்கித்து, "சூடகமே" என்று துடங்கி நாட்டார்க்குச் சொன்னவை துடருகிறதோ? என்று, அது நடையாடாதபடிபண்ணவேணுமென்கிறது. அத்தனையோ என்றான்; அவ்வளவு போராது; (மற்றை-காமம்-மாற்று) நீ ஸ்ரீவைகுண்டத்திலே ஸூரிகளுக்கு முகங்கொடுத்திருக்கு மிருப்பிலே க்ரமத்திலே பெறும்படியிருக்கவொண்ணாது, நீயும் பெண்காள்! என்றழைக்க நாங்களும் க்ருஷ்ணன் என்று சொன்ன பரிமாற்றமே நடக்கவேணும். "ந காமகலுஷம் சித்தம்" "நகாமகலுஷம்சித்தம்" (எ௦௫) அவனுடைய ப்ராப்யதையையும், ப்ராபகத்வத்தையும், ஶரண்யதையையும், இந்நிலத்தின் தன்மையையும், அந்நிலமுத்தேஶ்ய மென்னுமிடத்தையும், மநோரதந்தானே அமையுமென்னு மிடத்தையும் சொன்னவாறே, ஒரு அபேக்ஷையின்றிக்கே பலவற்றிலே நெஞ்சு தாழநின்றதே! என்ன; "தேபாதயோஸ் ஸ்திதம் மம சித்தம் ந காமகலுஷம்" "தேபாதயோஸ்திதம்-மம-சித்தம்-நகாமகலுஷம்"-ப்ராப்யத்வம் ப்ராபகத்வம் ஶரண்யத்வம் இவையெல்லாஞ் சொல்லிற்று நீயாகையாலே; இவ்விடம் த்யாஜ்யமென்றது - உன்னுடைய அநுபவத்துக்கு விரோதியாகையாலே; அவ்விடத்தில் உத்தேஶ்யதாபுத்தி நடந்தது - அநுபவத்துக்கு ஏகாந்த ஸ்தலமென்று அல்லாதவை உத்தேஶ்யமென்று சொன்னேனென்று உன் திருவடிகளிலே நிலைநின்றவர்கள்நெஞ்சு ஸ்ரீவைகுண்டாதிகளால் கலங்காது காண் என்றதிறே!, அப்படியே இவர்களும் (மற்றை-காமம்) என்கிறார்கள். (மற்று) என்றது- "மற்றொன்றினிற்றத்ததல்லா" "மற்றொன்றினைக்காணாவே" என்கிற இடங்களிற்சொல்லுகிறத்தை. (கோவிந்தா-மற்றை-காமம்-மாற்று) கண்ணன் வைகுந்தனோடான நிலையைக் குலைக்கவேணும். "இம்மைப்பிறவிசெய்யாதே இனிப்போய்ச்செய்யுந்தவந்தானென்" என்னுமவர்களிறே! நாங்கள் சிந்தயந்தி பட்டது படாமல்கிடாய்! அத்தனையோவேண்டுவதென்றான்; (நங்காமம்-மற்று) ஆட்கொள்ளுமிடத்திலே எங்களுக்கொரு இந்த்ரியசாபல்யம் நடக்கும், அந்த ஸௌந்தர்யரூபமான அந்தராயத்தையும் பரிஹரிக்கவேணும். அத்தனையோ என்றான்; (காமங்கள்) என்கிறார்கள்

எ.—இருவர் கூடப் பரிமாறுகின்றால் அத்தால் பிறக்கும்இனிமை இரண்டுதலைக்கும் ஒத்திருக்குமிறே! விஷயவைலக்ஷண்யத்தாலும் ஆஶ்ரயத்தின் இனிமையாலும் மிகவும் ப்ரீதிரூபமாயிறே பரிமாற்றமிருப்பது. அதில் ஸ்வரூபத்துக்கு விரோதியான அஹங்கார கர்ப்பமான அடிமையும் அபுருஷார்த்தமிறே! நாங்கள் செய்கிற அடிமைகண்டு நீயுகந்தால் அவ்வுகப்புக்கண்டுவரும் உகப்பொழிய போக்த்ருத்வப்ரதிபத்தியும் மதீயத்வப்ரதிபத்தியும் போஜநத்துக்கு க்ரிமிகேஶங்கள்போலே போகடவேண்டும்படி விரோதமாயிறே யிருப்பது, அந்த விரோதிகளையும் தவிர்த்துத் தந்தருளவேணுமென்கிறார்கள். ஸ்வரூபவிரோதியும் ஸாதநவிரோதியும் ப்ராப்திவிரோதியும் ப்ராப்யவிரோதியுமென்று நாலுவகையாயிறே விரோதிகளிருப்பது. அதில் ஸாதநவிரோதியும் ப்ராப்தி விரோதியும் கீழ்ப்பாட்டிலே கழிந்தமை சொல்லிற்று; மற்றையிரண்டும் இப்பாட்டிலே கழிக்கிறது.

“ கறவைகள்பின்சென்று” என்று-உபயாந்தரத்தில் அந்வயம் சொல்லுகையாலும் ப்ராப்திப்ரதிபந்தகத்துக்கு க்ஷாபணம்பண்ணுகையாலும் இரண்டுங் குலைந்ததிறே! ப்ராப்யருசியும் த்வரையும் ஆர்த்தியும் விளைந்து பாஹ்யங்களில்ஸங்கம்குலைந்தபடி சொல்லுகையாலே ஸ்வரூபவிரோதிகழிந்தபடிசொல்லிற்று, இப்பாட்டில் முற்கூற்றால்; (மற்றைநங்காமங்கள்மாற்று) என்கிறத்தாலே பலவிரோதியைககழிக்கிறது; (கோவிந்தா - உனக்கு) என்று அகாரார்த்தஞ்சொல்லிற்று; (உனக்கே) என்று உகாரார்த்தம்சொல்லிற்று; (நாம்) என்று மகாரார்த்தஞ்சொல்லிற்று; (உன்றன்னோடுற்றோமே யாவோம்) என்கிறவிடத்தாலே - நாராயணபதத்தில் அர்த்தஞ்சொல்லிற்று; (எற்றைக்கும் ஏழேழுபிறவிக்கும்) என்கையாலே-சதுர்த்யர்த்தம் சொல்லிற்று; (மற்றைநங்காமங்கள் மாற்று) என்று - நமஸ்ஸில் அர்த்தஞ்சொல்லிற்று; நடுவேநமஸ்ஸூக்கிடக்கிறது, ஸ்வரூப உபாயங்களிரண்டிலும்கிடக்கிற விரோதி போக்குகைக்கிறே!.

ப்ராப்யருசிகார்யமானத்வரையும், அதின்பலமான கலக்கமும் விளைந்தஆர்த்தியும், இதெல்லாவற்றுக்குமடியான ப்ராப்யாந்தரஸங்கநிவர்த்தியும், பேற்றில் அளவிறந்த பாரிப்பும், அதில் ஸ்வப்ரயோஜநத்வ நிவர்த்தியும் சொல்லாநின்றுகொண்டு, ப்ரபந்த தாத்பர்யத்தையும் நிகமிக்கிறார்கள். ஸத்வோத்தரகாலத்திலே உணருகையும், பகவத்ஸந்நிதியேற வருகையும், ஸேவிக்கையும், விக்ரஹாநுபவம் பண்ணுகையும், தத்ஸம்ருத்தியை ஆஶாஸிக்கையும், தன்பக்கலிலே ஆபிமுக்யம் பண்ணுவித்துக்கொள்ளுகையும், அவதாரப்ரயோஜநங்களை விண்ணப்பஞ்செய்கையும், ஆர்த்தியை ப்ரகாஶிப்பிக்கையும், திரு

மூ.—அசு. (மஃ) என்கை ஸ்வரூபநாஶம், (நமஃ) என்கை ஸ்வரூபோஜ்ஜீவநம்.

வ்யா.—அசு.—இப்படி ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்கள் மூன்றுக்கும் விரோதியாகிறது, இவனுடைய அஹங்கார மமகாரங்களாகையாலே, அதினுடைய க்ரௌர்யத்தையும், தந்நிவ்ர்த்தியிலுண்டான நன்மையையும் அருளிச்செய்கிறார்

((மஃ) என்கை ஸ்வரூபநாஶம், (நமஃ) என்கை ஸ்வரூபோஜ்ஜீவநம்) என்று. அதாவது – "చేతనస్య యదా మమ్యం స్వస్మిన్ స్వీయే చ వస్తుని | మమ ఇత్యక్షరద్వంద్వం తదా మమ్యస్య వాచకమ్॥" "சேதநஸ்யயதாமம்யம் ஸ்வஸ்மிந் ஸ்வீயேசவஸ்துநி । மமஇத்யக்ஷரத்வந்த்வம் ததாமம்யஸ்யவாசகம்॥" (௯௦) என்கிறபடியே, (மஃ) என்கிற இதிலே அஹங்கார மமகாரங்கள் இரண்டுமுண்டாகையாலே அதிலே அந்விதனாகை இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபத்துக்குநாஶம்; (நமஃ) என்று அதில் அந்வயமற்றிருக்கை ஸ்வரூபத்துக்கு உஜ்ஜீவநம் என்கை.

எ.–வுள்ளமறிய பலாந்தரஸங்கநிவ்ர்த்தியைக்காட்டுகையும், ஸூரிகள்பரிமாற்றத்தை அபேக்ஷிக்கையும், ஸ்வரூபவிரோதிகளையறுத்துத் தரவேணுமென்று வேண்டிக்கொள்ளுகையும், கைங்கர்யருசியுடையார்க்கு ஸ்வரூபமிறே! இவையெல்லாம் நிழலெழும்படி க்ர்ஷ்ணன் திருமுகத்தைப்பார்த்து விண்ணப்பஞ்செய்கிறார்கள்"]. ... ❋

அசு.— மேலுக்கவதாரிகை இப்படியென்று துடங்கி.

பகவச்சாஸ்த்ரே ("చేతనస్య") ("சேதநஸ்ய") இதி. சேதநனுக்குயாதொருபோது தன்பக்கலிலும் தன்வஸ்துவின்பக்கலிலும் மமத்வம் நடையாடுகிறது; அப்போது மம என்கிற இரண்டெழுத்தும் அந்த மம்யத்துக்கு வாசகமாயிருக்கும்.

தொ.—அசு.— மேலுக்கவதாரிகை (இப்படி) இத்யாதி.

(இப்படி) என்றது – முன்புசொன்னபடியென்றபடி. (அதினுடைய) என்றது – அஹங்காரமமகாரங்களினுடையவென்றபடி. (தந்நிவ்ர்த்தியில) என்றது – அஹங்காரமமகாரங்களினுடைய (நிவ்ர்த்தியில்) என்றபடி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. ("మమ్యం") ("மம்யம்") என்றது–மமகாரமென்றபடி. ("మమ ఇత్యక్షరద్వంద్వం తదా మమ్యస్య వాచకం") ("மமஇத்யக்ஷரத்வந்த்வம்ததாமம்யஸ்யவாசகம்") என்றது – இவ்விடத்தில் 'அஹம் மம' என்கிறபோதும், 'இதம் மம' என்கிறபோதும் அஹம் இதம் ஶப்தங்களன்று மமகாரவாசகம், இரண்டிடத்திலும் மம என்கிறஶப்தமே மமகாரவாசகமென்றபடி. இவ்விடத்தில அஹங்காரஶப்தார்த்தம் உபதேஶகம்யம். (அதில்) என்றது – அஹங்காரமமகாரங்களில் என்றபடி. [உஜ்ஜீவநம்] என்றது – உத்க்ர்ஷ்டஜீவநம் என்றபடி.

மூ.—அஎ. இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும்.

வ்யா.— "ద్వ్యక్షరస్తు భవేన్మృత్యుస్త్ర్యక్షరం బ్రహ్మణః పదమ్। మమేతి ద్వ్యక్షరో మృత్యుర్న మమేతి చ శాశ్వతమ్॥" "த்வ்யக்ஷரஸ்து பவேந்ம்ருத்யுஸ்த்ர்யக்ஷரம்ப்ரஹ்மணஃபதம் । மமேதித்வ்யக்ஷரோம்ருத்யுர்நமமேதிசஶாஶ்வதம்॥" (௧௧) என்னக்கடவதிறே.

அஎ.— இப்படி ஸ்வரூபோபாய புருஷார்த்த விரோதிகளைக் கழிக்கிறவளவன்றிக்கே, இந்நமஸ்ஸுதான் ஸ்வரூபாதித்ரயத்தையும் ப்ரகாஶிப்பிக்கும் என்கிறார்

(இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும்காட்டும்) என்று.

எ.— ("ద్వ్యక్షరః") ("த்வ்யக்ஷரஃ") இதி. இரண்டக்ஷரம் ம்ருத்யுஶப்தவாச்யமான ஸம்ஸாரமாயிருக்கும் ; மூன்றக்ஷரம் ப்ரஹ்மஶப்தவாச்யமான ஆத்மாவினுடைய ஸ்வரூபயாதாத்ம்ய பரமாயிருக்கும் ; மம என்கிற இரண்டக்ஷரமும் ம்ருத்யு; நமம என்கிற மூன்றக்ஷரமும் நிலைநின்ற ஸ்வரூபம ; இவ்விடத்தில் ஸ்வரூப யாதாத்ம்யபரமாவது - ஶேஷத்வவிஶிஷ்ட பாரதந்த்ர்யம்.

அஎ.— மேலுக்கவதாரிகை (இப்படி) என்றுதுடங்கி.

[இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையுங் காட்டும்] என்கிறயோஜனையில நமஸ் ஏகபதமாய் ஶேஷத்வப்ரகாஶகமான நமஸ்காரவாசியாகக்கடவது ; அன்றிக்கே மூன்றிடத்திலும் ஸகண்டநமஸ்ஸாக யோஜிக்கையேமுக்யம்.

தொ.—உக்தார்த்தத்தில் ப்ரமாணங்காட்டுகிறார் ("ద్వ్యక్షరస్తు") ("த்வ்யக்ஷரஸ்து") இத்யாதியால்.

("த்வ்யக்ஷரஸ்து")என்றது-த்வ்யக்ஷர ஏவ என்றபடி. ("మృత్యుః") ("ம்ருத்யுஃ")என்றது- மாரகம் என்றபடி. ("బ్రహ్మణః పదం") ("ப்ரஹ்மணஃ பதம்") என்றது - ப்ரஹ்மத்துக்குப்ராப்யமாயிருக்கும் என்றபடி ; இச்சேதநனுடைய உஜ்ஜீவநார்த்தமிறே ! ஈஶ்வரன் க்ருஷிபண்ணுகிறது, அந்தக்ருஷிபலமிறே ! இது, ஆகையாலே ப்ரஹ்மத்துக்கு ப்ராப்யமென்னக்குறையில்லை. இவன், 'அஹம் நமம' என்ற அன்றிறே! அவன் ஸத்தைபெற்றுனுவதும் ; அன்றிக்கே ("பதம்") என்றது - பதப்ரதமென்றபடியாகவுமாம்.

இப்படி பாதகமாகவும் அநுகூலமாகவும் சொல்லப்படுகிற த்வ்யக்ஷரத்ர்யக்ஷரங்கள்தான் எவையென்ன அருளிச்செய்கிறார்

("మమేతి") ("மமேதி") இத்யாதியால். ("చ") ("ச") என்றது-(த்ர்யக்ஷரஶ்ச) என்றபடி. ("శాశ్వతం") ("ஶாஶ்வதம்") என்றது-ஶாஶ்வதப்ரதமென்றபடி.

அஎ.— மேலுக்கவதாரிகை (இப்படி) இத்யாதி.

(இப்படி) என்றது - கீழ்ச்சொன்னபடியேயென்றபடி. (கழிக்கிறவளவன்றிக்கே) என்றது - கழிக்கிறமாத்ரமன்றிக்கே என்றபடி.

மூ — அ அ. "தொலைவில்லிமங்கலந்தொழும்" என்கையாலே ஸ்வரூபம் சொல்லிற்று ;

வ்யா.— அ அ.— இதுதன்னை உபபாதிக்கிறார் மேல் மூன்றுவாக்யத்தாலே. ("தொலைவில்லிமங்கலம்") இத்யாதி. அதாவது - ("தொலைவில்லிமங்கலந்தொழும்") என்று, அவனுகந்தருளின நிலத்தளவும் செல்ல சேஷமாயிருக்கும்படியைச சொல்லுகிறவளவில் ("தொழும") என்று நமஸ்காரத்தைச்சொல்லுகையாலே, (ஸ்வரூபம்சொல்லிற்று) என்கை.

எ.— அ அ.— மேல்வாக்யத்துக்கு அவதாரிகை (இதுதன்னை) என்று துடங்கி.

திருவாய்மொழி - ௬ - பத்து - ரு - திரு - க - பாட்டு.

["துவளின்மாமணிமாடமோங்கு தொலைவில்லிமங்கலந்தொழு
மிவளைநீரினியன்னைமீருமக்காசையில்லைவிடுமினோ
தவளவொண்சங்குசக்கரமென்றுந் தாமரைத்தடங்கணென்றுங்
குவளையொண்மலர்க்கண்கணீர்மல்க நின்றுநின்றுகுமிறுமே".]

["அவ.— இவள் ப்ரக்ருதியறியாதே திருத்தொலைவில்லிமங்கலத்தைக் காட்டினபின்பு உங்கள் ஹிதவசநத்துக்கு இவள் மீளுமோ? என்கிறாள்.

வ்யா.—(துவள்) இத்யாதி. "உனக்கிப்போதுதவாதபடி தூரஸ்த்தம்" என்னுதல், "பூதகாலத்திலவதாரங்கள்" என்னுதல், உகந்தருளின நிலங்களிலே உள்ளுநிற்கிறவனளவிலே ப்ரவணையாதல் செய்தாளாய் மீட்க நினைக்கிறீகோளோ?

தொ.— அ அ.— மேலுக்கவதாரிகை (இதுதன்னை) இத்யாதி.

மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (சொல்லுகிறவளவில்) என்றது- சொல்லுகிறபோது என்றபடி. நமஶ்ஶப்தம் ஸ்வரூபத்தைக்காட்டுமோ? என்னில் ; ப்ரணவோக்தமான அநந்யார்ஹசேஷத்வம், தனக்குவிரோதியான அந்யரிலே அந்யதமனான ஸ்வசேஷத்வம்போய் ஸ்புடமாக ப்ரகாசிப்பது இந்நமஸ்ஸிலேயாகையாலே இந்நமஸ்ஸு ஸ்வரூபத்தைக்காட்டும்.

பி.— அ அ.— ப்ரகாரதயா விசேஷணதயா நமஶ்ஶப்தம் "நமோ-ப்ரஹ்வீபாவே" "நமு - ப்ரஹ்வீபாவே" என்று வணக்கத்தைச்சொல்லி அத்தாலே சேஷத்வகார்யமான (நமஸ்காரத்தை)ச்சொல்லக்கடவது ; ["தொழும்"] என்கையும் [நம:] என்கையும் பர்யாயமாகையாலே ["தொலைவில்லிமங்கலந்தொழும்"] என்று சேஷத்வகார்யமாய் காயிகமான (நமஸ்காரத்தைச்சொல்லுகையாலே)[ஸ்வரூபஞ்சொல்லிற்று]என்றபடி.

ஏ.—ஆசவிட்டுத் திருத்தொலைவில்லிமங்கலத்தை விரும்புகிற இவளை யெங்ஙனேமீட்கும்படி. சரமாவதியிலே நிற்கிற இவளை ப்ரதமாவதியிலே நிற்பார் மீட்கவோ? துவளென்பது - குற்றம். அதின்றிக்கேயிருக்கை. அவ்வூர்ச்சரக்கிலே குற்றமுண்டாகிலன்றோ இவளை மீட்கலாவது. குற்றமுண்டாய்க்கழிந்ததல்ல. ஜீவபரர்களிருவர்க்கும் அபஹத பாப்மத்வாதிகளுண்டாயிருக்கச்செய்தே ஜீவாத்மாவுக்கு ஹேயமுண்டாய் பகவதநுக்ரஹத்தாலே கழியும், பரமாத்மா ஹேய ஸம்ஸர்க்கார்ஹனாயேயிருக்கும்; அப்படியேயாயிற்றவ்வூரில் மாடங்களில் ரத்நங்களும். (மாமணி) ஒளியையல்ல, பெருவிலையனுமாயிருக்கும். (ஓங்கு) அவ்வூரில் மாடங்களின்நிறமீடு நிருககரியளவும் வந்து காணுமிருப்பது. "இடமணித்து" என்று போலேகாணும் நாயகன் பிரிந்தது. மாளிகையின் நிழற்கீழேயிட்டு வைத்துக்காணும் பிரிந்தது. அவன்பிரிந்தபோது தொடங்கி அவ்வூரையும் அவ்வூரில் மாடங்களையும் அவற்றில் மாணிக்கங்களையும்பார்த்து, வைத்தகண் வாங்கமாட்டாதே யிருந்தாள்போலேகாணும். (தொலைவில்லிமங்கலம்) துறைப்புக்கூடாக அவ்வூரையன்றோ இவளுகந்தது. (தொழுமிவளை) 'கருத்திருக்கும், வெளுத்திருக்கும்' என்னுமாப்போலே, தொழுகை நிரூபகமாயிருக்கை. "ஸாஞ்ஜலிம்ப்ரஹ்வமாஸீநம்" "ப்ராஞ்ஜலிம்ப்ரஹ்வமாஸீநம்" (எ0௬) என்னுமாப்போலே. "கணபுரங்கைதொழும்பிள்ளை" என்னுமாப்போலே. (இவளை) இவளைமீட்கப்பார்ப்பதே! இவள்படியை புத்திபண்ணியன்றோ மீட்பது; (தொழுமிவளை) இவள்படி கைமேலே காணநிற்கச்செய்தே நீங்கள்மீட்கத்தேடுகிறபடியெங்ஙனே? (இவளைநீர்) பழிசொல்லப் பணைக்கிறவளிவள், பழி பரிஹரிக்கப்பார்க்கிறீர்கோள்நீங்கள். (இனி) தொழுகை தேஹயாத்ரையாகும்படி யானவளையன்றோ மீட்கப்பார்ப்பது. (அன்னைமீர்) பகவத்விஷயத்திலே அவகாஹிக்க என்றொன்றில்லையோ? நியந்த்ரிப்பாம்படியாவமேயோ வேண்டுவது. பெற்றவர்களென்று, அஶக்யங்களிலே இழியக்கடவதோ? (உமக்காசையில்லை) ப்ராப்தயௌவனைகளானார்பக்கல் பெற்றவர்களுக்கு ப்ராப்தியுண்டோ? புக்கவிடத்தே ப்ரவணையாகாநிற்க, பெற்ற ப்ராப்திகொண்டு மீட்கவோ?

(விடுமினோ) இவ்வளவில் நீங்கள் கைவாங்கவமையும்.

பெற்றதாய்மார் "விடுமின்" என்னுங்காட்டில் விடார்களிறே! பின்னையும் நிர்ப்பந்திக்க; வேண்டா, இவளுக்கோடுகிற ரஸத்தைக் கண்டுகொடுநிற்கப்பாருங்கோள்! இவளுடைய அநுபவத்துக்கு கண்ணீர்த் துரும்பாகாதே இத்தைக்கண்டுகொடு நிற்கவமையுமென்கிறாள். எங்களை 'ஆசைப்படவேண்டா, விடுங்கோள்' என்கிறீர்

ஏ.—னென்னில்; இவள் பேச்சிலும் நினைவிலும் நீங்களாதல் நானாதலு ண்டோ? (உங்களையாதல் என்னையாதல், சொல்லுதல் நினைத்தல் செய்கிறாளோ?) "𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚" "த்யக்த்வா புத்ராம்ஸ்ச தாராம்ஸ்ச" என்னும் நிலையன்றோ இவளது. (தவளவொண் சங்கு) ஸ்யாமமான திருமேனிக்குப் பரபாகமான வெண்மையையு டைத்தாய், "உண்பதுசொல்லிலுலகளந்தான் வாயமுதம்" என்கிற அழகையுடைத்தான சங்கு. (சக்கரம்) அங்ஙனமொரு விசேஷணமி ட்டுச் சொல்லவொண்ணாத அழகையுடைய சக்கரம். (என்றும்) 'இ வற்றைக்காணவேணும்' என்னுதல், 'இவற்றோடே வரவேணும்' என்னுதல் சொல்லமாட்டுகிறிலள் பலஹானியாலே. (தாமரைத்தடங் கணென்றும்) அந்த ஆழ்வார்களளவும் வந்து அலையெறிகிற திருக்கண் கள். தாமரையை ஒருவகைக்கொப்பாகச்சொல்லலாய், போக்தாக் களளவன்றிக்கே யிருக்கிற திருக்கண்கள். (என்றும் - என்றும்) ஒரு மலையெடுத்தாப்போலே; சொல்லுக்குச்சொல்லுத்தளர்ந்து நடுநடுவே விச்சேதித்தாயிற்றுச் சொல்லுவது. திவ்யாயுதங்களையும் கண்ணழகை யுங் காட்டியாகாதே இவளைத்தோற்பித்தது.

(குவளை) இத்யாதி. இக்கண்களைக்கண்டால் தாமரைத்தடங்கண ன்றோ நிர்மல்க அடுப்பது. கண்ணும் கண்ணநீருமாய் இவளிருக்கிற இருப்பைக் கண்டுகொண்டிருக்கவன்றோ உங்களுக்கடுப்பது. ["𑌆𑌹𑍍𑌲𑌾𑌦𑌶𑍀𑌤𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌮𑍍𑌬𑍁𑌃"] ["ஆஹ்லாதஸீதநேத்ராம்பு:"] (ஏ0ஏ) இத்யாதி ஸாதா தர்ஸநத்துக்கு ஒருதேஸந் தேடிப்போகவேண்டாகாணும். குவளைப் பூப்போலே யழகியகண்கள் நீர்மல்க.

அவள் தன்னுடைய ஸ்த்ரீத்வத்தைக் காற்கடைக்கொள்ள, நீங்க ளெங்ஙனே மீட்கப்பார்க்கும்படி. கண்ணநீர்பாய்கையாவது-ஸ்த்ரீத்வ மழிகையிறே! (நின்றுநின்று குமிறுமே) பேச்சுப்போய் கண்ணநீரா ய், கண்ணநீர்போய் தடுமாறுகிற அவஸ்தையிலே மீட்கப்போமோ! ராஜகோஷ்டியிலே "உகும், இறும்" என்று சிலர் பொருள்சொல்ல. விக்ரமசிங்கனென்பானொருவன், "அங்ஙனல்ல, கன்றைக்கடக்கக் கட்டிவைத்தால் முலைக்கண் கடுத்துப் பசு அலமந்துபடுமாப்போலே, உள்ளோடுகிறக்லேஸம் வாய்விடமாட்டாதே நோவுபடுகிற இவளுக் கிதுவார்த்தையோ" என்றான். பெருவெள்ளத்தில் சுழிக்குமாப்போலே, அகவாயிலுள்ளது வெளியிடமாட்டாள்; உள்ளேநின்று சுழிக்கிறபடி. (தொலைவில்லிமங்கலந் தொழும்) என்கையாலே-காயிகவ்யாபாரம்சொ ல்லிற்று; (தவளவொண் சங்குசக்கரமென்றும் தாமரைத் தடங்க ணென்றும்) என்று சொல்லுகையாலே-வாசிகவ்யாபாரம் சொல்லி ற்று; (குமிறும்) என்கையாலே - மாநஸவ்யாபாரம் சொல்லிற்று"].

மூ— "வேங்கடத்துறைவார்க்குநம" என்கையாலே உபாயம்சொல்லி ற்று ;

வ்யா.— ("வேங்கடத்து") இத்யாதி. அதாவது- ("வேங்கடத்துறைவார்க்குநம") என்று திருவேங்கடமுடையானுக்கு சேஷம் நான் எனக்குரியேனல்லேன் என்று, ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத ஸ்வரூபபாரதந்த்ர்யத்தைச் சொல்லுகையாலே, அவனே உபாயம், என்னுமிடம் ஸித்திக்கையாலே (உபாயம் சொல்லிற்று) என்கை.

எ.— திருவாய்மொழி - ௩ - பத்து - ௩ - திரு - ௬ - பாட்டு.

["வேங்கடங்கண்மெய்ம்மேல்வினைமுற்றவுந்
தாங்கடங்கட்குநல்லனவேசெய்வார்
வேங்கடத்துறைவார்க்குநமவென
லாங்கடமையதுசுமந்தார்கட்கே".]

["அவ.— கீழ் திருமந்த்ரார்த்தத்தை யருளிச்செய்தார் ; அதிலே யருளிச்செய்யாததோர் அர்த்தமுண்டிறே! நமஶ்ஶப்தார்த்தம். (அதாவது - அவித்யாதிகளும்கழிகை.) அத்தையருளிச்செய்கிறார். அவன் ரக்ஷ்யவர்க்கத்திலே பெற்றவளவால் பர்யாப்தனன்றிகதே யிருந்தாலும், நாம் அபிநிவிஷ்டராகிலும், ஶரீரஸம்பந்த நிபந்தநமாக அநாதிகாலம் நாம்பண்ணிவைத்த பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தககர்மங்கள் செய்வதென்னென்ன ; நாமிதிலே துணியவே அவையெல்லாம் தன்னடையே நஶிக்குமென்கிறார்.

வ்யா.— (வேங்கடங்கள்) கடமென்று - கடனென்றபடி. கடங்களென்றது-கடன்களென்றபடி. அவையாவன- ["𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌰𑍍𑌋𑌣𑌵𑌾 𑌜𑌾𑌯𑌤𑍇" ["த்ரிபிர்ர்ணவாஜாயதே"] (௭௦அ) என்கிறபடியே - மூன்று ர்ணத்தோடேகூடவாயிற்று இவன்வந்துபிறப்பது ; ["𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍇𑌣𑌰𑍍𑌷𑌿𑌭𑍍𑌯𑌃 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌜𑌯𑌾 𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑌃"] ["ப்ரஹ்மசர்யேணர்ஷிப்ய: யஜ்ஞேநதேவேப்ய:ப்ரஜயாபித்ர்ப்ய:"] (௭௦௬) என்கிறபடியே - ப்ரஹ்மசர்யத்தாலும், யாகத்தாலும், ப்ரஜோத்பத்தியாலும் ர்ஷிகளுக்கும், தேவர்களுக்கும், பித்ர்க்களுக்கும் தனிசு இறுக்கக்கடவன்.

தொ.—மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (ஸித்திக்கையாலே) என்றது - ஸ்வஸ்வாதந்த்ர்யநிவர்த்திரூபார்த்தபலத்தாலே (ஸித்திக்கையாலே) என்றபடி.; அதாவது-ஸ்வஸ்வாதந்த்ர்யம் நிவர்த்தித்தபோதே ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம் நிவர்த்திக்கையாலே, அநந்தரம் ஸ்வரக்ஷணத்தில் ஸ்வஶேஷியான ஈஶ்வரன்கைபார்த்திருக்கையாகிற பாரதந்த்ர்யம் ஸித்தித்த அநந்தரம் 'அவனே உபாயம்'என்னுமிடம் (ஸித்திக்கை).

ஏ. — "ஸம்ஸாரம்ருத்யுஸாகராத்" "ரக்ஷிதிர் நிர்ணயாகர்த்ய" (எகo) என்னு நின்றதிறே! (மெய்ம்மேல்வினை முற்றவும்) ப்ராக்தனஸம்பந்தநிபந்தநமாக வரக்கடவபாபங்களைச் சொல்லுகிறது. ஆக, "கடன்கள், மெய்ம்மேல் வினைமுற்றவும், வேம் - நசிக்கும்." என்றிங்ஙனே ஆளவந்தாரருளிச்செய்யும்படி. இத்தை யெம்பெருமானார் கேட்டருளி, "இதுக்கு வேதாந்தத்தில் சொல்லுகிறகட்டளையிலே பொருளாகவமையாதோ?" என்றிங்ஙனே அருளிச்செய்வர். அதாவது - "தததிகம உத்தரபூர்வாகயோரஸ்லேஷவிநாஸௌ" "உத்தரபூர்வாகயோரஸம்ஶ்லேஷவிநாஶௌ" (எகக) என்றும், "தத்யதேஷீகதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத" "ஏவம்ஹாஸ்ய ஸர்வேபாப்மாநஃப்ரதூயந்தே" (எகஉ) என்றும் சொல்லுகிறபடியே, வேம் என்கையாலே - பூர்வாகத்துக்கு விநாஶமும், உத்தராகத்துக்கு அஸம்ஶ்லேஷமுமாகச்சொல்லுதல்; அன்றிக்கே, இவ்விநாஶந்தான் - மற்றையதுக்கும் உபலக்ஷணமாய், அஸம்ஶ்லேஷியாமையைச்சொல்லிற்றாகவுமாம். பூர்வாகமாவது - ஜ்ஞாநம்பிறப்பதற்கு முன்பு புத்திபூர்வகமாகப் பண்ணிப்போரும் ப்ராதிகூல்யம். உத்தராகமாகிறது - ஜ்ஞாநம்பிறந்தபின்பு ப்ராமாதிகமாகப்பண்ணும் ப்ராதிகூல்யம். பின்பும் விரோதியான தேஹஸம்பந்த மநுவர்த்திக்கையாலே பாபங்களிலே ப்ரவர்த்தியாநிற்கும்; அநந்தரம், ஜ்ஞாநம்பிறவா, கடுகமீண்டு முன்புசெய்ததுக்கு 'நாமென்செய்தோமாவோம்' என்றநுதபித்துப் படும். கடன்கள் - மேல்வினைமுற்றவும் - வேம்; இதுமெய் - இது ஸத்யம், "தத்யதேஷீகதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத" "ஏவம் ஹாஸ்யஸர்வேபாப்மாநஃ ப்ரதூயந்தே" என்றதிறே. ப்ரத்யக்ஷாதிகள் ப்ரமத்துக்கு மூலமாய் ப்ரமவிவர்த்தகமுமாயிருக்கும்; அங்ஙனன்றியே, "ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம்" "யதாபூதவாதிஹி ஶாஸ்த்ரம்" (எகங)என்கிறபடியே - ஶாஸ்த்ரஞ்சொல்லிற்றென்றால் அவ்வர்த்தம் மெய்யாயிருக்குமிறே! முகப்பாட்டிலேசொல்லவேண்டுவதோரர்த்தஞ்சொல்லாதேபோந்ததிறே! அவ்வம்ஶமிங்கேசொல்லுகிறார். கடனுக்குத்தொடுத்த அம்பை, அவன்காலடிவரநின்றவாறே, அநந்தரத்தே "உன் விரோதிகளைச்சொல்லாய்" என்றானிறே! இவ்விடத்திலே பட்டர் ஒரு இதிஹாஸமருளிச்செய்வர் - "பண்டு, ஒருகோயில்மயிரின்றிக்கேயிருப்பானொருவன் தெப்பரிமாறாநின்றானாய், அங்கேயொருவன் சென்று 'மயிரைப்பெறுதேதிர் தனியேநின்று பரிமாறுகின்றீரென்ன, 'என்றான் கடந்து' என்ன; 'ஒன்றுமில்லை' 'கொண்டுபோகவந்தேன்' என்ன, 'ஆகிலொருகோட்டையைக்கொண்டு போகலாகாதோ' என்றெடுத்துவிட, அவன்அத்தைக்கொண்டு வாராநிற்கச்செய்தே எதிரேயொருவன்வந்து 'இதுக்கேபெற்றது' என்ன, 'உன்றனைமொட்டை

எ.—த்தலையன்தந்தான்' என்றாய், அவன் அத்தைச்சென்றங்கே 'இன்று
ன் உம்மைவைதுபோகாநின்றான்!' என்ன, 'அடா! என்னெல்லையுங்கொ
ண்டு என்னையும் வைதுபோவதே' என்று தொடர்ந்துவந்தானாய், அவ
ன்புரிந்துபார்த்து 'ஏன்றுன்குழல்களலையவலைய ஓடிவாராநின்றதீ!'
என்ன, 'ஒன்றுமில்லை இன்னமொரு கோட்டைகொண்டு போகச்
சொல்லவந்தேன்' என்றாய்; அப்படியே, கடலைமுகங்காட்டுவித்துக்
கொள்ளுகைக்காகக் காலைப்பிடிப்பது கோலைக்கொடுப்பதாகாநிற்க,
அவன்வந்துமுகங்காட்டினவாறே, 'உனக்கம்புதொடுத்தோம்' என்ன
லஜ்ஜித்து, 'உன்விரோதிகளைச்சொல்லுநாமித்தைவிட' என்றாரிறே"!
(தாங்கள்)இத்யாதி. இதுதான், பலபோக்தாவானவனுக்கு உத்தேச்ய
த்தோபாதி ப்ரார்த்தித்துப்பெறவேண்டியிருக்குமோவென்னில்; அது
வேண்டா, தாங்கள் தங்களுக்குநன்றான கைங்கர்யத்தைப்பண்ணு
நிற்கவமையும், இவ்விரோதி தன்னடையேபோமென்கிறார். "தாங்
கள் தங்களுக்கு நன்றான ப்ரபந்தத்தைச்செய்யவமையும்" என்ன
வொண்ணுகிறே, "வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்" என்கிற
அதிகாரியைக்குறித்துச் சொல்லுகையாலே. அதிகாரி வைலக்ஷண்ய
மும் வ்ருத்திவைலக்ஷண்யமும் தோன்றும்படி - "தாங்கள்தங்கட்கு"
என்றிங்ஙனேயூன்றிச் சொல்லுமாமநந்தாழ்வான். (தாங்கள்) இதரவி
ஷயங்களில் விரக்தராய் கைங்கர்யருசியுடையரா யிருக்குமவர்கள்.
(தங்கட்கு) இப்படிப்பட்ட ருசியுடையராயிருக்கிற தங்களுக்கு.
(நல்லனவேசெய்வார்) தங்கள் ஸ்வரூபத்தோடுசேர்ந்த கைங்கர்யத்
தையேபண்ணுவார். "தாங்கள் தங்கட்கு நல்லனவேசெய்வார்"
என்கிறது - இவர்களை எங்ஙனேயாக நினைத்தென்னில; (வேங்கட
த்து) இத்யாதி. (வேங்கடத்துறைவார்க்கு) சதுர்த்தியின் அர்த்தஞ்சொ
ல்லுகிறது. (நம) எனக்கன்று, அவனுக்கென்றபடி. (எனல்) இதுதான்
நெஞ்சிலுண்டாகவும்வேண்டா, உக்திமாத்ரமேயமையும். இதுதான்
அல்பமாகிலு மிவன்றனக்கருமையாயிருக்குமோவென்னில்; (ஆம்)ஸுல
பம். "எளிது" என்று, ஸ்வரூபத்தோடே சேராததாயிருக்குமோவெ
ன்னில்; (கடமை) ப்ராப்தம். (அது சுமந்தார்கட்கே) பெறுகிற பேற்
றின் கனத்தையும் இவனுடையவுக்தியில் அல்பதையையும் பார்த்து
"இப்பேற்றுக்கிவனிம்மலையைச்சுமவாறே" என்பாரைப்போலே "அ
து சுமந்தார்கட்கு" என்று தம்கருத்தாலே சொல்லிற்றாகவுமாம்.
பெறுகிற பேற்றின்கனத்தையும் பகவத்க்ருபையையும் அறிந்திருக்கிற
இவர்கருத்தாலே சொல்லிற்றுதல் ; இவன்பக்கலுள்ளத்தைக் ...
நினைத்திருக்குமவன்கருத்தாலே சொல்லிற்றுதல்; "ஞால...
ஷ்டடாம்" (எகா) என்றிறே! அவனிருப்பது த்ரௌபதி...

மூ.— "அந்திதொழுஞ்சொல்" என்கையாலே பலஞ்சொல்லிற்று.

வ்யா.—("அந்திதொழுஞ்சொல்") இத்யாதி. அதாவது-("அந்திதொழுஞ்சொல்") என்று தாஸ்யரஸமநுபவித்தால், அதினுடைய சரமதசையிலே சொல்லக்கடவ ("தொழுஞ்சொல்") என்று நமஸ்ஸப்தத்தைச் சொல்லுகையாலே (பலஞ்சொல்லிற்று) என்கை.

எ.—சொல்ல-"கோவிந்தா" என்றவாறே, "நம்பேரைச்சொன்னான்" என்று திருவுள்ளம்புண்பட்டிருக்குமவனிறே! [ఋణం ప్రవృద్ధమివ మే హృదయాన్నాపసర్పతి] [க்ர்ஷ்ணமாம் தூரவாஸிநம்] (எகரு) அவளைக்கொண்டாடா, தன்னை நிந்தியா, வ்யஸநப்பட்டானிறே! அப்போது ஸதஸ்ஸில் பிறந்தபரிபவம் பரிஹ்ரதமாகச்செய்தேயும், நம்பேரைச்சொல்லிக் கூப்பிட்டவளுக் காற்றாமையிலே முகங்காட்டப்பெற்றிலோம் என்றுள்ளதனையும் இழவுபட்டிருந்தானிறே! நம்பேர் தன் காரியஞ்செய்ததத்தனைபோக்கி, நாமிவளுக்கொன்றும் செய்திலோமிறே என்றிருந்தான். அஸக்ருத்யாக இரண்டுரூபத்தைச் சேர்த்துச்சொல்ல, அது விஷஹரணத்துக்கு உடலாகாநின்றதிறே! ஸப்தஸக்தியாலே; அவ்வோபாதியும் போராமையில்லையிறே! திருநாமம்.

("வேங்கடத்துறைவார்க்கு நமவெனலாங்கடமை யதுசுமந்தார்கட்கு) - கடங்கள்மெய்ம்மேல் வினைமுற்றவும்வேம். மெய், ஆகையால் தாங்கள் தங்கட்கு நல்லனவேசெய்வார்."]

திருவாய்மொழி - கூ - பத்து - அ - திரு - எ - பாட்டு.

["உண்டுகளித்தேற்கும்பரென்குறைமேலைத்
தொண்டுகளித்தந்திதொழுஞ்சொல்லுப்பெற்றேன்
வண்டுகளிக்கும்பொழில்சூழ்திருப்பேரான்
கண்டுகளிப்பக்கண்ணுணின்றகலானே".]

["அவ.— அவனுடைய ஆதரத்தாலே தமக்குண்டான கார்த்தார்த்யத்தை யருளிச்செய்கிறார்.

தொ.—["அந்திதொழும்"] இத்யாதி.

மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. சேதநன் எம்பெருமான்விஷயத்திலேபண்ணும் கைங்கர்யத்திலே இவனுக்கு ஸ்வப்ரயோஜநத்வபுத்தி நிவர்த்தித்தாலொழிய ஈஸ்வரனுக்கு ப்ரயோஜநமாக மாட்டாமையாலே, இந்நமஸ்ஸப்தம் ததேகபோக்யத்வவிரோதியான இச்சேதநனுடைய ஸ்வபோகபுத்தியைக் குலைத்து அவ்வழியாலே ததேகபோகமான கைங்கர்யத்தைக்காட்டும்.

மூ.—அகூ. "உற்றது முன்னடியார்க்கடிமை" என்கையாலே,

வ்யா.—அகூ.—இப்பதத்திலே ததீயசேஷத்வமும் ஆர்த்தமாக அநுஸந்தேயமாகையாலே, அத்தையருளிச்செய்கிறார்

("உற்றதும்") என்று தொடங்கி. அதாவது - ("நின்திருவெட்டெழுத்துங்கற்று நானுற்றது முன்னடியார்க்கடிமை") என்று, திருமந்த்ரங்கற்றத்தால் நான் ("உற்றது முன்னடியார்க்கடிமை") என்னுமிவ்வார்த்தத்திலே என்கிறபடியே,

---

எ.—வ்யா.— (உண்டுகளித்தற்குமபமென்குறை) இப்படியநுபவித்துக் களிக்கப்பெற்ற எனக்கொரு குறையுண்டோ? அவனுடைய குணங்களையநுபவித்து மயர்வறமதிநலமருளப்பெற்ற வெனக்கு மேலவேண்டுவதொன்றுண்டோ? என்றிருக்கிறார். ஜ்ஞாநலாபமுண்டானபின்பு "அவ்வருகில ப்ராப்திபெற்றிலோம்" என்று வருவதொருகுறையுண்டோ? உம்பரென்றது - மேலென்றபடி.

(மேலைத்தொண்டு) இத்யாதி. மேலான தாஸ்யரஸமதிசயித்து. "ஸமஸ்தபரிவாராய" "யேநயேந தாதா கச்சதி" (எககூ) என்கிற ரஸத்தையநுபவித்து. "நீசஸ்யாபி" "ஸேவாஸ்வவ்ருத்தி:" என்றதுபோலன்றிறே ஸ்வரூபாநுரூபமானது. (தொண்டுகளித்து) தொண்டாலே உகப்புத்தலைமண்டையிட்டு. அதினுடைய சரமதசையிலே "நமஇத்யேவவாதிந:" "நமஇத்யேவவாதிந:" என்று புத்திபூர்வகமாகச்சொல்லுவதொன்றுண்டு, அப்பாசுரத்தைச் சொல்லப்பெற்றேன். அதாவது-ப்ரீதியழிந்த சொல்லாலே திருவாய்மொழிபாடி அடிமைசெய்யப்பெறுகை.

(வண்டு) இத்யாதி. வண்டுகள்மதுபாநம்பண்ணிக்களிக்கிறபொழிலாலே சூழப்பட்ட திருப்பேரிலேவர்த்திக்கிறவன். ஜ்ஞாநாதிகரோடு திர்யக்குக்களோடு வாசியறக்களிக்கும்தேசம். (கண்டுகளிப்ப) "மெய்கொள்ளக்காண விரும்புமென்கண்கள்" என்று விடாய்த்தகண்கள் கண்டுகளிக்கும்படியாக. (கண்ணுள்நின்றகலானே) நான் போகச்சொல்லிலும் கண்வட்டத்திலநின்றும் அகலுகிறிலன்; விஷயப்ரவணரை போகச்சொன்றாலும் தாலைக்கட்டிக்கொண்டு போகாதாப்போலே. இப்படியவனை யநுபவித்துக்களிக்கப்பெற்ற எனக்கு மேலொருகுறையுண்டோ?"] ... ... *

அகூ —மேல்வாக்யத்துக்கவதாரிகை (இப்பதத்திலே) என்று தொடங்கி.

* ["உற்றது முன்னடியார்க்கடிமை"] என்கிற ஸ்ரீஸூக்திப்படியே

தொ.—அகூ.— மேலுக்கவதாரிகை (இப்பதத்திலே) இத்யாதி.

(இப்பதத்தில்) என்றது - நம:பதத்தில் என்றபடி. (ஆர்த்தமாக) என்றது - அர்த்தபலத்தாலேயென்றபடி; அதாவது - ததீயபர்யந்தமானால் அல்லது ஸ்வரூபஸித்தி இல்லாதபகவதநந்யார்ஹசேஷத்வரூபார்த்தபலத்தாலே என்றபடி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. ["உற்றதும்"] என்றது - ஸன்னிதியிருந்ததுமென்றபடி.

இப்பாட்டையும், இதன் வ்யாக்யானத்தையும், ககூ பக்கத்தில் கண்டுகொள்வது.

மூ.— இதிலே பாகவதசேஷத்வமும் அநுஸந்தேயம்.

வ்யா.—அஹங்காரமமகாரங்கள் நிவ்ருத்தமாய், பகவச்சேஷத்வம் உள்ளபடி ப்ரகாசிக்கிற இந்நமஸ்ஸிலே தத்காஷ்டையான (பாகவதசேஷத்வமும்) அநுஸந்திக்கவேணுமென்கை.

எ.—[இதிலே]-(அஹங்காரமமகாரங்கள் நிவ்ருத்தமாய் பகவச்சேஷத்வம் உள்ளபடி ப்ரகாசிக்கிற இந்நமஸ்ஸிலே),[பாகவதசேஷத்வமும்]-(தத்காஷ்டையான) [பாகவதசேஷத்வமும்], [அநுஸந்தேயம்]-(அநுஸந்திக்கவேணும்) என்று மூலார்த்தம்.

இது தன்னை ஸ்ரீபாகவதத்திலே ஸ்ரீசுகபகவான் மூகபேதேந அருளிச்செய்தானிறே! "సంసారవిషవృక్షస్య ద్వేఫలేహ్యమృతోపమే।కదాచిత్ కేశవేభక్తి స్తద్భక్తైర్వాసమాగమః॥" "ஸம்ஸாரவிஷவ்ருக்ஷஸ்யத்வேபலேஹ்யம்ருதோபமே।கதாசித்கேஸவேபக்திஸ்தத்பக்தைர்வாஸமாகமః॥"(௭௧௭)"பக்திசேஷத்வகார்யமாகையாலே இங்குப்ரதமபதத்தாலே ப்ரதமபலமான சேஷத்வத்தையும், (தத்பக்தைர்வாஸமாகமః) என்று த்விதீயபலத்தை த்விதீயபதத்தாலும் அருளிச்செய்கிறான்" என்று அஸ்மதாசார்யோக்தம். "అథభాగవతంబ్రూహి యద్ధర్మో యాదృశోనృణాం।యదాచరతి యద్బ్రూతే యైర్లింగైర్భగవత్ప్రియః॥" "அதபாகவதம்ப்ரூஹியத்தர்மோயாத்ருஸோந்ருணாம்। யதாசரதியத்ப்ரூதேயைர்லிங்கைர்பகவத்ப்ரியః॥"(௭௧௮) என்று உத்தவர்பாகவதலக்ஷணத்தை க்ருஷ்ணனைக்கேட்க, "సర్వభూతేషుయః పశ్యేద్భగవద్భావమాత్మనః।భూతాని భగవత్యాత్మన్యేష భాగవతోత్తమః॥" "ஸர்வபூதேஷுயః பஸ்யேத்பகவத்பாவமாத்மநః । பூதாநிபகவத்யாத்மந்யேஷபாகவதோத்தமః॥"(௭௧௯) என்று துடங்கி "విసృజతిహృదయన్నయస్య సాక్షాద్ధరిరవశోభిహతోప్య ఘౌఘనాశః । ప్రణయరశనయాధృతాంఘ్రి పద్మస్సభవతి భాగవతప్రధానః॥" "விஸ்ருஜதிஹ்ருதயந்நயஸ்ய ஸாக்ஷாத்தரிரவசோபிஹிதோப்யகௌகநாஸః ।ப்ரணயரஸநயாத்ருதாங்க்ரிபத்மஸ்ஸபவதிபாகவதப்ரதாநః॥" (௭௨௦)என்றருளிச்செய்தானிறே! இங்கு "பாகவதர் என்கிறது - பரசேஷத்வஜ்ஞாநரஸிகர்" என்று தேசிகர். "తస్యయజ్ఞ వరాహస్య విష్ణోరమితతేజసః । ప్రణామంయెపికుర్వంతి తేషామపినమోనమః॥ విష్ణోర్దేవాదిదేవస్యజగద్ధాతుఃప్రజాపతేః । యెప్రణామకృతస్తేభ్యోనమస్తేభ్యః పునఃపునః॥" "தஸ்யயஜ்ஞவராஹஸ்யவிஷ்ணோரமிததேஜஸః । ப்ராணமம்யேபிகுர்வந்தி தேஷாமபிநமோநமః॥

தொ.— தத்காஷ்டையான) என்றது-பகவச்சேஷத்வஸீமாபூமியானவென்றபடி.

௭.— விஷ்ணோர்தேவாதிதேவஸ்ய ஜகத்த்யாது:ப்ரஜாபதே:| யேப்ராணாமக்ர்தஸ்தேபயோ நமஸ்தேப்ய:புந:புந:||" ௭௨.௧) என்று ப்ரமாணங்களில் நம:பதத்தாலே பாகவதஶேஷத்வத்தைச் சொல்லுகையாலே இங்கும் நம:பதத்தில் சொல்லுகையே உசிதமென்று கருத்து. "నము-ప్రహ్వీభావే" "நமு - ப்ரஹ்வீபாவே" என்று நமஸ்ஸு ப்ரஹ்வீபாவவாசகமாய், ப்ரஹ்வீபாவம் ஶேஷத்வகார்யமாகையாலே நம:பதம் ஶேஷத்வஸூசகமாயிருக்கும். "మమప్రియతమాదర్చాతో మద్భక్తవరివస్యతా| మమాత్మాస ఇతిస్వామీ వచనాత్తత్ప్రియార్చనం॥ అత్యంతాభిమతం స్యేత్యేతద్విజ్ఞాయతేయతః । అత సచ్ఛేషతాకాష్ఠాజ్ఞేయా తద్భక్తశేషతా॥ కర్మోపాధికశేషత్వమేవాత్ర నిషిధ్యతే |" "மமப்ரியதமாதர்சாதோ மத்பக்தவரிவஸ்யதா|மமாத்மாஸ இதி ஸ்வாமீவசநாத்தத்ப்ரியார்சநம்|| அத்யந்தாபிமதந்தஸ்யேத்யேதத்விஜ்ஞாயதேயத:| அதஸ்தச்சேஷதாகாஷ்டாஜ்ஞேயா தத்பக்தஶேஷதா|| கர்மோபாதிகஶேஷத்வமேவாத்ர நிஷித்யதே |" (௭௨.௨.

அந்தபாகவதர்களிலும் ஸத்காரயோக்யரென்றும், ஸஹவாஸயோக்யரென்றும், ஸதாநுபவயோக்யரென்றும த்ரிவிதராயிருப்பர்கள்.

ஸத்காரயோக்யராவார் - நாமரூபப்ரதாநர் ; "యేకంఠలగ్నతులసీనళినాక్షమాలా యే బాహుమూలపరిచిహ్నితశంఖచక్రాః । యే వాలలాటఫలకే లసదూర్ధ్వపుండ్రాః తే వైష్ణవాభువనమాశుపవిత్రయంతి॥" "யேகண்டலக்நதுளஸீநளிநாக்ஷமாலா யேபாஹுமூலபரிசிஹ்நிதஶங்கசக்ரா:| யேவாலலாடபலகே லஸதூர்த்வபுண்ட்ரா: தேவைஷ்ணவாபுவநமாஶுபவித்ரயந்தி||" (௭௨.௩.) "చోరోప్యవధ్యశ్శ్వపచోప్యదూష్యః ఋణోప్యపీడ్యః పతితోప్యబాధ్యః । యోహ్యంకితో వైష్ణవలాంఛనేన పూజ్యస్స విష్ణోః ప్రతిమాసమానః॥" "சோரோப்யவத்யஶ்ஶ்வபசோப்யதூஷ்ய:ர்ணயோப்யபீட்ய: பதிதோப்யபாத்ய: | யோஹ்யங்கிதோவைஷ்ணவலாஞ்சநேந பூஜ்யஸ்ஸவிஷ்ணோ: ப்ரதிமாஸமாந:| (௭௨.௪) "అభక్తమచ్యుతస్యాపి నావమన్యేత కంచన । హితం వా బోధయేత్సాధు దద్యాత్ కించిదీప్సితం॥" "அபக்தமச்யுதஸ்யாபி நாவமந்யேத கஞ்சந | ஹிதம் வாபோதயேத்ஸாது தத்யாத்வா கிஞ்சிதீப்ஸிதம்||" (௭௨.௫).

ఇచ్ఛయేతి. పరగతాతిశయస్య ఇచ్ఛావిషయతయా ప్రయోజనత్వం అవగమ్యతే; ఇచ్ఛాశబ్దస్య నిరుపపదత్వాత్ సాక్షాదేవేచ్ఛావిషయత్వం అభిప్రేతం;- సాక్షాదిచ్ఛావిషయశ్చ పరమప్రయోజనం, తచ్చ పరార్థత్వాత్ ఇత్యర్థశబ్దేనోక్తం; అర్థ్యత ఇత్యర్థః, ఇష్యత ఇతి యావత్. నిరుపపదశ్చార్థశబ్దః స్వతః పరమప్రయోజనపరః, అనేన స్వాతిశయాధాయకే భృత్యాదౌ లక్షణస్య అతివ్యాప్తి శంకావ్యుదాసః; భృత్యో హి స్వాలంకారాదికమపి స్వామ్యతిశయాయ భవతి ఇతి బుద్ధ్యా స్వాతిశయమాధత్తే; అతః భృత్యేన స్వాతిశయాధానస్య పరాతిశయః పరమప్రయోజనమితి నాతివ్యాప్తిః; ఉపాదేయత్వం-స్వీకార్యత్వం; ఇచ్ఛాస్వీకారౌ యథాయోగ్యం సంభవతః శేషశేషిణోరుభయోరపి చేతనత్వే ఇచ్ఛాస్వీకారౌ తద్గతౌ స్తః; యథా రాజభృత్యయోః, అన్యతరస్య చేతనత్వే అన్యతరస్య ఇచ్ఛాస్వీకారౌ భవతః యథా రాజభవనయోః, ఉభయోరప్యచేతనత్వే తద్వ్యతిరిక్త చేతనగతావిచ్ఛాస్వీకారౌ యథాయోగ్యం సంభవతః; యథా ప్రభాప్రభావతోః, ఉపాదేయత్వం ఉపాదాతుమర్హత్వం; తేన అకించిత్కరదశాయాం అవ్యాప్తిపరిహారః. ఏవకారేణ నకదాచిత్ పరస్మిన్ స్వాతిశయాధాయకస్య శేషిణః పరమ ప్రీతిశేషవ్యుదాసః, స్వరూపమితి స్వరూపాతిరిక్త గుణాద్యుపాధినిరాసః, స్వరూపప్రయుక్తం; నగుణాది ధర్మప్రయుక్త మిత్యర్థః. పరాతిశయ ఏవపరమప్రయోజనం-యస్య-సః-పరం ప్రతిశేషః ఇతి లక్షణముక్తం.

தொ.— [நமஸ்ஸாலே தன்னோடுறவில்லை யென்று வைத்து கைங்கர்யத்தைப்ப்ரார்த்திக்கக்கூடுமோ வென்னில்] என்கிற பூர்வபக்ஷயபிப்ராயம், ஸ்வாமீர் பிள்ளைலோகாசார்யரே ! தேவரீர் நமஸ்ஸப்தார்த்த மருளிச்செய்கிறவளவில், இந்நமஸ்ஸப்தம் காகாக்ஷிந்யாயத்தாலே பூர்வோத்தர பதங்களோடும், ஸ்தாநத்தோடு மந்வயித்து பகவதநந்யார்ஹ சேஷமான ஆத்மஸ்வரூபத்திலு மிப்பதத்திலும் ஆர்த்தமான உபாயத்திலும் மேல்பதத்திலும் சொல்லப்படுகிற பகவந்முகவிகாஸைக ப்ரயோஜநமாய், ததேவ பரமபுருஷார்த்தமான கைங்கர்யத்திலும் இச்சேதநனுக்கு மகாரத்திலேசொன்ன ஜ்ஞாத்ருத்வ ப்ராயுக்தமாய்வரும் அஹங்காரமமகாரங்களைக் கழிக்கிறதென்று சொல்லிவைத்து சதுர்த்திக் கர்த்தம்சொல்லுகிறவளவில் இவன்தனக்கு மமகார விஷயமொன்றுண்டாய் அத்தை இவன் ப்ரார்த்திக்கும்படியைச் சொல்லுகிறது இச்சதுர்த்தி யென்னுமிடம்சேருமோவென்னில் ; என்று.

௭.—பரகதாதிஶயாதாநேச்சயா உபாதேயத்வமேவ-யஸ்யஸ்வரூபம்-ஸ:-ஶேஷ:,-பர:-ஶேஷீ இதி அஸ்யார்த்த:, அந்யஸ்ய-ப்ரயோஜநமேவ-யஸ்ய-பரமப்ரயோஜநம் - ஸ: - ஶேஷ:, அந்யஶ்ஶேஷீதி. அத்ர பரஶப்த: அந்யபர்யாய இதி பராதிஶயஶப்தயோ: கர்மதாரயஶங்காநிவ்ருத்த்யர்த்தோ கதஶப்த:; தேநஸ்வகதாதிஶயாதாயகே ஶேஷிண்யதிவ்யாப்திவ்யுதாஸ:. அதிஶய: - விஶேஷ:, கிஞ்சித்கார இதியாவத்; 'நாகிஞ்சித்குர்வதஶ்ஶேஷத்வம்' இதிஹி மீமாம்ஸகாநாம் ப்ரஸித்தி:; அநேந அதிஶயஶப்தேந ஸ்வரூபாநுகூலவிநாஶாத்யாதாயகாநாம் ஶேஷத்வஶங்காவ்யுதாஸ:; பலவிநாஶஸ்யஹி கர்மண: ஸ்வகதவிநாஶாதாயகபலம் ப்ரதிஶேஷித்வம். ஆதாநஶப்தேந அதிஶயம்ப்ரத்யநதிகாரணதயா ஹேதுத்வம் விவக்ஷிதம்; அநேந பரகதம் அதிஶயம் ஸ்வஸ்மிந் ஆபாதயிதும் இச்சயா உபாதேயஸ்யஶேஷிண: ஶேஷத்வஶங்காநிவ்ருத்தி:.

இச்சயேதி. பரகதாதிஶயஸ்ய இச்சாவிஷயதயாப்ரயோஜநத்வமேவ கம்யதே; இச்சாஶப்தஸ்யநிரூபகத்வாத் ஸாக்ஷாதேவ இச்சாவிஷயத்வமபிப்ரேதம்; ஸாக்ஷாதிச்சாவிஷயஶ்சபரமப்ரயோஜநம்; தச்ச பரார்த்தத்வாத்; இத்யர்த்தஶப்தேநோக்தம்; அர்த்த்யத-இத்யர்த்த:, இஷ்யத இதியாவத்; நிரூபதஶ்சார்த்த: ஸ்வத:-பரமப்ரயோஜநபர:, அநேந ஸ்வாதிஶயாதாயகே ப்ரத்யாதௌ லக்ஷணஸ்ய அதிவ்யாப்திஶங்காவ்யுதாஸ:; ப்ரத்யோஹி ஸ்வாலங்காராதிகமபி ஸ்வாம்யதிஶயாயபவதீதிபுத்யா ஸ்வாதிஶயமாதத்தே; அத:ப்ரத்யேந ஸ்வாதிஶயாதாநஸ்ய பராதிஶய: பரமப்ரயோஜநமிதி நாவ்யாப்தி:. உபாதேயத்வம்-ஸ்வீகார்யத்வம்; இச்சாஸ்வீகாரௌ யதாயோக்யம் ஸம்பவத: ஶேஷஶேஷிணோ ரூபயோரபி

தொ.— அநுக்குத்தரம் [" படியாய்க்கிடந்துன்பவளவாய் காண்பேனே" என்கிறபடியே கைங்கர்யப்ரார்த்தநை வந்தேறியன்று] என்கிற ஸித்தாந்த்யபிப்ராயம், ஆழ்வார் ["படியாய்க்கிடந்து"] என்றது-சந்தந குஸுமாதிகள் ஸ்வார்த்தகந்தமன்றியே பரார்த்தமாகவே பரனுக்கு விநியோகப்படுமாப்போலே அசித்வ்யாவ்ருத்திரூப சைதந்யாஶ்ரயமான விச்சேதநனும் ஸ்வார்த்தகந்தமன்றியே பரார்த்தமாகவே பரனுக்கு விநியோகப்படும்படியான அசித்பாரதந்த்ர்யத்தை அருளிச்செய்து அசித்வ்யாவ்ருத்தி வேஷமான சைதந்யப்ரயுக்தமாய் வரும் ஸ்வரூபஜ்ஞாநமும், ஸ்வரூபாநுரூப புருஷார்த்தஜ்ஞாநமும், உபாயஜ்ஞாநமு முடையவனாகையாலே ஸ்வரூபோபாய புருஷார்த்தத்தைக் கழிந்த இச்சேதநன் பராதிஶயாதாயகத்வமாகிற ஸ்வரூபாநுரூபமாய் பராதிஶயைகப்ரயோஜநமாய் பரைக நியோஜ்யமான கைங்கர்ய ப்ரார்த்தநையையும் அருளிச்செய்கையாலே, இக்கைங்கர்ய ப்ரார்த்தநை ஸ்வார்த்ததோஷார்ஹமாய் வந்தேறியான தன்றிக்கே [ஸ்வரூப ப்ரயுக்தம்] என்று.

ஏ—சேதநத்வே இச்சாஸ்வீகாரௌ தத்ஸத்தௌஸ்த:;யதாராஜபுத்ரயோ அந்யதரஸ்யசேதநத்வே அந்யதரஸ்யஇச்சாஸ்வீகாரௌபவத:;யதாராஜபவநயோ:,உபயோரப்யசேதநத்வே தத்வ்யதிரிக்தசேதநகதாவிச்சாஸ்வீகாரௌயதாயோக்யம்ஸம்பவத:;யதா ப்ரபாப்ரபாவதோ:,உபாதேயத்வம் உபாதாதுமர்ஹத்வம்; தேந அகிஞ்சித்கரதாயாம் அவ்யாப்திபரிஹார:. ஏவகாரேண நகதாசித் பரஸ்மிந்நப்யதிஶயாதாயகஸ்ய ஶேஷிண: பரமப்ரீதிபோஷவ்யுதாஸ:-ஸ்வரூபம் இதி ஸ்வரூபாதிரிக்தகுணாத்யுபாதிநிராஸ:, ஸ்வரூபப்ரயுக்தம் ; நதுகுணாதிதர்மப்ரயுக்தமித்யர்த்த:. பராதிஶயஏவ-பரமப்ரயோஜநம் - யஸ்ய - ஸ: - பரம்பரதி-ஶேஷ இதி லக்ஷணமுக்தம்.

["படியாய்க்கிடந்துன் பவளவாய்காண்பேனே" யென்கிறபடியே] — (அத்யந்தபாரதந்த்ர்யத்தோடே கைங்கர்யப்ரார்த்தனையையும் சொல்லுகிறபடியே), [கைங்கர்யப்ரார்த்தனைவந்தேறி அன்று] - (கைங்கர்யப்ரார்த்தனை ஸ்வபோக்த்ர்த்வரூபாஹங்காரப்ரயுக்தமாய்க்கொண்டு வந்தேறியானதன்று); [ஸ்வரூபப்ரயுக்தம்] - (ஶேஷிக்கதிஶயத்தை விளைத்தல்லது தான்தரியாதபடியான தன் ஸ்வரூபத்தைப்பற்றி வந்ததென்கை) என்று மூலார்த்தம்.

பெருமாள்திருமொழி - ச - திரு - கூ - பாட்டு.

["செடியாயவல்வினைகள் தீர்க்குந்திருமாலே
நெடியானேவேங்கடவா நின்கோயிலின்வாசல்
அடியாரும்வானவரும்அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க்கிடந்துன் பவளவாய்காண்பேனே"]

["வ்யா.—(செடியாயவல்வினைகள் தீர்க்கும்) தன்திருவடிகளிலே தலைசாய்த்தாருடைய பாபபலமான ஸம்ஸாரஸம்பந்தத்தை அறுத்துக்கொடுக்குமவனாய்த்து. (செடி) - பாபம். (திருமாலே) அதுக்குநிடந்தநம்கூட இருந்து ஸேவிப்பாருண்டாகை. (நெடியானே) அவளாலும் என்னாலும் பொறுக்கப்போகாது என்றபோது "என்னடியாரதுசெய்யார்" என்று ஆஶ்ரிதவிஷயத்திலேபாரம் எல்லைகாணவொண்ணாதவன். (வேங்கடவா நின்கோயிலின்வாசல்) தேவரீருடையதிருவாசலிலே. (அடியாரும்வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்படியாய்க்கிடந்து) அநந்யப்ரயோஜநரும், ப்ரயோஜநாந்தரபரரும், அந்யபரரும் கிடந்து ஸஞ்சரியாநின்றால் ஒரு நினைவற்று அசேதநவத் கிடக்கவேணும். (உன் பவளவாய்காண்பேனே) பாரதந்த்ர்யத்துக்கு அசேதநஸமாதியாகவும்வேணும்; அது புருஷார்த்தமாகைக்குக் காணவும்வேணும்."] ... ...

மூ.—௧0அ. ஆகையால், "வழுவிலாவடிமை செய்யவேண்டு நாம்" என்கிற ப்ரார்த்தனையைக் காட்டுகிறது.

வ்யா.—௧0அ.—உக்தத்தை ஹேதுவாகக்கொண்டு, சதுர்த்தியின் கைங்கர்ய ப்ரார்த்தநாப்ரகாஶகத்வத்தை அருளிச்செய்கிறார்,

(ஆகையால்) என்று துடங்கி. அதாவது- கைங்கர்யப்ரார்த்தனை வந்தேறி யன்றிக்கே, ஸ்வரூபப்ரயுக்தமாகையாலே, ("வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்") என்று, அடிமையிலொன்றும் நழுவாதபடி ஸகலகைங்கர்யங்களும் (செய்யவேண்டும் நாமென்கிற ப்ரார்த்தனையை,) இச்சதுர்த்தி ப்ரகாஶிப்பிக்கிறதென்கை.

எ.—௧0அ.— மேலுக்கவதாரிகை (உக்தத்தை) என்றுதுடங்கி.

[ஆகையால்] - [கைங்கர்யப்ரார்த்தனைவந்தேறியன்றி] (க்கே ஸ்வரூபப்ரயுக்தமாகையாலே), [" வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்" என்கிற ப்ரார்த்தனையைக்காட்டுகிறது] - (அடிமையில் ஒன்றும் நழுவாதபடி ஸகலகைங்கர்யங்களும் செய்யவேண்டும் நாம் என்கிறப்ரார்த்தனையை இச்சதுர்த்தி ப்ரகாஶிப்பிக்கிறதென்கை) என்று மூலார்த்தம்.

திருவாய்மொழி - ௩ - ப - ௩ - திரு - க - பாட்டு.

["ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி
வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்
தெழிகுரலருவித்திருவேங்கடத்
தெழில்கொள்சோதியெந்தைதந்தைதந்தைக்கே."]

[" அவ.— முதற்பாட்டில் - திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலு மெல்லாவடிமைகளும் செய்யவேணுமென்கிறார்.

தொ.—௧0அ.—மேலுக்கவதாரிகை (உக்தத்தை) இத்யாதி.

மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (இச்சதுர்த்தி) என்றது- நாராயண பதத்திலேயிருக்கிற சதுர்த்தியென்றபடி.

பி.—௧0அ.— (உக்தத்தை ஹேதுவாகக்கொண்டு) - கைங்கர்யப்ரார்த்தனையே ஸ்வரூபமென்னுமத்தை (ஹேதுவாகக்கொண்டு) என்றபடி.

எ.—வ்யா.— (ஒழிவில்காலமெல்லாம்) முடிவில்லாதகாலமெல்லாம்; அநந்தமானகாலமெல்லாமென்றபடி. "ஒழிவில்காலமெல்லாமென்று— கீழ்கழிந்தகாலத்தையுங்கூட்டி யடிமைசெய்யப்பாரிக்கிறார்" என்றிங்ஙனே அதிப்ராஸங்கம் சொல்லுவாருமுண்டு. அதாகிறது - "கீழ்கழிந்தகாலத்தை மீட்கை" என்றொருபொருளில்லையிறே! "గోపజనం స్మరన్" "கோபஜநம்ஸ்மரந்" என்கிறபடியே - கீழ் கழிந்தகாலத்திலிழவுநெஞ்சிற் படாதபடி மறப்பிக்கையேயிறேயுள்ளது ; "నమేదుఃఖం" "நமேதுஃகம்" (எ அ0) இத்யாதி; ஆகையாலே இனி மேலுள்ளகாலமெல்லாமென்றபடி. (உடனாய்) காலமெல்லாம் வேண்டினவோபாதி தேசாநுபந்தமு மபேக்ஷிதமாயிருக்கிறதுகாணு மிவர்க்கு. இளையபெருமாள், படைவீட்டிலுமடிமைசெய்து வநவாஸத்திலுமடிமைசெய்தாப்போலே. (மன்னி) ஸர்வேஶ்வரனும் பிராட்டியுமாய்த் திரையைவிளைத்துக்கொண்டிருந்தாலும், படிக்கம் குத்துவிளக்குப்போலே அவ்வளவிலும் நின்று அந்தரங்கமான கார்த்திகளைப்பண்ணவேணும். இத்தால் - ஸர்வாவஸ்த்தைகளையும் நினைக்கிறது. "రమమాణావనేత్రయః" "ரமமாணுவநேத்ரயஃ" என்னக்கடவதிறே! இருவருக்குண்டானவநுபவத்திலே மூவரைச்சொல்லுகிறதிறே! அவ்விருவர்க்கும் பரஸ்பர ஸம்ஶ்லேஷத்தால்பிறக்கும் ரஸம்அச்சேர்த்தியைக் கண்டவனுக்கும்பிறக்கையாலே.(ஒழிவில்காலம்)இத்யாதி.ஸர்வகாலத்தையும் ஸர்வதேஶத்தையும் ஸர்வாவஸ்த்தையையும் நினைக்கிறது. ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் இத்திருவாய்மொழி பாடப்புக்கால், "ஒழிவில்காலமெல்லாம், காலமெலலாம், காலமெல்லாம்" என்றிங்ஙனே நெடும்போதெல்லாம்பாடி, மேல்போகமாட்டாதே அவ்வளவிலே தலைக்கட்டிப்போவராம். (வழுவிலாவடிமைசெய்யவேண்டும்) அடிமையிலொன்றுமொருவர்க்கும் கூறுகொடுக்கவொண்ணாதாய்த்து. எல்லாவடிமையும் நான் செய்யவேணும் - இளையபெருமாள், பிரியாதே காட்டிலேயுங்கூடப் போந்துசெய்த வடிமைகளும் செய்யவேணும் ; ஸ்ரீபரதாழ்வான், படைவீட்டிலேயிருந்திருந்து செய்தவடிமைகளும்செய்யவேணும். ஸ்ரீபரதாழ்வானை கைகேயி, "ராஜன்" என்ன, அப்போதந்த ஸ்வாதந்த்ர்யம் பொறுக்கமாட்டாமே பரிதலை பட்டாப்போலே "విలలాప" "விலலாப" (எ அக)என்று கூப்பிட்டானிறே! பாரதந்த்ர்யரஸமறிவார்க்கு "స్వాతంత్ర్యమనర్థం" "ஸ்வாதந்த்ர்யமநர்த்தம்" என்றுதோற்றுமிறே! "ఏభిశ్చసచివైస్సార్ధం" "ஏபிஶ்சஸசிவைஸ்ஸார்த்தம்" (எ அ௨ தன்னிற்காட்டிலும் கண்குழிவுடையா ரித்தனைபேருண்டாயிற்று. தன்னோடொத்த ஆற்றாமையுடையாரநேகரைக் கூட்டிக்கொண்டுபோந்தன்.எனக்கன்றோ"இவன்தம்பி" என்று ஸ்வாதந்த்ர்யம்பண்ணி அவர்க்கு;

எ.—கண்ணழிக்கலாவது, இவர்களுக்குச் சொல்லிற்றுச்செய்யவேணு மே-இவர்கள் தாங்களே கார்யத்தைவிசாரித்தறுதியிட்டு, 'நீரிப்படிசெய்யும்' என்று அவர்களேவினால் அப்படி செய்யவேண்டிவருமிறே யவர்க்கு. அவருடைய வ்யதிரேகத்தில் தனக்குண்டான ஆற்றாமையை அறிவிக்கப்போகிறானாகில் தனியேபோ யறிவிக்கவுமாமிறே! இவர்களை யெல்லாம் திரட்டிக்கொண்டுபோனதுக்குக் கருத்தென்னென்னில்; நம்மொருவர் முகத்துக் கண்ணீர்கண்டால் பொறுக்கமாட்டாதவர், தம்மைப்பிரிந்தபிரிவு பொறுக்கமாட்டாதே கண்ணுங் கண்ணீருமா யிருப்பாரித்தனைபேரைக்கண்டால் மீளாரோவென்னும் கருத்தாலே. பூசலுக்குப் போவானைப்போலே யானைகுதிரை யகப்படக்கொண்டு போகிறானிறே! அவற்றுக்கு மவ்வாற்றாமையுண்டாகையாலே. "ஶ்ரிதஸாபேக்ஷ:" "ஶ்ரிதஸாபேக்ஷ:"(எஅ௩)என்மேற்றுக்குத்தாமபேக்ஷித்துத் தருமவர், நானென்றலையாலே யிரந்தால்மறுப்பரோ? "மயா" "மயா" அத்தலை இத்தலையானால்செய்யாதொழிவரோ?"ப்ராது:" "ப்ராது:" "ஶுஶ்ரூஷு:" "பஸ்மஸாத்குருதாம்ஶிகீ"(எஅச)என்னும்படி, தம்பின் பிறந்தவனல்லலேனோநான். என்தம்பிமார்க்குதவாத என்னுடைமையை அக்கிக்குவிருந்திட்டேனென்றாரிறே! "யத்விநா" "யத்விநா" இத்யாதி. "ஶிஷ்யஸ்ய" "ஶிஷ்யஸ்ய" ப்ராதாவாகக்கூறுகொண்டு முடிசூடியிருக்குமவனோநான், அமோஹைரஹஸ்யமும் தம்மோடேயன்றோ அதிகரித்தது. "தாஸஸ்ய" "தாஸஸ்ய" ஶிஷ்யனாய் க்ரயவிக்ரயார்ஹனன்றிக் கேயிருந்தேனோ? ஆனபின்பு நானபேக்ஷித்தகாரியத்தை மறுப்பரோ? இதிறே கைங்கர்யத்தில் சாபலமுடையாரிருக்கும்படி. (வழுவிலாவடிமை) ஓரடிமைகுறையிலும் உண்டதுருக்காட்டாதாயிற்றிவர்க்கு. (செய்ய) முன்புமுண்டிறே இக்கைங்கர்யமனோரதம், இப்போதிவ்வளவால்போராது, அநுஷ்டானபர்யந்தமாகவேணும். (அடிமை செய்யவேண்டும்) கைங்கர்யமனோரதமேபிடித்து உத்தேஶ்யமாயிருக்கிறதாயிற்றிவர்க்கு. 'க்ஷுத்ரவிஷயாநுபவம்பண்ணவேணும்' என்றுபுக்கால், இரண்டுதலைக்குமொக்க ரஸமானபோகத்துக்கு ஒருதலையிலே த்ரவ்யத்தைநியமித்து, போககாலம்வருமளவும் லீலையாலேபோதுபோக்கி, போககாலம்வந்தவாறே புறப்படத்தள்ளிவிடுவர்கள்; இனி 'ஸ்வர்க்காநுபவம்பண்ணவேணும்' என்று புக்கால், "ஸ்வர்க்கேபி பாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர்நாஸ்தி நிர்வ்ருதி:" "ஸ்வர்க்கேபிபாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர் நாஸ்தி நிர்வ்ருதி:" (எஅரு) என்கிறபடியே; அருகே சிலர் நரகாநுபவம் பண்ணக்காண்கையாலே இருந்தநுபவிக்கிற இதுதானுமுண்டதுருக்காட்டாதபடியாயிருக்கும்;

எ.— இனித் தானவ்விருப்புக்கடியான புண்யமானது சாலிகை டுத்தநீர்போலே க்ஷயித்தவாறே "ஶ்ரீமஂ" "த்வம்ஸ" என்று முகம் கீழ்ப்படத்தள்ளுவர்கள்; இப்படி ஸ்வரூபத்துக்கநுரூபமாய் அஹங்காரமமகாரங்களடியாகவரு மிவ்வநுபவங்கள்போலன்றிக்கே, ஸ்வரூபத்தோடே சேர்ந்ததுமாய், அடிமைகொள்ளுகிறவனும் நித்யனாய், அடிமைசெய்கிறவனும் நித்யனாய், காலமும் நித்யமாய், தேசமும் நித்யமாய், ஒருகாலமும் மீளவேண்டாதபடி அபுநராவ்ருத்தி லக்ஷணமோக்ஷமாய், க்ஷுத்ரவிஷயாநுபவம்போலே துக்கமிஶ்ரமாயிருக்கையன்றிக்கே நிரதிஶயஸுகமாயிருப்பதொன்றிறேயிது. (நாம்) தம்திருவுள்ளத்தையுங்கூட்டி - நாமென்கிறாராதல்; அன்றிக்கே, கேசவன்றமர்க்குப்பின்பு இவர்தாம் தனியரல்லாமையாலே, திருவுள்ளம்போலேயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களையுங் கூட்டிக்கொண்டு - நாமென்கிறாராதல். (தெழிகுரல்) இத்யாதி. அடிமைசெய்யக்கோலுகிற இவருடைய பாரிப்பேயன்றிக்கே, அடிமைகொள்ளக்கோலுகிறவனுடைய பாரிப்பிருக்கிறபடி சொல்லுகிறதுமேல்; இருந்தவிடத்திலேயிருந்து மநோரதிக்கிறாரித்தனையிறேயிவர்; அவன்தனக்குக்கலவிருக்கையான கலங்காப்பெருநகரத்தைவிட்டு இவ்வளவும்வரவந்து திருமலையிலேநின்று, தன்னநுஷ்டானத்தாலே தெரிவிக்கிறானிறே தன்பாரிப்பை. (தெழிகுரல்) இத்யாதி. கம்பீரமான த்வநியையுடைத்தான அருவியையுடைய. திருவருவியின் த்வநியுங்கூட உபாதேயமாயிருக்கிறதாயிற்றிவர்க்கு, அந்நிலத்திலேயுள்ள தொன்றாகையாலே. "கைங்கர்யருசியுடையார் அடிமைசெய்யவாருங்கோள்" என்றாற்போலே யிருக்கிறதாயிற்றிவர்க்கு இத்த்வநி. இவர்க்கிந்த திருவருவியின் த்வநியுங்கூட உத்தேஶ்யமாகச்சொல்லவேணுமோ, "சிலைக்கைவேடர்தெழிப்பறாத" என்று அங்குத்தைத் திருவேடர்பறிக்கிறபோதை ஆரவாரமுமகப்பட உத்தேஶ்யமாயிருக்கச்செய்தே. திருவேங்கடயாத்ரைபோகிறவர்களைப்பறிக்கிற வேடருடைய ஆரவாரமுமுத்தேஶ்யமாயிருக்கிறதிறே அந்நிலத்திலுள்ளதாகையாலே. (திருவேங்கடத்தெழில்கொள்சோதி) 'அடிமைகொள்ளுகைக்குப் பாங்கானநிலமிது' என்று அவன்வந்துவர்த்திக்கிற தேஶமாயிற்று. இஶ்ஶரீர ஸம்பந்தமற்று அர்ச்சிராதிமார்க்கத்தாலே ஒரு தேஶவிஶேஷத்திலே போனால் இவன் செய்யக்கடவ அடிமையை இந்நிலத்திலிவனுக்குச் செய்யலாம்படி அவன்வந்து வர்த்திக்கிறதேஶமிறே! (எழில்கொள்சோதி) அஸந்நிஹிதனேயாகிலும் மேல்விழவேண்டும்படியாயிற்று வடிவழகிருப்பது. (வேங்கடத்தெழில்கொள்சோதி) வானோர்சோதியையும் நீலாழிச்சோதியையும் வ்யாவர்த்திக்கிறது;

மூ.—௧0௬. "கண்ணாரக்கண்டுகழிவதோர்காதலுற்றார்க்கு முண்டோகண்கள் துஞ்சுதல்" என்கிறபடியே

வ்யா.—௧0௬.—இனி, இந்த கைங்கர்ய ப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கைக் குறுப்பான ப்ராப்யருசியுடையார்படியை அருளிச்செய்கிறார் ("கண்ணாரக்கண்டு") என்று தொடங்கி. அதாவது-"இமையோர்கள் குழாங்தொழுவதுஞ் சூழ்வதுஞ் செய்தொல்லைமாலைக் கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்குமுண்டோகண்கள் துஞ்சுதல்" என்று நித்ய ஸூரிகளுடைய திரளானது, நிரந்தரம் அநுபவம் பண்ணுகிற ஸர்வேச்வரனைக் கண்கள் நிறையும்படி, கண்டொழியக் கழியாதபடியான காதலிலே நிலைநின்றவர்களுக்கும், கண்களுறங்குதலுண்டோ? என்னுமாப்போலே,

---

ஏ.—வானோர்சோதி பகல்விளக்குப்பட்டிருக்கும், நீலாழிச்சோதி கடல்கொண்டுகிடக்கும், வேங்கடத்தெழில்கொள்சோதி குன்றத்திட்ட விளக்காயிருக்கும்; வேங்கடமேயவிளக்கிறே. அந்நிலம் மிகியாலே அழகுநிறம்பெற்றபடி. (எந்தை) விரூபனேயாகிலும் விடவொண்ணாதபடியாயிற்று ப்ராப்தியிருப்பது. ஸௌலப்யத்தாலு மழகாலும் தம்மைத்தோற்பித்தபடியென்றுமாம். (தந்தைதந்தைக்கே) பரமசேஷியென்றபடி.

இப்பாட்டில் - ப்ராப்யப்ரதாநமான திருமந்த்ரத்தி லர்த்தத்தையருளிச்செய்கிறார். ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி வழுவிலாவடிமைசெய்யவேண்டுமென்கிறவித்தால் - சதுர்த்தியில் ப்ரார்த்தனையைச்சொல்லுகிறது; நாமென்கிறவிடம் - ப்ரணவ ப்ரதிபாத்யனான இவனுடைய ஸ்வரூபத்தைச்சொல்லுகிறது; "இதுஸப்தஸ்வபாவத்தைக்கொண்டு சொன்னோம்" என்றருளிச்செய்தருளின வார்த்தை; தெழிகுரலித்யாதியால்-நாராயணபதார்த்தத்தை யருளிச்செய்கிறார்; ப்ராப்தவிஷயத்தில் பண்ணும் கைங்கர்யமிறே ப்ராப்யமாவது; இனி, ஸௌலப்யமும் வடிவழகும் ஸ்வாமித்வமுமெல்லாம் - நாராயணபதத்துக்கர்த்தமிறே"! ... ... *

௧0௬.— மேனுக்கவதாரிகை (இனி) என்று தொடங்கி.

["கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோகண்கள்துஞ்சுதல்" என்கிறபடியே] - (நித்யஸூரிகளுடைய திரளானது நிரந்தரம் அநுபவம்பண்ணுகிறஸர்வேச்வரனை கண்கள்நிறையும்படி கண்டொழிய க்கழியாதபடியான காதலிலே நிலைநின்றவர்களுக்கும் கண்கள் உறங்குதலுண்டோ? என்னுமாப்போலே,)

தொ.—௧0௬.—மேனுக்கவதாரிகை (இனி) இத்யாதி. (இனி) என்றது-கைங்கர்ய ப்ரார்த்தனையைச்சொன்ன அநந்தரமென்றபடி. (இடைவிடாமல்) என்றது-மத்யேவிச்சேதியாமலென்றபடி. (உறுப்பான) என்றது-யோக்யமானவென்றபடி. (படியை) என்றது-ரீதியையென்றபடி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (காதலிலே) என்றது-அபேக்ஷயிலே என்றபடி. (நிலைநின்றவர்களுக்கு) என்றது-நிலையாய் நின்றவர்களுக்கென்றபடி (உறங்குதல்) என்றது - நித்ரையென்றபடி.

ஏ.—[காண்பதற்கு முன்புறக்கமில்லை] - (விஷயத்தைக் காண்பதற்கு முன்பு ஜ்ஞாநஸங்கோசரூபமான உறக்கமில்லை) ; [கண்டால்] - (கண்டகாலத்தில்), [" ஸதாபஶ்யந்தி" ஆகையாலே] - (ஸதாநுபவம் பண்ணுகையாலே), [உறக்கமில்லை] என்று மூலார்த்தம்.

திருவிருத்தம் - ௯௭ - பாட்டு.

[" எழுவதும்மீண்டேபடுவதும் பட்டெனையூழிகள்போய்க்
கழிவதுங்கண்டுகண்டெள்கலல்லாலிமையோர்கள்குழாம்
தொழுவதுஞ்சூழ்வதுஞ்செய்தொல்லைமாலைக்கண்ணாரக்கண்டு
கழிவதோர்காதலுற்றார்க்குமுண்டோகண்கள்துஞ்சுதலே".]

[" பெருங்கிறியானையல்லால் அடியேன் நெஞ்சம்பேணலதே" என்றும், " நின்கண்வேட்கையெழுவிப்பனே" என்றும் இவ்விஷயத்திலே இங்ஙனேகிடந்து அலமாவாநின்றீர் ; இவ்விஷயத்தில் கைவைக்கில் உமக்காகவும் பிறர்க்காகவும் க்லேஶம்தவிராதாயிராநின்றது ; அல்லாதாரைக்கண்டீரே புறம்புள்ளவிஷயங்களில் நெஞ்சைவைத்து அவற்றாலே உண்டு உடுத்து உறங்கிப்போதுபோக்குகிறபடி. அப்படியே நீரும் நம்பக்கல்நின்றும் நெஞ்சைமாற்றி புறம்பேவைத்துப்போதுபோக்கவல்லீரே என்ன, ஓம் அதுசெய்யலாய்த்திறே ! உன்பக்கல் கைவைத்திலேனாகில் உன்னைக்கண்டாலல்லது மீளாத ஆசையையுடைய எனக்கு வேறொன்றால் ஆறியிருக்கப்போமோ என்கிறார். பின்னை அல்லாதார் அங்ஙனே செய்யும்படியென் என்ன, அவர்கள் உன்னை அறியாமையாலே யென்கிறார்.

வ்யா.— (எழுவதும்) இத்யாதி. இரண்டுபடி; உத்பந்நமாவது, அநந்தரத்திலே நஶிப்பது ; உத்பந்நமாய் சிலநாளில் ஜீவிப்பது, பின்னை நஶிப்பதுமாயிறே ! இருப்பது. "ஜாயஸ்வம்ரியஸ்வ" " ஜாயஸ்வம்ரியஸ்வ" (சாந்தோ) என்கிறபடியே உத்பத்திக்ஷணமே விநாஶக்ஷணமாயிருப்பன சிலவும், கல்பாதியிலே உண்டாய் கல்பாந்தத்திலே விநாஶமாயிருப்பார் சிலருமாயிறே! இருப்பது. அவையெல்லாம் உருவெளியாய்த் தோற்றுகிறதாய்த்திவர்க்கு.

மூ.— காண்பதற்குமுன்பு உறக்கமில்லை ; கண்டால் "ஸதாபஶ்யந்தி" ஆகையாலே உறக்கமில்லை.

மூ.—கக0. "பழுதே

வ்யா.— விஷயத்தைக் காண்பதற்குமுன்பு ஜ்ஞாநஸங்கோசரூபமான (உறக்கமில்லை); கண்டகாலத்தில் ("ஸதாபஶ்யந்தி") என்கிறபடியே ஸதாநுபவம் பண்ணுகையாலே (உறக்கமில்லை) என்கை.

கக0.— இன்னமும் ஒரு ஹேதுவாலே இவனுக் குறக்கமில்லாமையை அருளிச்செய்கிறார்

("பழுதே") என்று துடங்கி. அதாவது-

எ.—(கண்டுகண்டெள்கலல்லால்) இப்படியிருக்கிற இதினுடைய அவஸ்தையைக்கண்டால் இழக்கலாயிருக்கும் ; உன்பக்கலிலே கைவைத்தார்க்கு விடப்போமோ ? எள்கையாகிறது - இகழ்கை, அவற்றிலே விரக்தராகலாமிறே ! அவற்றின்தோஷதர்ஶநம்பண்ணினவாறே. (எழுவதும்) இத்யாதி. அன்றிக்கே, உதிப்பது அஸ்தமிப்பதாய் இப்படி அநேகநாள் கழியக்காணுகின்றாலும் எள்கலல்லால் - ஈடுபடுமித்தனை போக்கி நாள்சென்றதென்றுகை வாங்குப்படியாயோ உன்படியிருப்பது. இப்போது எழுகையாவது-இரங்குகை. இவை ஸதோஷமாயிருக்கையாலே விடலாம் ; விலக்ஷணவிஷயமானத்திலே பாவபந்தமுண்டானால் விடப்போமோ ? (இமையோர்) இத்யாதி. வேறொன்றிலே நெஞ்சுவைக்கக்கடவரின்றிக்கேயிருக்கிற நித்யஸூரிகளுடைய திரளானது "నిత్యాఞ్జలిపుటాహృష్టాః" "நித்யாஞ்சலிபுடாஹ்ருஷ்டா:", என்கிறபடியே தொழுவது - "నమః పురస్తాదథ పృష్ఠతస్తే నమోస్తు తే," "நம:புரஸ்தாதத ப்ருஷ்டதஸ்தே நமோஸ்துதே" (எ அஎ) என்கிறபடியே, முன்னேவருவது, பின்னேவருதாய் அலமந்து, இப்படிசெய்து போருகையாலே, இதுவே யாத்ரையாம்படி பழையனை ஸர்வேஶ்வரனை. (கண்ணாரக்கண்டு) - "గాత్రైః శోకాభికర్శితైః సంస్పృశేయం" "காத்ரைஶ்ஶோகாபிகர்ஶிதைஸ்ஸம்ஸ்பர்ஶேயம்" (எஅஅ) என்கிறபடியே, தான் வேணுமென்னுமாசை கண்டாலல்லது கழியாதபடியாயிருக்கிறவர்களுக்கும் காணவேணும் என்றகாதல் கண்டவாறேதீருமே. மேல்வருவது - விஷயாதீநமானகாதலிறே ! (உற்றார்க்கும்) - காதல் மூருடுகொளுந்தினார்க்கும். (உண்டோ) இத்யாதி. ஸ்வதந்த்ரரான பெருமாள் உறங்கினார் என்று கேட்குமித்தனைபோக்கி அவரை அநுவர்த்தித்துப்போன இளையபெருமாளுக்குக் கண்ணுறங்கிற்றோ? பகவத்விஷயத்தில் கைவைத்தாரிலிதுக்கு முன்கண்ணுறங்கினாருண்டோ என்று கேட்டறிவாருண்டோ ?"].

கக0.—மேலுக்கவதாரிகை (இன்னமுமொரு ஹேதுவாலே) என்று துடங்கி.

தொ.— கக0.—மேலுக்கவதாரிகை (இன்னமும்) இத்யாதி. (இன்னமும்) என்றது-இதுக்குமேலேயு மென்றபடி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி.

மூ.—பலபகலும் போயினவென்று" இழந்தநாளுக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்கவிரகில்லை.

வ்யா.—"செங்கணடலோதவண்ணரடி அரவணைமேற் கண்டு தொழுதேன் (பலபகலும் பழுதேபோயினவென்று) அழுதேன்" என்று, விஷயத்தைக் கண்டநுபவித்தவாறே இப்படி அநுபவிக்கைக்குடலான அநேககாலமெல்லாம் வ்யர்த்தமே போய்விட்டதே என்று இழந்தநாளை நினைத்து க்லேசித்துக் (கூப்பிடுகிறவனுக்கு) மேலுள்ளநாளில் உறக்கம்வர வழியில்லை என்கை.

எ.—["பலபகலும் பழுதேபோயின" என்று] – (அநுபவிக்கைக்குடலான அநேககாலமெல்லாம் வ்யர்த்தமே போய்விட்டதே என்று), [இழந்தநாளுக்குக் கூப்பிடுகிறவனுக்கு] – (இழந்தநாளைநினைத்துக்லேசித்து)க் [கூப்பிடுகிறவனுக்கு], [உறங்கவிரகில்லை] – (மேல் உள்ளநாளில் உறக்கம் வரவழியில்லையென்கை) என்று மூலார்த்தம்.

முதல்திருவந்தாதி – கசு – பாட்டு.

["பழுதேபலபகலும்போயினவென்றஞ்சி
யழுதேனரவணைமேற்கண்டு—தொழுதேன்
கடலோதங்காலலைப்பக் கண்வளருஞ்செங்க
ணடலோதவண்ணரடி".]

["அவ.— இதர தேவதைகளைப் பற்றி இவ்விஷயத்தை யிழந்த நாட்டாரிழவை பரத்வநிஷ்கர்ஷமுகத்தாலே பரிஹரித்தவர், அநாதிகாலம் இதர தேவதைகளையும், இதர ஸாதநங்களையும் பற்றி இவ்விஷயத்தை அகன்றுதிரிந்த தம் இழவைநினைத்து சோகிக்கிறார்.

தொ.—("செங்கண்")–பரத்துவத்தாலும் வாத்ஸல்யத்தாலும் சிவந்த கண்களையுடையவராய், ("அடலோதவண்ணரடி")–ஆச்ரிதவிரோதிநிரஸநத்துக்குடலாயிருக்கையுடையவராய், ஸமுத்ரம்போன்ற காம்பீர்யத்தையும் திருமேனி வர்ணத்தையுமுடையரான எம்பெருமானுடைய திருவடிகளை, திருவநந்தாழ்வானாகிற படுக்கைமேல் கண்டு ஸேவித்தேன்; இப்படி கண்டு ஸேவிக்கைக்கு உடலான அநேகதிநங்களும் வ்யர்த்தமே போயிற்றேயென்று க்லேசித்தேன், என்று பாசுரார்த்தம். (இப்படி) என்றது-கண்டேனென்றபடி.

௭.—ப - ரை. (ஸௌகுமார்யாநுரூபமாக) கடல் ஓதம்- கடலின் சிறு
திவலைகளானவை, (தொடைகுத்துவாரைப்போலே அநுகூலமாக) கா
ல் அலைப்ப - திருவடிகளை ஸ்பர்சிக்க, (அத்தாலே) கண்வளரும் - பள்
ளிகொண்டருளுமவனுமாய், (வாத்ஸல்யத்தாலும் ஐச்வர்யத்தாலும்)
செம்-குதறிச்சிவந்த, கண் - திருக்கண்களையுடையனுமாய், அடல்-
(அநுபவிக்கப்புக்கவர்களை அபிபவித்து) எழ வீசுகிற, ஓதம் - (ஸௌந்
தர்ய) தரங்கங்களோடு கூடின, வண்ணர்-வடிவையுடையனுமானவனு
டைய, அடி-திருவடிகளை, (வெளுத்தநிறத்தையுடையனான) அரவு-திரு
வநந்தாழ்வானாகிற, அணைமேல்-படுக்கையின்மேலே, (ஜ்ஞாநஸாக்ஷா
த்காரமுகேந) கண்டு - கண்டநுபவித்து, தொழுதேன் - (ததநந்தரபா
வியான) தொழுகையிலும் அந்வயிக்கப்பெற்றேன்; (இப்படி அநுபவ
த்தோடே அடிக்கழஞ்சுபெற்று செல்லுகைக்குறுப்பான) பலபகலும்-
கீழ்கழிந்த காலமெல்லாம், (ஒன்றொழியாதபடி) பழுதே- வ்யர்த்தமே,
போயின என்று - போய்விட்டதே என்று, அஞ்சி-(கண்ணநீர்) வெள்
ளமிட இருந்து, அழுதேன் - சோகித்தேன்.

கீழ் இழவுக்கு அடியான நம்முடைய கர்மம் இப்போதும் குறைய
ழியாதே கிடக்கையாலே, மேல் உள்ளகாலத்திலும் இவ்வநுபவத்துக்
குக்குறைத்தல்வரில் செய்வது என்? என்று பயப்பட்டு அழுதேன்.

அவ.— நல்லான் அருள்பெற்ற எனக்கு சோகம் உண்டாய்த்து
என்கிறார்.

வ்யா.— (பழுதே பல பகலும் போயினவென்றஞ்சி யழுதேன்)
போனகாலம் அநாதி, வருங்காலம் அநந்தம்; இத்தோடொத்தகால
மிறே! போயிற்று என்று அழுதேன். இழவுக்கு அழுதாராகில் அச்
சமாவது என்? வருமத்தைக்குறித்தன்றோ அஞ்சிற்று என்னில்; அ
திகாரி நானாகில் போனகாலம் போலேயாகிறதோ வருங்காலமும் என்
கிறார். “యశ్చ రామం న పశ్యేత్తు యం చ రామో న పశ్యతి। నిన్దితస్స వసేల్లోకే స్వాత్మాప్యే
నం విగర్హతే॥” “யச்சராமம்நபச்யேத்துயம்சராமோநபச்யதி।நிந்திதஸ்
ஸவஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம்விகர்ஹதே॥”(௭ ௮௯)என்றுசொ
ல்லுகிறது, பெருமானுடைய ஒருநாளை இழவுக்கிறே! (கடலோதங்கா
லலைப்ப)திருவடிகளை கடலோதமானது தொடைகுத்துமாப்போலே
அலைப்ப. (கண்வளரும்)இத்யாதி. (அரவணைமேல் கண்டுதொழுதேன்)
தகட்டில்அழுத்தின மாணிக்கம்போலே. பண்டு உபாயாந்தரங்களிலும்,
தேவதாந்தரங்களிலும் ப்ரவணனாய் இழந்தேனென்று சொல்லுகிறார்.
(பழுதே) பழுதும் பழுதல்லாததும் கூடப்பெற்றேனோ? (பலபகல்)
இழந்த அநாதிகாலம் பலவாய் அதுக்கு அந்தரம் அநந்தகாலமானபடி.

மூ.—௧௧௧. "அன்றுநான்பிறந்திலேன் பிறந்தபின்மறந்திலேன்" என்றுநின்றார்களிறே!

வ்யா.—௧௧௧.—இன்னமும் இவ்விஷயத்தில் அறிவு பிறந்தார்க்கு மறக்கப்போகாதென்னுமத்தை இசைவிக்கிறார்.

("அன்றுநான்") என்று தொடங்கி. அதாவது–அவனென்னைப் பெறுகைக்காகத் திருப்பதிகளிலே, நிற்பது இருப்பது கிடப்பதாகா நிற்க, அக்காலத்தில் நான் ஜ்ஞாநலாபரூபமான ஜந்மத்தையுடையனாகப் பெற்றிலேன்; அந்தஜந்மமுண்டானபின்பு, அவனை யொருக்காலு ("மறந்திலேன்") என்று சொல்லா (நின்றார்களிறே!) என்கை.

எ.—(போயின) போன நீர்களைக்கோலவோ? வருங்காலமும் பழைய காலமும் ஒன்று ; பழையநானே இன்னம் அப்படியாகில் செய்வதென் என்கிறார். "ஈஸ்ஷ்லீச" "காலேஷ்வபிச" (எ௬0) (அரவணைமேல்கண்டு)பர்யங்க வித்யையிற்படியே பூர்ணமாகக்கண்டேன். (கண்டுதொழுதேன்) கண்டால் செய்யுந்தொழில். (காலலைப்ப) சிறு திவலைதொடைகுத்த. (செங்கண்) வாத்ஸல்யந்தோற்றுகை. (அடலோதம்) நெருங்கின ஓதம்."] ... ...

௧௧௧.— மேல்வாக்யத்துக்கு அவதாரிகை (இன்னமும்) என்று துடங்கி.

(இசைவிக்கிறார்) என்றது - அறிவிக்கிறார் என்றபடி.

["அன்று நான்பிறந்திலேன்"] - அவன் என்னைப்பெறுகைக்காகத் திருப்பதிகளிலே நிற்பது இருப்பது கிடப்பதாகாநிற்க அக்காலத்தில், நான் ஜ்ஞாநலாபரூபமான ஜந்மத்தையுடையனாகப் பெற்றிலேன்); ["பிறந்தபின் மறந்திலேன்" என்றுநின்றார்களிறே!]-(அந்த ஜந்மமுண்டானபின்பு அவனை ஒருக்காலும் மறந்திலேனென்று சொல்லாநின்றார்களிறே!) என்று மூலார்த்தம்.

தொ.—௧௧௧.—மேலுக்கவதாரிகை(இன்னமும்)இத்யாதி. (இன்னமும்) என்றது - இதுக்குமேலேயு மென்றபடி. (இவ்விஷயத்தி லறிவுபிறந்தார்க்கு) என்றது–ப்ராப்யமான பகவத்விஷயத்தில் வைலக்ஷண்யஜ்ஞாநம் பிறந்தார்க்கு என்றபடி.(இசைவிக்கிறார்)என்றது–ஸம்மதிப்பிக்கிறாரென்றபடி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (பெறுகைக்காக) என்றது - லபிக்கைக்காக வென்றபடி. (அக்காலத்தில்) என்றது–நிற்பதும் இருப்பதும் கிடப்பதும் செய்கிறகாலத்திலே யென்றபடி. (அந்தஜந்மம்)என்றது-ஜ்ஞாநலாபரூபமான ஜந்மமென்றபடி.(அவனை) என்றது-ப்ராப்யனான எம்பெருமானையென்றபடி.

மூ.—ககஉ. இவ்வடிமைதான் " ஒழிவில்காலமெல்லாம்

வ்யா.—ஆக ப்ராப்யவைலக்ஷண்ய ஜ்ஞாநம்பிறந்தார்படி இதுவாகையா லே, இந்த கைங்கர்ய ப்ரார்த்தனை இடைவிடாமல் நடக்கும் என்று கருத்து.

ககஉ.—இனி, இந்த கைங்கர்யத்துக்கு தேசகாலாதி நியமமில் லாமையை அருளிச்செய்கிறார்

(இவ்வடிமைதான்) என்று துடங்கி. அதாவது-இவ்வாத்மாவினு டைய ஸ்வரூபாநுரூப புருஷார்த்தமான இந்த கைங்கர்யந்தான், ("ஒழிவில்காலமெல்லாம்

எ.—பலிதார்த்தத்தை அருளிச்செய்கிறார்

(ஆக) என்று துடங்கி.

ககஉ.— மேலுக்கவதாரிகை (இனி) என்றுதுடங்கி.

[இவ்வடிமைதான்] - (இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபாநுரூப புரு ஷார்த்தமான இந்த கைங்கர்யந்தான்), [" ஒழிவில்காலமெல்லாம்"]- (ஒழிவில்லாதகாலமெல்லாம்),

---

தொ.—[ஆய] என்றுதுடங்கி இவ்வளவும் அவர் அருளிச்செய்த அர்த் தத்தை நிகமித்தருளுகிறார் (ஆக) இத்யாதியால். (ஆக) என்றது-கீழ் ச்சொன்னஹேதுக்கள் எல்லாவற்றாலுமென்றபடி. கீழ்ச்சொன்ன ஹே துக்களாவன-சதுர்த்தியாலே கைங்கர்ய ப்ரார்த்தனையைச் சொல்லு கையும், கைங்கர்யந்தானில்லாதபோது சேஷத்வமில்லையாம்படி சேஷத்வோபஷ்டம்பகமாயிருக்கையும், இச்சேஷத்வந்தான் ஆத் மாவுக்கு அஸாதாரண நிரூபகமாயிருக்கையும், ஆத்மா தான் நித்ய னாயிருக்கையும், ப்ராப்யவைலக்ஷண்யஜ்ஞாநமடியாக ப்ராப்யருசி யுடையார்படிகளும். ஆக ப்ரமாணப்ரமேய ப்ரமாதாக்களை அருளிச் செய்தாராய்த்து.

ககஉ.—மேலுக்கவதாரிகை (இனி) இத்யாதி. (இனி) என்றது- கைங்கர்யப்ரார்த்தனையை யருளிச்செய்த அநந்தரமென்றபடி. (இந்த கைங்கர்யத்துக்கு) என்றது—நித்யமான ஆத்மஸ்வரூபத்துக்கு நிரூபக மான சேஷத்வத்துக்கு உபஷ்டம்பகமாய், அத ஏவ நித்யப்ரார்த் தநாவிஷயமான கைங்கர்யத்துக்கென்றபடி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (ஸ்வரூபாநுரூப)மான என்றது-சேஷத்வபாரதந்த்ர்யங்க ளாகிற ஸ்வரூபாநுரூபமாய், அத ஏவ ஸ்வப்ரயோஜநத்வஸ்வகர்த்ரு கத்வபுத்யகோசரமாய், பரப்ரயோஜநத்வைகவேஷமாய் பரநியோஜ்ய மான வென்றபடி. (புருஷார்த்தமான) என்றது-புருஷார்த்தப்ரார்த்த நாவிஷயமானவென்றபடி.

மூ.—உடனாய்மன்னி'' என்கிறபடியே, ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்த்தைகளிலும் அநுவர்த்திக்கும்.

வ்யா.— உடனாய்மன்னி'') என்று, ''ஒழிவில்லாத காலமெல்லாம் ஸர்வதேஶத்திலும் (உடனாய்) ஸர்வாவஸ்த்தையிலும்பிரியாது நின்று'' என்கிறபடியே, ஸர்வதேஶத்திலும், ஸர்வகாலத்திலும், ஸர்வாவஸ்த்தையிலும் நடந்து செல்லும் என்கை.

ஏ.— [''உடனாய்''] - (ஸர்வதேஶத்திலும்) உடன்பட்டவனாய், [''மன்னி''] - (ஸர்வாவஸ்த்தையிலும் பிரியாதுநின்று), [என்கிறபடியே ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்த்தைகளிலும்] [அநுவர்த்திக்கும்] - (நடந்துசெல்லும்) என்று மூலார்த்தம்.

[''ஒழிவில்காலமெல்லாம்''] என்கிறபாசுரோதாஹரணத்துக்கும், [ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்த்தைகளிலும் அநுவர்த்திக்கும்] என்கிற ஸ்ரீஸூக்திக்கும் நாராயணபதத்தில் ஸூசகம்; போக்த்ர் போக்யரூபமான ஆத்ம பரமாத்மாக்களை நித்யராகச்சொல்லுகையாலே ஸர்வகாலத்திலும் உண்டாம்; இந்த ஸ்வரூபங்களுடைய அஸங்கோசத்தாலும் அபரிச்சேதத்தாலும் ஸர்வதேஶத்திலு முண்டாம்; அப்ரதக்ஷித்த ஸம்பந்தமாகையாலே ஸர்வாவஸ்த்தைகளிலும் அநுஸஞ்சரண முண்டாகையாலே ஸர்வாவஸ்த்தமாயிருக்குமென்று கண்டுகொள்வது.

தொ.—[''உடனாய்மன்னி'']என்கையாலே (ஸர்வதேஶத்திலும் ஸர்வாவஸ்த்தையிலும்) என்கிற அர்த்தத்தைக்காட்டுமோவென்னில்; [''உடனு'']கையாவது-கூடியிருக்கையாகையாலும், [''மன்'']னுதலாவது-ஒரு வஸ்து என்னலாம்படியிருக்கையாகையாலும், அவனோடே ஏகவஸ்துவென்னலாம்படி கலந்திருக்கும் வஸ்துவுக்கு அவனிருக்கும்(தேஶத்திலும்) அவனுக்குண்டாம் அவஸ்த்தைகள்தோறும் அவனோடு கூடியிருக்க நியதமாகையாலும், [''உடனாய் மன்னி''] என்றால் ஸர்வதேஶ ஸர்வாவஸ்த்தைகளையுங்காட்டும்.

மூ.—கககூ. எட்டிழையாய் மூன்றுசரடாயிருப்பதொரு மங்கள ஸூத்ரம்போலே திருமந்த்ரம்.

வ்யா.— கககூ.—பார்யைக்கு மங்களஸூத்ரதாரணம், பர்த்தாவுக்கு அநந்யார்ஹை என்று காட்டுமாப்போலே, திருமந்த்ரதாரணம், சேதநர்க்கு பகவதநந்யார்ஹத்வ ப்ரகாசகமென்னுமிடம் தோற்ற, இத்தை யொருமங்களஸூத்ரமாக நிருபித்தருளிச்செய்கிறார்

(எட்டிழையாய்) என்றுதுடங்கி. அதாவது – பதினறிழையாய், இரண்டுசரடாயிருக்கும் லௌகிகமானமங்களஸூத்ரம்போலன்றிக்கே, (எட்டிழையாய், மூன்றுசரடாயிருப்பதொரு மங்களஸூத்ரம் போலே,) எட்டுத்திருவக்ஷரமாய், மூன்றுபதமாயிருக்கிற இத்திருமந்த்ரமென்கை.

எ.—கககூ.– மேல்வாக்யத்துக்கவதாரிகை(பார்யைக்கு)என்றுதுடங்கி.

(பகவதநந்யார்ஹத்வ ப்ரகாசகமென்னுமிடம் தோற்ற) என்றது— உகாரத்தில் சொன்ன பகவதநந்யார்ஹத்வ ப்ரகாசகமென்னுமர்த்தம் தோற்றவென்றபடி.

[எட்டிழையாய் மூன்றுசரடா யிருப்பதொரு மங்களஸூத்ரம் போலே திருமந்த்ரம்] –(எட்டுத்திருவக்ஷரமாய் மூன்றுபதமா யிருக்கிற, [இத்திருமந்த்ரம்] என்று மூலார்த்தம்.

தொ.—கககூ.—மேலுக்கவதாரிகை(பார்யைக்கு)இத்யாதி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (லௌகிகமான மங்களஸூத்ரம்) என்றது-லோகத்திலுள்ளார் ஆதரிக்கும் மங்களஸூத்ரமென்றபடி. [எட்டிழையாய், மூன்றுசரடாயிருக்கும் மங்களஸூத்ரம்] மதாந்தரஸ்த்தர்பக்கலிலே காணலாம். நம்மாசார்யர்கள், திருமந்த்ரம் எட்டுத் திருவக்ஷரமாய், த்விதீயமந்த்ரமாயிருக்கைக்கு ஸ்மாரகமாகவாய்த்து ஒன்பதுவடமான மங்களஸூத்ரத்தை தரிப்பிப்பது.

மூ.—ககச. இத்தால் ஈஶ்வரன் ஆத்மாக்களுக்குப் பதியாய் ரக்ஷிக்கும் என்கிறது.

வ்யா.—ககச.— இப்படி நிரூபித்துச்சொன்ன இத்தால் எவ்வர்த்தம் சொல்லுகிறதென்ன அருளிச்செய்கிறார்

(இத்தால்) என்று துடங்கி. அதாவது - இத்தை மங்களஸூத்ரமாகச்சொன்ன (இத்தால்) ஈஶ்வரன் இத்தோடேந்வயமுடைய (ஆத்மாக்களுக்குப்பதியாய்) நின்றுகொண்டு (ரக்ஷிக்கும்) என்று சொல்லுகிறதென்கை.

எ.— ககச.—மேலுக்கவதாரிகை (இப்படி) இத்யாதி.

[ஆத்மாக்களுக்குப்பதியாய் ரக்ஷிக்கும்] என்றருளிச்செய்தது — “స ఏవ వాసుదేవో హి సాక్షాత్పురుష ఉచ్యతే। స్త్రీప్రాయమితరత్సర్వం జగత్ బ్రహ్మపురస్సరం॥ నైసర్గికత్వభర్తృత్వాదాత్మేశత్వాజ్జగత్పతేః।” “ஸஏவவாஸுதேவோஹிஸாக்ஷாத்புருஷஉச்யதே । ஸ்த்ரீப்ராயமிதரத்ஸர்வம் ஜகத்ப்ரஹ்மபுரஸ்ஸரம்॥ நைஸர்கிகத்வபர்த்ர்த்வாதாத்மேஶத்வாஜ்ஜகத்பதே:।” (எகூக) என்னும் ப்ரமாணத்தைத் திருவுள்ளம்பற்றி. திருமந்த்ரத்தை மங்களஸூத்ரமாக நிரூபித்தத்தால் அதிலே த்வயமாகிற அச்சுத்தாலியும், மூன்றாந்தாலியும், வைரமணி ஸ்த்தாநத்திலே முப்பத்திரண்டு எழுத்தான சரமஶ்லோகத்தையுஞ்சேர்த்து “ఆచ్ఛాద్యనూతనం వాసో వరో మాంగళ్యసూత్రకం। సువర్ణమణిసంయుక్తం బధ్నీయాత్ కన్యకాగళే॥” “ஆச்சாத்யநூதநம்வாஸோ வரோமாங்கள்யஸூத்ரகம் । ஸுவர்ணமணிஸம்யுக்தம் பத்நீயாத்கந்யகாகளே॥” (எகூஉ) என்கிறபடியே—ஆத்மாக்களுக்கநந்யார்ஹத்வப்ரகாஶகமாகக் கட்டினான் என்றருளிச்செய்வர்; “స్వామిత్వాత్మత్వశేషిత్వ పుంస్త్వాద్యాస్స్వామినో గుణాః। స్వత్వదాసత్వకాయత్వ శేషత్వస్త్రీత్వదాయినః॥” “ஸ்வாமித்வாத்மத்வஶேஷித்வபும்ஸ்த்வாத்யாஸ்ஸ்வாமிநோகுணா:। ஸ்வத்வதாஸத்வகாயத்வஶேஷத்வ ஸ்த்ரீத்வதாயிந:॥” (எகூங).

தொ.—ககச.—மேலுக்கவதாரிகை (இப்படி) இத்யாதி. (இப்படி) என்றது - மங்களஸூத்ரமாகவென்றபடி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (இத்தோடு) என்றது - இத்திருமந்த்ரத்தோடேயென்றபடி. (அந்வயமுடைய) என்றது - ஆசார்யோபதேஶத்வாரா ஸம்பந்தமுடையவென்றபடி. (பதியாய்நின்றுகொண்டு ரக்ஷிக்கும்) என்றது - தான் பெருகநின்றுகொண்டு ரக்ஷிக்குமென்றபடி.

எ.—இதுதன்னை இவர் திருத்தம்பியாரும் முகாந்தரேண அருளிச் செய்தாரிறே! ஆசார்யஹ்ருதயத்திலே:— "வித்யை தாயாகப்பெற்று, பாலுமமுதுமான திருநாமத்தாலே திருமகள்போல வளர்த்த தஞ்ச மாகிய தந்தை மற்றொருவர்க்கும் பேசப்படாமல் விஶ்வபதி லோக பர்த்தாவென்னும் மணவாளரை, நாலிரண்டிழைகொண்டு முப்புரி யான ப்ரஹ்மஸூத்ரபந்தத்தோடே வரிப்பிக்க, பரம்புருடனைக் கொண்டபின் சதுர்த்தியுள்புக்கு இடையிநடுக்கிடக்கும் நாள்கழி த்து ஜந்மபூமியை விட்டகன்று சூழ்விசும்பிற்படியே உடன்சென்று குடைந்து நீராடி வியந்துழாய் அஞ்சநத்தின்நீறு, நானப்பொடி, பீ தகவாடை பல்கலன்கொண்டு நோக்கி அலங்கரித்துப் பல்லாண்டிசை த்துக் கவரிசெய்ய, நிறை குடவிளக்கமேந்தி இளமங்கையர் எதிர் கொள்ள வைகுந்தம் புக்கிருந்து வாய்மடுத்துப் பெருங்களிச்சியாக வானவர்போகமுண்டு கோப்புடைய கோட்டுக்காற்கட்டில் மிதித்தா ரோகித்து பரதாக்ரூரமாருதிகளை பரிஷ்வங்கித்த மணிமிகுமார்விலே குருமாமணியாயணையும் வஸ்துவுக்கு மணிவல்லிப்பேச்சு வந்தேறி யன்று".

அஸ்யார்த்தஃ—(வித்யைதாயாகப்பெற்று)"𑌸 𑌹𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑌸𑍍𑌤𑌂 𑌜𑌨𑌯𑌤𑌿" "ஸஹி வித்யாதஸ்தம்ஜநயதி" (எகூச) என்கிறபடியே ஆசார்யன் திருமந்த்ரமு கேந ஸ்வரூபஜ்ஞாநத்தைஉண்டாக்கினபோது இவ்வாத்மவஸ்துஸத்பா வமாகையாலே வித்யைமாதாவாகக்கொண்டுஇவ்வாத்மவஸ்துவைஜநி ப்பித்து.(பாலுமமுதுமானதிருநாமத்தாலே திருமகள்போல வளர்த்த) "தேனும்பாலுமமுதுமாயதிருமால்திருநாமம்"என்கிறபோக்யபதார்த்த மானதிருமந்த்ரத்தாலே"திருமகள்போலவளர்த்த"என்கிறபடியே அந ந்யார்ஹஶேஷத்வாதிகளாலே லக்ஷ்மீஸதர்ஶமாக வளர்த்துக்கொண்டு போந்த.(தஞ்சமாகியதந்தை)தேஹோத்பாதகனாய் "𑌸 𑌪𑌿𑌤𑍍𑌰𑌾" "ஸபித் ராச"(எகூரு)இத்யாதிப்படியே ஆபத்தஶைகளிலேகைவிடும்பிதாவைப் போலன்றிக்கே "𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍋𑌽𑌵𑍍𑌯𑌯𑌃 𑌪𑌿𑌤𑌾" "பூதாநாம்யோவ்யயஃபிதா" (எகூகா) என்கிறபடியேஸம்பந்தம் கண்ணழிவற்றிருக்க,"𑌭𑌵𑌮𑍋𑌕𑍍𑌷𑌣𑌯𑍋𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑍍𑌯𑍇𑌵 𑌜𑌨𑍍𑌤𑍁𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇" "பவமோக்ஷணயோஸ்த்வய்யைவஜந்துஃக்ரியதே" (எகூஎ)என்னும்படிஸம்ஸாரமோக்ஷங்களிரண்டுக்கும்பொதுவாயிருக்கு ம்பிதாவைப்போலன்றிக்கே ஸ்வரூபோத்பாதகனாய்ஒருதஶையிலுங்கை விடாதேஹிதைஷியாய் உஜ்ஜீவநைகபரனாய்க்கொண்டு மோக்ஷைகஹே துவாயிருக்கையாலே, ஆபத்ரக்ஷகனான ஆசார்யனாகிறபிதா.(மற்றொரு வர்க்கும் பேசப்படாமல்)"மற்றொருவர்க்கென்னைப்பேசலொட்டேன்" "மானிடவர்க்கென்று பேச்சுப்படில்" என்கிறபடியே அந்யஶேஷத்வ

எ.—ப்ரஸங்கம்வாராதபடி. (விஶ்வபதிலோகபர்த்தாவென்னும்மணவாளனை) “பதிம் விஶ்வஸ்ய” “பதிம்விஶ்வஸ்ய” (எகூஅ) “கௌஸல்யாலோகபர்த்தாரம்” “கௌஸல்யாலோகபர்த்தாரம்” என்று (எகூகூ) பதிஶப்தத்தாலும் பர்த்ரஶப்தத்தாலும் ஸர்வலோகநாயகனாகச்சொல்லப்படுகிற மணவாளனை. (நாவிரண்டிழைகொண்டு முப்புரியான ப்ரஹ்மஸூத்ர பந்தத்தோடே) எட்டிழையாய் மூன்றுசரடாயிருப்பதொரு மங்களஸூத்ரம்போலே எட்டக்ஷரமாய் மூன்றுபதமாய் ஈஶ்வரஸம்பந்த ப்ரகாஶகமான திருமந்த்ரமாகிற மங்களஸூத்ரபந்தத்தோடே. (வரிப்பிக்க) “பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா” “பாணிம்க்ருஹ்ணீஷ்வபாணிநா” (அ00) என்கிறபடியே வரிக்கும்படிபண்ண. (பரம்புருடன் கைக்கொண்டபின்) “பரம்புருடா நீயென்னைக் கைக்கொண்டபின்” என்கிறபடியே பரமபுருஷனான மணவாளர் பரிக்ரஹித்த அநந்தரம். (சதுர்த்தியுள்புக்கு) விவாஹாநந்தரம் ஶேஷஶேஷிபர்யந்தமான சதுர்திவஸத்திலும், அகலுதலணுகுதலற்று அநந்யார்ஹ ஶேஷத்வாநுகுணமான பரிமாற்றத்துக்கர்ஹமென்னு மளவை ப்ரகாஶிப்பித்துக்கொண்டிருக்குமோபாதி ப்ரணவோக்தமான அநந்யார்ஹ ஶேஷத்வத்தில் கண்ணழிவற அங்கீகரிக்கையாலும், ததநுகுணமாகக் கிட்டிபரிமாறப் பெறுமையாலும் அகலுதலும் அணுகுதலு மற்று கைங்கர்ய ப்ரார்த்தனையோடே செல்லும் சரமசதுர்த்தியிலே உள்புக்கு. (இடையீடு நடுக்கிடக்கும் நாள்கழித்து) தம்பதிகளிருவரும் ஏகஶய்யையிலே வர்த்திக்கச்செய்தே அந்யோந்யஸ்பர்ஶயோக்யதை யில்லாதபடி யிடையீடான ஸோமாதிகள் நடுவே கிடக்கும் நாள்போலே ஶேஷத்வஜ்ஞாநமும் ஶேஷவ்ருத்தி ப்ரார்த்தனையு முண்டாகையாலே இரண்டுதலைக்கும் அண்ணிமை உண்டாயிருக்கவும் சேர்த்துப்பரிமாறவொண்ணாதபடி “நண்ணியும் நண்ணகில்லே னடுவேயோருடம்பிலிட்டு” என்கிறபடியே அநுபவவிரோதியாய் இடையீடான ஶரீரம் நடுவே கிடக்கிற நாளுநாளையும் “நாள்கடலைக்கழிமின்” என்கிறபடியே கழித்து. (ஜந்மபூமியை விட்டகன்று) “முற்றிலும் பைங்கிளியும் பந்துமூசலும் பேசுகின்ற சிற்றில்மென் பூவையும்விட்டகன்ற செழுங்கோதை” என்கிறபடியே ஒருவராலும் விட அரிதான ஜந்மபூமியான இவ்விபூதியை முன்பாதரணீயமாய்ப்போந்த வஸ்துக்களோடே கூடப்பொருந்திபரிமாறவிட்டு நீங்கி ; அன்றிக்கே “அன்று நான் பிறந்திலேன்” என்னும்படிக்கிடந்த தனக்கு ஆசார்யன், திருமந்த்ரத்தாலுண்டாக்கின ஜந்மம் பெற்றதிங்கே யாகையாலே ஜந்மபூமியான இவ்விபூதியை பகவதநுபவ ப்ராவண்யத்தாலே “முற்றிலும் பைங்கிளியும்” இத்யாதிப்

ஏ.—படியே முன்பாதரணீயமாய்ப்போந்த வஸ்துக்களோடே கூடவிட்டகன்றென்னவுமாம். பிறந்தகத்தை விட்டுப் புக்ககத்துக்குப்போகிறதாகச்சொல்லுகிற ரூபகத்துக்கு இது மிகவும்சேருமிறே! (சூழ்விசும்பிற்படியே உடன்சென்று) "சூழ் விசும்பு" என்கிற திருவாய்மொழியில் சொல்லுகிறபடியே அர்ச்சிராதிமார்க்கத்தாலே வழியிலுள்ளாருடைய ஸத்கரிக்க "அங்கவரோடுமுடன்சென்று" என்கிறபடியே "நயாமி" என்கிற நாயகன் முன்னேபோக பின்னேபோய். (குடைந்துநீராடி) "குள்ளக்குளிரக் குடைந்துநீராடி" என்கிறபடியே பர்த்ர்க்ருஹத்துக்குப்போகிற பெண் அவ்வூரெல்லையிலே சென்றவாறே அவர்கள் குளிப்பாட்டக் குளிக்குமாப்போலே அம்ர்தவாஹிநியான விரஜையிலே இப்பாலுள்ள அழுக்கறும்படிநீராடி. (வியந்துழாயஞ்சநத்தின்நீறு, நானப்பொடி, பீதகவாடை, பல்கலன்கொண்டு நோக்கி அலங்கரித்து) குளித்தேறின பெண்ணை பர்த்ர்பந்துக்களான ஸ்த்ரீகள் வந்து அலங்கரிக்குமாப்போலே "வியந்துழாய்க்கற்பென்று சூடிக்கருங் குழல்" "ஆராயில் வேய்கணஞ்சநத்தின் நீறணிந்து" "மெய்திமிருநானப்பொடி" "உடுத்துக்கலந்த நின்பீதகவாடை" "பல்கலனும் யாமணிவோம்" என்கிறபடியே-அலங்காரோபகரணங்களான திவ்யமால்யம், திவ்யாஞ்சநம், திவ்யசூர்ணம் திவ்யவஸ்த்ரம், திவ்யாபரணங்களை, "తంపంచశతాన్యప్సరసాం ప్రతిధావన్తి, శతంమాలాహస్తాః, శతమంజనహస్తాః, శతంచూర్ణహస్తాః, శతంవాసోహస్తాః, శతంఫణహస్తాః" "தம்பஞ்சஶதாந்யப்ஸரஸாம்ப்ரதிதாவந்தி, ஶதம்மாலாஹஸ்தா:, ஶதமஞ்சநஹஸ்தா:, ஶதம்சூர்ணஹஸ்தா:, ஶதம்வாஸோஹஸ்தா:, ஶதம்ப்ஹணஹஸ்தா:," (அ0க) என்கிறபடியே ஏந்திக்கொண்டு மானேய்நோக்கியரான திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் எதிரேவந்து "తం బ్రహ్మాలంకారేణాలంకుర్వన్తి" "தம்ப்ரஹ்மாலங்காரேணாலங்குர்வந்தி" (அ0உ) என்கிறபடியேபோக்த்ர்பூதேஶ்வர போக்யமாம்படி அலங்கரித்து. (பல்லாண்டிசைத்துக்கவரிசெய்ய) "தொக்குப் பல்லாண்டிசைத்துக் கவரி செய்வரேழையரே" என்கிறபடியே இவ்விஷயத்தில் நிருபித்கரிக்கையிலுண்டான சாபலந்தோற்றத்திரளநின்று மங்களாஶாஸநம்பண்ணி சாமரம்பணிமாற. (நிறைகுடவிளக்கமேந்தி இளமங்கையர் எதிர்கொள்ள) அலங்க்ர்தையாய் உபலாலநத்தோடே செல்லுகிறபெண், பர்த்ர்க்ருஹத்தை அணுகச்சென்றவாறே அங்குள்ள ஸ்த்ரீகள் மங்களதீபாதிகளை ஏந்திக்கொண்டெதிரேவந்து ஸத்கரிக்குமாப்போலே, "மதியுநற்கண்ணமு நிறைகுடவிளக்கமும் மதிமுகமடந்தைய ரேந்தினர்" என்கிறபடியே மங்களாவஹமான பூர்ணகும்பதீபாதிகளை தரித்துக்கொண்டு "சதிரிளமங்கையர்தாம்வந்தெ

எ.—திர்கொள்ள” என்கிறபடியே நித்யநவயௌவநஸ்வபாவைகளான வேறேசிலதிவ்யாப்ஸரஸ்ஸுக்கள்எதிர்கொள்ள.(வைகுந்தம்புக்கிருந்து) உபலாலநத்தோடே சென்றபெண், பர்த்ர்க்ருஹத்திலேபுக்கிருக்குமாப் போலே “மன்னியமாதவனோடு வைகுந்தம்புக்கிருப்பார்” என்கிறபடியேஶ்ரிய:பதியானவனுக்கு போகஸ்தாநமானஶ்ரீவைகுண்டத்தை ப்ராபித்து அவனோடேகூட இருந்து. (வாய்மடுத்துப்பெருங்களிச்சியாகவானவர்போகமுண்டு)பர்த்ர்க்ருஹத்திலேபெண்வந்தபின்பு தம்பதிகளும் மற்றுமுள்ள பந்துக்களும் கூடியிருந்துபெருங்களிச்சி யுண்ணுமாப் போலே, அடியார்கள் குழாங்களுமவனுமாக இருக்கிற சேர்த்தியிலே அடியேன் வாய்மடுத்துப் பருகிக்களித்தேனென்று பெருங்களிச்சியாக முழுமிடர்செய்து “கட்டெழில்வானவர்போகமுண்பாரே” என்கிறபடியே, நித்யஸூரிகள் புஜிக்கிறபோகத்தை “సోఽశ్నుతే సర్వాన్ కామాన్ సహ బ్రహ్మణా విపశ్చితా” “ஸோஶ்நுதேஸர்வாந்காமாந்ஸஹப்ரஹ்மணாவிபஶ்சிதா” (அ0௩)என்கிறபடியே புஜித்து. (கோப்புடையகோட்டுக்காற்கட்டின்மிதித் தாரோஹித்து) பர்த்ர்ஸம்ஶ்லேஷத்துக்கு படுக்கையிலே ஏறுமாப்போலே “கோப்புடைய சீரியசிங்காசநம்” என்றும்“கோட்டுக்காற் கட்டில்” என்றுஞ்சொல்லுகிறபடியே உபயவிபூதியும் தொழிலாகவகுப்புண்டு ஸர்வாஶ்சர்யமயமானதிவ்யபர்யங்கத்திலே“తద్దివ్యం పర్యఙ్కమధ్యారోహతి” “தமேவம்வித்பாதேநாத்யாரோஹதி” (அ0௪) என்கிறபடியே பாதபீடத்திலே அடியிட்டேறி.(பரதாக்ரூரமாருதிகளைபரிஷ்வங்கித்த மணிமிகுமார்விலே) “తం సముత్థాప్య కాకుత్స్థశ్చిరస్యాక్షిపథం గతం। అఙ్కే భరతమారోప్య ముదితః పరిషస్వజే॥” “தம்ஸமுத்தாப்யகாகுஸ்த்த ஶ்சிரஸ்யாக்ஷிபதங்கதம்। அங்கேபரதமாரோப்யமுதித:பரிஷஸ்வஜே॥” (அ0௫) என்றும், “సోఽప్యేనం ధ్వజవజ్రాబ్జకృతచిహ్నేన పాణినా। సంస్పృశ్యాకృష్య చ ప్రీత్యా సుగాఢం పరిషస్వజే॥” “ஸோப்யேநம் த்வஜவஜ்ராப்ஜ க்ர்தசிந்ஹேந பாணிநா। ஸம்ஸ்பர்ஶ்யாக்ர்ஷ்யசப்ரீத்யா ஸுகாடம் பரிஷஸ்வஜே॥” (அ0௬) என்றும், “ఏష సర్వస్వభూతస్తు పరిష్వఙ్గో హనూమతః। మయా కాలమిమం ప్రాప్య దత్తస్తస్య మహాత్మనః॥” “ஏஷஸர்வஸ்வபூதஸ்து பரிஷ்வங்கோஹநூமத:। மாயாகாலமிமம்ப்ராப்யதத்தஸ்தஸ்யமஹாத்மந:॥” (அ0௭) என்றுஞ் சொல்லுகிறபடியே ஶ்ரீபரதாழ்வானையும், அக்ரூரனையும், திருவடியையும் ஆதரித்தணைத்துக்கொண்ட மணிமிகுமார்பென்று ஶ்ரீகௌஸ்துபம் நிறம்பெறும்படி அழகிய திருமார்விலே. (குருமாமணியாயணையும் வஸ்துவுக்கு) “குருமாமணிப்பூண் குலாவி” என்று ஶ்லாக்யமாய் ஈஶ்வரத்வசிந்ஹமான ஶ்ரீகௌஸ்துபத்தோபாதி போக்யமாய் தேஜஸ்கரமாய்க்கொண்டு அணைகிற ஆத்மவஸ்துவுக்கு (மணிவல்லிப்பேச்சு வந்தேறியன்று) வண்பூமணிவல்லியென்று உதாரமாய் போக்யமாய் தனக்குத்தானே ஆபர

ஏ.—ணமாம்படி அழகியதாய் கொள்கொம்புபெறுவிடில் தலையெடுக்கமாட்டாமே தரைப்பட்டுக்கிடக்குங்கொடிபோன்றவளென்கிற ஸ்த்ரீத்வப்ரயுக்தமாய் வரும்பேச்சு வந்தேறியன்று, ஸ்வாபாவிகமென்றபடி.

இத்தால் ஸ்த்ரீத்வம் ஆத்மவஸ்துவுக்கு ஸ்வாபாவிகமாகையாலே அத்தை உள்ளபடி தர்ஶித்த இவர்க்கு தத்ப்ரயுக்தமான பேச்சு ஸ்வாபாவிகமென்று சொல்லிற்றாய்த்து.

[இத்தால்] - (இத்தை மங்களஸூத்ரமாகச்சொன்ன இத்தால்), [ஈஶ்வரன்] [ஆத்மாக்களுக்கு]-(இத்தோடொவ்வயுடைய)[ஆத்மாக்களுக்கு], [பதியாய் ரக்ஷிக்குமென்கிறது] - (பதியாய்க்கொண்டு ரக்ஷிக்கு)மென்று மூலார்த்தம்.

இப்படி அருளிச்செய்தத்தால் "పితా చ రక్షకః శేషీ భర్తా జ్ఞేయో రమాపతిః| స్వామ్యాధారో మమాత్మా చ భోక్తా చాద్యమనూదితః||" "பிதா ச ரக்ஷக: ஶேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி: | ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தா சாத்யமநூதித:||" (அ0அ) என்கிறபடியே நவவிதஸம்பந்தமும் ஸூசிதமாய்த்து.

அகாரத்தாலே பித்ர் புத்ர ஸம்பந்தமும், "அவ-ரக்ஷணே" என்கிற தாதுவாலே ரக்ஷ்யரக்ஷகஸம்பந்தமும், சதுர்த்தியாலே ஶேஷஶேஷிபாவ ஸம்பந்தமும், உகாரத்தாலே பர்த்ர்பார்யா ஸம்பந்தமும், மகாரத்தாலே ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தமும், நமஸ்ஸாலே ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தமும், நாராயணபதத்தாலே ஶரீரஶரீரிஸம்பந்தமும், அயநபதத்தாலே ஆதாராதேய ஸம்பந்தமும், ஆய பதத்தாலே போக்த்ர் போக்யஸம்பந்தமும், சொல்லித்தலைக்கட்டுகிறது.

[இதில் அகாரம் ஸகலஜகத்துக்கும் காரணமாய் ஸர்வரக்ஷகனான எம்பெருமானைச்சொல்லுகிறது] என்றத்தாலே பித்ர்புத்ர ஸம்பந்தமும், ரக்ஷ்யரக்ஷகபாவஸம்பந்தமும் சொல்லிற்றாய்த்து.

[இத்தாலீஶ்வரனுக்கு ஶேஷமென்கிறது] என்றத்தாலே ஶேஷத்வப்ரதிஸம்பந்தியான ஶேஷியும் அர்த்தாதுக்தமாகையாலே ஶேஷஶேஷிபாவஸம்பந்தமும் சொலலிற்றாய்த்து.

[இத்தால் பிறர்க்கு ஶேஷமன்றென்கிறது] என்றத்தாலே பர்த்ர் பார்யாஸம்பந்தமும் சொலலிற்றாய்த்து.

[இத்தால் ஆத்மா ஜ்ஞாதா] என்கையாலே ஜ்ஞாத்ர்ஜ்ஞேய ஸம்பந்தமும சொலலிற்றாய்த்து.

[தனக்குரியனன்றென்கிறது] என்றத்தாலே ஸ்வஸ்வாமிபாவஸம்பந்தமுஞ்சொல்லிற்றாய்த்து.

மூ.—௧௧௫. ஆக, திருமந்த்ரத்தால், எம்பெருமானுக்கே யுரியேனான நான்,

---

வ்யா.—௧௧௫.— இனி, இம்மந்த்ரத்தால் ப்ரதிபாதித்த அர்த்தத்தை ஸங்க்ரஹித்துச் சொல்லி இத்தை நிகமித்தருளுகிறார்

(ஆகத்திருமந்த்ரத்தால்) என்று தொடங்கி. (ஆக) வென்றது-கீழ் பரக்க அருளிச்செய்த எல்லாவற்றையும் தொகுத்தருளிச் செய்கிறாரென்னுமிடந்தோற்ற. (எம்பெருமானுக்கேயுரியேனான நான்) இதில் (எம்பெருமானுக்கே) என்று சதுர்த்யந்தமான ப்ரதமாக்ஷரத்தில அர்த்தத்தையும், அவதாரணத்தாலே மத்யமாக்ஷரத்தில் அர்த்தத்தையும், (உரியேனான நான்) என்று த்ருதீயாக்ஷரத்தில் அர்த்தத்தையும்

எ.— [நாரங்களுக்கயநமென்றபடி] என்கையாலே ஆதாராதேய ஸம்பந்தமுஞ்சொல்லிற்றாய்த்து.

[இவைதன்னை யாஶ்ரயமாகவுடையனென்னவுமாம்]என்றத்தாலே ஶரீராத்மபாவஸம்பந்தமுஞ் சொல்லிற்றாய்த்து.

[ஆய என்கிற இத்தால்] என்றத்தாலே போக்த்ர்போக்ய ஸம்பந்தமும் சொல்லிற்றாய்த்து.

௧௧௫.— மேலுக்கவதாரிகை (இனி இம்மந்த்ரத்தால்) என்று தொடங்கி.

[ஆக]-(கீழ்ச்சொன்னவெல்லாவற்றாலுமாக), [திருமந்த்ரத்தா [எம்பெருமானுக்கே உரியேனானநான்] - [எம்பெருமானுக்கே] ஶேஷமானநான்,

---

தொ.—௧௧௫.— மேலுக்கவதாரிகை (இனி) இத்யாதி.

(இனி) என்றது - திருமந்த்ரத்துக்கு ப்ரதிபதம் விஸ்தரேண அர்த்தமருளிச்செய்த அநந்தரமென்றபடி. (ப்ரதிபாதித்த) என்றது விஸ்தரேணப்ரதிபாதித்த வென்றபடி. (ஸங்க்ரஹித்து) என்றது—ஸங்க்ஷேபித்தென்றபடி. (இத்தை) என்றது - திருமந்த்ரார்த்தத்தையென்றபடி.

[ஆக] என்று தொடங்கி.

[ஆகத்திருமந்த்ரத்தால்] இத்யாதி வாக்யத்ரயத்தாலே ப்ரணவ நமோநாராயணபதங்களை ஸங்க்ரஹித்தருளிச்செய்தபடியை விஶதமாக அருளிச்செய்யாநின்றுகொண்டு ப்ரதமப்ரகரணார்த்தத்தை நிகமித்தருளுகிறார்.

(பரக்க) என்றது - விஸ்தாரமாகவென்றபடி. (தொகுத்து) என்றது - சேர்த்தென்றபடி. (இதில்) என்றது-கீழ்ச்சொன்னவாக்யத்திலென்றபடி. [எம்பெருமானுக்கே] என்றது - லுப்தசதுர்த்தியாலே சொல்லப்பட்ட ஶேஷத்வப்ரதிஸம்பந்தியான ஶேஷித்வமுடையவனுக்கென்றபடி.

மூ.— எனக்குரியனன்றிக்கேயொழியவேணும்; ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லாவடிமைகளும் செய்யப்பெறுவேனாகவேணும் என்றதாய்த்து.

வ்யா.— சொல்லுகையாலே, ப்ரதமபதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி.

(எனக்குரியனன்றிக்கேயொழியவேணும்) இதில், (எனக்குரியன்) என்று ஷஷ்ட்யந்தமான மகாரார்த்தத்தையும், (அன்றிக்கேயொழிய) என்கையாலே, நகாரார்த்தத்தையும், (வேணும்) என்கையாலே இவ்வர்த்தம் சேதநனுக்கு ப்ரார்த்தநீயமென்னுமத்தையும் ப்ரதிபாதிக்கையாலே, மத்யமபதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி.

(ஸர்வசேஷியான நாராயணனுக்கே எல்லா அடிமைகளும்செய்யப்பெறுவேனாகவேணும்,) இதில், (ஸர்வசேஷியான நாராயணனுக்கே) என்று கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியையும், கைங்கர்யப்ரார்த்தநா ப்ரகாசிகையான சதுர்த்தியையும், (எல்லா அடிமைகளும் செய்யப்பெறுவேனாகவேணும்) என்று, கைங்கர்யப்ரார்த்தநா ப்ரகாரத்தையும சொல்லுகையாலே த்ருதீயபதார்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி.

(என்றதாய்த்து) என்றது-என்றுசொல்லிற்றாய்த்து என்கை. விஸ்தரேண அருளிச்செய்தத்தை மீளவும் இப்படி ஸங்க்ரஹித்தருளிச்செய்தது-இத்திருமந்த்ரார்த்தத்தை எல்லாருமறிந்து அநுஸந்திக்கைக்காக. ஆகையாலே

எ.— [எனக்குரியனன்றிக்கே ஒழியவேணும்] - (எனக்கு) சேஷமன்றென்று [ஒழியவேணும்]; [ஸர்வசேஷியான நாராயணனுக்கே]-(கைங்கர்யப்ரதிஸம்பந்தி) யான [நாராயணனுக்கே] [எல்லாவடிமைகளும்]-ஸர்வவிதகைங்கர்யங்களும், [செய்யப் பெறுவேனாகவேணும்] - செய்யக்கடவேனாகவேணும; [என்றதாய்த்து] - (என்று சொல்லிற்றாய்த்து) என்று மூலார்த்தம்.

தா.— விஸ்தரேண சொன்ன அர்த்தத்தை ஸங்க்ரஹித்ததுக்கு தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார் (விஸ்தரேண) இத்யாதியால். (மீளவும்) என்றது - புந: என்றபடி. (இப்படி) என்றது - இவ்விதமாக வென்றபடி. (எல்லாரும்) என்றது - பஹுஜ்ஞரும் அல்பஜ்ஞருமென்றபடி; பெண்களும் பேதைகளுமென்றபடியாகவுமாம். இத்தால் பலிதாம்சத்தை அருளிச்செய்கிறார் (ஆகையாலே) இத்யாதியால். (ஆகையாலே) என்றது-[இது தன்னிற்சொல்லுகிற அர்த்தம்] என்று துடங்கி இவ்வளவும் அவா ப்ரபந்தத்தாலே பரக்க அருளிச்செய்த திருமந்த்ரார்த்தத்தை ஸங்க்ரஹித்தருளிச்செய்து எல்லாரும் மந்த்ரார்த்தத்தை எப்போதும் அநுஸந்திக்கவேணுமென்னுந் திருவுள்ளத்தாலாகையாலே என்றபடி.

ரு.— லோகாசார்யர் திருவடிகளேசரணம்.
ஜீயர்திருவடிகளேசரணம்.
பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த முமுக்ஷுப்படியுள்,
ப்ரதமப்ரகரணமான திருமந்த்ரப்ரகரணம் ஸம்பூர்ணம்.

வ்யா.— எல்லார்க்கும் இவ்வர்த்தம் எப்போதும் அநுஸந்தேயம்.
லோகாசார்யர் திருவடிகளேசரணம்.
ஜீயர்திருவடிகளேசரணம்.
ப்ரதமப்ரகரணமான திருமந்த்ரப்ரகரணத்துக்கு நம்மணவாள மாமுனிகள் அருளிச்செய்த திருமந்த்ரார்த்த வ்யாக்யாநம் ஸம்பூர்ணம்.

எ.— லோகாசார்யர் திருவடிகளேசரணம்.
ஜீயர்திருவடிகளேசரணம்.
ப்ரதமப்ரகரணமான திருமந்த்ரப்ரகரணத்தின் திருமந்த்ரார்த்த வ்யாக்யாநத்துக்கு ஸாத்த்வதம் எம்பாரய்யங்கார் அருளிச் செய்த அரும்பதம் ஸம்பூர்ணம்.

தொ.—(எல்லார்க்கும்) என்றது – ஸர்வவர்ணங்களிலுமுள்ள ஸ்த்ரீகளுக்கும் புருஷர்களுக்கு மென்றபடி. (எப்போதும்) என்றது – அநாதத்யயநகாலமென்றியே நித்யங்களெப்போதுமெல்லாக்காலத்திலு மென்றபடி. (எப்போதும்) என்ற அநந்தரம் இத்திருமந்த்ரார்த்தமென்று கூட்டிக்கொள்ளவேணும். (அநுஸந்தேயம்) என்றது – அநுஸந்திக்க வேணுமென்றபடி.
லோகாசார்யர் திருவடிகளேசரணம்.
ஜீயர்திருவடிகளேசரணம்.
ப்ரதமப்ரகரணமான திருமந்த்ரப்ரகரணத்தின் திருமந்த்ரார்த்த வ்யாக்யாநத்துக்கு ஸாத்த்வதம் தொட்டாசார்யர் அருளிச் செய்த அரும்பதம் ஸம்பூர்ணம்.

பி.— லோகாசார்யர் திருவடிகளேசரணம்.
ஜீயர்திருவடிகளேசரணம்.
ப்ரதமப்ரகரணமான திருமந்த்ரப்ரகரணத்தின் திருமந்த்ரார்த்த வ்யாக்யாநத்துக்கு பிள்ளைலோகஞ்ஜீயர் அருளிச்செய்த அரும்பதம் ஸம்பூர்ணம்.